சிவானந்தலஹரீ

பகவான் ஆதி சங்கரர்

பரசிவ சுகப்பெருவெள்ளம்

தமிழில்

மீ. ராஜகோபாலன்

|| शिवानन्दलहरी ||

சிவானந்தலஹரீ

(சிவ சுகப் பெருவெள்ளம்)



பகவான் ஜகத்குரு ஆதி சங்கரர்

நன்முனைப்பால் மொழி பெயர்ப்பு

தமிழில் மீ. ராஜகோபாலன்

அளிக்கும் நிதியாவும் அறப்பணிக்கே

All proceeds to charity

Rs. 75/-

ISBN: 978-1-910528-01-3

Ausgust 2014

Meenalaya
28, Kingsfield Ave
Harrow, HA2 6AT
United Kingdom

Email: rajjag@gmail.com
www.meenalaya.org

எழுதுவது பழுதுஅற முழுவதுவும் பொருளுணரத்
தொழுவதுன தருளடிகள் துணைவருக முழுமுதலே

குறிப்பு

ஸம்ஸ்கிருதச் சொற்களின் தமிழ் வார்ப்புக்களில், சரியான உச்சரிப்புக்கு உதவும் பொருட்டு, சில எழுத்துக்களுக்குக் கீழே காணும் எழுத்துக்கள் கொள்ளப்பட்டன.

ख	க$_2$ (சகதி)	ग	க$_3$(ராகம்)	ठ	ட$_2$ (பட்டம்)
च	ச (மிச்சம்)	छ	ச$_2$ (சாறு)	ड	ட$_3$ (குடம்)
श	ஶ (ஸ்ஷிவம்)	ष	ஷ (புஷ்பம்)	थ	த$_2$ (மதம்)
फ	ப$_2$ (பருப்பு)	ब	ப$_3$ (இன்பம்)	द	த$_3$ (பாதம்)
घ	க$_4$ (ராகவன்)	स	ஸ (ஸர்வம்)	ज	ஜ (ஜன்னல்)
ध	த$_4$ (தனம்)	भ	ப$_4$(பயம்)	ह	ஹ (ஆஹாரம்)

||शिवानन्दलहरी||

śivānandalaharī

by Sri Adi Sankarā

ஶிவானந்த₃லஹரீ

ஆதி சங்கரர்

சிவ சுகப் பெருவெள்ளம்
குருவே சரணம்

தத்துவமே மௌனமெனத் தந்தசிவ குருவடிவே
அத்துவித மாய்ந்தளித்த ஆதிகுரு சங்கரரே
நான்யார் எனமனதுள் நட்டவிதை பூத்ததனால்
தான்யார் எனவுணர்த்தும் தகைரமண பகவானே
பெரியவா என்றுலகப் பெருங்கருணை மழையான
அரியனே காஞ்சி ஆச்சார்யப் பேரமுதே
இலகுவாய்ச் சிவாநந்த லஹரியெனும் சுகவெள்ளம்
பழகுவாய்த் தமிழாலே பரிமளிக்க வரம்வேண்டும்
உளறுயான் நின்னருளால் உயரறிவு பெறவேண்டும்
உண்மைக் கருத்துவளம் உம்மருளால் வரவேண்டும்
பரசிவத்துப் பரசுகத்துப் பரவசத்தைப் பெறவேண்டும்
பயில்வோர் உம்மருளாலே பரஞானம் பெறவேண்டும்

ஜகத்குரு பகவான் ஆதி சங்கர பகவத் பாதாள் துதி



சத்குருவாய் வந்துதித்த சங்கரரின் தாள் வாழ்க
அற்புதமாய் அத்துவித அறிவாய்ந்தார் தாள் வாழ்க
காலடியில் பூத்தசிவக் காலடியார் தாள் வாழ்க
வாலறிவால் மேலுணர்வை வாதித்தார் தாள் வாழ்க
துதிமாலை தொடுத்தருளும் தூயர் தாள் வாழ்க
மதிமாலை சூடிமனம் மாற்றுவார் தாள் வாழ்க
சிவானந்த வெள்ளச் சீரமைத்தார் தாள் வாழ்க
அவாவுந்த உள்ளத்துள் ஆள்வார் தாள் வாழ்க
மறைமொட்டு மலரவைத்த மறையோர் தாள் வாழ்க
திரையிட்ட மறைச்சாரம் தெளிவித்தார் தாள் வாழ்க
மூலப் பொருள்விளக்க முன்நின்றார் தாள் வாழ்க
காலங் கடந்தறிவு காட்டுவார் தாள் வாழ்க



ஓம் ஸ்ரீ குருப்யோ நம:

Website : www.kamakoti.org.
email : kanchimutt@gmail.com

உ

☎ : 044-27222115
Acts : 044-27224236
Fax : 044-27224305

|| Sri Chandramouleeswaraya Nama: ||
Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvajnapeeta

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi
JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL
Srimatam Samsthanam
No. 1, Salai Street, KANCHEEPURAM - 631 502.

ஸத்தாயும், சித்தாயும் ஆனந்தமாயுமிருக்கும் இரண்டற்ற பரமாத்ம தத்துவமே வேதநெறி போதிக்கும் ஆன்ம நெறி என்று ஸ்தாபித்த ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர் உத்தமாதிகாரிகளின் உவகைக்கும், மந்த மத்யம அதிகாரிகளின் கிரம வளர்ச்சியின் பொருட்டும் அனேக பிரகரண கிரந்தங்களையும் ஸ்துதிகளையும் எழுதியுள்ளார். பிரகரண கிரந்தங்களுள் ‘விவேக சூடாமணி’ முதலிடம் வகிப்பது போல், ஸ்துதி கிரந்தங்களுள், ‘சிவானந்த லஹரீ’ முதலிடம் வகிக்கிறது.

உபநிஷத்துக்களில், ஸச்சிதானந்த கணமாகப் பேசப்படும் ப்ரஹ்மமே சிவானந்த லஹரியில் ஸத்யம், சிவம், சுந்தரமாக மிளிர்கிறது. இந்நூலை ஒரு காவ்யமாக நோக்கும்போது நவரஸங்களும் ஒருங்கே விகஸிக்கக் காணலாம். ஈச்வரனின் கருணா ரஸமும் பக்தனின் பக்திச் சுவையும் கரும்புச் சாற்றுடன் தேன் கலந்தாற்போல், ஒவ்வொரு சுலோகத்திலும் இனிக்கக் காணலாம்.

சொற்களின் கோர்வை, பொருளின் ஆழம், ஓசை நயம், உவமைகளின் அழகு, கருத்துக்களின் வீச்சு இவை யோக நிலையில், மோனத்தின் ஞானப் பெருக்காய் இந்நூல் சிவானந்த வெள்ளமாகப் பெருகிய ‘ஸமாதி பாஷா’ என்று புலனாகிறது. இதனாலேயே இதன் அதிர்வலைகள் கற்போரின் நெஞ்சில் இன்றும் ஒரு ஆன்மிக தாக்கத்தையும், தாகத்தையும் உண்டு பண்ணுகின்றன. ஞான, பக்தி வைராக்யங்களின்

முப்பரிமாணமாக இந்நூல் திகழ்கிறது. ஈச்வரனிடமிருந்து பிரிக்கப்பட முடியாதவாறு அநன்யமாக இருக்கும் அம்பிகையுடன் இணைத்தே சிவனைத் துதிக்கிறார்.

‘மாமக் மனோ துர்க்கே நிவாஸம் குரு’ - ‘எனது மனமாகிற கோட்டையில் குடி கொள்வீராக’ என்று 42-ஆவது சுலோகத்தில் பிரார்த்திக்கிறார். ஈச்வரன் குடியமர வேண்டுமென்றால், மனம் சுத்தமாக வேண்டுமில்லையா, இதன் பொருட்டு 36-ஆவது சுலோகத்தில் ஈச்வரன் வந்து தங்க புண்யாஹவாசனம் செய்து ஸ்தல சுத்தி, பாத்ர சுத்தி, த்ரவ்ய சுத்தி செய்வதைக் கூறுகிறார்.

ப$_4$க்தோ ப$_4$க்திகு$_3$ணாவ்ருதே முத$_3$ம்ருதாபூர்ணே ப்ரஸன்னே மன:
கும்பே$_4$ ஸாம்ப$_3$ தவாங்க்$_4$ரிபல்லவயுக$_3$ம் ஸம்ஸ்தா$_2$ப்ய ஸம்வித்ப$_2$லம் |
ஸத்வம் மந்த்ரமுதீ$_3$ரயன்னிஜஶரீராகா$_3$ரஶுத்$_3$தி$_4$ம் வஹன்
புண்யாஹம் ப்ரகடீகரோமி ருசிரம் கல்யாணமாபாத$_3$யன் ||

அம்பிகையுடன் கூடி அருள் பொழியும் ஈச்வரனைப் பிரார்த்திக்கிறார். நான் உனது பக்தன், நீ என் நெஞ்சில் வந்து குடி கொள்ள வேண்டும். ஊனுடம்பு நின் ஆலயமாக வேண்டும். உள்ளம் நின் திருக்கோயிலாக (கருவறை) வேண்டும். இதன் பொருட்டு, தூய்மையான மனமாகிற கலசத்தை பக்தி எனும் நூலால் சுற்றி, மன நிறைவாகிற நீரால் நிரப்பி, தங்களது திருவடிகளாகிற இரு துளிர்களை மேலே வைத்து, ஞானமாகிற தேங்காயை ஸ்தாபித்து, ஸத்வகுணப் பிரதானமான மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு, உன் வருகையின் பொருட்டு ‘புண்யஹவாசனம்’ செய்கிறேன். நீ பிரியத்துடன் வந்து நெஞ்சில் உறைவாயாக – ‘ஹ்ருத்யந்தஸ்தோஹி அப்த்ராணி விதுநோதி ஸுஹ்ருத்ஸதாம்’ என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க என் நெஞ்சிலுள்ள எல்லா ரஜோகுண தமோகுண அழுக்குகளை நீக்கித் தூய்மைப் படுத்துவாயாக.

சிவானந்த லஹரியின் ஒவ்வொரு சுலோகமும் ஒரு ரத்னமாகப் பிராகாசிக்க, ஸ்ரீ ஆசார்யாள் ஈஸ்வரனுக்கு வாக்கினால் செய்யப்பட்ட ஒரு ரத்னஹாரத்தை ஸமர்ப்பிக்கிறார். ஈஸ்வர ஸம்பந்தியான இந்த ஹாரத்தின் அப்ராகிருதமான திவ்ய ஒளி ஸேவிக்கும் நம் மேல் விழும்போது நம்மைப் புனிதமாக்குகிறது.

இவ்வாறு பல பெருமைகள் வாய்ந்ததும், ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதரின் அமுத வாக்காகப் பிரவஹித்தும், ச்ரவண, படன மாத்திரத்தால் வரண்ட நெஞ்சில் கூட பக்தி துளிர்விடச் செய்யும் பெருமை பெற்றதுமான 'ஸ்ரீ சிவானந்த லஹரீ' எனும் நூலை, எளிய தமிழில் இனிதே மொழி பெயர்த்துக் கற்றோரும், மற்றோரும் ரஸிக்கும் வண்ணம் வெளியிட்டுள்ள ஸ்ரீ மீ. ராஜகோபாலன் அவர்களின் முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது.

ஸ்ரீ மஹா த்ரிபுரஸுந்தரி ஸமேத ஸ்ரீ சந்த்ரமௌளீச்வர ஸ்வாமி கிருபையால் இவர் இது போன்ற அரிய நூல்களை, பாமரரும் அறியும் வண்ணம் எழுதி வெளியிட உற்சாகத்தையும், ஊக்கத்தையும் பெற வேண்டி அனுக்ரஹிக்கிறோம்.

ஸ்ரீ ஜய பாத்ரபத சுக்ல சதுர்த்தி நாராயணஸ்ம்ருதி

ஸ்ரீ காஞ்சி ஸம்வத்ஸரம் 2523,
காஞ்சீபுரம் – 631 502

அணிந்துரை

Dr. V.L. Sethuraman, M.A., Ph.D
Former Prof. of Sanskrit & head,
Madras Christian College,
Tambaram

Former Dean (admn), SCSVVMV
Enathur, Kanchipuram

"GURUKRIPA"
104/18, Chitlapakkam
11 Main Road
Tambaram Sanatorium, Chennai-47
Tamilnadu, India
Tel: 0091 44 223 0741

ஆதி சங்கராசார்யார் அவர்களின் அரும்பெரும் பொக்கிஷம் சிவ சீர் மகிழ்வு அலை எனும் சிவானந்தலஹரி.

பாரத தேசத்தின் பழம்பெரும் புதையல் சனாதான தர்மம், அறம், பொருள், இன்பம், வீடு எனும் உயர் நோக்கங்களைக் காட்டி, நன்முறையில் நம்மை நடத்திச் செல்கிறது. அவ்வழியினைக் காட்டுவோர் முனிபுங்கவர்கள், ஆசார்யப் பெருமக்கள் முதலியோர் ஆவர்.

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது, அதிலும் மகானாய்ப் பிறத்தல் பேரரிது. ஈண்டு குறிப்பிடத்தக்கவர், காலடியில் பிறந்து, ஆய கலைகள் அனைத்தையும் முழுமையாக உணர்ந்து, அவனி முழுதும் காலடிகளாலேயே பன்முறை கடந்து, பண்டிதர்கள் என்றோ, பாமரர்கள் என்றோ வேறுபாடு ஏதும் இன்றி ஆசிகள் அளித்து, புகழ்மிகு ஷண்மத ஸ்தாபகராயும், தத்துவ ஞானியாயும், இறைஞானியாயும், கவிதா ஸிரோமணியாயும், வேத வேதாந்த சிலிபியாயும் திகழ்ந்தவர் ஆதி சங்கரர்.

அன்னார் வேத பாஷ்யங்கள் முதலாக விஷ்ணு சஹஸ்ரநாம பாஷ்யம் மற்றும் பற்பல தோத்திர நூல்களையும் செவ்வணே

புனைந்துள்ளார். அவற்றுள் சிறப்பாக இரண்டு தந்தரயுக்தமான சீரிய நூல்களாம் சௌந்தர்யலஹரி, சிவானந்தலஹரி எனும் அம்பாள், சிவபரமான நூல்களை வடித்து, அவற்றுள்ளும் வேதாந்தக் கருத்துக்களைப் புகுத்து இணையிலாக் காவிய வடிவில் தந்துள்ளார்.

நூறு பாடல்களைக் கொண்டு மிளிரும் சிவானந்தலஹரி நூலை, அழகுறத் தமிழ்ச் சந்தங்களாக, சிறப்புற வடித்துள்ளார் திரு மீனாக்ஷிசுந்தரம் இராஜகோபாலனார்.

பரம்பொருளான சிவாத்மக ப்ரபாவத்தை இந்நூல் பறை சாற்றுகிறது. சிவசுகப்பெருவெள்ளம் எனும் தலைப்பில், அழகிய தமிழில், மிக மிக எளிமையாகவும், எளிதில் புரிந்து உணரும் வகையிலும் தெளிவாகச் சமைத்துள்ளார். மூல கிரந்தத்திற்கு மிகச் சிறிதும் வழுவாமல், பாட்டுக்களைத் தமிழ் மொழி பெயர்ப்பாக அருளியுள்ளார். காவிய இலட்சணங்கள் மிக இனிதான நடை அழகுடனும், பொருட்செறிவுடனும் தலையாய்த் திகழ்கின்றன. காவிய ஆத்ம பூதமான த்வனி, ரசங்கள், குணங்கள், அலங்காரங்கள், நடை முதலியவை அழகாகக் கையாளப்படுவதையும் கண்டு மகிழலாம். சச்சினாந்த ஸ்வரூபமான பரஞ்ஜோதி வடிவான சிவானந்த நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இந்நூலை ஒரு நல்ல நங்கைக்கு ஒப்பிடும் பாடல் (98), இந்நூலின் சிறப்புக்கு ஒரு உதாரணம்.

ஸர்வாலங்காரயுக்தாம் ஸரலபத3யுதாம்
ஸாது4வ்ருத்தாம் ஸுவர்ணாம்
ஸத்3பி4:ஸம்ஸ்தூயமானாம் ஸரஸகு3ணயுதாம்
லக்ஷிதாம் லக்ஷணாட்4யாம் |
உத்3யத்3பூ4ஷாவிஸேஷாமுபக3தவினயாம்
த்3யோதமானார்த2ரேகா2ம்
கல்யாணீம் தே3வ கௌ3ரீப்ரிய மம கவிதா
கன்யகாம் த்வம் க்3ருஹாண || 98||

நகையு மிகவாகி நடையு மழகாகி
தகையு முளவாகிப் - பொன்மேனி
மிகையி லுயர்வாகி முனியர் உடனாகி
இனிய குணமாகி - கனியான
நெறியு முறையாகி மிளிரும் அணியாரம்
ஒளிரப் பொருளோடுங் – கரமாகி
நிறையு சுகமாகி உரையும் கவிமாது
நினது துணையாகி - நிலைவீரே

இவ்வுருவகமும் மொழி பெயர்ப்புமே இந்நூலின் சீரிய சிறப்பைக் காட்டுகிறது. ஸ்லேஷ ஆதி குணங்கள், உபமா, ஆதி அலங்காரங்கள், ப்ரஸாத நடை முதலியவை இந்நூலின் சிறப்பு. உவமை, உருவகம், சிலேடை, எதுகை, மோனை மூல நூலிலும், மொழிபெயர்ப்பிலும் திறம்பட இருப்பதை எளிதில் அறியலாம்.

சிவ சுகப் பேரலை பெயருக்கு ஏற்றாற்போல் உண்மையான பரம்பொருளை மங்களகரமான பரமசிவனைப் போற்றுகிறது. பரம் அசிவம் (அனைத்து அமலங்களையும்) களைந்து, பரமசிவனின் பரிபூரண ஆசிகளையும் அனுக்ரஹத்தையும் அடைய வழி வகுக்கிறது. முதற்பாட்டிலேயே (கலாப்யம் எனும். கலைகள் பலவாகி) சிவசக்தியின் இன்றியமையாத பெருமைகளை உணரலாம். மேலும் அனுப்ராசம், யமகம், எதுகை மோனைகளால் அன்னாரின் ஆனந்தக் கூத்தினை அனுபவிக்கலாம். சிவநிலை உணர்தல் – யானே பிரம்மம் எனும் அத்வைத பாவம், கேட்டல், நினைத்தல், தியானித்தல் ஆகிய வேத வேதாந்தக் கோட்பாடுகளைப் பாக்கள் 7, 11, 92 மூலம் அறியலாம்.

மேலும் பரமசிவனின் பற்பல திருவிளையாடல்களும் இந்நூலில் காட்டப்பட்டுள்ளன. திரிபுர சம்ஹாரம் (3), மார்க்கண்டேய அனுக்ரஹம் (65, 79), கண்ணப்பர் அனுக்ரஹம் (63), பிரமனும் திருமாலும் அடிமுடி காண முயலுதல் (23), காமதகனம் (21) என எடுத்துக் காட்டலாம். நம் மனதினை அன்னப்பறவைக்கு உவமையாகக் கூறுகிறார் கவி. அல்லவை

அகற்றி நல்லவை நல்கும் திறன் அன்னப்பறவைக்கே இருக்கிறது. அது போலவே, நம் மனம், காமாதி துர்க்குணங்களை நீக்கி, நல்லதோர் பரம்பொருளை உணரும் பாங்கு, பாடல் 48ல் வெளிப்படுகிறது. இது போன்ற பல நல்லுவமைகளை, உதாரணமாக, 43ம் பாடலில் சிவனை வேடுவனாகவும், 45ல் சிவனின் திருவடிகளைப் பறவைக் கூண்டாகவும், 46ம் பாடலில் சிவனின் திருவடிகளே பக்தர்கள் வசிக்கும் மாளிகையாகவும், பகவான் ஆதிசங்கரர் அளிக்கிறார்.

சிலேடை அணியினை எளிதாகக் கையாள்கிறார் ஆசிரியர். சிவனோ ஆத்மப்ரகாசர். சந்திரனோ பூரணப்ரகாசர். இவ்விருவருக்கும் சிலேடை பாடல் 38. அது போன்றே சிவனை சிங்கத்துடனும் (44), மல்லிகை மலருடனும், மல்லிகார்ஜுனம் – ஸ்ரீசைலம் எனவும் (50), மயிலின் நடனத்துடனும் (54) ஒப்பிடுவதைக் காணலாம். உள்ளதை உள்ளபடியே இயம்புதல் ஸ்வபாவ உத்தியணியாம். அதை அழகாக 59ம் பாடலில் கையாள்கிறார். அன்னப்பறவை தாமரைக் குளத்தை நாடுகிறது. சாதகப் பறவை நீருண்ட மேகத்தையும், கோகணப் பறவை சூரிய ஒளியையும், சகோரப் பறவை பூரண சந்திரப் பிரகாசத்தையும் நாடுவது இயல்பே. அவ்வாறே பக்தர்களாகிய நாமும் உண்மை அறிவால் பூரண சச்சினாந்த ஸ்வரூபத்தை நாடுகின்றோம். என்னே படைப்பாளரின் கவிதா சக்தி !

சிவசக்திப் பிரபாவத்தை வர்ணிக்குங்கால் பூமியைத் தேராகவும், பிரம்மாவை ஓட்டுநராகவும், மேருமலையை வில்லாகவும், திருமாலை அம்பாகவும் ஆதிசேஷனை நாணாகவும் அமைத்துத் திருபுர சமாரத்தை வருணித்திருப்பது, படிப்போர் மனதினைப் பரவசப்படுத்துகின்றது. பக்தியே முக்திக்கு இணையிலா வழி என்பதும் (10, 13, 14, 15). அவனருளால் அவன் தாள் வணங்குதலும், கர்ம பலனறிவும் (16,19), பரசிவசுகம் அனுபவிப்பவர்களே அடியார்கள் எனவும் (18), சிவதரிசனம் (25) மானசீகப் பூஜை (33) எனவும் பல விதமான அரிய கருத்துக்களும் சிறப்பான உவமைகளுடன்

காட்டப்படுகின்றன. மிக மிகச் சிறப்பக, ஜீவன் முக்தர்களுடைய இலட்சணத்தைப் பாடல் 81 மூலம் அறிகிறோம். 'நெஞ்சத்தால் எவன் உஞ்சத்தாவுவன், செஞ்சொல் ஜீவித சிவமுக்தன்'.

அஞ்ஞானியின் அறியா நிலையையும், சிவப் பிரார்த்தனையும் பாடல்கள் 85, 86 காட்டுகின்றன. முடிவில் முத்தாய்ப்பாக முக்தி பெற சக்தி கொடுக்குமாறு இராமபிரான், அகத்தியர், அயன் ஆகியோர்களைக் குறிப்பிட்டு, சிவபதம் எய்திட நெஞ்சுருக நெக்குருகிறார் கவிஞர்.

மேலும் சிறப்பாக நூறு பாட்டுக்களையும் தமிழில் வடித்து, சிறப்புற ஸ்தோத்ரம் வாயிலாக ஒவ்வொரு பாடல்களுக்கும், முறையான, பொருத்தமான தலைப்பினை நல்கி, போற்றி, போற்றி எனப் போற்றுகிறார். உடனுக்குடன், சிவநடனக் குறிப்பாக, சந்தத்தையும் நன்றே நாட்டுகிறார் நூலின் ஆசிரியர் மீ. இராஜகோபாலனார்.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர், நிதி குறைந்தவர் காசுகள் தாரீர், அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருள்வீர் (ஆசிகள் அளிப்பீர்) எனும் பாரதப் பெருமான் போற்றுதலுக்கேற்ப, தமிழால் இனிதே மொழி பெயர்த்தளித்த அன்பர் மீ. இராஜகோபாலனார் அவர்களுக்கு, அடியேன் உளமார்ந்த ஆசிகளையும், வாழ்த்துக்களையும் நல்கி, பரமசிவனின் கருணா கடாக்ஷ வ்ருஷ்டியால் பரம குணானுகத மங்களத்துடன் பிறவா நிலைபெற, எல்லாம் வல்ல இறைவனாம் பரமானந்த சுகப்பேரலையில் நிலைக்கும் பரம்பொருளை இறைஞ்சுகிறேன்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாது வேறொன்றும் அறியேன் பராபரமே.

சென்னை
2 ஜீன் 2014

பணிவுரை

பகவான் ஆதிசங்கரர் இயற்றியதாகப் பெரியோர்களால் கருதப்பட்டுப் போற்றிப் பாதுகாத்து பூஜித்து வருகின்ற நூல்களில் ஒன்று, ஶிவானந்த₃லஹரீ எனும் இந்த அரிய நூல். ஸ்மஸ்கிருத மொழியிலே, நூறு பாடல்களிலே, நுண்ணிய வார்த்தைக் கோர்வைகளும், நூதனப் பொருட்பார்வைகளும், மொழிச்சுவை, கருத்தாழம், பக்தி ரசம், ஞானத் தேறல் எனும் பலவிதச் சுவைகளும் ஊட்டப்பட்டு விளங்கும் இந்நூல் ஒரு ஒப்பிலாப் பொக்கிஷம்.

அத்வைதம் ஆகிய இரண்டல்லாத ஒன்றே சத்தியம் எனும், உலகில் எல்லா மனிதர்களுக்கும் பொதுவானதாயும், எல்லா உயிர்களுக்கும் உரிமையானதுமான வேதாந்த சாரத்தினை, அறிவு பூர்வமாக ஆய்ந்து, விளக்கி, அணையாத ஞான விளக்கினை ஏற்றியவர் பகவான் ஆதி சங்கரர். அவரே மற்ற எல்லோரும் படிப்படியாக உய்யும் பொருட்டு, முதல் நிலை, அடுத்த நிலை என ஆன்ம அறிவில் உயரும் பொருட்டு, உருவ வழிபாட்டிற்கும், ஆன்ம வழிபாட்டிற்கும், உரு அருவற்ற பிரம்ம சமாதிக்கும் உதவுகின்ற வழியிலே, பல வகையான தோத்திரங்கள், பாடல்கள், வேதாந்த விளக்கங்கள், அறநெறி நூல்கள் எனப் பல நூறு நூல்களை நமக்காக ஆக்கி அருளியிருக்கிறார்கள்.

சௌந்தர்ய லஹரீ எனும் நூலிலே, அன்னை பராசக்தியின் அருளை, அழகு வெள்ளமாக அனுபவித்துப் படைத்தவர் ஆதி சங்கரர். சிவமாகிய ஒன்றான பிரம்மமே, சிவனும் சக்தியுமாக இருவராகி, ஆயினும் ஒன்றில் ஒன்றாகிக் கலந்த சிவசக்தி வடிவமாக இருப்பதாக நிறுவி, அச்சிவசக்தி வடிவினருக்கு, ஆதிசங்கரர் படைத்த அரிய துதியே ஶிவானந்த₃லஹரீ எனும் இத்தேனினும் இனிய பாடல்கள்.

சிவசக்தி வடிவத்தினைப் பரம்பொருளாகத் துதித்து, அத்துதியின் இனிய அனுபவத்தினால், உள்ளும், புறமும் ஶிவானந்த₃லஹரீ எனப்படும் சிவ சுகப் பெரு வெள்ளம்

பரவியிருக்கும் பரவச நிலையினை இப்பாடல்கள் அருள்கின்றன. அப்பரசிவ பரசுகப் பரவச நிலையைத் தூண்டும் இவ்வரிய நூலைத் தமிழ்மொழி வாயிலாகப் பயில வேண்டும் எனும் நன்முனைப்பால், குருவருளின் காப்பினால், திருவருளின் சேர்ப்பினால், இங்கே மொழி பெயர்க்கப்பட்டது.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் மூலம், ‘அண்ணா’ என எல்லோராலும் போற்றப்படும் அமரர் ஸ்ரீ அண்ணா சுப்ரமணியன் அவர்கள் மறைமொழி நூல்களுக்கு ஆக்கி வைத்த தமிழ் மொழி பெயர்ப்புக்கள் எல்லாம் தமிழுலகம் தலையில் சுமந்து காக்க வேண்டிய சொத்துக்கள்.

அன்னாரைப் போன்றே, பல பெரியோர்களும், தமிழ், ஆங்கிலம் எனப் பல வகையிலே, இவ்வரிய நூலைத் திறம்பட மொழி பெயர்த்திருக்கிறார்கள். ஆயினும் எனது இம்முயற்சி, ஆத்ம திருப்திக்காகவும், யான் இதனை நன்கு பயில வேண்டும் எனும் ஆவலினாலும், ஆக்கப்பட்டது.

இதில் தவறுகள் இருப்பின் அவை யாதும் என் பொறுப்பு அவற்றைக் குருவருளால் தீர்ப்பதும் என் கடனே. இதில் ஏதேனும் குணம் இருப்பின், அதுவும் என் குருவடிகள் தரும் அருளே.

‘எழுதுக’ என ஊக்குவித்தும், எழுதியதில் பழுதுவராது சீர் பார்த்தும், லண்டனில், சத்சங்கம் எனக்கூடும்போது, இவை பற்றிப் பேசி, மேலும் உற்சாகமும் தந்த நண்பர் திரு பாலாஜி அவர்களுக்கும், அறிவாய்ந்து அணிந்துரை அளித்த பேராசிரியர் Dr. V.L. சேதுராமன் அவர்களுக்கும் அடியேனின் நன்றிகள்.

இப்பணி பழுதில்லாது, படிப்போருக்குப் பயனளிக்க வேண்டும் என்பதே, எல்லாம் வல்ல இறைவனிடத்தும், நல்லானாக்கும் நற்குருவினடத்தும், யான் பணிந்து தேடும் வரம்.

மீ. ராஜகோபாலன்
லண்டன், 2-4- 2014

	ஶ்ரீ:	
	ஶிவாப்$_4$யாம் நம:	
	ஶிவானந்த$_3$லஹரீ	

1 - சிவ சுகப் பெருவெள்ளச் சீலம் அடி போற்றி!

कलाभ्यां चूडालङ्कृतशशिकलाभ्यां निजतपः
फलाभ्यां भक्तेषु प्रकटितफलाभ्यां भवतु मे |
शिवाभ्यामस्तोकत्रिभुवनशिवाभ्यां हृदि पुन
र्भवाभ्यामानन्दस्फुरदनुभवाभ्यां नतिरियम् ||१||

கலாப்$_4$யாம் சூடா$_3$லங்க்ரு$_2$த ஶஶி கலாப்$_4$யாம் நிஜ தப:
ப$_2$லாப்$_4$யாம் ப$_4$க்தேஷு ப்ரகடித ப$_2$லாப்$_4$யாம் ப$_4$வது மே |
ஶிவாப்$_4$யா மஸ்தோக த்ரிபு$_4$வன ஶிவாப்$_4$யாம் ஹ்ரு$_2$தி$_3$புனர்
ப$_4$வாப்$_4$யா மானந்த$_3$ ஸ்பு$_2$ர த$_3$னுப$_4$வாப்$_4$யாம் நதிரியம் ||1||

தனன தனதான தனன தனதான
தனன தனதான – தனதான

கலைகள் பலவாகித் தலையில் பிறைசூடித்
தவமும் பலனாகித் - திகழ்வோரை
கருணை மிகவாகிப் பணியும் அடியார்கள்
அடையும் வரமாகி - அருள்வோரை
விளைமூ வுலகாகி உளமுள் ளுறைவாகி
நினைவில் புதிராகி - நிறைவோரை
விடைகள் புலனாகி விளையும் சிவகாம
வெளியை இதனாலே - பணிவேனே (1)

பலவகைக் கலை வடிவமானவர்களும், தலையில் சந்திரனைச் சூடியவர்களும், தவமும் பயனுமாய் ஒருவருக்கு ஒருவர் உரித்தானவர்களாக விளங்குபவர்களும், அடியவர்களிடம் அன்பு காட்டி அருட்பயனைத் தருபவர்களாகவும், முவ்வுலகங்களிலும் நிறைவான வளத்தைத் தருபவர்களாகவும், கடவுளாக உள்ளத்துள் விளங்குபவர்களாகவும், நினைக்கும் போதெல்லாம், புதிராக மனதை நிறைப்பவர்களாகவும், தன்னை உணர்தலாகிய பெரும் அறிவினால் திளைத்து, சிவ

சக்தியாக ஒன்றி விளங்கும் பரம்பொருளுக்கு என்னுடைய இத்துதி, பணிவால் அர்ப்பணிக்கப்படட்டும்.

குறிப்பு:

‘இயம் மே நதி: பவது’ - அதாவது இந்த என்னுடைய துதி உமக்கே உரித்தாகட்டும் என்ற பணிவு இப்பாடலிலே யாருக்கு அர்ப்பணிக்கப்படுகிறது ?

‘சிவாப்யாம்’ எனும் சொல், ‘சிவமாகிய உங்கள் இருவருக்கும்’ என்று சிவ சக்தி இருவரையுமே குறிக்கின்றது. ‘ஆப்யாம்’ எனும் விகுதியினால், ஒருமையான சிவம் எனும் பரம்பொருளையே, ஒன்றுடன் ஒன்றாய் இணைந்த சிவன், சக்தி என்ற இருவராகக் காட்டுகின்றது.

லலிதா சஹஸ்ரநாமம் அன்னையைச் சக்தியாகத் தொழுகின்றது. சிவ ருத்திரம், சிவனை ருத்திரப் பிரம்மமாகத் தொழுகின்றது. விஷ்ணு சஹஸ்ரஹநாமம், திருமாலை பிரம்மமாகத் தொழுகின்றது. அது போன்றே பல துதிகளும், ஒரு வடிவத்தை மட்டுமே குறித்து அமைந்துள்ளன. ஆனால், ஶிவானந்த₃லஹரீ எனும் இப்பேரமுதான பாடல்கள், சிவசக்தி ஐக்கியத்தை முன்னிலைப்படுத்தி, மாறாத நிலையான பிரம்மமே சிவனாயும், மாற்றங்கள் விளைத்து விளையாடும் சக்தியுமாக, இரண்டாயும், இரண்டும் கலந்த சிவசக்தியாயும், முந்நிலைப் படுத்திப் பணிகிறது.

‘உங்களுக்கே இத்துதி அர்ப்பணம்’ என்று பணிகின்ற ஆதிசங்கரர், ‘கலாப்யம்’ எனத் தொடங்கும் பலவித சிறப்புச் சொற்களால், சிவசக்தியின் பெருமைகளையே கூறுகின்றார்.

சிறப்புச்சொற்கள் (adjectives) என்பன ஒரு பொருளின் சிறப்பான குணத்தைக் கூறச் சேர்க்கப்படுபவை என்பதே பொதுவான விதி. என்றாலும், சில இடங்களில், சிறப்புச் சொற்கள், குணத்தைக் குறிக்காமல், அப்பொருளுக்கே விளக்கமாகவும் அமைகின்றன.

‘ஒளிரும் சூரியன்’ என்பதில், ஒளி சூரியனின் குணத்தைக் குறிப்பதல்ல, சூரியனையே குறிப்பது.

அதுபோலவே, ‘ஆனந்த3 ஸ்பு2ர த3னுப4வாப்4யாம்’ எனும் சிறப்புச் சொற்கள், சிவ சக்தியினரின் குணத்தைக் குறிப்பதல்ல. தம்மை முற்றும் உணர்ந்து எப்பொழுதும் ஆனந்தமான நிலையிலேயே இருக்கும் சிவசக்தியின் உண்மை நிலையையே குறிக்கின்றன.

எப்போது தன்னை முற்றும் உணரும் நிலை வருமோ, அப்போது அங்கு சிவமே நிலைக்கிறது. அதனாலேயே ‘அஹம் ப்ரஹ்மாஸ்மி’ எனும் சித்தம் அடங்கிச் சிவமாகும் நிலையும் உறுதிப்படுகிறது. (1)

2 - சிந்தை நிறை வெள்ளச் சிவானந்தம் போற்றி!

गलन्ती शंभो त्वच्चरितसरितः किल्बिषरजो
दलन्ती धीकुल्यासरणिषु पतन्ती विजयताम् |
दिशन्ती संसारभ्रमणपरितापोपशमनं
वसन्ती मच्चेतोहृदभुवि शिवानन्दलहरी ||२||

க$_3$லந்தீ ஶம்போ$_4$ த்வச்சரித ஸரித: கில்பி$_3$ஷரஜோ
த$_3$லந்தீ தீ$_4$குல்யாஸரணிஷு பதந்தீ விஜயதாம் |
தி$_3$ஶந்தீ ஸம்ஸார ப்$_4$ரமண பரிதாபோப ஶமனம்
வஸந்தீ மச்சேதோ ஹ்ரு$_2$த$_3$பு$_4$வி ஶிவானந்த$_3$ லஹரீ ||2||

தனன தனதனன தனன தனதனன
தனன தனதனன – தனதான

அரிய சிவசரிதம் அருளப் பெரியநதி
அகலத் துயர்வினையின் - துகளோய
அருவிப் பெருகவருள் அறிவுச் சுனைபரவி
அவியப் பிறவியுழற் - சுழிதீர
விரிய நிறைமனது விரைய இதயமடு
விரியக் சுகவமுதக் - கடலாகி
விளையும் சிவானந்த வெள்ளப் பெருஞான
வெற்றி சிவசம்பு – அருளாலே (2)

சிவ சம்போ! பெருமைக்குரிய நினது சரித்திரமாகிய நதியிலிருந்து பெருகுவதாயும், பாவமாகிய அழுக்கினை நீக்குவதாயும், அறிவின் வழியே வழிந்தோடும் ஆறாக விளைவதாயும், பிறவியெனும் சுழலில் சிக்கும் துன்பத்தை அவித்து, மனதில் அமைதியைப் பரப்புவதாயும், எனது சித்தமாகிய இதயத்தின் இடுக்கெல்லாம் நிரப்பி, என்றும் நிறைந்திருக்கும் சுகக்கடலாயும் விளங்கும் ஶிவானந்த$_3$ லஹரி எனும் சிவ சுகப் பெருவெள்ளம், நினதருளால், வெற்றியுடன் விளங்கட்டும்.

குறிப்பு:

முதற்பாடலில், சிவசக்தி வடிவத்திற்குத் தமது படைப்பினை அர்ப்பணித்த ஆதி சங்கரர், இரண்டாம் பாடலில், ஶிவானந்த$_3$ லஹரீ எனும் சிவ சுகப் பெருவெள்ளம் என்பது, தன்னுள்ளும், வெளியும் பாய்ந்து ஓடிப் பரவிக் கிடக்கும் பரவச நிலையே என்று வாழ்த்திப் பணிகிறார்.

அப்பரவசநிலை எதனால் கிடைக்கத் தொடங்கியதாம்?

பகவான் ஆதி சங்கரர், 'த்வச் சரித ஸரித' என்னும் பதங்களின் மூலம், சிவனின் புனிதமான, தொன்மையான சரித்திரப் பெருமைகளை, உளமார அறிந்த காரணத்திலேயே, ஶிவானந்த$_3$ லஹரீ எனும் இன்பம், நதியாய்க் கடலாய்த் தன்னுள்ளே பெருகுவதாகக் காட்டியுள்ளார்.

அதனால், இப்பாடல், சிவ நினைவால் மனம் உருகி, சிவனின் துதியினால் மதி இளகி, சிவபுராண மகிமைகளைக் கேட்டு ஆனந்தித்து, அப்படியான முழுமையான, உண்மையான பக்தியிலே முற்றி இருப்பதனாலேயே, சிவானந்தப் பரவசம் ஏற்படும் என்று காட்டுகின்றது.

ஆகவே, ஶிவானந்த$_3$லஹரீ எனும் இப்பேரமுதினைச் சுவைப்பதற்கு, நாமெல்லாம் பரம்பொருள் அறிவில் பக்தி கொண்டவராக, சிவ கதைகளைக் கேட்டு மனமும், மதியும் சிவமயமாய் இருத்தி வைக்கும் பக்குவம் உடையவர்களாக இருக்க வேண்டும். அப்பக்குவம் நமக்கு வரவேண்டும் என்ற ஆசையும், உறுதியுமாவது முதலில் நமக்கு இருக்க வேண்டும். (2)

3 - உய்யப் பேரருளாய் உள்ளும் அருள் போற்றி!

त्रयीवेद्यं हृद्यं त्रिपुरहरमाद्यं त्रिनयनं
जटाभारोदारं चलदुरगहारं मृगधरम् |
महादेवं देवं मयि सदयभावं पशुपतिं
चिदालम्बं साम्बं शिवमतिविडम्बं हृदि भजे ||३||

த்ரயீவேத்$_3$யம் ஹ்ருத்$_3$யம் த்ரிபுரஹரமாத்$_3$யம் த்ரினயனம்
ஜடாபா$_4$ரோதா$_3$ரம் சலது$_3$ரக$_3$ஹாரம் ம்ருக$_3$த$_4$ரம் |
மஹாதே$_3$வம் தே$_3$வம் மயி ஸத$_3$யபா$_4$வம் பஶுபதிம்
சிதா$_3$லம்ப$_3$ம் ஸாம்ப$_3$ம் ஶிவமதிவிட$_3$ம்ப$_3$ம் ஹ்ருதி$_3$ ப$_4$ஜே || 3||

தனன தனதான தனன தனதான
தனன தனதான – தனதான

மறைமூ முடிவாகி உடலின் விடிவாகி
மனதுள் வதிமூன்று - விழியோனே
முடிகள் சடையாகிப் பிரள விடநாகம்
இடையில் கலைமானுன் - கரநேயா
அமரர் பதியாகி தமையுள் ஒளியாகி
அருளும் உயிர்நேயர் - தலைவோனே
அன்னை மணவாளா மின்னும் நடிகோனே
நின்னை மனதார – நினைவேனே (3)

(ரிக்,யஜூர், சாம எனும்) மூன்று வேதங்களின் உட்பொருளாகவும், (வல்லுடல், மெல்லுடல், காரண உடல் எனும்) மூன்று உலகங்களையும் அழிப்பவராயும், மனதுள் விளங்குபவராயும், (கடந்த, நிகழ், வரும் கால அறிவான) மூன்று விழிகளுடையவராகவும், சடைகளான முடியுடையராயும், அசைகின்ற விஷ நாகங்களை உடலில் அணிந்தவராகவும், (மாயையாகிய) மானைக் கர நுனியில் பிடித்தவராயும், தெய்வங்களின் தெய்வமாயும், ஒளிக்கு ஒளியாகி, எம்மிடம் கருணைகாட்டி, உயிர்களுக்கெல்லாம் தலைவராகவும் விளங்கி,

என் அன்னை பராசக்தியின் மணவாளனாக, (உலகங்களை அமைத்தும், விரித்தும், அழித்தும் நடத்துகின்ற) அருமையான நடிகராக ஒளிரும் சிவனை என்னுடைய மனதில் பணிந்து நினைத்திருப்பேனே.

குறிப்பு:

நிலையான சுகப்பெருவெள்ளம் தரும் சிவம் யாது?

அதுவே பரம்பொருள். மறை எனப்படும் மூன்று வேதங்களுள் மறைந்து இருக்கும் தெள்ளறிவு அது. வேதம் என்றால் எங்கும் விரிவது. வேதங்களுக்கு அப்பாலும் விரிந்தது என்றால், இறைந்து கிடக்கும் சக்தி, அதாவது இறைவன் என்றாகும். அடுத்த பதம் 'ஹ்ருதயம்' என்பதால், வெளி எல்லாம் இறைந்து விளங்கும் சிவமே, மனதுள்ளும் கடந்து, கடவுள் என்று இருக்கிறார் என்பதும் தெளிகிறது.

'திரிபுர ஹாரம்' எனும் அடுத்த சொல்லினால், இரும்பு, வெள்ளி, தங்கம் ஆகியவற்றால் ஆன உலகங்களை ஆண்டு கொண்டிருந்த, தாராகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி எனும் முவ்வடிவான கொடிய அரக்கர்களைக் கொன்ற சிவன் என்று பொதுவான பொருள் கொள்ளப்படுகின்றது. சிவன், பூமியைத் தேராகவும், பிரம்மாவைச் சாரதியாகவும், மேருவை வில்லாகவும், திருமாலை அம்பாகவும், ஆதிசேடனை நாணாகவும் அமைத்து, தங்கம், வெள்ளி, இரும்பாலான மூன்று உலகங்களும் ஒரே கோட்டில் இணையும் போது, அம்பினைச் செலுத்தி, அல்லல் இழைத்து வந்த மூன்று அரக்கர்களையும் அழித்தார் என்பது புராணம்.

அதன் மறைபொருள் என்ன?

சம்ஸ்கிருத மொழியிலே 'லோகம்' என்பதற்கு 'உலகம்' என்பது அல்ல சரியான பொருள்! 'லோகம்' என்பது ஒரு அனுபவ நிலை. உதாரணமாக 'நரக லோகம்' என்பது, மீளாத் துயராகிய அனுபவ நிலையைத்தான் குறிக்கும். அந்த நிலை எங்கு வேண்டுமானாலும் விளையும்.

அதுபோலவே, ‘திரிபுரம்’ எனும் சொல், மூன்று லோகங்கள் அல்லது மூன்று அனுபவ நிலைகள் என்பதைக் குறிக்கும். இவை ஒரு உயிரினைப் பொறுத்தவரை, விழிநிலை அல்லது ஜாக்ரதா, கனவுநிலை அல்லது ஸ்வப்னா, ஆழ்துயில் அல்லது ஸுஷுப்தி என, அந்த ஜீவாத்மாவின் அனுபவ நிலைகள் என்று ஆகும்.

இந்த ஒவ்வொரு அனுபவ நிலையையும் ஜீவாத்மா தனித்தனியாக அனுபவிப்பினும், ஆத்மாவின் அருளால், இம்மூன்று அனுபவங்களுக்கும் ஒரு உறவு ஏற்பட்டு, நமக்கும் உலகில் வாழ்க்கை எனும் பயணம் கிடைக்கிறது.

மற்றொரு வகையில், வல்லுடல் (பூத சரீரம்), மெல்லுடல் (ஸூக்ஷ்ம சரீரம்), வினையுடல் (காரண சரீரம்) என ஜீவாத்மா உழலும் மூன்று உடல்களையும் இந்த ‘திரிபுரம்’ எனும் சொல் குறிக்கும். எல்லா உலகங்களின் தொகுப்பாகப் பார்த்தால், இவை முறையே அண்டங்கள் (விஷ்வா), அணுக்கூறாதிகள் (தேஜஸ்), அகண்டமாயை (பிரக்ஞா) என மூன்று பரந்த அனுபவ நிலைகளையும் குறிக்கும்.

‘நான் இவ்வுடலே’ எனும் மயக்கமும், ‘தான்’ எனும் ஆணவமும் நம்முள்ளே இருந்து கொண்டு, உண்மையை மறைக்கின்ற காரணத்தினால், இம்மூன்று அனுபவங்களையே நாமும் மாறி மாறி அனுபவித்து, பிறகு எப்போதேனும் உடலை விட்டு, மீண்டும் மறு உடலைப் பெற்று, அப்படியான ‘சம்சாரம்’ எனும் சக்கரத்தில் சுழன்று கொண்டிருக்கும் ஜீவர்களாக இருக்கிறோம். நம் மயக்கமும், அறியாமையும், ஆணவமுமே புராணம் காட்டும் அந்த அரக்கர்கள்.

மூன்று அனுபவ நிலைகளிலும் தத்தளிக்கும் இம்மூன்று பேரும் ஒரே ஜீவன்தான் என்பதும், அம்மூன்று நிலைகளும் ஒன்றிய துரீயமெனும் ‘அறிவுணர்துயில்’ அல்லது சமாதி நிலையிலேதான், இந்த மயக்கம் முற்றும் தெளியும் என்பதும், அம்மயக்கம் தெளிய, பிறவி எனும் மாற்றங்களை விதைக்கும் பிரம்மனும், காத்தல் எனும் மாயத்தில் இருத்தும் மாலனும், இறப்பு என உடலுயிர் அறுக்கும் உருத்திரனும் ஒன்றாகி,

சிவமாகிய பர அறிவான அம்பினால், நமது ஆணவத்தைத் துளைக்க வேண்டும் என்பதும் இப்பாடலின் பொருள்.

அப்படி அழித்து அருள் தர, சிவன் பூமியைத் தேராக வைத்துக் கொண்டார் என்பது எதனை வலியுறுத்துகிறது?

பூமியிலே பிறந்தால் மட்டுமே, சம்சாரம் எனும் வலையினை அறுத்து வெளி வரமுடியும் என்பதே ஆகும். மனிதப் பிறவிக்கே அந்த மகத்தான விடுதலைக்கான சக்தி இருக்கிறது என்பது காட்டப்படுகிறது. அதனாலேயே, திருபுரஹாரம் எனும் சொல் மூவுடலின் விடிவு என்று தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டது.

இப்பாடலில், மற்றொரு அரிய சொல் ‘அதி விடம்பம்’ என்பது.

சிவனை இச்சொல்லால், மிகப்பெரிய விந்தையான நடிகன் என்று அழைக்கிறார் ஆதி சங்கரர். தாம் ஒன்றே சத்தியம் என்று இருந்தும், தனது சக்தியினால், மாறுகின்ற உலகங்களைப் படைத்து (அதற்கும் தாமே விதை, விளை, செயற் காரணனாக இருந்து கொண்டும்), விளையாடிக் கொண்டிருக்கும் பெரிய நாடகத்தின் நாயகன் அல்லவா சிவன்! அவர் நடிப்பை எப்படி நம்மால் முழுதாக உணரமுடியும்! ஒரு நொடியில் அப்புனித அறிவு நமக்குள் தெளிந்தாலும், உடனே மறைந்து விடுகிறதே!

அதனாலேயே, ‘மின்னும் நடிகன்’ என மின்னலாய்த் தோன்றி மறையும், மறைக்கும் நாடக நாயகன் என்று தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டது. (3)

4 - தெய்வத்துள் தெய்வத் திருவே சிவம் போற்றி!

सहस्रं वर्तन्ते जगति विबुधाः क्षुद्रफलदा
न मन्ये स्वप्ने वा तदनुसरणं तत्कृतफलम् |
हरिब्रह्मादीनामपि निकटभाजामसुलभं
चिरं याचे शंभो तव पदांभोजभजनम् ||४||

ஸஹஸ்ரம் வர்தந்தே ஜக$_3$தி விபு$_3$தா$_4$: க்ஷுத்$_3$ர ப$_2$லதா$_3$
ந மன்யே ஸ்வப்னே வா தத$_3$னுஸரணம் தத்க்ரு$_2$தப$_2$லம் |
ஹரி ப்$_3$ரஹ்மாதீ$_3$னாமபி நிகடபா$_4$ஜாம் அஸுலப$_4$ம்
சிரம் யாசே ஶம்போ$_4$ ஶிவ தவ பதா$_3$ம்போ$_4$ஜ ப$_4$ஜனம் ||4||

தானன தனன தானன தனன
தானன தனன – தனதான

ஆயிர மெனவே தேயுறுங் கடவுள்
சேவியர் சுகம்புவி தந்தாலும்
காயென அவையே தூரென விலகிக்
கனவிலும் அவையான் - விழையேனே
தீயென அருகே நீயிருந் தாலும்
திருமா லயனார் - அறியானே
நேயருட் தேடி நினதடிப் பதுமம்
நினைமனம் நிறைவேன் – சிவசம்போ (4)

(விரும்பிக் கேட்போருக்குப்) பல நிலையற்ற பயனைத் தர, உலகில் ஆயிரக்கணக்கான தெய்வங்கள் இருக்கின்றனர். (அக்கீழ்நிலைப் பயனெதுவும் உண்மைச் சுகம் தராது என உணர்ந்து) கனவிலும் அவற்றை விரும்பி அத்தகைய வழிபாடுகளை நான் செய்ய மாட்டேன். அயனும், அரியும், அவர்கள் அருகிலேயே (அதாவது அவர்களுள்ளும் புறமும்) தீச்சுடராக விரிந்து நின்ற போதும், அவர்களால் முற்றும் அளவிட முடியாத பெருமானாகிய நினது திருவடித் தாமரை

மலர்களையே எப்போதும் என் மனதில் நினைத்திருப்பேன், சிவசம்போ!

குறிப்பு:

சிவனே என் தெய்வம் எனக்கூறும் இந்த நான்காம் பாடல், மேலெழுந்த வாரியாகப் படிக்கையில், ஆயிரம் கடவுள் இருந்தாலும், அவர்கள் பல பொருட்களை எல்லாம் அருளினாலும், அவர்களைக் கனவிலும் வணங்கமாட்டேன், அவர்கள் தரும் பலன் எதுவும் விழையமாட்டேன் என்று பொருள் வரும். ஆதிசங்கரர் ஜகத்குரு அல்லவா? அவரின் வாக்கு எப்படிப் பொய்யாகும்? சிவனைத் தவிர வேறு யாரையும் கனவிலும் நினைக்க மாட்டேன் என்றால், அன்பினால் அம்பாள், முருகன், விஷ்ணு, அல்லா, ஏசு என்று மற்றதொரு வகையிலே ஒன்றேயாகிய கடவுளைப் பணிபவர்களின் நிலை என்ன? அதனால், ஆதிசங்கரர் சொல்வதன் பொருள் ஆழமான வேறொன்றாக இருக்க வேண்டும்.

கனவு என்பது நமக்கு வருவது! கனவினை நாம் ஏற்படுத்திக் கொள்ள முடியாது. அல்லாவை வணங்கி வருபவர் கனவில் அல்லா வருவது இயலும், சிவன் எப்படி வரமுடியும்? அதேபோல சிவனையே வணங்கி வருபவர் மனதில், சிவனைத் தவிர வேறு எந்த வடிவம் வரமுடியும்? இங்கே ஆதி சங்கரர், தான் எப்பொழுதும், சிவச் சுகப் பெருவெள்ளத்திலேயே இருப்பதால், கனவில் கூட வேறு தெய்வ வடிவங்கள் தமக்கு வருவதில்லை என்று சொல்கிறார். எனவே, இப்பாடலின் பொருளை வழிபாட்டு பேதங்களுக்கும், வாதங்களுக்கும் வித்திடுவதாகக் கொள்ளல் தவறு.

'விபுதா க்ஷுத்ர பலதா' என்பது, அற்பப் பயன் அளிக்கும் தெய்வங்கள் எனப்பொருள் தருகிறது. எது அற்பப் பயன்? நிலையற்ற சுகம் தரும் எல்லாமே, அது சொர்க்கப் பதவி என்றாலும் கூட, அதுவும் ஒரு சமயத்தில் முடிந்து மீண்டும் பூமியில் பிறக்க வேண்டும் என்பதால், அற்பமே! அதனால்

நிலையான சுகம், மரணமிலா (அதனால் மறு பிறவியிலாப்) பெருவாழ்வு ஒன்றே ஆகும்.

மார்க்கண்டேயருக்கு அளித்த மரணமிலாப் பலனைப்போல, நிலையான பலனைத் தருபவன் சிவன் என்பதாலேயே, சிவனே எந்தன் சிந்தை என்று சொல்கிறார் ஆதி சங்கரர்.

மேலும் 'விபுத:' எனும் சொல்லுக்கு அறிவாளி, தெய்வம், மற்றும் நிலவு எனப் பல பொருட்கள் உண்டு. இங்கே தேய்மானமடையும் பலனை அளிக்கும் தெய்வங்கள் (அல்லது குறையான அறிவுடையவர்கள், தேயும் நிலவு) என்பதைக் குறிப்பதாக, 'தேயுறுங்கடவுள்' எனத் தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டது. (4)

5 - சிவநினைவாம் பரஅறிவுச் சீலன் அடி போற்றி!

स्मृतौ शास्त्रे वैद्ये शकुनकवितागानफणितौ
पुराणे मन्त्रे वा स्तुतिनटनहास्येष्वचतुरः |
कथं राज्ञां प्रीतिर्भवति मयि कोऽहं पशुपते
पशुं मां सर्वज्ञ प्रथित कृपया पालय विभो ||५||

ஸ்ம்ருதௌ ஶாஸ்த்ரே வைத்$_3$யே ஶகுனகவிதாகா$_3$னப$_2$ணிதௌ
புராணே மந்த்ரே வா ஸ்துதினடனஹாஸ்யேஷ்வசதுர: |
கத$_2$ம் ராஜ்ஞாம் ப்ரீதிர்ப$_4$வதி மயி கோ(அ)ஹம் பஶுபதே
பஶும் மாம் ஸர்வஜ்ஞ ப்ரதி$_2$த க்ருபயா பாலய விபோ$_4$ || 5||

தனன தன்னனன தனன தன்னனன
தனன தன்னனன – தனதான

அறமும் நெறியுமௌ டதமும் அறிகுறியும்
அறிகவியு மிசையும் - அறியாமல்
அயலர் மகிழுரவுந் துதியும் முதியகதை
அகட விகடநடம் - புரியாமல்
திறமை எதுவுமறத் திரிவர்க் கேதுபுகல்
திக்கும் அற்றவெனைத் - திசையீசா
திரியும் பசுவிதெனப் பரிந்து பரிசுகந்து
திறனும் அருள்தருக - பரமேசா (5)

(யுக தருமம் உரைக்கின்ற ஸ்மிருதி எனப்படும்) நீதி நூல்களையோ, அற முறைகளையோ, (உலக வாழ்வுக்கான) மருத்துவம் முதலியான அறிவியலையோ, சோதிடம், கவிதை, இசை தந்தும், புகழ்ந்தும் பிறரை மகிழ்விக்கும் திறமைகளையோ, புராணக் கதைகளைப் பிறருக்கு விளக்கியும், பலவிதமாகப் பேசிப் பலரையும் மகிழ்ச்சியடையச் செய்யும் திறமைகள் எதையுமோ யான் அறியேன். திக்கற்ற, திறமை எதுவும் அற்ற என்னை, (அறிவிலும், குணத்திலும் உயர்ந்த

மனிதர்களாகிய) அரசர்கள் மதிப்பது எப்படி முடியும்? எங்கும் நிறைந்தவரே, ஏதுமற்ற என்னை (ஒன்றுமறியாத விலங்காகிய) பசுவாய் ஏற்றுக் கருணையால், பயனும் திறனும் அருள்க!

குறிப்பு:

மூன்றாம் பாடலில், பல உருவங்களாக சிவசக்தியினை வழிபடும் பக்தனாகவும், தொடர்ந்து, நாலாம் பாடலில், வேறு எந்த உருவினையும் கனவிலும் நினையாத திடமான உறுதியுடையவனாகவும் தம்மைக் கருதிய ஆதி சங்கரர், இந்த ஐந்தாம் பாடலில், அந்தோ, எனக்கு ஒன்றுமே தெரியாதே, எப்படிப் பிழைப்பேன் என்று சிவனருளே தமக்குத் துணையாக வேண்டுகின்றார்.

எல்லா வேதங்களும், சாத்திரங்களும், நியாயம் முதலான ஆயும் கலைகளும், யோகம் முதலிய நுண்கலைகளும், ஒப்பறிய தத்துவ விசாரணையும், ஞான விலாசமும், அரிய கவிதை, துதி, பாடல்கள் எனப் புனையும் திறமையும், குருவாய் அருளவும், கோவாய் ஆட்சி புரியவும் மாட்சிமை பொருந்தி விளங்கிடும் ஆதிசங்கரர், இவை எதுவும் அறியாத பசு யான், என்னைக் காப்பாய் பசுபதியே என்று விளிப்பது, அடக்கத்தின் உயர்வு.

பொருள், இன்பம் (அர்த்த:, காம:) ஆகிய குறிக்கோளினை அடையும் பொருட்டுச் செய்யும் செயல்களுக்கு எல்லாம், அறம் (தர்ம:) காட்டிய அறிவே 'வித்தை' எனவும் அத்தகைய அறிவினைத் தராத மற்ற எல்லாம் 'அவித்தை' எனவும் ஒரு நிலையிலே நமக்குக் காட்டப்பட்டது.

ஆனால், வீடு பேறு (மோக்ஷம்) எனப்படும் நிலையான சுகத்தை அடைய விழைவோருக்கு, மேற்கூறிய அறிவும், அறியாமையில் ஆழ்த்தும் 'அவித்தை' என்று ஆகி விடுகிறது.

ஏனெனில், அடையப்படுவதெல்லாம், அவை உடலாயினும், பொருளாயினும், உறவாயினும், பகையாயினும், சொர்க்கப் பதவியே ஆயினும், அழிந்து விடும். எனவே அடைவதைக் கொடுக்கின்ற அறிவு அவித்தை என்றும், ஏற்கனவே அடைந்த ஆன்மனை உணர்த்தும் அறிவே வித்தை என்றும், வீடு பேறினை

நாடும் ஞானியருக்கு விதிக்கப்பட்டது. அந்த உயரிய ஞானம் முதிரும் போது, அடைவது ஏதுமில்லை. ஏற்கனவே தன்னுள்ளேயே இருக்கின்ற ஆன்ம ஒளியைத் தானாக அறிந்து, ஈரற்ற ஒருநிலையாய் இருத்துவதே அவ்வறிவின் விளைவு என்பது முடிவாகிறது. அந்த அறிவுவழிப் பயணமே 'ஆத்ம வித்தை' எனப்படுகிறது.

அவ்வழியே செல்பவருக்கு, மற்ற எல்லா வித்தைகளும் (அறிவும்) அவித்தை (அறியாமை) தான். அதனால், 'அறியாத பசு' என இப்பாடலிலே குறிப்பிட்டது, ஆத்ம வித்தையினைத் தெரிந்து கொள்ளாத மனிதரையே எனக் கொள்ளப்பட்டது. (5)

6 - ஆயுமதி அவித்து ஆண்ட சிவன் அடி போற்றி!

घटो वा मृत्पिण्डोऽप्यणुरपि च धूमोऽग्निरचलः
पटो वा तन्तुर्वा परिहरति किं घोरशमनम् |
वृथा कण्ठक्षोभं वहसि तरसा तर्कवचसा
पदाम्भोजं शंभोर्भज परमसौख्यं व्रज सुधीः ||६||

க$_4$டோ வா ம்ருத்$_2$ பிண்டோ$_3$(அ)ப்யணுரபி ச தூ$_4$மோ(அ)க்$_3$னி ரசல:
படோ வா தந்துர்வா பரிஹரதி கிம் கோ$_4$ரஶமனம் |
வ்ரு$_2$தா$_2$ கண்ட$_2$க்ஷோப$_4$ம் வஹஸி தரஸா தர்கவசஸா
பதா$_3$ம்போ$_4$ஜம் ஶம்போ$_4$ர் ப$_4$ஜ பரமஸௌக்$_2$யம் வ்ரஜ ஸுதீ$_4$: ||6||

தனந் தன்னனன தனந் தன்னனன
தனந் தன்னனன – தனதான

குடம் இல்லையது களி அல்லவது
அணு புகையனலும் - மலையாகும்
துணி இல்லையது இழை என்றுபலத்
துயர் வாயரள - அதவாதம்
விதம் எங்குவிடும் விடம் அந்தகனின்
இடம் வந்தவுடன் - உதவாதே
நிதம் சிவபரனின் பதம் பதுமசுகம்
மனம் பதியவிடு – அறிவோனே **(6)**

மண் குடத்தை அது குடம், இல்லை அது மண், இல்லை அது அணு என்றும், ஒளியைப் புகை, தீ, மலை என்றும், ஆடையைத் துணி என்றும் நூலிழை என்றும் என்றும் பலவாறாக, ஆய்ந்து பயனற்ற விவாதங்களை, நாக்கு வரளும் படியாகப் பேசி நாட்களைக் கழிப்பது (அதாவது அறிவு மற்றும் ஆணவத்தினால், விதண்டாவாதம் பேசி வாழ்நாட்களைச் செலவிடுவது) என்ன பயனைத் தரும்? மரணம் எனும் காலதேவன் நம்மைக் கொண்டு செல்ல வரும் போது, இவ்விவாதங்களா உதவும்! எனவே,

அறிஞனே, மனத்திலே பரசிவனின் திருவடி மலரைப் பதியவைத்து, நிரந்தரமான சுகத்தினைத் தேடு.

குறிப்பு:

ஒன்றும் அறியேன் என்று பணிந்த ஆதிசங்கரர், எல்லாம் அறிந்ததாக எண்ணி, வாத விவாதங்களில் வாழ்க்கையைக் கழிக்கும் மனிதர்களை இந்த ஆறாம் பாடலில் வியக்கிறார். பகவான் ஆதிசங்கரர், கூர்மையும், நேர்மையுமான படைப்பினால், விஞ்ஞான விளக்கங்களையும் மிஞ்சும் வண்ணம், வாதித்து உண்மையை நிலைநாட்டும் பகுத்தறிவாளர். அதேசமயம், உள்ளத்தை உருக்கும் மொழியினால், பக்தி ரசம் சொட்டும் அன்பினையும் நிலைநாட்டும் தொகுத்துணர்வாளர்.

பானைக்கு மண் மூலம், பிண்டத்திற்கு அணு மூலம், புகைக்குத் தீ, துணிக்கு நூல் என்றெல்லாம் ஆய்ந்து கொண்டே வந்தால், உலகங்களுக்கு எல்லாம் இறைவன் மூலம் எனப் புரிகிறது. எனினும் விளைவுக்கு வினை மூலம் என்றும், வினையால் விளைவு ஆகும் என்றும் சுற்றிச் சுற்றி வாதிட்டு என்ன பயன்? தொகுத்துணர்வு இல்லாத பகுத்தறிவு வாதத்தால் என்ன பயன்? அதனால் இறப்பு வரும்போது, (அறியாமையால் பிறந்தும் இறந்தும் உழல்கின்ற) சுழலிருந்து யார் துணையாக முடியும் என்று ஆதி சங்கரர் இப்பாடலில் வியக்கிறார்.

ஐந்தாம் பாடலிலே 'அறியாத பசு' என்று தம்மைக் காட்டிக் கொண்ட பகவான் ஆதி சங்கரர், மெய்யறிவான ஞானத்தை உணர, பகுத்தறிவோ, அதை ஒட்டிய வாத விவாதங்களோ துணை தராது என்பதையும், அத்தகைய ஞானம், தொகுத்துணர்வால் மட்டுமே இயலும் என்பதையும், அதற்கு உறுதியான பக்தி எனும் சாதனமே பொருத்தமாகும் என்பதையும் இப்பாடலிலே சுட்டிக் காட்டுகின்றார். (6)

7 - சிவ நினைவால் பிறநினைவுச் சீர்மை அடி போற்றி!

मनस्ते पादाब्जे निवसतु वचः स्तोत्रफणितौ
करौ चाभ्यर्चायां श्रुतिरपि कथाकर्णनविधौ |
तव ध्याने बुद्धिर्नयनयुगलं मूर्तिविभवे
परग्रन्थान् कैर्वा परमशिव जाने परमतः ||७||

மனஸ்தே பாதா$_3$ப்$_3$ஜே நிவஸது வச: ஸ்தோத்ர ப$_2$ணிதௌ
கரௌ சாப்$_4$யர்சாயாம் ஶ்$_1$ருதிரபி கதா$_2$கர்ணன விதௌ$_4$ |
தவ த்$_4$யானே பு$_3$த்$_3$தி$_4$ர் நயன யுக$_3$லம் மூர்தி விப$_4$வே
பரக்$_3$ரந்தா$_2$ன் கைர்வா பரமஶிவ ஜானே பரமத: ||7||

தனந் தன்னனன தனந் தன்னனன
தனந் தன்னனன – தனதான

மனம் உந்தன்பதம் மலர் எந்தன்மொழி
நிதம் உந்தன்புகழ் - தவறாதே
கரம் நிந்தன்துதி தினம் எந்தன்செவி
வரம் உந்தன்கதை - அதுபோலே
கணம் எந்தன்மதி சிவம் எந்தன்விழி
வசம் உந்தனுரு - அதனாலே
இனும் எந்தவிதம் பிறர் தந்தமொழி
பெறல் உந்தவரும் – பெருமானே (7)

மனம் உந்தன் திருவடி மலரினைச் சூட, மொழி உனது புகழைப் பாட, கரங்கள் உன்னை ஆராதிக்க, செவிகள் நின் பெருமையைக் கேட்டிருக்க, எப்போதும் அறிவு உன்னை தியானித்து இருக்க, எனது (அக, புற) விழிகள் நின்னையே பார்த்துக் கொண்டிருக்க, (அவ்வுயரிய நிலையில் யான் இருந்து விட்டால்), அதற்குப்பின், எந்த வழியிலே யான் மற்ற எதனையும் அறிவேன்? (இதற்கு மேலும், வேறு எதனை அறியவேண்டிய அவசியம் இருக்கிறது!)

குறிப்பு:

பகுத்தறிவு வாதங்கள் உதவாது என்று ஆறாம் பாடலில் நாட்டிய பகவான், இந்த ஏழாம் பாடலிலே, ஒருவேளை, தாம் படித்தது போதாதோ, இன்னும் பல நூல்களைக் கற்க வேண்டுமோ, என்று அஞ்சி, அதுவும் முடியாதே, அறிவுக்கு ஆயுதங்களான எல்லா உறுப்புக்களும், மனதும், மதியும் எப்போதும் சிவசக்தி நினைவிலேயே முழ்கிக் கிடக்கிறதே, யான் என்ன செய்வேன் என வியக்கிறார்.

பகவான் இப்பாடலில் 'நயன யுகலம்' அதாவது, தமது இரண்டு விழிகளும் சிவனுடைய உருவத்திலேயே திளைத்திருப்பதாகச் சொல்லி இருக்கிறார். இவ்விரு விழிகளும், முகத்தில் இருக்கும் விழிகளாகக் காட்டாமல், அகவிழி (அதாவது மனதில் ஏற்படும் விழிப்புணர்ச்சி), புறவிழி (வெளிப்பொருளை மதியில் சேர்க்கும் விழிகள்) என்று பொருள் கொள்ளுமாறு, 'எந்தன் விழி' (என் விழி, தன் விழி) என மொழி பெயர்க்கப்பட்டது.

அதனாலேயே, மனதாலும், உடலாலும் சிவனுரு சுமந்த விழிப்பினைக் கொண்டு இருத்தல் எனும் சீருண்மை புரிகின்றது. (7)

8 - மாயம் மறுத்தமன மன்றத்தான் அடி போற்றி!

यथा बुद्धिः शुक्तौ रजतमिति काचाश्मनि मणि
र्जले पैष्टे क्षीरं भवति मृगतृष्णासु सलिलम् |
तथा देवभ्रान्त्या भजति भवदन्यं जडजनो
महादेवेशं त्वां मनसि च न मत्वा पशुपते ||८||

யதா$_2$ பு$_3$த்$_3$தி$_4$ஸ்$_1$ ஸு$_1$க்தௌ ரஜதமிதி காசாஸ்$_1$மனி மணி:
ஜலே பைஷ்டே க்ஷீரம் ப$_4$வதி ம்ரு$_2$க$_3$த்ரு$_2$ஷ்ணாஸு ஸலிலம் |
ததா$_2$ தே$_3$வ ப்$_4$ராந்த்யா ப$_4$ஜதி ப$_4$வத$_3$ன்யம் ஜட$_3$ ஜனோ
மஹாதே$_3$வேஶம் த்வாம் மனஸி ச ந மத்வா பஸு$_1$பதே ||8||

தந்தன தனதன தந்தன தனதன
தந்தன தனதன– தனதான

எப்படிச் சிப்பியில் தப்புணர் வெள்ளி
ரத்தினம் கல்லில் - உருகாணும்
கப்பிய மாவினில் கரப்பசுப் பாலும்
கானல் நீரெனத் - தடுமாறும்
அப்படி மனிதன் அறிவறி வாலே
அய்யா நினைமனம் - அடையாமல்
தப்பிய தாயிறை அவரிவ ரென்றே
தவிப்பதும் ஏனோ – பசுபதியே (8)

சிப்பியின் ஒளியினை வெள்ளி எனவும், சாதாரணக் கல்லினை உயர்வான ரத்தினம் எனவும், வெளுத்த மாவுக் கரைசலைப் பசுவின் பால் எனவும், கானல் நீர்த் தோற்றத்தை உண்மை நீரோட்டம் எனவும் தவறாகக் காண்பது போலவே, உலகில் மனிதன், தெய்வத்தின் தெய்வமான நின்னை உணராமல், அது, இது எனப் பலவித உருவங்களையும் துதித்து அலைகின்றான், பசுபதியே!

குறிப்பு:

சிவம் ஒன்றே குறியாக (அதாவது, பரம்பொருள் ஒன்றினையே நிலையான சுகப் பெருவெள்ளமாக) அறிவது வேண்டும். அதனை விட்டு, சுகம் வேறு பிற இடங்களில் இருப்பதாகப் பல வேறு வழிகளிலும், பொருட்களிலும், தெய்வங்களிலும், நிலையான சுகம் எங்கே என்று தேடி அலைகின்றான் அறிவற்ற மனிதன்.

அவன் செயல், சிப்பியில் வெள்ளி என்றும், பளிங்குக் கல்லில் ரத்தினம் என்றும், வெண்மாவுக் கரைசலில் பால் என்றும், கானலில் நீர் என்றும் மயங்குவது போலாகும் என்கிறார் ஆதி சங்கரர்.

இதற்கு மதி மயக்கமே காரணம். எனவே அம்மயக்க இருளை அறுக்கும் ஞான ஒளியைப் பெற, முதலில் மனத் தூய்மையும், தெளிவுடனும், திடமான உறுதியான மதிக் கூர்மையும் தேவை. அதற்கு இறைபக்தி இன்றியமையாதது.

உண்மையான பக்தி, ஒருவரை, படிப்படியாக, சரியான தெளிவும், குறிக்கோளும் உடைய மனமுடையவராக உருவாக்கிட வேண்டும். ஈரற்ற மெய் என்பதே மறைகளின் தீர்ப்பு என்பதால், உயர்வான பக்திக்கு, பல தெய்வங்கள் அல்ல, பல வடிவங்களிலும் ஒரே சக்தியே எனும் உண்மை ஆதாரமாக விளங்க வேண்டும்.

'ஒன்றே தெய்வம்' எனும் உண்மையின் அடிப்படையில் பக்தி இருப்பின், சஞ்சலத்துடன் அது, இதெனப் பல தெய்வங்களையும் வழிமுறைகளையும் நாடி அலைகின்ற தேவை நமக்கு இல்லாது போகும் என்பது இப்பாடலின் உட்கரு. (8)

9 - மனமலரை ஏற்றென்னை மாற்றும் அருள் போற்றி!

गभीरे कासारे विशति विजने घोरविपिने
विशाले शैले च भ्रमति कुसुमार्थं जडमतिः |
समर्प्यैकं चेतः सरसिजमुमानाथ भवते
सुखेनावस्थातुं जन इह न जानाति किमहो ||९||

க$_3$பீ$_4$ரே காஸாரே விஶதி விஜனே கோ$_4$ரவிபினே
விஶா$_1$லே ஶை$_1$லே ச ப்$_4$ரமதி குஸுமார்த$_2$ம் ஜட$_3$மதி: |
ஸமர்ப்யைகம் சேதஸ்ஸரஸிஜம் உமாநாத$_2$ ப$_4$வதே
ஸுகே$_2$னாவஸ்தா$_2$தும் ஜன இஹ ந ஜானாதி கிமஹோ ||9 ||

தான தானனன தான தானனன
தான தானனன – தனதான

ஆழ மானமடு ஆளி லாதவனம்
ஆகும் பானமலை - எனவோடி
ஆகத் தூயமல ராகத் தேடியலைந்
தோயப் பாடுநிலை - உமைநாதா
காயப் பாரம்அலை யாமற் பூமனது
சாயப் பாதமலர் - சார்ந்தேகி
நேயத் தாலுயர யோகத் தானதறி
யாரப் பாபுதிராய் – நெகிழ்வேனே (9)

(நின்னைத் தேடித் துதிக்க) அறிவற்ற மனிதர்கள், ஆழமான பள்ளங்கள், அடர்ந்த, ஆட்கள் இல்லாத காடுகள், உயரமான மலைகள் என்று பல இடங்களிலும் ஓடி அலைந்து, அங்கிருந்தெல்லாம் பூக்களைப் பெற்றுக் களைப்படைகிறார்கள். (அதாவது, வெளிப்பூச்சாக, பகட்டுக்காக, உண்மை தன்னுள்ளே இருப்பதை உணராமல், அலைந்து துதிக்கிறார்கள். இத்தகைய வெளி வேடத்தை விட்டு), தன்னுள்ளேயே, அமைதியான மனமாகிய தாமரை மலர் ஒன்றையே, அன்புடன் உமக்கு

அளித்துவிட்டு, அங்கும் இங்கும் ஓடாமல், ஒன்றிய மனத்தால் நிலையான சுகத்தை அடைய முடியுமே! இதனை அறியாது இருக்கும் இந்த உலக மனிதரை நினைத்து, நான் வியக்கிறேன், உமையின் பதியே!

குறிப்பு:

உருவங்கள் பல என்று மட்டுமல்லாமல், உபசரித்து வணங்குவதற்கும் பல பொருட்கள் தேவை என்று, பல இடங்களுக்கும் சென்று அலைந்து, அர்ச்சனைப் பொருட்களைப் (பூக்களைப்) பெற்று வர அலைகின்றான், அறிவற்ற மனிதன்.

அன்பினால் எல்லாப் பொருளையும் இறைவனுக்குப் படைக்கின்ற தூய பக்தியினை, இங்கே பகவான் குறையாகக் கூறவில்லை. ஆனால், உண்மை எது என்பதை உணராமல், வெளிப் பொருளும், பகட்டும், எல்லோரும் பார்த்து வியக்கும் வண்ணம் ஆடம்பரம் செய்தும், அறியாமையால், காடு, மேடு, நதி என்று பயணித்தும் அலைவதை விட்டுவிட்டு, கடவுள் என்று உள்ளே கடந்து இருக்கும் இறைவனுக்கு, மனமாகிய ஒரு மலரை முற்றுமாய் அளித்தால் போதும் என்பதே பகவானின் நீதி!

ஸ்ரீ பாகவதம், பரம்பொருளை அர்ச்சிக்கத் தகுதியான மலர்கள் எட்டு எனக் காட்டுகின்றது.

அஹிம்ஸா ப்ரத$_2$மம் புஷ்பம் புஷ்பமிந்த்$_3$ரியனிக்$_3$ரஹ:|
ஸர்வபூ$_4$தத$_3$யாபுஷ்பம் க்ஷமாபுஷ்பம் விஶிஷ்யதே||
ஜ்ஞானபுஷ்பம் தப:புஷ்பம் த்$_4$யானபுஷ்பம் து ஸப்தமம்|
ஸத்யஞ்சைவாஷ்டமம் புஷ்பம் ஏபி$_4$ஸ்துஷ்யதி கேஶவ:||

அஹிம்சை எனும் இடரிழையாமை, புலனடக்கம், எல்லா உயிர்களிடத்தும் கருணை, எதையும் மன்னித்து மறக்கும் பெருந்தன்மை, தனையுணரும் அறிவில் விழுப்பம், நந்நோக்கில் தவம், நிலையான தியானம், உண்மை ஆகிய எட்டுமே அர்ச்சனை மலர்களாக வேண்டும்.

இப்பாடல் காட்டும் மற்றுமொரு கருத்து, 'சகுணப் பிரம்ம உபாசனை" அல்லது உருவ வழிபாடு என்பது நம்மை பக்தியினால் முன்னேற்றத்தை அடையச் செய்யத் தேவையான பாதைதான் என்பது ஆகும்.

நாம் வாழும் உலகம் பல உருவங்களைக் கொண்டு விளங்குவது. அவற்றினூடே வாழும் நமக்கு, வித விதமான வடிவங்களும், அவற்றின் வேறுபாடுகளுமே முன்னிலைப் படுகிறது. எனவே படிப்படியாக மனதை ஒருமுகப்படுத்த, மனதுக்கு இதமூட்டும் உருவங்களை இறைவனாக வடித்து, அவற்றைத் துதிப்பது என்பது அவசியமான, மிகவும் பயனளிக்கும் ஒரு வழியே ஆகும். அதுவே 'சகுணப் பிரம்ம உபாசனை' என மறைகள் காட்டுகின்றன.

அப்பயணம் முதிர்ச்சி அடையும் பொழுது, 'விஸ்வ உபாசனை' என உலகில் அனைத்து உருவங்களுமே இறைவனே எனக் காணும் பரந்த நோக்கு விளையும். அதனால், அன்பே நம்முடைய உள்நோக்கமாகவும், வெளிப்பாடாகவும் மாறிவிடும். அதுவரை வேறுபாடுகளையும், குறைகளையுமே கொண்டதாக விளங்கிய உலகம், அதன் பிறகு அன்பால் போர்த்தப்பட்டு, ஆன்மாவினால கோர்க்கப்பட்டு இருக்கிறது என்பது புரியும். அந்த ஆன்மா தன்னுள்ளேயே இருக்கிறது என்பதால், 'நிர்க்குணப் பிரம்ம உபாசனை' எனத் தன்னுள்ளேயே உருவமற்று விளங்கும் ஆன்மனைத் தியானிக்கும் பக்குவமும் நமக்கு ஏற்படும். அவ்வாறு உள்ளத்துள் உறைவதை உணர்வதே உண்மைத் தியானம், பக்தி, ஞானம் எல்லாம்.

இதனையே ஶ்ரீ லலிதா சஹஸ்ரநாமமும் காட்டுகிறது. உதாரணமாக, 'அந்தர் முக ஸமாராத்யா – பஹிர்முக ஸுதுர்லப:' எனும் திருநாமங்கள், வெளிப் பூசைகளினால் அடைய முடியாததும், உட்தியானத்தால் மட்டுமே எளிதாக உணர முடிவதுமானவள் அன்னை பராசக்தி எனக் காட்டுவன ஆகும். (9)

10 - எப்பிறவி ஆனாலும் எந்தை சிவன் போற்றி!

नरत्वं देवत्वं नगवनमृगत्वं मशकता
पशुत्वं कीटत्वं भवतु विहगत्वादि जननम् |
सदा त्वत्पादाब्जस्मरणपरमानन्दलहरी
विहारासक्तं चेद्धृदयमिह किं तेन वपुषा ||१०||

நரத்வம் தே$_3$வத்வம் நக$_3$ வன ம்ரு$_2$க$_3$த்வம் மஶகதா
பஶு$_1$த்வம் கீடத்வம் ப$_4$வது விஹக$_3$த்வாதி$_3$ ஜனனம் |
ஸதா$_3$ த்வத்பாதா$_3$ப்$_3$ஜ ஸ்மரண பரமானந்த$_3$லஹரீ
விஹாராஸக்தம் சேத்$_3$ ஹ்ரு$_2$த$_3$ய மிஹ கிம் தேன வபுஷா ||10||

தனதனன தனதனன தனதனன தனதனன
தனதனன தனதனன – தனதான

மனிதரெனச் சுரனுமுனி மலைவனமு மலைமிருக
மற்றபிறப் புற்றதது – பலவாக
மாடுமெனக் கொசுவுமுதற் பூடுமுளைப் புள்ளுமுல
கூடுமுரு வுற்றதென - எதுவாயின்
புனிதமென வுனதுபத மினிதுமன சுகவெள்ளம்
புக்கநிலை நிற்கினதன் - பயனாலே
பூதவுடல் பூவுலகில் ஏதுவரின் என்னகுறை
என்றும் சிவாநந்த – வெள்ளம் **(10)**

மனிதராயோ, தேவர்களாயோ, மலை, காடுகளில் விலங்குகளாயோ, கொசு முதலிய சிற்றுயிர்களாயோ, புழு, பறவைகள் எனவோ – எப்படிப் பிறந்தாலும் என்ன? எப்போதும், புனிதமான நினது திருவடி மலர்களின் தியானத்தில் விளைகின்ற சிவ சுகப் பெருவெள்ளத்தில், களித்து, எனது மதியும் மனமும் நிலைத்திருக்குமேயானால், இவ்வுலகில், இவ்வுடலை எடுத்திருப்பதால், என்ன குறைவு ஏற்பட்டு விடும்! (ஒரு குறையுமில்லை.)

குறிப்பு:

உருவ வழிபாடு, உலக வழிபாடு, ஆன்மத் தியானம் எனப் பல வழிகளிலும் முயன்று துதித்தாலும் நமக்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது? இறந்த பிறகு, எப்பிறவி வரப்போகிறது? நான் சொர்க்கம் செல்வேனா? அல்லது பூமியில் பிறப்பேனா? மிருகமாய்ப் போனால் என்ன செய்வது?

இப்படி எல்லாம் கவலைப்பட்டும் என்ன பயன்? எப்படிப் பிறந்தால்தான் என்ன? எப்போதும் இறைவனின் நினைவே மனதில் இருக்கும் என்றால், எந்தவுடல் எடுத்தால்தான் என்ன? இவ்வாறு துதிப்பதன் மூலம், பயன் கருதாத பக்தி ஒன்றே தேவை என்பதை பகவான் வலியுறுத்துகின்றார். (10)

11 - எந்நிலையில் வாழ்ந்தாலும் ஏகன் அடி போற்றி!

वटुर्वा गेही वा यतिरपि जटी वा तदितरो
नरो वा यः कश्चिद्भवतु भव किं तेन भवति |
यदीयं हृत्पद्मं यदि भवदधीनं पशुपते
तदीयस्त्वं शंभो भवसि भवभारं च वहसि ||११||

வடுர்வா கே₃ஹீ வா யதிரபி ஜடீ வா ததி₃தரோ
நரோ வா ய: கஶ்சித்₃ப₄வது ப₄வ கிம் தேன ப₄வதி |
யதீ₃யம் ஹ்ருத்பத்₃மம் யதி₃ ப₄வத₃தீ₄னம் பஶுபதே
ததீ₃யஸ்த்வம் ஶம்போ₄ ப₄வஸி ப₄வபா₄ரம் ச வஹஸி || 11||

தனன தனனான தனன தனனான
தனன தனனான – தனதான

குருவின் குலனாயும் குடும்பி வனவாசி
துறவி எவராக - ஆனாலும்
எதிலும் சேராது வதியும் ஆளாக
உலகில் யாராகிப் - போனாலும்
பயனு மேது மலரிதய மீதுசிவ
பரமன் பாதமது - ஆனாலே
பரவி வசமுருகிப் பிறவிப் பிணியுழலும்
பளுவுன் பாரமது – உயிர்நாதா **(11)**

உண்மை அறிவினைத் தேடும் மாணவனாகவோ, இல்லறம் ஏற்றவனாகவோ, வனத்தில் திரியும் முனிவனாகவோ, எல்லாம் துறந்த துறவியாகவோ, (இந்த நான்கு நிலைகளும் இல்லாத) வேறு எந்த ஒரு நிலையில் இருப்பவனாகவோ, எப்படி வேண்டுமானாலும் ஒருவன் உலகில் இருந்துவிட்டுப் போகட்டும்! அதனால் என்ன பயன்? எவனுடைய மனமாகிய மலரில், பரசிவனே, நினது பாதமலர்கள் பதிந்து இருக்கிறதோ,

அவனது மனதின் வசத்தில் இருந்து, பழவினையாவும் அகற்றிப் பாதுகாப்பது நின்னருளே, பசுபதியே!

குறிப்பு:

பிறவிகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம், இறைவனைத் துதித்திருந்தாலே போதும் எனப் பத்தாம் பாடலில் காட்டிய பகவான் ஆதி சங்கரர், இப்பிறவியில், நாம் இருக்கும் சூழ்நிலை, ஏற்ற பொறுப்புக்கள் எவ்வாறாக இருப்பினும், இறைச் சிந்தனை எனும் ஒரே குறிக்கோளில் நிலைத்திருந்தால், அதுவே போதும் எனக் காட்டுகின்றார்.

குருவிடம் பாடம் கற்கும் மாணவப் பருவமானாலும், இல்லற வாழ்க்கையில் ஈடுபட்ட நிலை என்றாலும், இல்லறம் விட்டு வனம் எல்லாம் திரிந்து நல்லறிவு தேடும் நிலை என்றாலும், எல்லாம் துறந்து, துறவியாய் இருக்கின்ற நிலை என்றாலும், இப்படி எந்தவொரு குறிக்கோளும் இல்லாத நிலை என எப்படி இருந்தாலும் – இவற்றால் எல்லாம் என்ன பயன் வந்து விடப் போகிறது?

மனம் எப்போது பரம்பொருளிடம் நிலைபெற்று இருக்குமோ அப்போதே நம்முடைய வினைச் சுமை எல்லாம் பரம்பொருளாலேயே சுமக்கப்பட்டு, நம்மை விடுவிக்கும். நாம் இறைவனிடம் இது வேண்டும், அது வேண்டும் என்று எதுவும் கேட்க வேண்டியதில்லை. மனம் எப்போதும் சிவானந்த வெள்ளத்தில் மூழ்கி இருந்தாலே போதும். (11)

12 - எவ்விடத்தில் வாழ்ந்தாலும் எந்தை அடி போற்றி!

गुहायां गेहे वा बहिरपि वने वाऽद्रिशिखरे
जले वा वह्नौ वा वसतु वसतेः किं वद फलम् |
सदा यस्यैवान्तःकरणमपि शंभो तव पदे
स्थितं चेद्योगोऽसौ स च परमयोगी स च सुखी ||१२||

கு$_3$ஹாயாம் கே$_3$ஹே வா ப$_3$ஹிரபி வனே வா(அ)த்$_3$ரிஶிக$_2$ரே
ஜலே வா வஹ்னௌ வா வஸது வஸதே: கிம் வத$_3$ ப$_2$லம் |
ஸதா$_3$ யஸ்யைவாந்த: கரண மபி ஶம்போ$_4$ தவ பதே$_3$
ஸ்தி$_2$தம் சேத்$_3$ யோகோ$_3$(அ)ஸௌ ஸ ச பரமயோகீ$_3$ ஸ ச ஸுகீ$_2$ ||12||

தன்னன்ன தன்னன்தன்னன
தன்னன்ன தன்னன்தன்னன
தன்னன்ன தன்னன்தன்னன – தனதான

தன்னந்தனி சின்னக்குகையிடை
தன்னின்அகம் பின்னர்வெளியிடம்
இன்னும்வன முன்னும்மலையிடம் - அதுபோலே

கன்னல்மிகு மின்னும்அனலிடை
என்னென்னொரு வண்ணப்புனலிடை
பன்னுந்தவ மென்னும்நிலைகளில் – பயனேது?

திண்ணங்கனி வுண்ணத்தூமனம்
நண்ணத்துதி எண்ணத்தால்சிவம்
முன்னும்மலர்ச் சின்னத்தேனடி - முனிந்தேகின்

நுண்ணத்தறி வெண்ணப்பெருநிலை
வண்ணத்தவ முண்ணப்பரசிவ
முன்னிச்சுக வெள்ளப்புழலுவன் - பெருயோகி **(12)**

தனியான மறைவிடத்திலோ, வீட்டிலோ, வெளியிலோ, காட்டிலோ, மலைகளிலோ, நீரிலோ, நெருப்பிலோ (அதாவது, உண்மை தேடும் ஒருவன் எவ்விடத்தில் வேண்டுமானாலும் எவ்வாழ்க்கை நிலையினாலும்) – எங்கு வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும்! அதனால் என்ன பயன்? எவனுடைய (காயான) மனம் (அன்பால்) கனிந்து, சம்புவே, நினது திருவடிகளில் எப்போதும் நிலைபெற்றதாக ஆகுமோ, அந்நிலையே யோகம் எனப்படும். அத்தகைய மனிதன் எப்போதும் (சிவ சுகப் பெருவெள்ளமாகிய) இன்பத்தில் நிலைத்திருக்கும் யோகி ஆவான்.

குறிப்பு:

எப்பிறவி வந்தால் என்ன என்றும், மனிதப் பிறவி எடுத்த போது, மாணவன், இல்லறன், வனவாசி, துறவி, அல்லது எப்படியானவனாக வாழ்ந்தால் என்ன, மனம் சிவானந்த வெள்ளத்தின் மூழ்கினால் போதும் என்றும் வியந்த பகவான், இந்தப் பன்னிரெண்டாம் பாடலில், இறையருள் தேடி மலை, குகை என்று அலையாமல், இருக்கும் இடத்திலேயே, தனக்குள்ளேயே பரசிவப் பரசுகப் பரவச நிலையை அடைதலே யோகம் என்று உணர்த்துகின்றார்.

இருக்கும் இடத்திலேயே இருப்பதை, என்றும் இருப்பதாய் உணர்ந்திருப்பது மிகவும் முற்றிய ஞான நிலை. அதனை உணரும் வரை, உள்ளும், வெளியும் உண்மையைத் தேடுகின்ற பணியை நாம் செய்வது தவறாகாது. அத்தேடல் ஒரு அவசியமான அலைச்சலே ஆகும். பகவான் ரமணர், தான் யார் எனும் அனுபவத்தை இறையருள் மறைத்து இழுத்ததாலேயே, இருந்த இடத்தை விட்டுத் திருவண்ணாமலைக்கு வந்து தவமியற்றியதாகக் கூறினார். பகவான் ஆதிசங்கரரும், காசியிலே, கங்கை நதியில் குளித்தெழுந்து தொழுது, காசி, கங்கை எனப் புனித யாத்திரைகள் எல்லாம் எதற்கு, இவை எல்லாம் ஆன்மனாகத் தன்னுள்ளேயே ஒளிர்ந்து கொண்டிருப்பதை உணரும் போது என்று கேட்கிறார். அந்தப் பெருநிலை விளைவை ஏற்படுத்தவே, இப்பாடல் அமைந்துள்ளதாகத் தோன்றுகிறது. (12)

13 - ஏழை எமக்கிரங்கும் எழிலான் அடி போற்றி!

असारे संसारे निजभजनदूरे जडधिया
भ्रमन्तं मामन्धं परमकृपया पातुमुचितम् |
मदन्यः को दीनस्तव कृपणरक्षातिनिपुण
स्त्वदन्यः को वा मे त्रिजगति शरण्यः पशुपते ||१३||

அஸாரே ஸம்ஸாரே நிஜப$_4$ஜன தூ$_3$ரே ஜட$_3$தி$_4$யா
ப்$_4$ரமந்தம் மாமந்த$_4$ம் பரமக்ரு$_2$பயா பாது முசிதம் |
மத$_3$ன்ய: கோ தீ$_3$னஸ் தவ க்ரு$_2$பண ரக்ஷாதிநிபுண:
த்வத$_3$ன்ய: கோ வா மே த்ரிஜக$_3$தி ஶரண்ய: பஶு$_1$பதே ||13||

தனன தனதனன தனன தனதனன
தனன தனதனன – தனதான

துளியும் பயனுமற்றுத் தெளியும் திறமுமற்றுப்
பழியும் பிணியுமுற்று - மடமாகி
துவளும் விழியுமற்ற துயரன் அருளிலிட்டுத்
துணைநந் நிலையிட்ட - துணையேரே
எளியன் எனையும்விட்டு கருணை பெறுகமற்று
எவரே ஆவர்பசு - பதியோனே
ஏழைக் கருளிவிட்டு மூவற் றுடலைவிட்டு
ஏகத் தருளும்நிதி - வேறாரே **(13)**

முடிவில் எப்பயனும் தராமல், தன்னை அறிந்து தெளிகின்ற அறிவிற்கும் எந்த வழியும் காட்டாது, துன்பமாகிய பிறவிப் பிணியில் மட்டுமே திணிக்கின்ற ஆசையாகிய மூடமதியினால் அறிவுப் பார்வை இழந்து தவிக்கும் எனக்கு நின் கருணையே துணை! ஏழைப் பங்காளன் நீயல்லவா? நீ கருணை காட்டுவதற்கு, என்னைவிடப் பரம ஏழை வேறு யார் இருக்க முடியும்? எளியவர்களுக்கு அருள் அபயம் தரும் பெரு நிதியும், கதியும் பசுபதியே, உம்மை விட்டால் வேறு யாரே?

குறிப்பு:

மனதால் நினையே நினைத்து ஒழுகும் உயர்நிலையை அடைய விடாமல் ஆசைகள் தடுத்து அதனால் பிறவிப்பிணி தொடர்கிறது. இந்த நிலையே வறுமையிலும் வறுமையாகும். ஏனெனில், அத்தகைய ஆசைத் தொடர், நமக்கு அமைதியெனும் பெரும் செல்வம் இல்லாமல் ஆக்குகிறது.

இறைவன்தான் ஏழைப் பங்காளன். நானோ மிகவும் ஏழை! அதனால் ஏழையான என்னிடம் பரிவு காட்டுவது பரம்பொருளின் கடமை. அவரை விட்டால் வேறு யாரே பொறுப்பு!

‘அவனருளாலே அவன் தாள் வணங்கி’ என்றார் மணிவாசகர். இறைச் சிந்தனை வருவதற்கும் இறையருள் தேவை. அப்படி இறைச் சிந்தனை துளியேனும் ஏற்பட்டு விட்டால், அதனை இறுகப் பற்றி, பெருக வளர்க்க வேண்டியது நமது கடமை. எனவே இதற்கான முதற்கடமை இறைவனுக்கே உள்ளது. அவர் நமக்கு, பக்தி எனும் செல்வத்தைத் தரவேண்டும்.

இதனை ஆழமாக உணர்த்தி, இறைவனிடம் பொறுப்பை விடுவதற்காக, ஏழைகளில் ஏழை தானே என்றும், ஏழைக்கு உதவுபவன் இறைவன் என்பதால், தானே இறைவனின் அருட்பிச்சைக்கு உகந்து நிற்கும் வறியன் என்றும் பகவான் ஆதி சங்கரர் இப்பாடலில் காட்டுகின்றார். (13)

14 - எளியோர் உயிரான இனியோன் அடி போற்றி!

प्रभुस्त्वं दीनानां खलु परमबन्धुः पशुपते
प्रमुख्योऽहं तेषामपि किमुत बन्धुत्वमनयोः |
त्वयैव क्षन्तव्याः शिव मदपराधाश्च सकलाः
प्रयत्नात्कर्तव्यं मदवनमियं बन्धुसरणिः ||१४||

ப்ரபு4ஸ்த்வம் தீ3னானாம் க2லு பரமப3ந்து4: பஸு1பதே
ப்ரமுக்2யோ(அ)ஹம் தேஷாமபி கிமுத ப3ந்து4த்வமனயோ: |
த்வயைவ க்ஷந்தவ்யா: ஶிவ மத3பராதா4ஸ்1ச ஸகலா:
ப்ரயத்னாத் கர்தவ்யம் மத3வனமியம் ப3ந்து4ஸரணி: ||14||

தனன தனதான தனன தனதான
தனன தனதான – தனதான

எளியர் உறவாகி எதிலும் இனிதாகி
எழிலும் அருளான - பரமேசா
எவரில் அரிதான ஏழை அதனாலே
எமது உறவாழம் - அறிவேனே
தவறும் எம்பாதை எதுவும் தன்னாலே
விலகும் படியாள - தயையாலே
தரும வழிகாட்டிக் கரும வினைமாற்றி
தருவ துன்வேலை – உறவோனே (14)

இறைவா, வள்ளலாகிய நீவிர் எளியோரின் இனிய உறவு அல்லவா? (எல்லா விதத்திலும் வறியவனான) யான், ஏழைகளிலும் ஏழை அல்லவா? அதனால், நம்மிருவருக்கும் உறவு மிகவும் ஆழமானது எனச் சொல்லவும் வேண்டுமா என்ன! ஆகையால், தவறான எனது வழிகள் யாவும் நினது கருணையால் மன்னித்து விலகும்படியானவையே! என் குற்றங்கள் நீங்கி, அறவழியிலே யான் செல்வதற்கான

வழிகாட்டியாய், என் வினையினை மாற்றுவது உமது பொறுப்பு. அதுவே நல்லுறவுக்கு அடையாளம்.

குறிப்பு:

முந்தைய பாடலில், ஏழைக்கு உதவல் இறைவன் கடமை எனக் கூறிய பகவான் ஆதி சங்கரர், இப்பாடலிலே, இறைவன் ஏழைக்கு உறவு என்பதால், நல்ல உறவின் அடையாளமாக, நம்முடைய தவறுகளைப் பொருட்படுத்தாமல், அருளை அள்ளித் தரவேண்டும் என்று கேட்கிறார்.

ஏழையிலும் ஏழை என நம்மை உணர்ந்தால், அவ்வேழ்மைக்குச் செல்வம் சிவானந்த வெள்ளம் என விழைந்தால், ஏழைப் பங்காளனான பரம்பொருளுடன் நம் உறவு மேலும் ஆழப்படுகிறது.

நல்உறவின் அடையாளமாக, சிவபெருமானே நம் வறுமையை நீக்கி, நிலையான செல்வம் அளிப்பார். ‘மத் அவனம்’ எனும் சொல்லால், அப்பரம்பொருளே நமது காப்பு என்பதும் காட்டப்பட்டது. (14)

15 - விதியெதையும் மாற்றும் வித்தன் அடி போற்றி!

उपेक्षा नो चेत् किं न हरसि भवद्ध्यानविमुखां
दुराशाभूयिष्ठां विधिलिपिमशक्तो यदि भवान् |
शिरस्तद्वैधात्रं न नखलु सुवृत्तं पशुपते
कथं वा निर्यत्नं करनखमुखेनैव लुलितम् ||१५||

உபேக்ஷா நோ சேத் கிம் ந ஹரஸி ப$_4$வத்$_3$த்$_4$யான விமுகா$_2$ம்
து$_3$ராஸா$_1$பூ$_4$யிஷ்டா$_2$ம் விதி$_4$லிபி மஶக்தோ யதி$_3$ ப$_4$வான் |
ஶிரஸ்தத்$_3$வைதா$_4$த்ரம் ந நக$_2$லு ஸுவ்ரு$_2$த்தம் பஸு$_1$பதே
கத$_2$ம் வா நிர்யத்னம் கர நக$_2$ முகே$_2$னைவ லுலிதம் ||15||

தனன தனதனன தனன தனதன
தனன தனதன – தனதான

வெறுப்பு எனக்கருள உனக்கு இல்லையெனில்
விருப்பும் கெடுவாச - மடையாகி
விரைத்து நினையுணர மறுத்த எனதுமனம்
படைத்த பிரமனெழுத் - தழியாயோ
சிறப்புப் பலமிலையோ மருட்டுந் திறனிலையோ
சிதையப் பிரமன்முடி - பலமாக
சிரத்தில் எளிதாக நகத்தின் நுனியாலே
சிதைத்த கதையாதும் – தெரியாதோ **(15)**

(அவ்வாறு என் வினையினை மாற்றி, எனைக் காக்க என் மேல்) வெறுப்பு ஏதும் உமக்கு இல்லை என்றால், எனைக் காப்பாற்றாமல், கொடிய ஆசைகளினாலும், தீய நடத்தையாலும், கனிவற்று, நினைத் துதிக்கவும் மறந்து இருக்கும்படியான மனதினை என்னுள் படைத்த பிரம்ம தேவனது எழுத்தினை (அதாவது எனது விதியை), இன்னும் ஏன் மாற்றவில்லை? அதற்கான சக்தி இல்லாதவரா தாங்கள்! வலிமையான, அகற்ற முடியாத பிரம்ம தேவனின் தலையினை,

வெறும் கை நக நுனியினாலேயே கீறி, வடுவினை விதைத்த தங்கள் வலிமை, யாருக்கும் தெரியாதா, என்ன!

குறிப்பு:

ஏழைப் பங்காளன் என்றால், ஏழையாகிய எனக்கு நல்ல உறவினன் என்றால், ஏன் என்னுடைய தலை எழுத்தைத் துயர்படும்படி எழுதிவைத்த பிரம்மனுடைய தலையைக் கிள்ளி எறியவில்லை?

இப்படி உரிமையுடன் கேட்டு, எல்லார் விதிகளையும் மாற்றி அருளும் வல்லமை இறைவனுக்கே உண்டு என்றும், அவர் கருணையே, வினை விலக்கும் மருந்து என்றும் இப்பாடலில் காட்டப்பட்டது.

நமக்குத் துன்பம் வந்தால், அத்துன்பத்திற்கு மற்றவரோ, மற்ற பொருளோதான் காரணம் என்று நம்புவதும், தலை எழுத்து, விதி என்றெல்லாம் கவலை கொள்வதும், பிறகு அதற்குப் பரிகாரம் செய்தல் என்றும், இறைவனிடம் விதியினை மாற்றச் சொல்லி முறையிடுதல் என்றும், நாம் நடந்து கொள்வது இயற்கைதானே! அதுவும் இப்பாடலில் காணப்படுகிறது.

'வைதாத்ரம்' எனும் சொல்லினால் பிரம்மன் சுட்டிக் காட்டப்பட்டது. முன்னிரு பாடல்களைப் போலவே, இப்பாடலிலும், பொறுப்பை எல்லாம் இறைவனின் தலையிலேயே (திருவடிகளிலேயே) கட்டிவிடும் சாமர்த்தியம், பகவான் ஆதி சங்கரரின் பக்தியின் பழுத்த அன்பு நிலை என்பது தெளிவாகிறது.

நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன?

நாம் தலையில் சுமக்கும் பளு, இறைவனைப் பணிந்து வணங்குவதால், இறைவனது திருவடிகளிலேயே வீழ்ந்து விடுகிறது. அப்புறம் அவற்றைத் தீர்ப்பது, ஆள்பவன் பொறுப்பு அல்லவா! நமக்கு அதனால் கவலைகளிலிருந்து விடுதலை அல்லவா! எல்லாம் இறைவன் விருப்பம் என்பதே பாடம்.(15)

16 - விதித்தானை விதித்தாளும் வேந்தன் அடி போற்றி!

विरिञ्चिर्दीर्घायुर्भवतु भवता तत्परशिर
श्चतुष्कं संरक्ष्यं स खलु भुवि दैन्यं लिखितवान् |
विचारः को वा मां विशद कृपया पाति शिव ते
कटाक्षव्यापारः स्वयमपि च दीनावनपरः ||१६||

விரிஞ்சிர் தீ$_3$ர்கா$_4$யுர் ப$_4$வது ப$_4$வதா தத்பரஶிரஸ்$_1$ சதுஷ்கம்
ஸம்ரக்ஷ்யம் ஸ க$_2$லு பு$_4$விதை$_3$ன்யம் லிகி$_2$தவான் |
விசார: கோ வா மாம் விஶத$_3$ க்ரு$_2$பயா பாதி ஶிவ தே
கடாக்ஷ வ்யாபார: ஸ்வயமபி ச தீ$_3$னாவனபர: ||16||

தான தனதான தான தனதான
தான தனதான – தனதான

ஆயுள் பலமாக நான்கு தலைமீள
வாழ அயனார்க்கு - அருள்வாயே
அவர்கை எழுத்தாகத் தலையில் அழுத்தாள
அயர இளைத்தேனே - அதனாலே
ஏது இனிசோகம் ஈதுசிவ யோகம்
நாத னருட் கருணை - விழியாலே
எளியர்க் கருளபய வழியிற் பரிவுதரும்
எந்தை நின்கருணை – விடையாமே **(16)**

இறைவா, (எம்மை இடர்படப் படைத்த) பிரம்ம தேவனும் நீண்ட ஆயுளுடன், தங்கள் அருளால் வாழட்டும்! மிஞ்சிய அவருடைய நான்கு தலைகளும் நிலைக்கட்டும்! யான் அல்லலுறும்படியாக, அவரின் கை என் தலையில் அழுத்தி எழுதிய விதி (என் வினைப் பயன்) ஏதாயினும் என்ன கவலை? பரசிவனே, எளியருக்கு அருள்கின்ற நினது கடைக்கண் பார்வை எனும் பரிவான செயல் ஒன்றே பெரிது. அதனை ஈர்த்து அடைகின்ற சிவயோகமே எமைக் காக்கும் பேரரிய பயன்.

குறிப்பு:

'தீதும் நலமும் பிறர் தர வாரா' என உணர்ந்து, எல்லாத் துயருக்கும் நம்முடைய செயலே காரணம் என்பதையும் தெளிந்து கொண்டு விட்டால், விதியின்படி எது நடந்தாலும் ஏற்கும் உறுதி வரும் அல்லவா? அப்படி என்றால், தலை எழுத்தை எழுதிய பிரம்ம தேவன் மேல் எதற்குக் கோபம் வரவேண்டும்? அவர் நன்றாக வாழட்டும். அவரையும் வாழவைக்கும் வள்ளலாகிய சிவபிரானின் கடைக் கண் பார்வை தெரிக்கின்ற சிவ சுகப் பெருவெள்ளம் நமக்குக் கிடைத்து விட்டால், பிறகு ஏது துயர்!

'கடாக்ஷ வ்யாபார' எனும் சொல்லினால், கருணை செய்தல் எனக் காட்டி, செயலிலாப் பரம்பொருளுக்கும் செயல் கற்பிக்கும் சிறப்பு, பகவான் ஆதி சங்கரருக்கே உரித்தானது.

தலைவிதி, வினைப்பயன் என்றெல்லாம் நொந்து கொண்டிருக்காமல், வருவதை ஏற்று, எல்லாமே இறையருள் என்று வாழ்வதே தெளிவுடையார் பண்பு என்பதும் இப்பாடலினால் சுட்டிக் காட்டப்படுகிறது. (16)

17 - மறையாற் காலடியை மறைப்பான் அடி போற்றி!

फलाद्वा पुण्यानां मयि करुणया वा त्वयि विभो
प्रसन्नेऽपि स्वामिन् भवदमलपादाब्जयुगलम् |
कथं पश्येयं मां स्थगयति नमः संभ्रमजुषां
निलिम्पानां श्रोणिर्निजकनकमाणिक्यमकुटैः ||१७||

ப$_2$லாத்$_3$வா புண்யானாம் மயி கருணயா வா த்வயி விபோ$_4$
ப்ரஸன்னே(அ)பி ஸ்வாமின் ப$_4$வத$_3$மல பாதா$_3$ப்$_3$ஜ யுக$_3$லம் |
கத$_2$ம் பஸ்$_1$யேயம் மாம் ஸ்த$_2$க$_3$யதி நம:ஸம்ப்$_4$ரம ஜுஷாம்
நிலிம்பானாம் ஸ்$_1$ரேணிர் நிஜ கனக மாணிக்ய மகுடை: ||17||

தன்னனன தன்னான தன்னனன தன்னான
தன்னனன தன்னான – தனதான

நல்லுழியின் பயனாகி நல்லருளின் தயவாகி
நன்றுதியும் பரிசான - நிறைவேநின்
நல்லடிகள் வயமாகி உள்ளுதய மயமாகி
பின்னுமது மறைவான – பிழையேகேள்
வல்லமுனிச் சடையாகி நல்லமரர் குடையாகி
வண்ணமணி முடியான - மகுடாவும்
உள்ளுவழித் தடையாகி என்னுளவித் திரையாகின்
உய்யுவழி அறியாமல் – உழல்வேனே (17)

நல்ல வினைப் பயனாலோ, நினது அருட்பயனாகிய பரிசாலோ, இறைவா, நினது திருவடி அருள் என் முன்னே தெரியலானது. அந்தோ, அப்போது, நினை வணங்கி, பல சுக அருளையும் வேண்டி அடையும் முனியோர், வானவர்களின் உயர்ந்த முடியும், பொன், மணிகளாகிய கீரிடங்களும், என் முன்னே எழுந்து, நினது திருவடிகளை யான் தரிசிக்க முடியாமல் மறைக்கின்றனவே, யாது செய்வேன்? (அதாவது, நல்வினையாலும் இறையருளாலும், நமக்குள் எப்போதேனும்

இறை உணர்வு உதித்தாலும், அப்போதெல்லாம் பலபொருளும், பல சுகமும் வேண்டுகின்ற, நிரந்தரமில்லாச் சுகங்களின் மீதான எண்ணம், அவ்விறைவுணர்வை நாம் முழுதும் உணரமுடியாமல் மறைத்து விடுகின்றன).

குறிப்பு:

இறைவனை உணரவேண்டும் என்ற வேட்கை வந்து விட்டது. ஏழையாகிய நமக்குத் துணையாக இருப்பவன் இறைவன் என்னும் அறிவும் உறுதிப்பட்டுவிட்டது. எந்தப் பிறவி ஆனால் என்ன, எந்த நிலையில் வாழ்ந்தால் என்ன, அலைய வேண்டிய வேலை இல்லாமல், இருந்த இடத்திலேயே இருந்து, தன்னுள்ளேயே கடவுளைத் தேடும் வழியே சிறப்பு என்பதும் அறியப்பட்டு விட்டது.

ஆனால், மனம் ஒருமுகப்பட்டு, ஆத்மாவாகிய பரம்பொருளைத் தரிசிக்க முயலும்போதெல்லாம், பொன்னும், மணியும், போகங்களும், கண்களை மறைக்கின்றனவே! அற்பப் பயனை விரும்பி, அவற்றைப் பெற்றுச் சுகிப்பவரின் நினைவுகள், நமக்குள்ளும் ஆசைத் திரையைப் போட்டு, ஆத்மனின் தரிசனத்தை மறைக்கின்றனவே! இதற்கு என்ன வழி! இப்படி எல்லாம் கவலைப்பட்டு, இறைவனிடமே, அவரது திருவடிகளை அறியவிடாமல் மறைக்கின்ற அனைத்தையும் (அது தேவலோக சுகமானாலும் கூட) அகற்ற வேண்டித் துதிக்கிறது இப்பாடலமுதம்.

அறிவு தூய்மைப்பட்டாலும், மனம் நிலைப்படவில்லை என்றால், ஆசை எனும் பெருவிசை நம்மை ஈர்த்து, வேண்டுதல், வேண்டாமை என நம்மை ஆட்டுவித்துத் துயரில் சாய்த்து விடும். எனவேதான், ஆன்ம அறிவுப் பயணத்திற்கு, கூர்த்த மதி மட்டும் போதாது, குறிக்கோளை விட்டு அகலாத மன உறுதியும் வேண்டும். விவேகம், வைராக்கியம் முதலான பல தகுதிகளும் வேண்டும். அதற்கு நற்குருவின் வழிகாட்டல் வேண்டும். அதை எல்லாம் அமைத்துத் தர, இறையருள் வேண்டும். இதுவே இப்பாடல் சுட்டும் உண்மை. (17)

18 - மாறாச் சுகந்தந்த மறையோன் திறம் போற்றி !

त्वमेको लोकानां परमफलदो दिव्यपदवीं
वहन्तस्त्वन्मूलां पुनरपि भजन्ते हरिमुखाः |
कियद्वा दाक्षिण्यं तव शिव मदाशा च कियती
कदा वा मद्रक्षां वहसि करुणापूरितदृशा ||१८||

த்வமேகோ லோகானாம் பரமப$_2$லதோ$_3$ தி$_3$வ்யபத$_3$வீம்
வஹந்தஸ்த்வன்மூலாம் புனரபி ப$_4$ஜந்தே ஹரிமுகா$_2$: |
கியத்$_3$வா தா$_3$க்ஷிண்யம் தவ ஶிவ மதா$_3$ஶா ச கியதீ
கதா$_3$ வா மத்$_3$ரக்ஷாம் வஹஸி கருணாபூரிதத்$_3$ருஶா || 18||

தத்தன்னன தத்தந்தனதன
தத்தன்னன தத்தந்தனதன
தத்தன்னன தத்தந்தனதன – தனதான

நித்தச்சுக மொத்தத்தருதரு
வித்தச்சுக வித்துப் பெருநிதி
அத்தனுனை கத்துப்பெருவறி – வதனாலே

தத்தம்பத வித்தகுதகுதியை
நித்தம்பெற தத்துந்திறைதுயி
லத்தன்அய னொத்தர்அமரரும் - பணிவாரே

பத்தப்பணி வார்க்கருட்பூமழை
முத்தப்பய னாற்சுகமேயதி
கத்தந்தா ளுமையாலுமை - அணைவோனே

மெத்தப்பல வாசையன்தாசனைச்
சுத்தப்பட வாக்கியதாமருள்
வித்தன்விழி யாலிவன்மேலருள் - விளைவாயே

(18)

இறைவா, நீவிர் ஒருவரே எல்லோருக்கும் நிலையான சுகத்தை அளிப்பவர். நினது அருளே பெருநிதி என்றும், நீவிர் அளிக்கும் பதவியே பெரிது என்றும், திருமாலும் பிரம்மனும் உம்மையே மேலும் மேலும் துதிக்கின்றனர். பணிந்தோர்க்கெல்லாம் பல சுகமும் அருளும் பொழியும் நின்னுடைய கருணை அளவிட முடியாதது. என்னுடைய ஆசையும் அதைவிட அளவிட முடியாதது. அதனால், சிறியனான என் மேல் கருணை மிகுந்த நினது பார்வையினைக் காட்டி அருள வேண்டும்.

குறிப்பு:

உண்மையை மறைக்கின்ற ஆசையாகிய திரையை அகற்ற வேண்டிக் கொண்டது, முந்தைய பாடல். ஆனால் ஆசைகள் ஏதுமிலாமல் இருப்பது எப்படி முடியும்? ஆசை உயர்வான, நிலையான சுகத்தின் மேல் இருந்தால், அதனால் பயன் உண்டு அல்லவா? ஆசைப்பட்டதை எல்லாம் அள்ளித் தருபவன் சிவன் அல்லவா? அதனாலேயே, பெரிய பதவியை அடைந்தும், திருமாலும், பிரம்மனும், மேலும் மேலும் சிவனைத் தொழுகின்றனர். நமக்கும் அளவிட முடியாத ஆசைகள் இருக்கின்றன. அவை எல்லாம் நிலையான சிவ சுகப் பெருவெள்ளத்தை விழைந்தால், அவ்வாசைகளை ஏற்று, அச்சுகத்தை அளிப்பவர் அல்லவா பரம்பொருள்! (18)

19 - வினைத்தீயில் புடமிட்டு விளக்குவான் அடி போற்றி!

दुराशाभूयिष्ठे दुरधिपगृहद्वारघटके
दुरन्ते संसारे दुरितनिलये दुःखजनके |
मदायासं किं न व्यपनयसि कस्योपकृतये
वदेयं प्रीतिश्चेत्तव शिव कृतार्थाः खलु वयम् ||१९||

து$_3$ராஶாபூ$_4$யிஷ்டே$_2$ து$_3$ரதி$_4$பக்$_3$ருஹத்$_3$வாரக$_4$டகே
து$_3$ரந்தே ஸம்ஸாரே து$_3$ரிதனிலயே து$_3$:க$_2$ஜனகே |
மதா$_3$யாஸம் கிம் ந வ்யபனயஶி கஸ்யோபக்ருதயே
வதே$_3$யம் ப்ரீதிஸ்சேத்தவ ஶிவ க்ருதார்தா$_2$: க$_2$லு வயம் || 19||

தன்னனன தனதனன தன்னனன தனதனன
தன்னனன தனதனன – தனதான

துட்டபல ஆசையெனத் துட்டரக வாசல்வழித்
துட்டமுடி வானமிகு - பலபாவம்
துட்டநிலை யேகிவருந் துட்டபிற வானசுழித்
தொட்டபிர மாவின்விதி - துவளாதே
விட்டுவிட வேசிவனே இட்டமதுவோ கரவு
நட்டமது ஏதுகதி - நினதாகும்
சட்டமதுவோ அதனால் பட்டுஅறிவோ மெனவேப்
பத்தர்நல மாகிவருள் – பலமேகும் (19)

தீய ஆசைகளை வளர்த்து, தீயவர்களின் நட்பில் திளைத்து, தீய முடிவிலேயே இணைக்கும் பாவமான செயல்களைச் செய்து, பிறவிப்பிணி எனும் சுழலில் தத்தளிக்கும்படியான எனது வினைப்பயனைத் தாங்கள் இன்னும் அழிக்காமல் இருப்பதன் நோக்கம், அவற்றை விதியாக என் தலையில் எழுதிய பிரம்ம தேவனின் எழுத்து பொய்க்காமல் இருக்கத்தானோ! (அனலிட்ட பொன்னாக, வினையிலிட்டு) நாங்கள் கடைத்தேற இதுவே

தங்கள் காட்டும் கருணை என்றால், அதைவிட நற்கதி வேறு என்ன, பரசிவனே!

குறிப்பு:

சிவ சுகப் பெருவெள்ளம் வேண்டி வணங்கினும், உலக வாழ்வில் துயர் நமக்குத் தொடர்ந்து இருக்கிறதே! மேலும் மேலும் வினைகள் செய்வதால், விதிப்பயன் மூட்டைகளும் பெரிதாகிக் கொண்டே இருக்கின்றனவே!

நம் தலை விதியினை மாற்றும் வல்லமை இருப்பினும், 'கர்ம பல தாதா' எனும்படி, நாம் செய்த வினைகளுக்கேற்ற பலனைக் கொடுக்கின்றவராகவே இறைவன் இருப்பதன் நோக்கம், நாம் உண்மை உணர்ந்து, பலனை எதிர்பார்க்காது செயல் செய்யவும், அச்செயல்கள் எல்லாம் நலமுடையதாய் இருக்கவும், அவ்வழியினாலேயே சிவ சுகப் பெருவெள்ளப் பயனை அடைய வேண்டும் என்பதற்காகத்தான்!

ஆதலால், எது வரினும் அதை அப்படியே ஏற்று, எப்போதும் மாறாத முனைப்புடன் பரம்பொருள் நினைவால் மட்டுமே வாழ்வைக் கழிப்பதே நந்நிலைக்கு வழி. இதை உணர்த்துவதே இப்பாடலின் நோக்கம்.

இப்பாடலில் 'கஸ்ய + உபக்ரு₂தயே' எனும் சொல்லில் கஸ்ய என்பது பிரம்மாவினுடைய எனும் பொருளில் வருவதால், 'பிரம்மாவின் விதி' என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. (19)

20 - மனக்குரங்கைக் கட்டுவித்த மாறன் அடி போற்றி!

सदा मोहाटव्यां चरति युवतीनां कुचगिरौ
नटत्याशाशाखास्वटति झटिति स्वैरमभितः |
कपालिन् भिक्षो मे हृदयकपिमत्यन्तचपलं
दृढं भक्त्या बद्ध्वा शिव भवदधीनं कुरु विभो ||२०||

ஸதா$_3$ மோஹாடவ்யாம் சரதி யுவதீனாம் குசகி$_3$ரௌ
நடத்யாஸா$_1$ ஸா$_1$கா$_2$ஸ்வடதி ஜ$_2$டிதி ஸ்வைரமபி$_4$த: |
கபாலின் பி$_4$க்ஷோ மே ஹ்ருத$_3$யகபி மத்யந்த சபலம்
த்$_3$ரு$_2$ட$_4$ம் ப$_4$க்த்யா ப$_3$த்$_3$த்$_4$வா ஸிவ ப$_4$வத$_3$தீ$_4$னம் குரு விபோ$_4$ ||20||

தனதனன தனதான தனதனன தனதான
தனதனன தனதான – தனதான

அனுதினமு மடலாசை வனமுழலு மனவோசை
அழகுமுலை மலையேகி - கிளைதோறும்
அதுஇதெனப் பலவாக அவதியுறும் வெகுவேக
மலையுநிலை விலையாகி - மதிபோகும்
கனியசிவ மயமான இனியபர மேயெனது
கலையுமன வனவான - ரனையுநீயே
கட்டிவிடவே அன்புக் கயிறிலிடவே கரமுள்
சுட்டசிர ஓடேந்தும் – குருசீலா (20)

எப்போதும் அலையாய் அலைக்கழிக்கும் ஆசை மிகுந்தால், மனம் அறிவின் மயக்கம் எனும் காட்டிலும், அழகு முலை என உடற்காமக் கூட்டிலும், உலகில் அது இது எனப் பல வழிகளிலும், குரங்கு எனத் தாவித் திரிகிறது. ஆசையெனும் கிளைகளில் தொங்கி அலைகிறது. நாற்புரமும் அலைவதால், மதியின் நிலைப்பாடும் கலைகிறது. கைகளில் ஏந்திய கபாலம் எனும் மண்டை ஓட்டினில் இரந்துண்டு வாழும் அருளே! (அதாவது, தன் மதியுள் தமையுணர்ந்த பேரருளே)! எனது

மனமாகிய குரங்கினை, அன்பெனும் கயிற்றினால் உறுதியாகக் கட்டி, உம்முடனயே இட்டுச் செல்லும், நற்குருவே!

குறிப்பு:

அற வாழ்வும், இறை பக்தியும் இருந்தாலும் கூட, மனம் அவ்வப்போது நழுவி விடுகிறதே! ஆசை எனும் பாசத்தில் வழுக்கி விழுகிறதே! அதனால் மேன் மேலும் 'அவித்தை' வயப்பட்டு, வினைகளைச் செய்து, அதன் விளைவு மூட்டைகளைப் பெருக்குகிறதே! 'பிராரப்த கர்மம்' எனும் முன்வினையால் விளைந்து கொண்டிருக்கும் துயரை நான் சகித்துக் கொள்கிறேன்.

ஆனால், இனிமேலும் தீவினைகள் செய்யாமல் இருக்க, மனமாகிய குரங்கினை அடக்கி ஆள வேண்டுமே? இறைவா, அன்பு எனும் கயிற்றினால் கட்டி, எனது மனக் குரங்கைக் கூட்டிச் செல். நீவிர் ஆட்டிவைத்தபடி அது ஆடட்டும். இவ்வாறு துதித்து, மனமாகிய பெருவிசை அடங்குவதற்கு இறைவனது அருள் அவசியம் தேவை என்பதைக் காட்டுகின்றார் பகவான் ஆதி சங்கரர்.

'கபாலின் பிக்ஷா' - அதாவது மண்டை ஓட்டில் பிச்சை ஏற்று, அதனை உண்பவர் சிவன். கபாலம் என்பதற்கு 'சுட்ட சிரம்' எனும் சொல் கொடுத்து, அதனால், ஆணவம் ஆகிய ஓட்டம் எல்லாம், முற்றும் அறிவுத்தீயால் அவிக்கப்பட்ட மனம் எனப் பொருள் காட்டப்பட்டது.

அதில் ஏற்கும் பிச்சை, ஆன்ம உணர்வாகிய சுக நிலை. அதனை உண்டு வாழ்பவனே யோகி. இதையே முதற் பாடலில் 'ஆனந்த$_3$ ஸ்பு$_2$ர த$_3$னுப$_4$வாப்$_4$யாம்' – அதாவது, தன்னை முற்றும் உணர்ந்த பரவச நிலையிலேயே சுகம் அனுபவித்துக் கொண்டிருக்கும் சிவசக்தியர் என்று பகவான் துதிக்கிறார். அதுவே கபாலத்திலிருந்து உண்டு வாழுதல் என்பதாக இச்சுகநிலை சுட்டிக் காட்டப்படுகின்றது. (20)

21- மனமென்னும் நாடாளு மன்றத்தான் அடி போற்றி!

धृतिस्तंभाधारां दृढगुणनिबद्धां सगमनां
विचित्रां पद्माढ्यां प्रतिदिवससन्मार्गघटिताम् |
स्मरारे मच्चेतःस्फुटपटकुटीं प्राप्य विशदां
जय स्वामिन् शक्त्या सह शिवगणैः सेवित विभो ||२१||

த்4ருதி ஸ்தம்பா4தா4ரம் த்3ருட4கு3ண நிப3த்3தா4ம் ஸக3மனாம்
விசித்ராம் பத்3மாட்4யாம் ப்ரதிதி3வஸஸன்மார்க3க4டிதாம் |
ஸ்மராரே மச்சேத: ஸ்பு2ட பட குடீம் ப்ராப்ய விஶதா3ம்
ஜய ஸ்வாமின் ஶக்த்யா ஸஹ ஶிவக3ணை ஸ்ஸேவித விபோ4 ||21||

தனனனன தானனன தனனனன தானனன
தனனனன தானனன – தனதான

திண்ணமெனும் தூணைநட்டு திடவுறுதி நாணையிட்டு
வண்ணமலர் வடிவமிட்டு - வாகாக
தினமுகந்த வழியிலிட்டு மனமுவந்த விரியலிட்டு
குணமலர்ந்த இதயமிட்ட - கூடாரம்
அன்னலுமை அருகிலிட்டு மன்மதனைக் கருகிவிட்டு
அண்டிப்பணி வானகண - மவர்கூட
ஆகதட மாயிதயம் ஆள்கசிவ னேபரனே
ஆகசிவ யோகஜெயம் – ஆகநிறையே (21)

(சிவமே எனும்) தீர்மான நிலையைத் தூணாக நட்டு, (சிவ ஞான) உறுதியெனும் கயிற்றினால் கட்டி, விரிகின்றதும், மலர்போல் மலர்கின்றதும், தினமும் நல்ல வழியில் செல்கின்றதும் ஆகிய மனமெனும் பெரிய விரிப்பினை மேற்கூரையாக விரித்து, என்னுள் விளங்குகின்ற கூடாரத்தில், காமனை எரித்த பரசிவனே, சுற்றிலும் கணங்களும், அடியார்களும் துதித்து வணங்க, அன்னை பராசக்தியின்

கூட்டுடன் வெற்றியுடன் விளங்க, நினை யான் விழைந்து பணிவேன்.

குறிப்பு:

மனக் குரங்கை, அன்பெனும் கயிற்றால் கட்டி, கபாலம் ஏந்தி பிச்சை கேட்டு வரும் சிவபிரானிடமே, நமது அன்புப் பரிசாகக் கொடுத்து விடலாம். ஆனால் அவரை வரவேற்று உபசரித்து அல்லவா, நாம் நமது அன்பளிப்பை அர்ப்பணிக்க வேண்டும்! அதற்காகவே, அசையாத நம்பிக்கை என்னும் தூண்கள் நட்டு, அவற்றினிடையே உறுதி என்னும் கயிற்றைக் கட்டி, அதன்மேல் அகலமான (குறுகிய எண்ணங்கள் இல்லாத) மனமாகிய துணியைக் கூரையாக விரித்து, சிவசக்தியரை வரவேற்று, ஆழ்மனமேடையில் அமர்த்தி ஆராதிக்க வேண்டும் என்பதான வரவேற்பு இதழே இப்பாடல்.

'ஸ்மராரே' எனும் சொல் மன்மதன் எனும் காமனை எரித்தவர் எனும் பொருள் தரும். அதாவது, ஆசை எனும் மயக்கம் முற்றும் அழிந்தால், இரண்டற்ற ஒரு நிலை கிடைக்கும். ஒன்றேயான சத்தியப் பொருளாகி விட்டால், வேறு எதுவும் இல்லாததால், ஆசையும் இல்லாதிருக்கும். அதுவே பிரம்ம நிலை.

காமனை அழித்த பரம்பொருள் என்பது என்றும் ஒன்றேயான நிலையையே குறிக்கின்றது. எனினும் சிவசக்தியினரின் திருவிளையாடலாகவே, பல உயிர்களும் பிறந்து, இறந்து, மீண்டும் பிறப்பித்துக் கொண்டும் இருக்கின்றன. அதற்கான உந்து விசையாகவே உருவிலா வடிவில் காமன் இருக்கும்படி, இறையருளால் மீண்டும் உயிர்த்திருக்கின்றான். இதுவே பெரியோர் காட்டும் விளக்கம். (21)

22 - திருட்டு மனந்திருடி தீர்விப்பான் அடி போற்றி!

प्रलोभाद्यैरर्थाहरणपरतन्त्रो धनिगृहे
प्रवेशोद्युक्तस्सन् भ्रमति बहुधा तस्करपते |
इमं चेतश्चोरं कथमिह सहे शंकर विभो
तवाधीनं कृत्वा मयि निरपराधे कुरु कृपाम् ||२२||

ப்ரலோபா$_4$த்$_3$யை: அர்தா$_2$ஹரண பரதந்த்ரோ த$_4$னிக்$_3$ரு$_2$ஹே
ப்ரவேஶோ$_1$த்$_3$யுக்தஸ்ஸன் ப்$_4$ரமதி ப$_3$ஹுதா$_4$ தஸ்கரபதே
இமம் சேதஸ்$_1$சோரம் கத$_2$மிஹ ஸஹே ஶங்கர விபோ$_4$
தவாதீ$_4$னம் க்ரு$_2$த்வா மயி நிரபராதே$_4$ குரு க்ரு$_2$பாம் ||22||

தானான தானனன தானான தானனன
தானான தானனன – தனதான

பேராசை யாமுதலாய்ப் பிழையாசைக் கோள்மனது
பிறராசை யால்நலிய - எப்போதும்
பேதித் தலைந்துழலும் சாதித் தயர்பொருளை
ஊதிப் புனைந்துருவித் - தப்போதும்
தீராசைச் சோரமிது திருடாக ஆனதிது
வேராட வீழ்த்துவது - உன்வேலை
திருடாப் பெருந்திருடா திருசங் கராஹரனே
தருவா யபயம்குரு - இதுவேளை (22)

பேராசை கொண்டு, தவறான பல குணங்களினால், மனமாகிய திருடன் எப்போதும் பிறர் பொருளைக் கவர்வதிலேயும், அத்திருட்டுக்காக, பலவகையில் புரட்டும் (பொய்யுமாக) எப்பொழுதும் முயல்கின்றது. இம்மனமாகிய திருடனை எப்படி யான் ஏற்பேன்? திருடரில் திருடரான திருவருளே! இம்மனதை உமக்கு அடங்கியதாய் எடுத்துக் கொண்டு எமக்குக் குருவாக இருந்து அருள் புரிவீர்களாக!

குறிப்பு:

ஆட்டுவிப்பான் இறைவன் என்பதால், இறைவனே தமது மனமாகிய குரங்கினை அன்புக் கயிற்றால் கட்டி ஆட்டட்டும் என்று விழைந்த பகவான் ஆதி சங்கரர், இப்பாடலில், மனம் ஒரு திருடன் என்றும் அத்திருடனைக் கவர்வதில் தேர்ந்த பெரிய திருடன் இறைவன் என்றும் அன்புடன் துதிக்கிறார்.

ஆசைகளின் கூடாரமாயும், அலைகின்ற குரங்காயும் இருக்கின்ற மனது, திருடனாகவும் இருக்கிறது. நல்ல வழியில் அறிவும் உணர்வும் போகாமல் தடுத்து, அவற்றைக் கவர்ந்து, அல்ல வழிகளில் திணிக்கின்ற கள்வனாக மனம் இருக்கிறது.

‘பாம்பின் கால் பாம்பறியும்’ என்பது போல, திருடானகிய மனதை, திருடர்களுக்கெல்லாம் தலைவனாகிய சிவபிரானிடம் கொடுத்தால் போதுமே! ‘தஸ்கரானாம் பதயே’ – அதாவது திருடர்களின் தலைவன், ‘வஞ்சதே பரிவஞ்சதே’ – திருடன், பெரிய திருடன் என்றெல்லாம் ஸ்ரீ ருத்திரம் இறைவனைப் புகழ்கிறது.

ஏன் எம்பிரான் திருடன்?

திருடன் என்பவன் அழையாமலே வீட்டினுள் புகுபவன். அதிக மதிப்பான பொருளைக் கவர்பவன். பரம்பொருளும் அப்படியே! நாம் அறியாமலேயே நமது உள்ளே அமர்த்திருக்கிறது! சிதாகாசம் எனும் ஆழ்மனமேடையிலே மறைந்து இருக்கிறது. அப்பெரிய திருடனாகிய பரம்பொருள், இச்சிறிய திருடனாகிய மனதினைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வாரே!

அதாவது மனக்கட்டுப்பாடு ஆன்ம அறிவுக்கு இன்றியமையாத தேவை. அதற்கு குருவின் அருளும், வழிகாட்டலும் தேவை. இறைவனே குரு அல்லது குருவே இறைவன் என்பதும் இப்பாடலில் உணர்த்தப்படுகின்றது. (22)

23 - அரி அயனும் அறியாத அண்ணல் அடி போற்றி!

करोमि त्वत्पूजां सपदि सुखदो मे भव विभो
विधित्वं विष्णुत्वं दिशसि खलु तस्याः फलमिति |
पुनश्च त्वां द्रष्टुं दिवि भुवि वहन् पक्षिमृगता
मदृष्ट्वा तत्खेदं कथमिह सहे शंकर विभो ||२३||

கரோமி த்வத்பூஜாம் ஸபதி$_3$ ஸுக$_2$தோ$_3$ மே ப$_4$வ விபோ$_4$
விதி$_4$த்வம் விஷ்ணுத்வம் தி$_3$ஶஸி க$_2$லு தஸ்யா: ப$_2$லமிதி |
புனஸ்$_1$ச த்வாம் த்$_3$ரஷ்டும் தி$_3$வி பு$_4$வி வஹன் பக்ஷிம்ரு$_2$க$_3$தாம்
அத்$_3$ரு$_2$ஷ்ட்வா தத்கே$_2$த$_3$ம் கத$_2$மிஹ ஸஹே ஶங்கர விபோ$_4$ ||23|

தானா தனதனன தானா தனதனன
தானா தனதனன – தனதான

ஆரா தனைகள்என்று ஐயா நினையும்நன்று
பூஜா வழிகள்நின்று - புகழ்வேனே
அதனால் உடனுவந்து அடைவாய் பதவியென்று
அருள்வாய்ப் பேருயர்வு - அடைவேனே
ஆனால் பிரமனெனில் அரிமால் உருவமெனில்
ஆஹா புள்மிருகம் - அவையாகி
அடியேன் தேடியுனை அலையும் கோடியிடர்
சகியேன் சிவசங் - கரநேயா (23)

நிறை பொருளே, தினமும் அர்ச்சனை, ஆராதனை என்று யான் உம்மை வழிபடுகிறேன். அதனால் உடனடியாக என் முன்னால் எழுந்து, தாங்கள் பேரின்பத்தைத் தரவேண்டும். ஒரு வேளை, பிரம்மாவின் பதவியையோ, அல்லது திருமாலின் பதவியையோ, எனது வழிபாட்டின் பலன் என்று அளிப்பீரேயானால், அந்தோ, அன்னமாகப் பிரம்மனும், பன்றியாகத் திருமாலும், நினைத் தேடி அலைந்து பட்ட

துன்பத்தைப்போல (எனக்கு) ஏற்பட்டால், அதனை எப்படித் தாங்குவேன், நிறைவைத் தருகின்ற இறையுருவே!

குறிப்பு:

ஶிவானந்த₃லஹரீ எனும் பரசிவப் பரசுகப் பரவச நிலையே பெரும் பயன். அந்நிலையிலேயே இருந்து, இரண்டறக் கலத்தலே முக்தி. ஆனால், நம்முடைய துதிக்கும், அன்புக்கும், ஆராதனைகளுக்கும் இரங்கி, இறைவன் பெரிய பதவிகள் கிடைக்கட்டும் என்று கசிந்து, பிரம்மாவாகவோ, திருமாலாகவோ இருக்கும் உயர்பதவியினைத் தந்துவிட்டால்...

அப்பதவியில் இருந்தும், அயனும், அரியும் அதைவிடப் பெரிதான நினது உருவை அறியும் தவத்திலே, முறையே அன்னமாயும், பன்றியாயும் நினைத்தேடி அலைந்து, அலைந்து களைத்தார்களே! அப்படி யானும் களைப்படைய வேண்டுமா, வேண்டாம்! எப்போதும் சிவ சுகப் பெருவெள்ளத்தில் திளைத்திருக்கும் நந்நிலை ஒன்றே எனக்கு வேண்டும்.

17-ம் பாடலில் கூறியபடி, தேவருலகப் பிறவியும், வைகுந்தப் பதவியும் கூட, ஒர்நாள் முடிந்துவிடும் என்பதால், நிலையற்ற இவற்றை எல்லாம் விட்டு, பரசுகப் பெருவெள்ளத்தில் எப்பொழும் நிலைத்திருக்கும் பயனையே நாடுகின்றது, ஞானியின் மனம். (23)

24 - கயிலையிலே பரசிவனைக் காணும் நாள் போற்றி!

कदा वा कैलासे कनकमणिसौधे सहगणै
र्वसन् शंभोरग्रे स्फुटघटितमूर्धाञ्जलिपुटः ।
विभो साम्ब स्वामिन् परमशिव पाहीति निगदन्
विधातृणां कल्पान् क्षणमिव विनेष्यामि सुखतः ॥२४॥

கதா$_3$ வா கைலாஸே கனகமணிஸௌதே$_4$ஸஹக$_3$ணை:
வஸன் ஶம்போ$_4$ரக்$_3$ரே ஸ்பு$_2$டக$_4$டித மூர்தா$_4$ஞ்ஜலிபுட: |
விபோ$_4$ ஸாம்ப$_3$ ஸ்வாமின் பரமஶிவ பாஹீதி நிக$_3$த$_3$ன்
விதா$_4$த்ரு$_3$ணாம் கல்பான் க்ஷணமிவ வினேஷ்யாமி ஸுக$_2$த: ||24||

தனனனன தானனன தனனனன தானனன
தனனனன தானனன – தனதான

கயிலைமலை மேற்பரிகை கனகமணி யாற்படுகை
கனியுமிட மேலினிமை - நிறைவாகி
கணமுமுனை யேயினிய கவியுமிசை யால்கனிய
கரமுசிர மேற்குவியப் - பணிவாகி
அகிலமுழு தாமிறையே அன்னையுமை யானேசிவ
அருளபய மேயெனவே - சுகமாக
அயனுடைய காலமென ஆகநொடி யாயுகத்தை
ஆக்கியடி யாலிருத்தல் - எப்போது? (24)

எப்போது திருக்கயிலையில், பொன்னும் மணியும் இழைத்த இருக்கையில் விளங்கும் பரசிவனின் முன்னே, எங்கும் சிவகணங்கள் நல்லிசை எழுப்பியபடி விளங்க, எனது கைகளைத் தலைமேல் உயர்த்தி வணங்கி, நிறைபொருளே, அன்னையின் துணையோய், இறைவா, பரசிவமே எமைக் காத்து அருள்க என வேண்டிக்கொண்டு, பிரம்மாக்களின் யுகமாகிய காலச் சுமையைக்கூட ஒரே நொடியாக, சுகமாகக் கழிப்பேன்? (24)

குறிப்பு:

காலம், தேசம் எனும் இவ்விரண்டு பரிமாணங்களுமே பல உருவங்கள், உலகங்கள் எனவும், அவையும் எப்போதும் மாறிக் கொண்டே இருக்கும் நிலைக்கும் அடிப்படைக் காரணங்கள். காலம் என்பது எண்ணங்கள் விளைப்பது. தேசம் அல்லது வெளி என்பது எண்ணங்கள் காட்டும் உருவங்களினால் விளைவது. எனவே காலமும் தேசமும், மனதினால் வருபவை. ஆழ்ந்த தூக்கத்தில் நாம் உடலையும், மனதையும், அறிவையும் இழப்பதாலேயே, காலமும் தேசமும் கடந்தாற் போலிருக்கிறோம். மனதாலோ அறிவாலோ அறியப்பட முடியாத ஆன்மா, தூக்கத்தில் நாம் இருக்கும்போது, அவித்தை எனும் திரையினால் மூடப்பட்டு இருக்கிறது. ஆனால், சமாதி எனும் 'தனையுணரறிதுயில்' நிலையில், ஆன்மா மட்டுமே ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

மனமற்ற நிலையினால், கால தேசக் கட்டுக்கள் அங்கு இல்லை. காலம், தேசம் எனும் இவ்விரு பரிமாணங்களுக்கு உள்ளேதான் எல்லா உலகங்களும், உயிர்களும் அகப்பட்டுள்ளன. காலத்தையும் தேசத்தையும் கடந்த நிலையே பரம்பொருள். பகவான் ஆதிசங்கரர், கயிலை மலையிலே கொலுவிருக்கும் சிவசக்தியினரை, மனமார தரிசித்துக் கொண்டிருந்தால், காலம் எனும் கரையாப் பொழுதும், சுகமாகக் கரைந்துவிடும் என்று கூறுகிறார்.

ஸாலோகம் (அதாவது இறைவனது உலகம் அல்லது இறையனுபவம்), ஸாமீப்யம் (அதாவது, இறைவனின் அருகாமை) எனும் இரண்டு நற்பயன்களும் – கயிலை மலைத் தரிசனம் என்றும், கயிலை மலையான் காலடியில் இருத்தல் என்றும் இப்பாடலில் காட்டப்படுகின்றது. அதாவது, சிவானந்த வெள்ளத்தில் முழ்கி இருக்கும்போது, சிந்தையில் வேறு எண்ணங்கள் இல்லை. எண்ணமே நேரத்திற்கு வித்து. மனம் நினைவு ஏதுமின்றி இருந்தால், கால, தேசக் கட்டுப்பாடுகள் அங்கே இல்லை. (24)

25 - கண்ணாரச் சிவனுருவைக் கண்டுருகும் நாள் போற்றி!

स्तवैर्ब्रह्मादीनां जयजयवचोभिर्नियमिनां
गणानां केलीभिर्मदकलमहोक्षस्य ककुदि |
स्थितं नीलग्रीवं त्रिनयनमुमाश्लिष्टवपुषं
कदा त्वां पश्येयं करधृतमृगं खण्डपरशुम् ||२५||

ஸ்தவைர்ப்$_3$ரஹ்மாதீ$_3$னாம் ஜயஜயவசோபி$_4$ர்னியமினாம்
க$_3$ணானாம் கேலீபி$_4$ர்மத$_3$கலமஹோக்ஷஸ்ய ககுதி$_3$ |
ஸ்தி$_2$தம் நீலக்$_3$ரீவம் த்ரினயனமுமாஶ்லிஷ்டவபுஷம்
கதா$_3$ த்வாம் பஶ்யேயம் கரத்$_4$ருதம்ருக$_3$ம் க$_2$ண்ட$_3$பரஶும் || 25||

தனதான தானதன தனதான தானதன
தனதான தானதன – தனதான

அயனாதி வானவரும் அறவாழி ஞானியரும்
அன்பாலே ஓதஜெய - ஜெயமோத
அவரோடு கணமுவகை அவைசூழ பதுமநிதி
அடரான காளைமலைத் - திமிலேற
விடமான தாய்க்கழுத்தும் விழிமூல மூவிருத்தும்
உடலாக மாதுவுமை - உடனாக
மடமானுங் கானகர மழுவாக ஆனபர
சிவஞானங் காணுருகல் - எப்போது? **(25)**

எப்போது பிரம்மன் முதலான தேவர்களின் வழிபாட்டுக்களோடும், முறை அறிந்த முனிவர்களின் ‘ஜய ஜய’ எனும் புகழோசையோடும், சுற்றிலும் களித்திருக்கும் கணங்களின் விளையாட்டுக்களோடும், சூழப்பட்டவராய், வலுவான பெரிய காளையின் திமிலின்மேல் அமர்ந்து, நீலம் பூத்த கழுத்தும், மூன்று விழிகளும், அன்னை உமாவினால்

தழுவப்பட்ட உடலும், மானும் மழுவும் உடைய கரங்களும் கொண்டு விளங்குகின்ற பரசிவனைப் பார்ப்பேன் ? (25)

குறிப்பு:

உருவற்றதே பரப்பிரம்மம் என்பதையும், தன்னுளே உள்ள ஆன்ம ஜோதியே பரப்பிரம்மம் என்பதையும், அத்வைதம் எனும் இரண்டற்ற ஒன்றான தத்துவமே சத்தியம் என்பதையும், ஆய்ந்து, அறிந்து, உணர்ந்து நிலை நாட்டிய பகவான் ஆதி சங்கரர், இங்கே உருவமும் எழிலும் கொஞ்ச, பரம்பொருளைச் சிவ சக்தியராகப் பார்க்கத் துடிப்பது என்பது, நம் போன்ற எளியரும் படிப்படியாக, உருவ வழிபாடு, அருவ வழிபாடு, உருஅருவ வழிபாடு என முன்னுயர வேண்டும் எனும் முனைப்பினாலேதான்.

எப்போது பார்ப்பேன் என்று ஏங்கும் மனதினால், நாம் வேண்டித் துதித்தால், மறைக்கும் திரைகள் மனதில் விலகி, சிவானந்த வெள்ளம் பெருகி, ஆன்ம தரிசனமாக, அருட்பரம்பொருளின் உருப்பெறல் முடியும். (25)

26 - என்முடியில் தன்னடியை ஏற்றியருட் சிவம் போற்றி!

कदा वा त्वां दृष्ट्वा गिरिश तव भव्याङ्घ्रियुगलं
गृहीत्वा हस्ताभ्यां शिरसि नयने वक्षसि वहन् |
समाश्लिष्याघ्राय स्फुटजलजगन्धान् परिमला-
नलभ्यां ब्रह्माद्यैर्मुदमनुभविष्यामि हृदये ||२६||

கதா3 வா த்வாம் த்3ருஷ்ட்வா கி3ரிஶ தவ ப4வ்யாங்க்4ரியுக3லம்
க்3ருஹீத்வா ஹஸ்தாப்4யாம் ஶிரஸி நயனே வக்ஷஸி வஹன் |
ஸமாஶ்லிஷ்யாக்4ராய ஸ்பு2டஜலஜக3ந்தா4ன் பரிமலா
நலப்4யாம் ப்3ரஹ்மாத்3யைர்முத3மனுப4விஷ்யாமி ஹ்ருத3யே ||26||

தனனதனனா தனன தனனதனனா தனன
தனனதனனா தனன – தனதான

மலையினரசே நினையே மனதுணரவே நினது
மலரினடியே கரங்கள் - பலமாக
மகிழுயரவே பிடித்து முகிழுசிரமே பதித்து
மனமுருகவே அணைத்து - நலமாக
கலையடிகளே மலர்ந்து சுகமணமுமே முகர்ந்து
கதியறியவே அயனும் - அறியாத
கருணையதுவே மதியில் பெருகுநிலையே உருகி
கனியுருகுவே னதுவும் - எப்போது? (26)

மலையரசே, உம்மைத் தெளிவாய்க் கண்டு, நினது நிறைவான திருவடிகளை இரு கைகளாலும் இறுகப் பற்றிக்கொண்டு, எனது மார்பிலும், தலையிலும் பதித்து, ஆரத்தழுவி, இதழ்களாக மலருகின்ற இணையடிகளின் நறுமணத்தை முகர்ந்து, பிரம்மா முதலான தேவர்களுக்கும் கிடைக்காத நினது திருவடிகளை

அடையும் மகிழ்ச்சியை, நினது கருணையினால், யான் அடைவது எப்போது?

குறிப்பு:

பரசிவனைக் கண்டு களிக்க வேண்டும் என்று 25-ம் பாடலில் துதித்த பகவான் ஆதி சங்கரர், கண்டவுடன் திருவடிகளை இறுகக் கட்டிக் கொண்டு, அணைத்து, உச்சி முகர்ந்து, மகிழ்ந்து இருக்க வேண்டும் என விழைகிறார்.

'த்ருஷ்ட்வா' எனும் சொல்லுக்குக் 'கண்டு' என்பது பொருள். எனினும், உருவாய், அருவாய், அருவுருவாய் இருக்கும் பரம்பொருளை, மனக் கண்ணால் மட்டுமே ஆய்ந்து தெளிய முடியும் என்பதனால் 'மனது உணரவே' என மொழி பெயர்க்கப்பட்டது.

கண்டு என்பது புலனுணர்வுகளை எல்லாம் குறிப்பதாகக் கொள்ளப்பட வேண்டும். எல்லாப் புலனிலும், இறையுணர்வே உணவாய்வரின், மனம் முழுதும் சிவத்தியானமே நிலை பெறும் அல்லவா! அந்த ஆராதனையே, இறைவனை ஆரத்தழுவி அணைக்கின்ற சுகப் பெருநிலை.

இறைவனை உடலாறத் தழுவும் சுகத்தை எப்படி அடைய முடியும்? அது உடலால் உயிர்த்த எல்லாப் பொருட்களையும் இறைவனாய்ப் பார்க்கும் பேராண்மை இருப்பதால்தான் இயலும்!

அத்தகுதியைப் பெறுவதற்குத்தானே அன்பும், அறமும் உடைய வாழ்க்கையால் மனத்தூய்மையும், பரந்த நோக்கமும் நாம் அடைவதற்கான படிக்கட்டுக்களாக இருக்கவேண்டும் என்று நமக்கு மறைகள் எடுத்து உரைக்கின்றன. (26)

27 - மனப்பொருளை ஏற்றென்னை மாற்றும் அருள் போற்றி!

करस्थे हेमाद्रौ गिरिश निकटस्थे धनपतौ
गृहस्थे स्वर्भूजाऽमरसुरभिचिन्तामणिगणे ।
शिरस्थे शीतांशौ चरणयुगलस्थेऽखिलशुभे
कमर्थं दास्येऽहं भवतु भवदर्थं मम मनः ॥२७॥

கரஸ்தே2 ஹேமாத்3ரௌ கி3ரிஶ நிகடஸ்தே2 த4னபதௌ
க்3ருஹஸ்தே2 ஸ்வர்பூ4ஜா(அ)மரஸுரபி4சிந்தாமணிக3ணே |
ஶிரஸ்தே2 ஶீதாம்ஶௌ சரணயுக3லஸ்தே2(அ)கி2லஶுபே4
கமர்த2ம் தா3ஸ்யே(அ)ஹம் ப4வது ப4வத3ர்த2ம் மம மன: ||27||

தனனனன தனதனன தனனனன தனதனன
தனனனன தனதனன – தனதான

பொன்மலையே நினதுகரம் பூரணமாய் நந்நிதியம்
பூத்தநிதி ராசனுமுன் - அருகாலே
பொலியுந்தரு கற்பகமும் தேனுமதி அற்புதமும்
புகழுமணி நற்பலனும் - அதிபோகம்
தண்ணிலவு தலைவதியும் மன்னுமுயிர் நிலையுயரும்
தந்துதவுந் திருவடிகள் - அதனாலே
தருவதென எதையுமினித் தரமுடியும் ஆதலினால்
தந்தென்மனம் உந்தன்வசம் – மலையீசா (27)

கைகளில் பொன்மலை, அருகே (ஏவலுக்கு) குபேரனாகிய நிதியரசன், இருப்பிடத்தில் கற்பகமரம், காமதேனு, சிந்தாமணி என (எல்லாம் அளிக்கும்) நற்செல்வங்கள், தலையில் இனிய குளிர்ச்சியைத் தரும் நிலவு, திருவடிகளில் எல்லாச் சுகங்களும் அளிக்கும் கருணை – என அனைத்தும் கொண்டு விளங்குகின்ற

மலையரசே, உமக்கு யான் எதனைக் கொடுக்க இயலும்! (அதனால்), என்னுடைய மனமே நினக்குப் பரிசாக ஆகட்டும்!

குறிப்பு:

எல்லாமுமாய் இருக்கும் இறைவனுக்கு, நாம் எதனைப் பரிசாகக் கொடுக்க முடியும்? அவரிடம் இல்லாததுதான் என்ன! இருந்தாலும், அவரைத் தரிசிக்கும்போது, நம்முடைய அன்பளிப்பாக எதையேனும் கொடுக்க வேண்டும் அல்லவா?

இறைவனுக்குக் கொடுக்க நம் இதயத்தை விட வேறு எப்பொருளும் இல்லை. அப்படிக் கொடுத்துவிட்டால், நம்முடைய மனம் இறைவனுக்குச் சொந்தமாகிவிடும் அல்லவா? அதனால், அம்மனதும் தூயதாகிவிடும் அல்லவா?

கட்டுப்படாததும், கண்டதை எல்லாம் நினைத்து அலைவதுமான மனம், இறைவனுக்கு மட்டுமே என்று அர்ப்பணிக்கப்பட்டுவிட்டால் (அதாவது, அம்மனதில் எப்போதும் இறைவனையே இருத்திக் கொள்ளுவதால்), நிச்சயமாக, மனம் தூய்மையுற்று, காமதேனுவாய்க் கற்பகமரமாய்ச் சிந்தாமணியாய் உயர்ந்து, நல்லன என நாம் விழைவனவெல்லாம் நடத்திக் கொடுக்கும் இறையருட் செல்வமாக மாறிவிடும் என்பதே இப்பாடலின் உட்பொருள். (27)

28 - நந்நிலையால் நின்னுருவை நயக்கும் அடி போற்றி!

सारूप्यं तव पूजने शिव महादेवेति संकीर्तने
सामीप्यं शिवभक्तिधुर्यजनतासांगत्यसंभाषणे |
सालोक्यं च चराचरात्मकतनुध्याने भवानीपते
सायुज्यं मम सिद्धमत्र भवति स्वामिन् कृतार्थोऽस्म्यहम् ||२८||

ஸாரூப்யம் தவ பூஜனே ஶிவ மஹாதே$_3$வேதி ஸங்கீர்தனே
ஸாமீப்யம் ஶிவப$_4$க்திது$_4$ர்யஜனதாஸாங்க$_3$த்யஸம்பா$_4$ஷணே |
ஸாலோக்யம் ச சராசராத்மகதனுத்$_4$யானே ப$_4$வானீபதே
ஸாயுஜ்யம் மம ஸித்$_3$த$_4$மத்ர ப$_4$வதி ஸ்வாமின்
க்ருதார்தோ$_2$(அ)ஸ்ம்யஹம் ||28||

தன்னனன தானனன தன்னனன தானனன
தன்னனன தானனன – தனதான

நின்னுருவ மாகுநிலை மன்னுமுயிர்ப் பூஜைமுறை
நின்னடியி லேகுவழி - நற்கீதம்
நேர்த்துசிவ தேவமஹா தேவனெனப் பாடுமறை
நூற்றுலகு சேருமிடம் - நற்போதம்
நின்னுலகு சேருவழி நன்னடியார் கூடமுரை
தன்னுளுனைக் காணுவழி - நற்தியானம்
மின்னுமசை யாமிசையில் நின்னையறி வாலிறையே
நந்நிலையை யானடைவேன் – உமைநாதா (28)

நின்னை பூஜிப்பதால் சிவனுருவான அடியாராகவும், ‘மஹாதேவ மஹாதேவ’ எனும் சிவநாம தியானத்தினால் நின்னடியினை அடைபவராகவும், சிவச் சிந்தனையிலேயே இருக்கும் அடியார்களின் கூட்டத்திலேயே இருந்து அவர்களுடன் உரையாடுவதால், சிவனருகிலே எப்பொழுதும் நிலைப்பவராகவும், அசையும் அசையாப் பொருட்களால் விளங்கும் அகிலங்களின் வடிவமாக உமது அகண்ட

திருமேனியினைத் தியானிப்பதாலேயே நினை அடைபவராகவும் ஆகிய எல்லாப் பயன்களையும் யான் இப்பிறவியிலேயே பெறுவதாகிறது. பவானியாகிய உமையின் நாதா, இறைவா, (நின்னருளால்) யான் அப்பெரும் பயனை அடைந்தவனாக ஆகின்றேன்.

குறிப்பு:

‘ஸாரூப்யம்’ என்பது சிவனடியார் வடிவாகிப் பெறும் சிவயோக முக்தி ஆகும். ‘ஸாமீப்யம்’ என்பது, சிவனடியினைப் பிடித்தடையும் முக்தி. ‘ஸாலோக்யம்’ என்பது, சிவனருகிலேயே நிலைக்கும் முக்தி. ‘ஸாயுஜ்யம்’ என்பது சிவனுடன் கலத்தலாகிய முக்தி.

இவை எல்லாம் அடைவதற்கு, மனிதப் பிறவி ஒன்றே வழி என்பதும், அதற்குத் தருமமும், ஞானமும் இயைந்த வாழ்வும், இறைவனிடத்து மாறாது நிலைக்கும் பேரன்பும் இருந்தால் போதும் என்றும், அப்படி இருப்பின், இறைவனே இந்த நான்கு வகையான முக்தியினையும் அளிப்பார் என்றும் இப்பாடல் காட்டி, மனித ஜன்மம் புனிதம் என்பது இதனால்தான் என அறிவுறுத்துகின்றது. (28)

29 - நெஞ்சாரப் பெருஞ்சுகத்தை நேர்க்கும் அடி போற்றி!

त्वत्पादाम्बुजमर्चयामि परमं त्वां चिन्तयाम्यन्वहं
त्वामीशं शरणं व्रजामि वचसा त्वामेव याचे विभो |
वीक्षां मे दिश चाक्षुषीं सकरुणां दिव्यैश्चिरं प्रार्थितां
शंभो लोकगुरो मदीयमनसः सौख्योपदेशं कुरु ||२९||

த்வத்பாதா₃ம்பு₃ஜமர்சயாமி பரமம் த்வாம் சிந்தயாம்யன்வஹம்
த்வாமீஶம் ஶரணம் வ்ரஜாமி வசஸா த்வாமேவ யாசே விபோ₄ |
வீக்ஷாம் மே தி₃ஶ சாக்ஷுஷீம் ஸகருணாம்
தி₃வ்யைஶ்சிரம் ப்ரார்தி₂தாம்
ஶம்போ₄ லோககு₃ரோ மதீ₃யமனஸ: ஸௌக்₂யோபதே₃ஶம் குரு
||29||

தனன தனனனன தனன தனனனன
தனன தனனனன – தனதான

நினது பதுமபதம் மனது பதியதினம்
நினைவு முனதுகதி - நிறைவேளே
நிலையு மிறையுனது சரணமென முனைந்து
நிரவி மொழியுந்துதி - புகல்வேனே
அமரர் தவமுகந்து யுகமுற் படவிரிந்து
அபய விழியருளுந் - தருவாயே
அமைதிப் பெருநிதிய முயரத் தகுமதியும்
அருள்க ஜகத்குருவே – சிவசம்போ (29)

நினது திருவடி மலரினை அர்ச்சிக்கிறேன். நிறைவான நின்னையே எப்பொழுதும் யான் நினைக்கிறேன். இறைவனாய் நின்னையே சரணடைகின்றேன். வாக்கினாலும் நின்னையே தொழுகின்றேன். சம்போ, அறிவொளி உடையவர்களால், பல காலமாக வேண்டடப்படுவதும், அருள் வீசுவதுமாகிய நினது விழியினை, என்பால் திருப்புவாயாக! உலகோரின் குருவே,

எனது அறிவுக்கும், மனதுக்கும், நிறைவை அளிக்கும் ஞானத்தை உபதேசம் செய்யுங்கள்.

குறிப்பு:

இறைவனே நமக்கு ஆசானாக இருந்து நமக்குப் பேரறிவினைத் தரவேண்டும். அப்பேரறிவு ஆழப் பதிய, அமரர்களும், ஆண்டாண்டு காலமாகத் தேடிவரும், ஆண்டவனின் அருட் பார்வையானது நம்மீது விழ வேண்டும். இறைவன் நம்மைப் பார்ப்பது என்பதன் பொருள், இறையருள் நமக்குக் கிடைப்பது என்பதே ஆகும்! எப்போதும் இறைவன் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதே உண்மை எனினும், நாம் இறைவனை ஒரு வடிவமாகத் தொழுது பார்க்கும் பொழுதுதான், இறைவன் நம்மைப் பார்க்க மாட்டாரா, நமக்கு அருள்தர மாட்டாரா எனும் ஏக்கங்கள் நமக்கு வரும். எனவே, இறைவன் நம்மைப் பார்த்துக்கொண்டே இருக்கிறார் என்ற நந்நம்பிக்கை முதலில் நமக்கு வந்து விட்டால், நாமும் இறைவனைப் பார்க்கத் தொடங்கி விடுவோம்.

அவரை எங்கே என்று பார்ப்பது? முந்தைய பாடல்களில் காட்டியபடி, எல்லா உருவங்களிலும், உலகங்களிலும், இறையருளே இருப்பதாக முதலில் கண்டு, பிறகு எல்லாம் கடந்து நம் உள்ளத்தில் கடவுளாகவும் பார்க்க வேண்டும். தன்னுள்ளே பார்க்கத் துடிக்கும் நோக்கமும், நுண்ணுணர்வும் வந்து விட்டால், பளிச்சென இறைவன் வெளிச்சத்தைக் காட்டி, நமது பார்வையில் கோர்வையாகிக் கனிவான். அப்பேறு பெறுவதற்கு எப்போதும், இறைவனையே சிந்திப்பதும், திருவடிகளில் பணிந்து தொழுவதுமாக நாம் இருக்க வேண்டும். அதனையே தாம் செய்து வருவதாக, ஆதிசங்கரர் முதல் இரு வரிகளிலே உறுதிப் படுத்திக் கொள்கின்றார். பக்தியின் குழந்தைகளாக, ஞானமும் (கொள்ளுவன கொள்ளும் அறிவும்), வைராக்கியமும் (தள்ளுவன தள்ளும் திடமும்) கருதப்படுகின்றன. அக்குழந்தைகள் பிறக்கவும், திடமாக வளரவும், இறையருளின் துணை மிகவும் அவசியம். (29)

30 - ஆராதனை கடந்து ஆள்விப்பான் அடி போற்றி!

वस्त्रोद्धूतविधौ सहस्रकरता पुष्पार्चने विष्णुता
गन्धे गन्धवहात्मताऽन्नपचने बर्हिर्मुखाध्यक्षता |
पात्रे काञ्चनगर्भतास्ति मयि चेद् बालेन्दुचूडामणे
शुश्रूषां करवाणि ते पशुपते स्वामिन् त्रिलोकीगुरो ||३०||

வஸ்த்ரோத்3தூ4தவிதௌ4 ஸஹஸ்ரகரதா புஷ்பார்சனே விஷ்ணுதா
க3ந்தே4 க3ந்த4வஹாத்மதா(அ)ந்னபசனே ப3ர்ஹிர்முகா2த்4யக்ஷதா |
பாத்ரே காஞ்சனக3ர்ப4தாஸ்தி மயி சேத்3 பா3லேந்து3சூடா3மணே
ஶுஶ்ரூஷாம் கரவாணி தே பஶுபதே ஸ்வாமின் த்ரிலோகீகு3ரோ
||30||

தனதனன தானனன தனதனன தானனன
தனதனன தானனன – தனதான

கரவுகதி ராயிரமாய்ப் பரவுதுகிற் சூரியனாய்
கண்மலர்ப் பூஜைதரும் - கரிமாலாய்
கவியுமண மாய்வளியாய் அவியுவுண வாயொளியாய்க்
கண்டமரர் விண்டதிறம் - கையேகக்
கலனெவையு மாக்கபல வுலகையுரு வாக்குமயன்
கைவலிமை ஆகுமெனின் - மெய்யாகக்
கதியுநிறை துதிமுறையும் மதிசிரனே நிதியுறுவேன்
கலையுமூ வுலகினருட் - குருசீலா (30)

உனக்கு ஆடைகளை அணிவித்து ஆராதிக்க, ஆயிரம் கரங்களுடைய ஆதவனின் திறமும், உன்னை மலர்களால் தொழ, திருமாலின் மாதவமும், நறுமணப் பொருளைத் தந்து வரவேற்க வளியின் வளமும், உனக்கு உணவைப் படைத்து உபசரிக்க அக்கினி வடிவமான தேவர்களின் திறமையும், வழிபாட்டுக் கலன்களைப் படைக்க உலகைப் படைத்த பிரம்மனின் தன்மையும் (ஆகிய இத்திறமைகள்), என்னிடம் நிலைத்து

இருக்குமேயானால், உமது வழிபாட்டை யான் (சரியாகச்) செய்யக்கூடும், ஓ, இளம்பிறை தலையணிந்த, இறைவா, உயிர்களின் தலைவா!

குறிப்பு:

எங்கும் பரந்திருக்கும் பரம்பொருளுக்கு, படர்ந்திருக்கும் சூரிய ஒளியே தக்க ஆடையாகும் என்றால், அதனைத் தர எனக்கு எங்கே வலுவிருக்கிறது!

தனது கண்களையே மலர்களாகக் கொடுத்து அர்ச்சித்த, மாதவனைப் போன்ற தவம் எனக்கு எங்கே இருக்கிறது! வளியைப் போன்ற பரவும் திறன் இருந்தால் அல்லவா, நீ இருக்கும் இடமெல்லாம் சென்று, நறுமணம் காட்டி உன்னை வரவேற்க முடியும்! அறிவாகிய தீயினை முகமாகக் கொண்ட தேவர்கள், அத்தீயினால் சமைத்து அளித்த தூய ஞானமல்லவா நினது பிரசாதமாகப் படைக்கப்பட வேண்டும்!

வழிபாட்டுக்கு உதவும் கலன்கள் எல்லாம், உலகில் உள்ள எல்லா உடல்களும் என்றால், அவற்றைப் படைத்த பிரமனின் வலிமை அல்லவா, எனக்கு இருக்க வேண்டும்! இவை எல்லாம் என்னுள் இருந்தால், என்னாலும் உனக்குத் தக்க வழிப்பாட்டினைப் படைக்க முடியும்.

இப்படி ஆதி சங்கரர் கூறியிருப்பது, இத்திறமைகளுக்கெல்லாம் விளக்காக இருக்கின்ற மனதையும் அறிவையும், நாம் இறைவனுக்காக முற்றுமாய் அர்ப்பணிப்பதாலேயே அடங்கும் என்று முன்பு 27ம் பாடலில் கூறிய உண்மைக்குச் சான்று கூறுவதாகத் தோன்றுகிறது. (30)

31 - விடியும் வரம் தந்த விடகண்டன் அடி போற்றி!

नालं वा परमोपकारकमिदं त्वेकं पशूनां पते
पश्यन् कुक्षिगतान् चराचरगणान् बाह्यस्थितान् रक्षितुम् ।
सर्वामर्त्यपलायनौषधमतिज्वालाकरं भीकरं
निक्षिप्तं गरलं गले न गिलितं नोद्गीर्णमेव त्वया ॥३१॥

நாலம் வா பரமோபகாரகமித3ம் த்வேகம் பஶூனாம் பதே
பஶ்யன் குக்ஷிக3தான் சராசரக3ணான் பா3ஹ்யஸ்தி2தான் ரக்ஷிதும் |
ஸர்வாமர்த்யபலாயனௌஷத4மதிஜ்வாலாகரம் பீ4கரம்
நிக்ஷிப்தம் க3ரலம் க3லே ந கி3லிதம் நோத்3கீ3ர்ணமேவ த்வயா ||31||

தனனனன தானனன தனனனன தானனன
தனனனன தானனன – தனதான

வயிரிலசை யாயசையும் உயிருலக மாமிசையும்
வதியுவெளி யாதுமிடர் - அடையாமல்
உயிருலக மாயுலவ உண்டுவுமி ழாமலுனுள்
எரியுவிட மானகொடு - எழுதீயை
பயமுமதி பீதிபட அயனுமம ராதிதடம்
பதியப்பதி யாதுவெகு - தொலைவோட
தயவுமருந் தாயிளகி உயருங்கழுத் தாலிறுகி
பயனுமது போலெதுவோ - பசுநாதா (31)

போதாதோ இப்பெரும் உதவி, உயிர்களின் அரசே, உமது வயிற்றுள்ளே இருக்கும் அசையும் அசையா உலகங்களையும், உம்மால் படைக்கப்பட்ட வெளி உலகங்களையும், அழிவிலிருந்து காக்க வேண்டும் என்ற நோக்கத்தினாலாயே, கடுமையான தீயினால் வளர்வதும், அச்சத்தைக் கொடுப்பதும், எல்லாத் தேவர்களையும் ஓடச் செய்வதும், எல்லா நோய்க்கும் மருந்துமாயும் ஆன, (ஆலகாலம் எனும்) விஷம், உம்மால், உமது

கழுத்திலேயே, வெளியில் உமிழப்படாமலும், உள்ளே உண்ணப்படாமலும் நிறுத்தப்பட்டது!

குறிப்பு:

தேவரும், அசுரரும் பாற்கடலைக் கடைந்த போது, கிடைத்த சுகப் பொருட்களை எல்லாம் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு பகிர்ந்து கொண்டனராம். ஆனால், அங்கே ஆலகால விஷம் எழுந்த போது, அனைவரும் அஞ்சி ஓட, சிவபெருமான், எல்லா உயிர்ளையும் பொருட்களையும் காக்கும் கருணையால், அக்கொடிய விஷத்தை எடுத்து விழுங்கிட, அதனைப் பார்த்த அன்னை உமை அஞ்சிப் பிரார்த்திக்க, சிவபெருமான் அக்கொடிய விடத்தைக் கழுத்திலேயே வைத்து, உலகங்களை எல்லாம் காத்தாராம்.

இப்பாடலில் 'ஔஷதம்' அதாவது எல்லா நோய்க்கும் மருந்து என்றும் அவ்விஷம் காட்டப்பட்டிருப்பதால், வேறொரு உண்மையும் சுட்டிக் காட்டப்படுகிறது.

ஆலகால விஷம் என்பது, சிவஞானமாகிய பேரறிவு. வேறுபாடுகள் இல்லாத, அத்வைதமான பேரறிவுத் தீ அது. அவ்வறிவினைக் கைக்கொள்வது எளிதல்ல. அவ்வறிவினால், 'நான்' என வேறுபட்டிருக்கும் எல்லா உயிர்களும், அவ்வாணவத்தை இழந்து, பரம்பொருளுடன் ஒன்றாகிவிடும். அப்புறம் அங்கே, முதலும் முடிவுமான ஆனந்தம் ஒன்றே இருக்கும். அப்புறம், உலகங்கள் ஏது, உயிர்கள் ஏது, உலகங்களையும் உயிர்களையும் பரமாரிக்கும் தெய்வங்களும், தேவர்களும் ஏது! எல்லாம் 'தான்' எனும் தன்மையற்று, சிவமாகிய உண்மைக்குள் உறைந்து விடும். அதனாலேயே எல்லாத் தெய்வங்களும் அஞ்சி ஓடினர்.

பரம்பொருளை சாக்ஷியாகக் கொண்டு, லலிதா எனும் பெயருடன் உலகங்களையும், உயிர்களையும் படைத்து விளையாடிக் கொண்டிருக்கும், பரம்பொருளின் சக்தியாக உமை, தனது திருவிளையாடலும் நின்று விடுமோ எனும் அச்சத்தில், விடத்தை, சிவபிரானின் கண்டத்திலேயே நிற்கப் பிரார்த்தித்து அப்படியே நடந்தது என்பது புராணக் கூற்று.

வடமொழிச் சொல்லான 'ஸ்ரீ' என்பதற்குப் பல பொருட்கள் இருக்கின்றன. 'திருமிகு' எனும் பொருள் ஒன்று. இதை நாம் மாலக்ஷ்மியைக் குறிக்கவும், மாண்புடையவர்களைக் குறிக்கவும் பயன்படுத்துகிறோம். 'விஷம்' என்பதும் ஒரு பொருள். சிவனுக்கு ஸ்ரீகண்டன் எனும் பெயர் விடமுடைய கழுத்துடையவன் என்பதே. 'மாயை' அல்லது 'அவித்தை' என்பதும் ஒரு பொருள். அதே சமயம், 'பிரம்மஞானம்' என்பதும் பொருள். ஸ்ரீஹரி அல்லது ஸ்ரீஹரன் என்றால், மாயையை அறுப்பவன் எனவும், பிரம்மஞானத்தைக் கொடுப்பவன் எனவும் பொருள்படும். இங்கே விஷமான ஆலகாலத்தை அதனாலேயே, மாயை அழிக்கும் மருந்தாகவும் காட்டப்பட்டது.

இப்பாடலில், சிவபிரானின் வயிற்றுக்குள் இருக்கும் அசையா, அசையும் உடல்கள், 'குக்ஷிகதான் சர அசர கணான்' என்றும், வெளியில் இருப்பவை எல்லாம் 'பாஹ்யஸ்த்திதான்' என்றும் காட்டியிருப்பதை, நாம் எப்படிப் பொருள் கொள்வது? எல்லா உலகங்களையும் தன்னுள் கொண்டிருப்பவர் பரம்பொருள் என்றால், அவருக்கு வெளியில் இருக்கும் வேறு உலகங்களும், உயிர்களும் எப்படி இருக்க முடியும்?

எனவே, தன்னுள் இருப்பவை என்பதற்கு, அவரால் இனிமேலும் படைக்கப்படக் காத்திருக்கும் காலமும், தேசமும், உயிர்களும், உலகங்களும் என்றும், தனக்கு வெளியில் இருப்பவை என்பதற்கு, ஏற்கனவே படைக்கப்பட்ட காலம், தேசம், உயிர்கள், உலகங்கள் என்றும் பொருள் கொள்வது பொருத்தமாகத் தோன்றுகின்றது. அதனாலேயே, அவ்விதமே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. (31)

32 - திருநீல கண்டத் தெய்வம் அடி போற்றி!

ज्वालोग्रः सकलामरातिभयदः क्ष्वेलः कथं वा त्वया
दृष्टः किं च करे धृतः करतले किं पक्वजंबूफलम् |
जिह्वायां निहितश्च सिद्धघुटिका वा कण्ठदेशे भृतः
किं ते नीलमणिर्विभूषणमयं शंभो महात्मन् वद ||३२||

ஜ்வாலோக்3ர: ஸகலாமராதிப4யத3: க்ஷ்வேல: கத2ம் வா த்வயா
த்3ருஷ்ட: கிம் ச கரே த்4ருத: கரதலே கிம் பக்வஜம்பூ3ப2லம் |
ஜிஹ்வாயாம் நிஹிதஸ்ச ஸித்3த4கு4டிகா வா கண்ட2தே3ஸே ப்4ருத:
கிம் தே நீலமணிர்விபூ4ஷணமயம் ஸம்போ4 மஹாத்மன் வத3 ||32||

தானனன தானனன தானனன தானனன
தானனன தானனன – தனதான

தீயதுவாய் ஆனதம ரானர்மரு ளாவதென
ஆனவிடங் காணுதகை – எதனாலே
ஒயவது வேயுறைய சேருகைய தேயடைய
சாருங்கரு நாவலதோ – எவ்வாறு
நாவிலது வேயுறவே நோவருகும் மூலிகையோ
நட்டகழுத் திட்டமணி - நந்நீலம்
யாவுமறி வேபரம ஆன்மநிலையே தருக
மூவுநிலையே மொழிக - சிவசம்போ! (32)

தீயாய்க் கொழுந்து விட்டெரிவதும், எல்லாத் தேவர்களுக்கும் அச்சத்தைக் கொடுப்பதும் ஆகிய (ஆலகாலமாகிய) விஷம், எப்படித்தான் உம்மால் பார்க்கப்பட்டதோ! மேலும் கையில் அது அப்படித்தான் ஏற்கப்பட்டதோ! உள்ளங்கையில் வைக்கப்பட்டதே, அது என்ன கருநாவல் பழமா என்ன, உமது நாக்கில் வைக்கப்பட்டதே, அது என்ன, சித்த மருந்தா! கழுத்திலே நிறுத்தப்பட்டதே, அது என்ன நீலமணி கோர்த்த அணிகலனா என்ன! ஓ, பரமாத்மனே, சொல்லுக!

குறிப்பு:

யாராலும் எடுக்கவோ, அடக்கவோ, ஏற்கவோ, சேர்க்கவோ முடியாத ஒன்றை, பரமாத்மனாகிய இறைவனே ஆளமுடியும். அத்தகைய பொருள் இங்கே, ஆலகால விஷமாகக் காட்டப்படுகின்றது.

31ம் பாடல் குறிப்பின்படி, அவ்விஷம், 'ஈரல்ல' என எல்லாவற்றையும் ஒன்றாக்கி விடுகின்ற அத்வைதமாகிய பேரறிவுப் பெருந்தீ! அதுவே அறியாமை எனும் வியாதியினை அழிக்கின்ற பெருவிஷம்.

அதனை முற்றும் தெளியப் பார்க்கும் பார்வையும், அதனை மிக எளிதாக ஏற்கும் திறமையும், அப்பேரறிவே நோயறுக்கும் மருந்து என மாற்றும் வலிமையும், அம்மருந்து தேடி வருவோர்க்கு மட்டுமே கொடுக்கப்படவேண்டும் என்பதால், அதனைக் கழுத்திலே அணிந்திருக்கும் நல்லிரக்கமும் – இவை எல்லாமுமே இறைவனின் கருணை என்பதனையே இப்பாடல் உணர்த்துகின்றது. (32)

33 - எளியோர் நற்பணிவை ஏற்கும் அடி போற்றி!

नालं वा सकृदेव देव भवतः सेवा नतिर्वा नुतिः
पूजा वा स्मरणं कथाश्रवणमप्यालोकनं मादृशाम् |
स्वामिन्नस्थिरदेवतानुसरणायासेन किं लभ्यते
का वा मुक्तिरितः कुतो भवति चेत् किं प्रार्थनीयं तदा ||३३||

நாலம் வா ஸக்ருதே$_3$வ தே$_3$வ ப$_4$வத: ஸேவா நதிர்வா நுதி:
பூஜா வா ஸ்மரணம் கதா$_2$ம்ரவணமப்யாலோகனம் மாத்$_3$ருமாம் |
ஸ்வாமின்னஸ்தி$_2$ரதே$_3$வதானுஸரணாயாஸேன கிம் லப்$_4$யதே
கா வா முக்திரித: குதோ ப$_4$வதி சேத் கிம் ப்ரார்த$_2$னீயம் ததா$_3$ ||33||

தன்ன தனனான தன்ன தனனான
தன்ன தனனான – தனதான

தொண்டு சிவனாரைக் கண்டுபணி பூண்டு
நன்று சிவபூஜைத் - துதியாலே
நின்று சிவத்யானம் என்று சிவகாதை
மென்று நினைவூடு - மதியாலே
ஒன்று முறைபோதும் அன்று தளைபோகும்
என்று அறிவாகும் - அதனாலே
நன்று குறைவான தொன்றைப் பிறதேவர்
மன்றப் பயனேது - பெருமானே (33)

போதாதா இது, தேவதேவா, உமது தொண்டிலோ, உம்மிடத்தில் பணிவையோ, துதியையோ, பூஜையையோ, தியானத்தையோ, நினது கதைகளைக் கேட்பதையோ, நின்னுருவினை (மனக் கண்ணால்) பார்ப்பதையோ, ஒருமுறையேனும் நான் பெற்றவன் ஆனேன் எனில், இறைவா, அதுவன்றோ முக்தி! வேறு என்ன! இப்படியே முக்தி கிடைக்கும் என்றால், அப்புறம் வேறு எதனை வேண்டிப் பெறவேண்டியதாக உள்ளது? நிலையற்ற மற்ற பயனைத் தெய்வங்களிடம் கேட்டுப்

பெறுவதால், என்ன லாபம் வந்துவிடப் போகிறது! (ஒன்றுமில்லை!)

குறிப்பு:

மிகவும் எளிய வழியிலேயே இறைவனது கருணையை நாம் அடைய முடியும் என்றும், அலைந்து திரிந்து பூக்களைக் கொண்டு வருவதைவிட, தனது தெளிந்த மனமாகிய பூவை அளிப்பது நலம் என்றும் முன்பு காட்டிய பகவான் ஆதி சங்கரர், சிவப்பணியாகப் பொதுப்பணி செய்வதும், இறைவனை மனதிலே ஏற்றி இருப்பதால், ஒருமுறை செய்யும் நற்பூஜையினாலும், துதியினாலும், ஆழ்ந்து சிவபுராணங்களைக் கேட்பதினாலும், அத்தகைய எளிய பக்தியினாலுமே சிவபெருமானின் அருளால் ஆளப்பட்டு, முக்தி எனும் விடுதலை அடைய நம்மால் முடியும் என்று இப்பாடலில் காட்டுகின்றார்.

‘அஸ்த்திர-தேவதா-அனுஸரண-ஆயாஸேன-கிம்-லப்யதே’ எனத் தரப்பட்ட சொற்றொடருக்கு நிலையற்ற தெய்வங்களைத் திரும்பத் திரும்ப வணங்கி என்ன பயன் என்று பொதுவாகப் பொருள் கொள்ளப்படுகிறது. எனினும், நிலையற்ற பயன்களுக்காக, தெய்வங்களைத் திரும்பத் திரும்ப வணங்கி எதை அடையப் போகிறோம் என்றும் பொருள் கொள்ளலாம். அப்படித்தான் இங்கே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. (33)

34 - ஊழிப் பேராழி உண்டஒளித் தனி போற்றி!

किं ब्रूमस्तव साहसं पशुपते कस्यास्ति शंभो भव-
द्धैर्यं चेदृशमात्मनः स्थितिरियं चान्यैः कथं लभ्यते |
भ्रश्यद्देवगणं त्रसन्मुनिगणं नश्यत्प्रपञ्चं लयं
पश्यन्निर्भय एक एव विहरत्यानन्दसान्द्रो भवान् ||३४||

கிம் ப்$_3$ரூமஸ்தவ ஸாஹஸம் பஶுபதே கஸ்யாஸ்தி ஶம்போ$_4$ ப$_4$வ-
த்$_3$தை$_4$ர்யம் சேத்$_3$ருஶமாத்மன: ஸ்தி$_2$திரியம்
சான்யை: கத$_2$ம் லப்$_4$யதே |
ப்$_4$ரஶ்யத்$_3$தே$_3$வக$_3$ணம் த்ரஸன்முனிக$_3$ணம் நஶ்யத்ப்ரபஞ்சம் லயம்
பஶ்யன்னிர்ப$_4$ய ஏக ஏவ விஹரத்யானந்த$_3$ஸாந்த்$_3$ரோ ப$_4$வான் ||34||

தானனன தானனன தானனன தானனன
தானனன தானனன – தனதான

கூறரியாப் பெருவீரம் தீரனுன தருட்சீலம்
யாரடைவா ராறறிவார் - உயிர்நாதா
பேறடையு மான்மசிவத் தீர்வடைவ லானதவச்
சீரடைவ தாவரெவர் – சிவசம்போ!
தேறறியா தேவர்முனி யாரவரு மேவர்பிணி
ஆவருல காவுமழி - அதுபோது
நீரொருவ ராகமிகு நிர்மலமு மானநகைப்
பூவிளையு மாடல்திரு - புவனேசா (34)

என்னவெனச் சொல்வது நினது திருவிளையாடலை, உயிர்களின் அரசே! இத்தகைய நினது துணிவு வேறு யாருக்கு இருக்கிறது! இப்படிப்பட்ட ஒருமைப்பட்ட ஆன்மநிலையை வேறு யாரால் அடைய முடியும்! தேவர்கள் குழப்பமடையவும், முனிவர்கள் அஞ்சவும், அண்டங்கள் எல்லாம் அழியவும் நடக்கின்ற (ஊழிக்காலச்) செயலை, அச்சமற்றுப் பார்த்துக்

கொண்டு, ஆனந்த நிலையில், திருவிளையாடல் புரிந்து கொண்டு தனித்து இருப்பவர் தாங்கள்!

குறிப்பு:

அழிவு என்பது துயரமில்லை. அது ஆக்கத்தின் வித்து. தன்னிடமிருந்து பிரிந்தாற் போலச் சென்று பல உடல்களாக, உயிர்களாக விளங்கும் ஆன்மசக்தியை, மீண்டும் தன்னுளே சேர்த்துக் கொள்ளும் பெரும் கருணையே ஊழிப் பேராழியாகிய பெரும் அழிவு. அனைத்தும் அச்சமயத்தில் வேறுபாடுகளற்றுப் போகின்றன. எல்லா வேற்றுமைகளையும் தன்னுளே ஏற்று, இரண்டல்ல எனக்காட்டும் பரம்பொருள் மட்டுமே, அவ்வரிய ஆனந்தத்தை சுகித்தபடி, தனித்து நிற்கிறது. அச்சுகத்தின் துளியை, ஜீவர்களாகிய நாமும் சுவைத்தனுபவிக்க முடியும். அப்படி உணர்பவர்களே ஜீவன் முக்தர்கள், அவர்களில் தலையானவராகிய ஆதி சங்கரர், அப்பேறினை நினைவுபடுத்தவே, இப்பாடலைத் தந்துள்ளார் எனத் தோன்றுகிறது.

ஆழ்துயில் என்பதும் ஒரு அழிவுதான். இதனை மறை 'நித்தியப் பிரளயம்' என்று அழைக்கிறது. ஆழ்துயிலில் மனதை இழந்து, அதனால் கட்டும் காலமும், தேசமும் கடந்து, துயரங்களின்றி, சொல்ல முடியாத சுகத்தினில், எல்லா உயிர்களும் இருக்கின்றன. அச்சுகம் மனதைத் தாண்டிய அனுபவம். அப்போது எந்த உலகங்களும், உயிர்களும் இல்லை. தானே தனியாய் இருக்கும் தந்நிறைவு நிலை என்பது நாம் வெளியிலிருந்து ஈட்டப்பட்டதுஅல்ல; அது நம்முடைய இயற்கை நிலை. ஆனால், ஆழ்துயிலின் அனுபவ சுகம், விழித்த பின்னரே நம்மால் அனுமானிக்கப்படுகிறதே ஒழிய, ஆழ்துயிலின் போதே நம்மால் உணரப்படுவதில்லை. ஏனெனில், ஆழ்துயிலில் அவித்தை எனும் அறியாமைப் போர்வை மூடிக் கிடக்கிறது. அதனை ஞானத்தினால் விலக்கி விட்டால், ஆழ்துயிலை விடச் சுகமான சமாதிநிலை எனும் தன்னை அறிந்து துயில்கின்ற ஆனந்த நிலை, நமக்குள் எப்போதும் இருக்கும். அந்நிலை 'ஆன்மாவே தான்' என்ற தகைமை நிறைந்த தந்நிறைவு நிலை. (34)

35 - உள்ளத்துள் உள்ளுயிர்த்து உள்ளான் அடி போற்றி!

योगक्षेमधुरंधरस्य सकलश्रेयःप्रदोद्योगिनो
दृष्टादृष्टमतोपदेशकृतिनो बाह्यान्तरव्यापिनः |
सर्वज्ञस्य दयाकरस्य भवतः किं वेदितव्यं मया
शंभो त्वं परमान्तरङ्ग इति मे चित्ते स्मराम्यन्वहम् ||३५||

யோக$_3$க்ஷேமது$_4$ரந்த$_4$ரஸ்ய ஸகலஶ்ரேய:ப்ரதோ$_3$த்$_3$யோகி$_3$னோ
த்$_3$ருஷ்டாத்$_3$ருஷ்டமதோபதே$_3$ஶக்ருதினோ
பா$_3$ஹ்யாந்தரவ்யாபின: |
ஸர்வஜ்ஞஸ்ய த$_3$யாகரஸ்ய ப$_4$வத: கிம் வேதி$_3$தவ்யம் மயா
ஶம்போ$_4$ த்வம் பரமாந்தரங்க$_3$ இதி மே
சித்தே ஸ்மராம்யன்வஹம் ||35||

தானன தானனதன்ன தானன தானனதன்ன
தானன தானனதன்ன – தனதான

காப்பவ ராகவுமின்னல் தீர்ப்பவ ராகவுகன்னல்
சேர்ப்பவ ராகவுமின்னும் - ஜெயமாக
நூற்பவ ராகிடக்கண்கள் நுழைபட தாயினநன்மை
வார்ப்பவ ராவெளியுள்ளும் - வழிகாட்டி
யாப்புல னாகியநன்மை வாய்ப்பவ னாகிடுமுண்மை
நேர்த்தனை யானினியென்ன - விழைவேனே
பூப்புல மேயெனதுள்ளம் காத்துறவே யெனஎண்ணம்
கோர்த்தறி வேனினிதிண்ணம் – குருவாக! (35)

ஈட்டுவதும், காப்பதுமான செயல்களுக்கு ஆதாரமாகவும், எல்லாவித உயர் நன்மைகளை அளிக்கின்றவராகவும், காணுமுலகிலும், காணா உலகிலும் நந்நிலை அடையும் வழியினைக் காட்டுபவராக, உள்ளும் புறமும் நிறைந்திருப்பவராகவும், எல்லாம் அறிந்தவராயும், அருள் தருபவராயும் விளங்கும் தங்களிடம், யான் எதனை வேண்டும்

எனக் கேட்பது? சம்போ, எனக்குள்ளே மிகவும் நெருக்கமாய் இருப்பவர் தாங்களே என எப்போதும் என் மனதிலெண்ணிக் கொண்டிருக்கிறேன்.

குறிப்பு:

ஒன்றை விழையும்போது, எது வேண்டும், எது நன்மை தருவது, எது நமக்குத் தக்கது என்று நம்மால் சரியாக உணர்ந்து கொள்ள முடிவதில்லை. ஒன்றை விரும்பச் செய்வது, நமக்குள் இருக்கும் இச்சா சக்தி எனும் விழையும் வலிமை. அச்சக்தி வளர வளர, நமது விருப்பங்களும், தேவைகளும் மாறும். நம்முடைய அறிவின் முதிர்ச்சியைப் பொறுத்தே, நம்முடைய ஆசைகளின் முதிர்ச்சியும் இருக்கும் அல்லவா? குழந்தைக்கு மிட்டாய் ஆசையானால், அதுவே வளர்ந்த இளைஞனாகும் பொழுது, மற்றொரு பொருளில் ஆசைப்படுகிறது. ஏனெனில், அது அறிவின் வளர்ச்சி.

அறிவின் சக்தியே ஞான சக்தி எனப்படும். எனவே ஞான சக்தி வளர வளர, இச்சா சக்தி வளரும். முயற்சியுடையவர்கள், அவ்வாறான இச்சையினால் செய்யும் செயலுக்குத் தேவை, ஆக்கும் திறமை. இதுவே கிரியா சக்தி எனப்படும்.

எனவே சரியான ஒன்று வேண்டும் என்று இறைவனிடம் கேட்க வேண்டும் என்றால், நமக்குச் சரியான அளவு ஞானசக்தி வளர்ந்திருக்க வேண்டும். அது நமக்கு இருக்கிறதா எனும் உறுதி இல்லாத காரணத்தால், நாமாக ஒன்றைக் கேட்பதை விட, இறைவனிடமே அப்பொறுப்பை விட்டு விட்டால், நமக்கு வேண்டிக் கொள்ள வேண்டிய பளுவும் கூட இல்லாமல் நமது வாழ்க்கை எளிதாகிவிடும்.

எப்படி அம்மா, தனது குழந்தைக்கு எது தேவையோ அதனை அவ்வப்போது கொடுத்துக் கவனித்து வருவாரோ, அப்படியே, இறைவன் நாம் கேட்காமலேயே தக்கன தக்க சமயத்தில் அளித்துக் காப்பது உறுதி. இதுவே இப்பாடலின் உட்கரு. (35)

36 - ஆலயம் ஆகுமுடல் ஆள்விப்பான் அடி போற்றி!

भक्तो भक्तिगुणावृते मुदमृतापूर्णे प्रसन्ने मनः
कुम्भे साम्ब तवाङ्घ्रिपल्लवयुगं संस्थाप्य संवित्फलम् |
सत्वं मन्त्रमुदीरयन्निजशरीरागारशुद्धिं वहन्
पुण्याहं प्रकटीकरोमि रुचिरं कल्याणमापादयन् ||३६||

ப₄க்தோ ப₄க்திகு₃ணாவ்ருதே முத₃ம்ருதாபூர்ணே ப்ரஸன்னே மன:
கும்பே₄ ஸாம்ப₃ தவாங்க்₄ரிபல்லவயுக₃ம்
ஸம்ஸ்தா₂ப்ய ஸம்வித்ப₂லம் |
ஸத்வம் மந்த்ரமுதீ₃ரயன்னிஜஶரீராகா₃ரஶுத்₃தி₄ம் வஹன்
புண்யாஹம் ப்ரகடீகரோமி ருசிரம் கல்யாணமாபாத₃யன் ||36||

தன்னனன தானனன தன்னனன தானனன
தன்னனன தானனன – தனதான

பக்தியிழை நூலையுற்று சுத்தநிறை நீரையுற்று
தத்துமொளி யாகவுற்று - மனமான
குத்துவிளக் கானகுடம் அத்துவித மானபதம்
மெத்தப்பதி மாவிலைநல் - மதியாக
நட்டசுபத் தேங்கனியும் நற்குணத்தி லேவிளையும்
நத்திருவின் நாமஜபம் - நயமாக
தொட்டுவுடற் தூய்மையுற இட்டவுமை யாள்சிவனே
வட்டிலுனை யேவருடி – வரவேற்பேன்! (36)

பக்தியாகிய நூலினால் சுற்றப்பட்டும், நிறைவு எனும் நந்நீரினால் நிரப்பப்பட்டும், ஒளி மிக்கதாயும் விளங்கும் எனது மனமாகிய குடத்தில், உமது திருவடிகளாகிய மாவிலைகளைப் பதித்து, மேன்மையான ஞானமாகிய தேங்காயை வைத்து, சிறப்பான மந்திரமாக நற்குணங்களைத் தியானித்து, மெய்யாகும்படியாக எனது மெய்யினைச் சுத்தப்படுத்த, மனதில்

நல்ல மகிழ்ச்சியைத் தேடுபவனாக, (என்னுடலாகிய நினது கோவிலுக்கு) நந்நீராட்டு வரவேற்பினைச் செய்கின்றேன்.

குறிப்பு:

வீட்டினைச் சுத்திகரிக்கச் செய்கின்ற புண்யாஹவாசனம் போன்றதே, உடலாகிய ஆலயத்தைச் சுத்தம் செய்து, அங்கே ஆன்மாவாய் விளங்கும் பரம்பொருளை ஆராதித்தல் எனும் பெரும் தவம்.

தன்னுள் விளங்கும் தகைமையே கடவுள் எனும் அறிவும், உணர்வும் வந்தாலே, தன்னுடைய வல்லுடல், மெல்லுடல், காரண உடல் என இம்மூன்றும் சுத்தப்படும். அதனால் சத்தியப் பெரு ஒளி உள்ளே துலங்குதல் தெளியும்.

இறைச் சிந்தனையாலும், இறைவன் நாம ஜபத்தினாலும், மனம், மதி, வாக்கு, மூச்சு, செயல் என எல்லாமே சுத்திகரிக்கப்படுகின்றன. இறைவன் இருக்கும் ஆலயமே உடல் என்பது உணரப்படுவதால், நல்லுணவும், நற்பயிற்சியும் வல்லுடலைப் புதுப்பிக்கும். நற்குணமும், நல்லமைதியும் மெல்லுடலைப் புதுப்பிக்கும். நற்சிந்தனையும், நல்லறிவும் காரண உடலை நல்வினைகளால் புதுப்பிக்கும். அதனால் உடலானது ஆன்மா லயிக்கின்ற ஆலயமாக ஒளிர்விடும்.

இதுவே இப்பாடலின் உட்கரு. (36)

37 - கடைந்தடையும் பேரமுதக் கற்பகத் தரு போற்றி !

आम्नायाम्बुधिमादरेण सुमनस्संघाः समुद्यन्मनो
मन्थानं दृढभक्तिरज्जुसहितं कृत्वा मथित्वा ततः |
सोमं कल्पतरुं सुपर्वसुरभिं चिन्तामणिं धीमतां
नित्यानन्दसुधां निरन्तररमासौभाग्यमातन्वते ||३७||

ஆம்னாயாம்பு$_3$தி$_4$மாத$_3$ரேண ஸுமனஸ்ஸங்கா$_4$: ஸமுத்$_3$யன்மனோ
மந்தா$_2$னம் த்$_3$ருட$_4$ப$_4$க்திரஜ்ஜுஸஹிதம் க்ருத்வா மதி$_2$த்வா தத: |
ஸோமம் கல்பதரும் ஸுபர்வஸுரபி$_4$ம் சிந்தாமணிம் தீ$_4$மதாம்
நித்யானந்த$_3$ஸுதா$_4$ம் நிரந்தரரமாஸௌபா$_4$க்$_3$யமாதன்வதே ||37||

தனனனன தானனன தனனனன தானனன
தனனனன தானனன – தனதான

தெளியமன தோருறுதி வலியகயி றாகமதி
முனியுமன மேகருவி - மத்தாகி
உரியகுண மோடுமறை அரியகட லாழிகடைந்
துகளதரு தேனுமணிப் - பெரும்போகம்
அருளவுமை யோடுதவப் பொருளபய ஞானசுகம்
தருவதரு வானசிவ - பரமேசா
அரியபர மானநிதி விரியபிற வாதகதி
அருளபய மானதிரு -அடைவாரே (37)

தெளிவான மனமுடையவர்கள், உறுதியான மதி எனும் கயிறும், நந்முயற்சியும் கொண்டிலங்கும் மனதை, கடைகின்ற மத்தாகப் பயன்படுத்தி, வேதமாகிய கடலை, திண்ணமுடன் கடைந்து, அதிலிருந்து உமையுடன் இருப்பவராய், கற்பக மரம், காமதேனு, சிந்தாமணி போல, வேண்டுவன அளிக்கின்றவராய், ஞானிகளுக்குள் விளங்கும் பெரும் சுக நிலையாய், நிலையான முக்தியெனும் செல்வமாய் விளங்கும் பரம்பொருளை அடைகின்றனர்.

குறிப்பு:

தெளிவான மனம் என்பது, காமம், குரோதம், லோபம் முதலான தீக்குணங்கள் அற்று, உயற்குணங்கள் விளங்க இருக்கும் நிலை. இதற்குக் கர்ம யோகம் என்பதே வழி. அதாவது, தனக்கெனப் பயன் எனும் எதிர்பார்ப்பு இல்லாமல், தர்மப்படி தமக்கான கடமையை மட்டும், இறைவழிபாடாகச் செய்து வாழ்தல். அவ்வாறு செய்வதன் பலனாகக் கிடைக்கும் தெளிவுடைய மனத்தினை, நாம் திடமான புத்தியினால் மேலும் பலப்படுத்த வேண்டும். இதற்கு மனதிலும், புத்தியிலும் ஒருநிலைக் கோட்பாடு ஏற்படுத்துவது தேவை. அதற்கு உதவத்தான் பக்தி யோகம், தியான யோகம் என நம்மை உயர்த்துவதற்கான படிகள் இருக்கின்றன. அப்படிகளில் ஏறி, அதனால் தெளிந்த மனமும், திடமான புத்தியும் அடைந்தவர்களாக இருப்பவர்களுக்கு ஞான வேட்கை ஏற்படுவது நியதி.

அதன் பயனாக, அவர்கள் எப்போதும் தங்கள் மனதில், ஆன்ம அறிவாகிய வேத உண்மைகளை அலசி ஆய்ந்து வந்தால், அழியாத பரம்பொருளாகிய சிவபெருமான், உமையின் கூட்டோடு அருள் தருவது போலப் பேரறிவும், பரசிவ சுகப் பெரு வெள்ளமும் தங்களுக்குளே விளைவதை உணர்வர். தருமத்தால் கடந்து வந்த வாழ்க்கைப் பாதை, இவ்வாறு ஞானத்தால் அலங்கரிக்கப்பட்டு, நம்மை சிவானந்த வெள்ளத்தில் நனைத்து முக்தி எனும் விடுதலையை நோக்கி நடத்திச் செல்லும். இவ்வரிய கருத்தே, இப்பாடலில் விளங்கும் கரு. (37)

38 - முழுமதியாய் மனமுகிழ்த்த மூதோன் அடி போற்றி!

प्राक्पुण्याचलमार्गदर्शितसुधामूर्तिःप्रसन्नः शिवः
सोमः सद्गुणसेवितो मृगधरः पूर्णस्तमोमोचकः .
चेतः पुष्करलक्षितो भवति चेदानन्दपाथोनिधिः
प्रागल्भ्येन विजृम्भते सुमनसां वृत्तिस्तदा जायते ||३८||

ப்ராக்புண்யாசலமார்க3த3ர்ஶிதஸுதா4மூர்தி:ப்ரஸன்ன: ஶிவ:
ஸோம: ஸத்3கு3ணஸேவிதோ ம்ருக3த4ர: பூர்ணஸ்தமோமோசக: .
சேத: புஷ்கரலக்ஷிதோ ப4வதி சேதா3னந்த3பாதோ2னிதி4:
ப்ராக3ல்ப்4யேன விஜ்ரும்ப4தே ஸுமனஸாம்
வ்ருத்திஸ்ததா3 ஜாயதே ||38||

ப்ராக் = முந்தைய (கிழக்கு); புண்யாசலமார்க3 = நல்வினை (புனிதமான) மலை வழியாக; த3ர்ஶித = காணப்பட்ட; ஸுதா4மூர்தி: = இனிய வடிவினராக; ப்ரஸன்ன: = தெளிவான; ஶிவ: = நந்நிலை தருபவர்;

ஸோம := உமைபாகன் (சந்திரன்); ஸத்3கு3ணஸேவித: = நற்குணங்கள் சுற்றித் தொழ (விண்மீன்கள் சூழ) ம்ருக3த4ர:= மானை ஏந்தியவர் (மானுருவை தன்னுள் கொண்ட); பூர்ண: = முழுநிறைவான; தமோ மோசக: = அறியாமை அழிப்பவர் (இருளை அழிப்பவர்);

சேதபுஷ்கரலக்ஷி :த: = மதி எனும் வெளியில் விளைபவர் (ஆகாய வெளியில் விளைபவர்); ப4வதி சேத் = அப்படியானவர் என்றால்; ததா3 = அப்போது, ஆனந்த3பாதோ2நிதி4: = மகிழ்ச்சிக் கடலாகிய நிதி;

ப்ராக3ல்ப்4யேன = மிகவும் எழிலாக; விஜ்ரும்ப4தே = பொங்குகிறதே; ஸுமனஸாம் = நல்ல மனமுடையாருக்கு;

வ்ருத்திஸ்ததா₃ = முன்னேற்றம் (மலர்ச்சி)அதனால்; ஜாயதே= உண்டாகும்.

(சிவனுக்கும் சந்திரனுக்கும் சிலேடை)

தானனன தானனன தானனன தானனன
தானனன தானனன – தனதான

மேலினெதி ரானதிசை யூழுமறி யாதமலை
யாகுமத னாலினிய - வடிவாகி
தீதுகளை வோரிணைய மாதுவுமை யானுகர
மானினுரு வாகியுரு - தெளிவாகி
சூழுமிருட் போர்வைகளை மூழுமதிப் பேரழகை
நீளும்வெளித் தேறலமுத - ஒளியாகிக்
காணுமுனி யோரின்மனங் காணுமகிழ் வாகுங்கடல்
காணும்யர் வாகிமலர் - மனமேயாம் (38)

மேலினெதி ரானதிசை = மேன்மைக்கு எதிரான திசை அதாவது பாவம் (மேற்கின் எதிர்ப்புரமான கிழக்கு); ஊழுமறி யாதமலை = அற்ற நல்வினையாகிய மலை ஆகும் (அறியப்படாது இருக்கும் மலை வழி); அதனால்; இனிய வடிவாகி;

தீதுகளை வோரிணைய = தீமை களைந்த நற்குணத்தார் சூழ (தீ துகள் = நெருப்புத் துண்டான விண்மீன்கள்); ஐவோரிணிய = ஆவோர் சூழ; மாதுவுமை யான் = அன்னை உமை உடையான் (பெண் எனும் உவமைக்குரியவன்); தெளிவாகி;

சூழுமிருட் போர்வைகளை = அறியாமை எனும் இருளைக் களைபவர் (சூழ்ந்திருக்கும் இருட்போர்வை நீக்கும்); மூழுமதிப் பேரழகை = முழுமையான அறிவின் எழிலை (முழுமையான நிலவின் அழகை); நீளும்வெளித் தேறல் = அகன்ற மனத்தின் விளக்காக (நீண்ட வானின் விளக்காக); அமுத ஒளியாகி;

காணுமுனி யோரின் = காணுகின்ற நல்மனம் முனைந்த மனிதரின் மனத்தில்; காணுமகிழ் வாகுங்கடல் = கடல்போல்

மகிழ்ச்சி காணும்; காணுமுயர்வாகி = உயர்வான நிலையாகில்; மலர் மனமேயாம் = மனம் மலர்ச்சி அடையும்;

மலையாய்க் குவித்த முன் செய்த நல்வினையின் பயனாக (கீழ்த்திசையில், புனித மலைகளின் வழியாக), இனியவடிவினராய் (இனியவடிவாக), தெளிவுடையவராய் (தெளிவானதாக), நந்நிலை தருபவராய் (மகிழ்ச்சி தருவதாக), அன்னை உமையுடன் கூடியவராகவும் (பெண்ணுக்கு உவமையானதாக), நற்குணமுடையார் சுற்றித் தொழ (விண்மீன்கள் சுற்றியிருக்க), கைகளில் மான் ஏந்தியவருமாக (தன்னுள்ளே மானைப் போன்ற நிழலைக் கொண்ட), முழுமைப் பொருளாக (முழுமதியாக), அறியாமை எனும் இருளை அகற்றுபவராக (இருளை அகற்றுவதாக), பரசிவன் நல்மனம் கொண்டாரின் மனமாகிய வெளியிலே தோன்றுவதால் (சந்திரன், வான வெளியில் மிகவும் எழிலாக வருவதால்), காண்பவர்களுக்குக் கடல் போல் மகிழ்ச்சி பொங்கும்; அதனால் நந்நிலை (மனமலர்ச்சி) கிடைக்கிறது.

குறிப்பு:

ஆன்ம ஒளி வீசுவதால், மனமானது சுகப்படுகிறது. ஆன்மாவே பரம்பொருளான பரசிவம். உதிக்கின்ற முழுமையான மதியினைப் போல, பரசிவம் குளிர்ச்சியான அருளொளியுடன் விளங்குகின்றது. அதனைக் காட்டவே, பூரண நிலவுக்கும், ஆன்ம ஒளிக்கும் ஒப்புமை காட்டப்பட்டது. (38)

धर्मो मे चतुरङ्घ्रिकः सुचरितः पापं विनाशं गतं
कामक्रोधमदादयो विगलिताः कालाः सुखाविष्कृताः।
ज्ञानानन्दमहौषधिः सुफलिता कैवल्यनाथे सदा
मान्ये मानसपुण्डरीकनगरे राजावतंसे स्थिते ॥३९॥

த₄ர்மோ மே சதுரங்க்₄ரிக: ஸுசரித: பாபம் விநாஶம் க₃தம்
காமக்ரோத₄மதா₃த₃யோ விக₃லிதா: காலா: ஸுகா₂விஷ்க்ருதா: |
ஜ்ஞானானந்த₃மஹௌஷதி₄: ஸுப₂லிதா கைவல்யநாதே₂ ஸதா₃
மான்யே மானஸபுண்ட₃ரீகநக₃ரே ராஜாவதம்ஸே ஸ்தி₂தே ||39||

தனன்னா தனனனன தனன்னா தனனனன
தனன்னா தனனனன – தனதான

மனத்தா மரைநகர முனைத்தாள் மறைபரம
பதித்தாள் அடைவரதி - பதியோனே
மனத்தாள் வதையறிய வினைத்தீ விதையவிய
அறத்தாள் அவைநிறுவி - அதியோக
குணத்தா லாசைகெடு சினத்தா னானசெறுக்
கறத்தாய்ந் தானகணம் - சுகமாக
வளத்தா லானபயிர் நலத்தால் ஞானமுயர்
வரத்தால் சீலமினி – வசமேயாம் (39)

மனமாகிய தாமரை மலர்ந்த நகரத்தில், அனைவராலும் வணங்கப்பட்டவரும், எல்லா அரசர்களுக்கெல்லாம் அரசராகவும், ஈரற்றதாக்கி விடுதலை தருகின்ற தலைவரும் ஆன பரம்பொருள் வீற்றிருப்பதால், நான்கு பாதங்களை உடைய தருமம் நன்கு வளர்க்கப்படுகிறது. பாவங்கள் நசிக்கப்படுகின்றன. ஆசை, சினம், ஆணவம் முதலானவை (அதனால்) விலகி விட்டன. நேரம் இனி எப்போதும்

இன்பத்தையே தருகின்றது. அதனால் ஞானம் எனும் நற்பயிர் வளர்ந்து நற்பயனை அளிக்கின்றது.

குறிப்பு:

தர்மமும், ஞானமும் காட்டும் பாதையில் இருப்போர்க்கு, மனதில் தெளிவும், அறிவில் உறுதியும் இருக்கிறது. அவ்வுறுதியினால், ஆன்மாவாம், உயிரின் உயிரான ஒளியே பரம்பொருள் என்பது நிச்சயப்படுகிறது. அதன் விளைவாக, எல்லாப் பொழுதும், எல்லாப் பொருளும் இறைமயமாகவே தெரிகின்றன. அதனால் துயரம் என எதுவும் இல்லை. எல்லாக் கெட்ட குணங்களும் மறைகின்றன. உள்ளும் வெளியும் எப்போதும் மகிழ்ச்சியே நிலவுகிறது. அதனால் மேன் மேலும் நமக்குள் ஆன்ம அறிவு வளர்ந்து, பெரும் சுகத்தை அளிக்கின்றது.

தர்மத்தின் நான்கு பாதங்களாக, தவம், தூய்மை, கருணை, உண்மை எனப் பேசப்படுகின்றன. தர்மம் இல்லாத வாழ்க்கையில், இப்பாதங்கள் ஒவ்வொன்றாகச் சிதைந்து மறைகின்றனவாம். (39)

40 - அல்லல் அறுக்கும் அரும்பயிர்நீர் வளம்போற்றி!

धीयन्त्रेण वचोघटेन कविताकुल्योपकुल्याक्रमै-
रानीतैश्च सदाशिवस्य चरिताम्भोराशिदिव्यामृतैः |
हृत्केदारयुताश्च भक्तिकलमाः साफल्यमातन्वते
दुर्भिक्षान् मम सेवकस्य भगवन् विश्वेश भीतिः कुतः ||४०||

தீ$_4$யந்த்ரேண வசோக$_4$டேன கவிதாகுல்யோபகுல்யாக்ரமை-
ராணீதைஶ்ச ஸதா$_3$ஶிவஸ்ய சரிதாம்போ$_4$ராஶிதி$_3$வ்யாம்ருதை: |
ஹ்ருத்கேதா$_3$ரயுதாஶ்ச ப$_4$க்திகலமா: ஸாப$_2$ல்யமாதன்வதே
து$_3$ர்பி$_4$க்ஷான் மம ஸேவகஸ்ய ப$_4$க$_3$வன் விஶ்வேஶ பீ$_4$தி: குத: ||40||

தன்னனன தனனனன தன்னனன தனனனன
தன்னனன தனனனன – தனதான

ஏற்றமதி ஊற்றிறைய சாற்றுகவி நூற்றிணைய
தேற்றமுத நீர்ப்பரவி - அதுவாக
கூற்றசிவ னூற்றவுமை ஏற்றபரப் பேற்றினருட்
தோற்றமதித் தேவயலில் – பயிராக
நாற்றுவர வேற்றுயர மாற்றுமன மேற்றிணைய
மூற்றுலக நாயகனே - முழுதாக
சோற்றுவள மேற்றுயர தூற்றுவறி தேற்றயர
ஆற்றுபய மேனெனக்கு - அணுகாதே (40)

மதியாகிய ஏற்றம் இறைத்துக் கொட்ட, கவிதை எனும் கால்வாய்களின் வழியாகப் பாயும் வெள்ளமாக வெளிப்படுத்தப்பட்ட சிவசக்தி வடிவான பரம்பொருளின் வரலாற்றுப் பெருமை எனும் அமிர்த நீர்ப் பரப்பினால், இதய வயலில், பக்திப் பயிர்கள் நன்றாகப் பயன் தர வளர்ந்துள்ளன.

பகவானே, உலகநாதனே, அதனால், உனது அடிமையான எனக்கு, வறுமையினால் பயம் என்பது எப்படி வரும்! (வராது!)

குறிப்பு:

அறம், பொருள், இன்பம், வீடு (தர்ம, அர்த்த, காம, மோக்ஷ) எனும் இவை நான்கும், மனித நந்நோக்கங்கள் (புருஷார்த்தம்) ஆகும்.

தர்மம் என்பது அர்த்தம், காமம் எனும் அகப் புறப் பொருட்களை அடையும் வழியினைக் காட்டுகின்றது. இதில் அர்த்த: எனும் அடிப்படைப் பொருள் வளம் இல்லை எனில், ஒருவரது வாழ்க்கை வறுமை வாட்டுவதாகிவிடும். அப்பொருள் புறப்பொருள் எனில் உடலால் ஏழ்மையும், அகப்பொருள் எனில் மனத்தினால் துயரமும் ஏற்படும்.

தர்மத்தின்படி நடந்து, தெளிவான மனமும் உறுதியான மதியும் கொண்டவர்கள், ஞானப் பாதையில் நாட்டமுடையவர்களாய், உலக வாழ்க்கையில் பண்பாளர்களாக, பழுதற வாழ்ந்து கொண்டே, சிவஞானமாகிய விடுதலைப் பேரின்பத்தை நாடிக் கொண்டிருப்பார்கள். எல்லாம் இறைமயம் எனும் உணர்வினில் இருப்பவர்களாக, அதனால், ஆசை எனும் கட்டில் அடைபடாதவர்களாக, அப்படி இருப்பதனால், இல்லாமை எனும் துயர் அற்றவர்களாக இருப்பார்கள்.

ஶிவானந்த₃லஹரீ எனும் சிவசுகப் பெருவெள்ளத்தில், ஞானப் பயிரை நனைத்து, தம்முள்ளேயே வளமுற வளர்த்திருந்தார்கள். அதனால் அவர்களை எவ்விதமான வறுமையும் (பொருளாலும், மனதாலும்) வாட்டாது. இதுவே இப்பாடலின் உட்கரு. (40)

41 - கரணம் கட்டுவித்துக் காக்கும் அருள் போற்றி!

पापोत्पातविमोचनाय रुचिरैश्वर्याय मृत्युंजय
स्तोत्रध्याननतिप्रदक्षिणसपर्यालोकनाकर्णने |
जिह्वाचित्तशिरोङ्घ्रिहस्तनयनश्रोत्रैरहं प्रार्थितो
मामाज्ञापय तन्निरूपय मुहुर्मामेव मा मेऽवचः ||४१||

பாபோத்பாதவிமோசனாய ருசிரைஸ்வர்யாய ம்ருத்யுஞ்ஜய
ஸ்தோத்ரத்$_4$யானனதிப்ரத$_3$க்ஷிணஸபர்யாலோகனாகர்ணனே |
ஜிஹ்வாசித்தஶிரோங்க்$_4$ரிஹஸ்தனயன
ஶ்ரோத்ரைரஹம் ப்ரார்தி$_2$தோ
மாமாஜ்ஞாபய தன்னிரூபய முஹுர்மாமேவ மா மே(அ)வச: ||41||

தான தனனான தான தனனான
தான தனனான – தனதான

கால அதிகாரா பாவ அவமான
கோல வலைஓயத் - தளைநீங்கி
ஓத சிவத்யான பாத வலம்பூஜை
காண செவித்தூயத் - துணையேகி
நாவு மனப்போதம் மேவு கரப்பாதம்
ஆகும் விழிக்காதும் - துணையாக
ஏனை நிலையிட்டு வாயில் உனையற்ற
நாவை அவித்தாள்க - நமனீசா (41)

பாவத்துயரிலிந்து விடுபட்டு நல்விடுதலை அடைய, நான் துதி, மனமுனைவு, அடிபணிதல், வலம் வருதல், காணல், கேட்டல் என முறையே எனது நாக்கு, மனம், தலை, கால்கள், கண்கள், செவிகள் ஆகியவற்றால் உன்னை வேண்டுகின்றேன். என்னுள் அப்படியே நிகழ ஆணையிடுங்கள். என்னை, அவ்விதமான செயல்களிலேயே எப்பொழுதும் நிலைத்திடச் செய்யுங்கள்.

காலனை வென்றவரே! உம்மைப் பற்றிப் பேசாத வாக்கு, என்னிடமில்லாமல் போகட்டும்.

குறிப்பு:

எல்லாம் இறைவனின் பொருட்டுச் செய்வதாக அமையட்டும் என்பதே கர்ம யோகத்தின் சாரம். அதற்கு நமது உடற்கருவிகளும், அதற்கு ஆதாரமான மனம், புத்தி ஆகிய அந்தகரணங்களும், எப்போதும் இறைவயமாய் இருக்க வேண்டும். முக்கியமாக அந்தகரணங்கள் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அதற்கான உறுதியை இறைவன் அருள வேண்டும் எனக் கேட்கிறது இப்பாடல்.

இறைவனைப் பற்றிப் பேசாத வாக்கு இல்லாமற் போகட்டும் எனக் கேட்பது, இறைச் சிந்தனை இல்லாத மொழியும், செயலும் பயனற்றது என்பதைக் காட்டத்தான்.

பேச்சு என்பது மனிதர்களுக்கே கொடுக்கப்பட்ட வரம். அது ஒன்றுதான், பொதுவாக, வயது முதிர்ந்தாலும், தளராமல் இருப்பது. பேச்சின் சக்தி, இறைத் தன்மையின்றிப் போய்விட்டால், நச்சான சொற்களால் நாசம் விளைவிக்கும். எனவேதான் பகவான் ஆதி சங்கரர், எல்லாப் பொறிகளும், புலன்களும் இறை வழிபாட்டிலேயே இருக்கட்டும் என்று கேட்டுக் கொண்ட பின்னும், இறைச்சிந்தனை அற்ற பேச்சு ஒழியட்டும் என்று குறிப்பிட்டுக் கேட்கின்றார். (41)

42 - மனக்கோட்டை கடந்தாளும் மாயன் அடி போற்றி!

गाम्भीर्यं परिखापदं घनधृतिः प्राकार उद्यद्गुण-
स्तोमश्चाप्तबलं घनेन्द्रियचयो द्वाराणि देहे स्थितः |
विद्यावस्तुसमृद्धिरित्यखिलसामग्रीसमेते सदा
दुर्गातिप्रियदेव मामकमनोदुर्गे निवासं कुरु ||४२||

கா3ம்பீ4ர்யம் பரிகா2பத3ம் க4னத்4ருதி: ப்ராகார உத்3யத்3கு3ண-
ஸ்தோமஶ்சாப்தப3லம் க4னேந்த்3ரியசயோ
த்3வாராணி தே3ஹே ஸ்தி2த: |
வித்3யாவஸ்துஸம்ருத்3தி4ரித்யகி2லஸாமக்3ரீஸமேதே ஸதா3
து3ர்கா3திப்ரியதே3வ மாமகமனோது3ர்கே3 நிவாஸம் குரு ||42||

தான தனனான தான தனனான
தான தனனான – தனதான

சேர முடியாத தூரப் பெருவீடு
ஆழப் பெருவாழி - திடவேலி
சீலப் பெருங்கூறு சேனைத் துணையோடு
தேகப் புலனூடு - தடவாயில்
ஞானப் பெரும்பேறு ஆன மனமோடு
ஆளப் பெருவீடை - அடைவீரே!
காண முடியாத மோனக் குடிலேறி
தூரப் பொருளான – துரீயோனே (42)

அடைவதற்கரிதான இடங்களில் இருத்தலை மட்டுமே விரும்பும் இறைவா! அளக்க முடியாப் பெருமையை அகழியாகவும், வலுவான உறுதியை மதிலாகவும், மேலான குணங்களால் உயர்ந்தவர்களின் கூட்டத்தை, பலம் பொருந்திய நட்பூட்டும் படையாகவும், உடலில் உள்ள புலன், பொறிகளை வழியாகவும், அறிவை, அடைந்த பொருள்களில் எல்லாம் தெரியும் நிறைவாகவும், இப்படி எல்லா விதத்திலும் தக்கதான

உறுப்புக்களுடன் கூடிய என்னுடைய மனமாகிய கோட்டையில், எப்போதும் தாங்கள் இருந்து அருள் செய்க!

குறிப்பு:

விழிப்பு, கனவு, ஆழ்துயில் ஆகிய முந்நிலைகளையும் கடந்த, துரீயம் எனும் மறைவான இடத்தில், கடவுளாக (அதாவது எளிதில் நம்மால் உணர்ந்து அடைய முடியாத இடத்தில் விளங்கும் பரம்பொருளாக) சிவபிரான் இருக்கிறார். அவரை, எப்போதும் அடையும் இடத்தில் இருக்கும்படியாக, நம் மனதில் எப்பொழுதும் தெரியும்படியாக இருத்த என்ன செய்ய வேண்டும்? ஆழ்ந்த சிந்தனையாகிய அகழி சுற்றியிருக்க, உறுதியான மதியும், நற்குணங்களின் வரவேற்பும், புலனுணர்வாகிய கருவிகளின் வாயில்களில் தர்மத்திற்கு ஒப்பிய செயல்களையும், விளைவுகளையும் மட்டுமே அனுமதிக்கின்ற நமது மனதை இறைவனுக்குக் கொடுத்து, நம் உடற்கூறினையே தக்க இடமாக மாற்றி விடுவோம் என்பதே இப்பாடலின் கரு.

கரணங்கள் கட்டுப்பட்டு விட்டன என்றால், உடல் கோவிலாக மாறிவிட்டதற்கு அது ஒரு பெரும் அடையாளம். அதன் பிறகு, இறைவன் அங்கே எப்போதும் தெரியும்படி இருக்க வேண்டும் என்று கேட்பதுதானே முறை! வலுவான கோட்டையாகவும், வளமான குணங்களினாலும் சிந்தைனையாலும் சிறந்த இடமாகவும், மனது மாறிவிட்டால், இறைவன், நமது மனதையே தன்னுடைய இடமாக மாற்றிக் கொள்ள என்ன தடை இருக்கப் போகிறது? அப்படி இறைவன் வந்து மனதிலேயே நித்திலமாக அமர்ந்து விட்டால், பிறகு என்றும் சுக நிலைதானே! அதையே இப்பாடல் கேட்கிறது.

தம்மிடம் இருப்பதாக பகவான் ஆதி சங்கரர் காட்டும் நற்குணங்களை, நாமும் அடைவதற்கான வழியினைத் தேடுவதுதான், நம்முடைய ஆன்ம அறிவுப் பயணத்திற்கான முதற்படிகள். (42)

43 - வேடுவனாய் மனமிருகம் வீழ்த்துவான் அடி போற்றி!

मा गच्छ त्वमितस्ततो गिरिश भो मय्येव वासं कुरु
स्वामिन्नादिकिरात मामकमनःकान्तारसीमान्तरे |
वर्तन्ते बहुशो मृगा मदजुषो मात्सर्यमोहादय-
स्तान् हत्वा मृगयाविनोदरुचितालाभं च संप्राप्स्यसि ||४३||

மா க$_3$ச்ச$_2$ த்வமிதஸ்ததோ கி$_3$ரிஶ போ$_4$ மய்யேவ வாஸம் குரு
ஸ்வாமின்னாதி$_3$கிராத மாமகமன:காந்தாரஸீமாந்தரே |
வர்தந்தே ப$_3$ஹுஶோ ம்ருகா$_3$ மத$_3$ஜுஷோ மாத்ஸர்யமோஹாத$_3$ய-
ஸ்தான் ஹத்வா ம்ருக$_3$யாவினோத$_3$ருசிதாலாப$_4$ம்
ச ஸம்ப்ராப்ஸ்யஸி ||43||

தான தனதன தான தனதன
தான தனதன – தனதான

ஆதி முதுபெரு வேடு வனனென
ஆளு மலையுறு - அதியோனே
ஈது அதுயிடம் போத லறுமன
மீது நிலையுறு - வெகுவாக
தீது கொடுசின மீடு படுசெறுக்
கோடு கெடுவிலங் - குனதாக
ஏது மவையினி மீத மிலையழித்
தாளும் சுகப்படத் – தகுமாமே (43)

மலையரசே! நீவிர் இங்கும் அங்கும் போக வேண்டாம்! இறைவா, என்னிடமே இருங்கள்! தொன்மையான வேடுவரே! என் மனக்காட்டிலே, பொறாமை, மயக்கம் முதலான ஆணவம் பிடித்த பல விலங்குகள் திரிகின்றன. அவைகளை எல்லாம் கொன்று, (வேடுவர்கள் விழைகின்ற) வேட்டையின் புதிரான இன்பத்தை நீங்கள் (என்னிடமே) நன்றாக அடையலாம்.

குறிப்பு:

42-ம் பாடலில், நம்முடைய மனம் வலுவாகவும், வளமாகவும் இருந்துவிட்டால், இறைவனை அழைத்து அங்கேயே இருத்தி விடலாம் என வேண்டிய பகவான் ஆதி சங்கரர், நமது மனம் அப்படி நற்தகுதியைப் பெறமுடியாமற் போய்விட்டால் என்ன செய்வது என ஐயப்பட்டு, இப்பாடலில், மனதினை ஒரு அடர்ந்த காட்டிற்கு ஒப்பிடுகிறார்.

ஒருவேளை தாம் நினைத்தது போல மனத் தெளிவும், மதித் திடமும் இன்னும் நமக்கு வாய்க்கவில்லையோ? அதனால்தான் மனமானது இன்னும் வனம் போல் இருக்கிறதோ? இருந்தால் என்ன! எப்படியும் இறைவனை நமது மனதில் இருக்கச் செய்ய வேண்டும் என்றால், இந்த வனமாகிய மனமும், இறைவனுக்கு ஏற்றதாகத் தான் இருக்க வேண்டும். எனவே, வேடுவனாய் இறைவன் வரட்டும். வந்து என் மனதில் உள்ள விலங்கினமான கெடுகுணங்களை எல்லாம் ஒழிக்கட்டும்.

இப்படிக் கேட்பதால், குறைகளுடன் விளங்கும் நமக்கும், இறைவனை இதயத்துள் இருத்தும் உரிமையும் தகுதியும் இருக்கின்றன என்பதையும் இப்பாடல் சுட்டிக் காட்டுகிறது. (43)

करलग्नमृगः करीन्द्रभङ्गो
घनशार्दूलविखण्डनोऽस्तजन्तुः |
गिरिशो विशदाकृतिश्च चेतः-
कुहरे पञ्चमुखोस्ति मे कुतो भीः ||४४||

கரலக்$_3$னம்ருக$_3$: கரீந்த்$_3$ரப$_4$ங்கோ$_3$
க$_4$னஶார்தூ$_3$லவிக$_2$ண்ட$_3$னோ(அ)ஸ்தஜந்து: |
கி$_3$ரிஶோ விஶதா$_3$க்ருதிஶ்ச சேத:-
குஹரே பஞ்சமுகோ$_2$ஸ்தி மே குதோ பீ$_4$: ||44||

(சிவனுக்கும் சிங்கத்திற்கும் சிலேடை)

தனன தனனனன தனன தனனனன
தனன தனனனன – தனதான

பிடியில் துடிமானும் பிறழும் கரிமேவும்
பிறகும் படியான - பெருவீரம்
கொடிய புலிமாளும் வடிவ முயிர்யாவும்
முடிவில் தனதாகத் - தகுவேகம்
மலையில் நிலையாகி வெளிவெண் நிறமாகி
மறைவில் நடமாடி - அகன்றூறி
மனதில் தடமேறு வதெனில் இனிமேலும்
மருட்சி எனக்கேது – பயமேது (44)

கையில் மானைப் பிடித்திருப்பவராயும் (கையில் மானைப் பிடித்திருப்பதாயும்), யானைமுகனைக் கொன்றவராயும் (யானையைக் கொல்வதாயும்), புலி வடிவ அரக்கனைக் கொன்றவராயும் (புலியைக் கொல்வதாயும்), எல்லா உயிர்களையும் தன்னுள் ஆட்கொள்பவராயும் (எல்லா உயிர்களையும் கொல்வதாயும்), மலையின் அரசராயும்

(மலையில் ஆளுமை செய்வதும்), வெண்மை உடலானவராயும் (வெண்ணுடல் கொண்டதாயும்), ஐந்து முகம் கொண்டவராயும் உள்ள சிவன் (அகன்ற முகமும், குறுகிய உடலும் உள்ள சிங்கமானது) என்னுடைய மனமாகிய குகையில் இருப்பதால், எனக்கு எங்கிருந்து பயம் வரும்?

குறிப்பு:

42, 43-ம் பாடல்களில் பரம்பொருளாகிய சிவபிரான், மனதில் இருப்பதாகக் காட்டிய பகவான் ஆதி சங்கரர், இப்பாடலில், அதன் பயனால், சிங்கத்தினை ஒத்த வீரம் தனக்குள் இருப்பதாயும், அதனால் கவலைகள் ஏதும் இல்லாதிருப்பதாயும் காட்டுகின்றார்.

சிங்கத்திற்கும் சிவனுக்கும் சிலேடையாக அமைந்த பாடல் இது.

மன அழுக்காகிய மலமே துள்ளித் திரிகின்ற மான். அது சிவபிரானின் அருட்கையில் பிடிக்கப்பட்டுள்ளது. சிவன் யானைமுகன் (கஜமுகாஅசுரன்), புலியசுரன் (வியாக்கிராசுரன்) ஆகியோரைக் கொன்றதாகப் புராணங்கள் கூறுகின்றன.

யானைத் தோலினை அணிந்தவர் எனவும் (யானையின் தோல் மெலிதும் மெலிதாம். அதனைப் பிரித்தணிதல் என்பது எல்லாக் கூறினையும் அறுப்பவர் என்பது ஆகும்), புலித்தோலில் அமர்பவர் எனவும் (அதாவது, கட்டுக்கடங்கா புலியாகிய மனதினைக் கட்டுப்படுத்தி ஆட்கொள்பவர் எனவும்) புராணங்கள் காட்டுகின்றன.

‘அஸ்தஜந்து:’ என்பதன் பொருள், உயிர்களை அழிப்பவர் என்பது ஆகும். சிங்கம் எல்லா மிருகங்களையும் அடக்கி, அழிப்பது போல, பரம்பொருள் எல்லா உயிர்களையும் தன் வயம் இழுத்துக் கொள்கிறார். சிவனுக்குப் ‘பஞ்சமுகம்’ அதாவது, ஐந்து முகங்கள் உண்டாம். ஆறாம் முகம் எனும் ‘அதோ முகம்’ ஊழியில் மட்டுமே வருமாம்.

‘பஞ்ச’ எனும் சொல்லுக்கு விரிந்த, அகன்ற எனும் பொருளும் வடமொழியில் உண்டு, சிங்கத்தின் முகம் அகன்றும் உடல்

குறுகியும் இருப்பதனால், அதற்குப் பஞ்சமுக: எனும் பெயரும் உண்டு.

‘மறைவில் நடமாடி அகன்றூறி’ என மொழிபெயர்ப்பில், அகன்று என்னும் சொல் அகலத்தையும், அவ்வகலத்திலிருந்து ஊறி எடுத்த உருவம் என்று சிங்கத்தையும் குறிக்கிறது. அதேபோல, அகன்று என்றால் நமக்குத் தெரியாமல் மறைந்து இருப்பது என்றும், ஊறி என்றால், மறைந்தாற் போலிருப்பினும் நமக்குள்ளேயே ஊறியும் இருப்பது என்றும் அதுவே கடவுள் என்றும் காட்டப்பட்டது. மறையாகிய வேதங்களில் நடமாடி, அகன்ற மற்றும் ஆழமான உண்மையாக இருப்பவர் என்றும் தமிழில் பொருள்படும். (44)

45 - மனப்பறவை கூட்டுவித்த மணியடிகள் திறம் போற்றி!

छन्दःशाखिशिखान्वितैर्द्विजवरैः संसेविते शाश्वते
सौख्यापादिनि खेदभेदिनि सुधासारैः फलैर्दीपिते |
चेतःपक्षिशिखामणे त्यज वृथासंचारमन्यैरलं
नित्यं शंकरपादपद्मयुगलीनीडे विहारं कुरु ||४५||

ச$_2$ந்த$_3$:ஶாகி$_2$ஶிகா$_2$ன்விதைர்த்$_3$விஜவரை: ஸம்ஸேவிதே ஶாஶ்வதே
ஸௌக்$_2$யாபாதி$_3$னி கே$_2$த$_3$பே$_4$தி$_3$னி
ஸுதா$_4$ஸாரை: ப$_2$லைர்தீ$_3$பிதே |
சேத:பக்ஷிஶிகா$_2$மணே த்யஜ வ்ருதா$_2$ஸஞ்சாரமன்யைரலம்
நித்யம் ஶங்கரபாத$_3$பத்$_3$மயுக$_3$லீனீடே$_3$ விஹாரம் குரு ||45||

தனன தனதனன தனன தனதனன
தனன தனதனன – தனதான

மறைகள் கிளையாகி நிறைவு முதலாகி
நெறியர் குறியாகி - நிலையாக
மகிழப் பிணிமாறி அமிழ்தக் கனியாகி
மணியுள் ஒளியாகி - மரமாக
உறையு மலராகி நிறையு மிருபாத
மடைய நலங்கூடி - மகிழ்வாலே
உயரு மனமான பறவை இனிவாடி
உழலு மிடர்நீங்கி - உயர்வாயே (45)

மறைகள், சாகை எனும் கிளைகளும், உபநிடதங்கள் எனும் உயர் நிலைகளும் உடையதாய், அறவோராகிய பறவைகளால் விரும்பி நாடப்பட்டதாயும், அழிவற்ற இன்பம் அளிப்பதாயும், இன்னல் அழிப்பதாயும், மிக இனிய கனிகளைத் தருவதாயும் ஒளியுடன் விளங்கும் மரமாக விளங்குகிறது. அம்மரத்தில் விளங்கும் பரசிவனின் பாதங்களாகிய கூட்டில், ஏ மனமாகிய

மிகச்சிறந்த பறவையே, நீ விருப்புடன் விளையாடுக! வீணாய் அலைவதைத் தவிர்த்து விடு! வேறு அலைச்சல்கள் வேண்டாம்.

குறிப்பு:

42, 43, 44-ம் பாடல்களில், மனதில் சிவனை இருத்திய பகவான் ஆதி சங்கரர், இப்பாடலில், சிவனில் மனதை இருத்துகின்றார்.

மனம் ஒரு பறவையாகவும், சிவபெருமானின் திருவடிகள் மனப்பறவைக்கு அடைக்கலம் தரும் கூண்டாகவும், அக்கூண்டு, மறைகளாகிய வேதமரத்தின் நடுவில் விளங்குவதாயும் காட்டுகின்றார்.

மனம் அலைவது இயற்கை. தெளிவான மனம் அதனாலேயே மிகச் சிறந்த பறவைக்கு உதாரணமாகக் கூறப்பட்டது. சிறப்படைந்த மனப்பறவைக்கு விருப்பமானது, இறையடியாகிய அழகிய கூடு என்றும், அக்கூடு, வேதமாகிய பெரு மரத்தில் அமைந்து இருக்கிறது என்றும், அதனைக் கண்டறிய, தருமம் முதலான பல கிளைகளுக்குள்ளும், நிறைந்த உபநிடத ஞானமாகிய உச்சாணிக் கொம்புகளுக்குள்ளும், மனப்பறவையானது திரிந்து, அதன் பயனாக, இன்பத்தை அளிக்கின்ற சிவபெருமானின் திருவடிகளாகிய அழகிய கூடினை அடைந்து அங்கேயே அடங்கி இருக்க வேண்டும் என்றும், அதனை விட்டு, அழியும் பொருட்களில் ஆசைப்பட்டு, மனமாகிய பறவை வேறு எங்கும் அலைய வேண்டாமே என்றும் காட்டப்படுகின்றது.

கூடு என்பது, ஆத்ம தரிசனம் கிடைக்கின்ற ஆழ் மனது. அத்தரிசனத்திற்கு விதை, ஆழ் மனத்தில் சிவனுடைய திருவடிகளை நிரப்பி இருத்தல். அத்தகு ஞானம் வர வேண்டுமெனில், அதற்கு முதலில், தர்மமாகிய பல கிளைகளிலே திளைத்துப் பிறகே ஞானமாகிய கூட்டினை அடைய முடியும் என்பதையும் இப்பாடல் புலப்படுத்துகின்றது. (45)

46 – மனமடையும் திருவடியாம் மாடம் அருள் போற்றி!

आकीर्णे नखराजिकान्तिविभवैरुद्यत्सुधावैभवै-
राधौतेपि च पद्मरागललिते हंसव्रजैराश्रिते |
नित्यं भक्तिवधूगणैश्च रहसि स्वेच्छाविहारं कुरु
स्थित्वा मानसराजहंस गिरिजानाथाङ्घ्रिसौधान्तरे ||४६||

ஆகீர்ணே நக₂ராஜிகாந்திவிப₄வைருத்₃யத்ஸுதா₄வைப₄வை-
ராதௌ₄தேபி ச பத்₃மராக₃லலிதே ஹம்ஸவ்ரஜைராஶ்ரிதே |
நித்யம் ப₄க்திவதூ₄க₃ணைஶ்ச ரஹஸி ஸ்வேச்சா₂விஹாரம் குரு
ஸ்தி₂த்வா மானஸராஜஹம்ஸ
கி₃ரிஜானாதா₂ங்க்₄ரிஸௌதா₄ந்தரே ||46||

தானனன தனனனன தானனன தனனனன
தானனன தனனனன – தனதான

பாதநக மேவுமொளி மோதுசிர மேதுமதி
யாகவொளி ஆனதினால் - வெளிராகி
தேஜமய மானபத ராகபது மானமணி
சூடசிவ மானடியர் - கதியாக
கூடுமன்ன மாகமலை வீடுடைய நாதனடி
தேடுமறை வானசுகம் - பெறவேண்டி
நீடுவளர் காதல்மன மாதுவெனச் சேதனமுள்
கூடிவிளை யாடிநலம் - கொள்வாயே (46)

(கீழிருந்து) நிறைவான பாத நகத்தின் ஒளியும், (மேலிருந்து) தலையில் வளரும் மதியின் ஒளியும் வெள்ளியாய் நிறைக்க, பத்மராகமெனும் மணியாய்ச் சிவந்த பாதங்கள் மிளிர, அன்னப் பறவைகளாக அடியார்கள் அங்கேயே கதியென்று இருக்க, (அத்தகு) மலையரசனின் திருவடியாகிய மாளிகையில் இருந்துகொண்டு, பக்தியாகிய காதலியுடன் விருப்பப்படி கூடி,

அறிவுடன் களித்து, மறை பொருளான அருளைச் சுகித்து, மனமே, நீ இரு.

குறிப்பு:

இப்பாடல் மனம் எனும் காதலன், பக்தி எனும் காதலியுடன் கூடி, சிவபெருமானின் திருவடியாகிய மாளிகையில் களித்து வாழட்டும் எனக் கேட்கிறது. 45-ம் பாடலில், திருவடிகள் மனப்பறவையின் கூண்டாகத் தோன்றியது. இப்பாடலிலோ, திருவடிகள் பக்தியுடன் கூடிய மனம் வசிக்கின்ற மாளிகையாக மாறுகின்றது.

பாத நகமும் (அதாவது அடியும்), உச்சித் தலை மதியும் (அதாவது முடியும்) வெண்மையான ஒளியினால் எல்லா இடத்தையும் நிரப்பி, சிவமாகிய சுத்த சைதன்யத்தை அல்லது சிவ ஞானமெனும் பர அறிவைக் காட்டுகின்றன. அவ்வெண்மையினூடே, சிவந்த பதும ராகக் கல்லினைப் போல, பாத கமலங்கள் காட்டப்படுகின்றன. அது சிவனுடன் இணைந்திருக்கின்ற சக்தியினைக் காட்டுகின்றது.

சிவசக்தியாகிய பரம்பொருளே மலையின் நாதன் என்பதன் மூலம், எல்லா உயர்வுக்கும் அதுவே உயர்வு எனவும் காட்டப்பட்டது. அவ்வுயர்வையினைத் தரும் பாத மலர்களையே அன்னப் பறவைகளான அறவோர்கள் நாடுவர்.

அன்னம் எப்படிச் சுத்தமான பாலைப் பகுத்துண்ணுமோ, அதுபோலவே சிவனடியார்கள், சிவஞானப் பெரும் பேற்றினைத் தெளிந்து பருகுவர். அதனால், திருவடிகளாகிய மாளிகையிலேயே, நம் மனமானது எப்பொழுதும் தங்கி இருந்து கொண்டு, பக்தி அல்லது அன்பு எனும் காதலியுடன் கூடிக் களிப்பதாக, நல்லறிவு காட்டும் வழியெல்லாம் சென்று சுகித்து இருக்க வேண்டும்.

மேலும் 'ஸ்வ-இச்சா-விஹாரம்' எனும் சொல்லுக்கு, 'சேதனம் என்னும் நல்லறிவின் வழிப்படி எல்லாம்' எனத் தமிழில் பொருள் அமைக்கப்பட்டது. (46)

47 - சிந்தைப் பூந்தோட்டச் சிவஞானக் கனி போற்றி!

शंभुध्यानवसन्तसंगिनि हृदारामेऽघजीर्णच्छदाः
स्रस्ता भक्तिलताच्छटा विलसिताः पुण्यप्रवालश्रिताः |
दीप्यन्ते गुणकोरका जपवचःपुष्पाणि सद्वासना
ज्ञानानन्दसुधामरन्दलहरी संवित्फलाभ्युन्नतिः ||४७||

ஶம்பு$_4$த்$_4$யானவஸந்தஸங்கி$_3$னி ஹ்ருதா$_3$ராமே(அ)க$_4$ஜீர்ணச்ச$_2$தா$_3$:
ஸ்ரஸ்தா ப$_4$க்திலதாச்ச$_2$டா விலஸிதா: புண்யப்ரவாலஶ்ரிதா: |
தீ$_3$ப்யந்தே கு$_3$ணகோரகா ஜபவச:புஷ்பாணி ஸத்$_3$வாஸனா
ஜ்ஞானானந்த$_3$ஸுதா$_4$மரந்த$_3$லஹரீ ஸம்வித்ப$_2$லாப்$_4$யுன்னதி: ||47||

தனனனன தானனன தனனனன தானனன
தனனனன தானனன – தனதான

சிவநினைவி லானவுயர்த் தவநிலையி லானவொளி
பவநினைவி லானமன - வனம்வீசி
பழுவினையி லானஇலை நழுவிநல மாய்விழுக
தொழுகநல மானதுளிர் - ஒளிவீசும்
நலமுடைய தானகுண தளிருமரும் பாகிஜப
மலருமகிழ் வானசுக - மணம்வீசி
பலமுடைய ஞானமதி அமிழ்துடைய தேனருவிப்
பழமுமனு பூதியொளிப் - பிரவாகம் (47)

சிவசக்தியரின் நினைவாகிய இளம் தென்றல் காற்று, இதயமாகிய வனத்தில் வீசி, வினைகளாகிற முதிர்ந்த இலைகளை (அசைத்து) விழ வைக்கின்றது. அதனால், தொழுகின்ற பக்தி எனும் உட்தண்டு வெளிப்படுகின்றது. அதிலே நலம் எனும் துளிர்கள் தளிர் விடுகின்றன. அக்கொடி ஒளியுடன் திகழ்கிறது. நல்ல குணங்கள் அரும்பாக அதில் எழுகின்றன. அதிலிருந்து (சிந்தையில் பூக்கின்ற) ஜப மலர்கள் மலர்கின்றன. அவை சிவ ஞானமாகிய அறிவின் மணத்தை

எங்கும் வீசுகின்றன. அவ்வறிவு உணர்வால், அமிழ்தாகிய தேனைப்போல் நிலையான இன்பம் சுரக்கிறது. அச்சிவானந்த சுகத்தினால், அனுபூதி அல்லது அனுபவமாகிய பெரும் கனி, பழுத்து ஒளியுடன் விளைகிறது.

குறிப்பு:

சிவத்தியானம் மனதிற்கு வினையுதிர் காலத்தை விளைக்கிறதாம். அதனால் மனமெனும் கொடியில் நலம் விளைகிறது. முக்திக் கனி பழுக்கிறது என்றெல்லாம் கூறி, பகவான் ஆதி சங்கரர், எவ்வாறு பருவம் பயிர்களுக்கு உதவுமோ, அதுபோல இறையருள் உயிர்களுக்கு உதவும் என்று காட்டுகின்றார்.

தீக்குணத்தால் சேர்ந்து விட்ட பாவங்கள் எல்லாம் இலைகளாக நிறைந்து இருந்தாலும், சிவசக்தியரின் நினைவு, தென்றலாக வீசி, இலைகளை உதிர்த்து ‘வினையுதிர்’ காலமாகச் செய்துவிடும். அப்படித் தீவினைகளும் அதற்குக் காரணமான தீக்குணங்களும் உதிர்ந்து விட்டால், எப்படி அந்த மரம் தெளிவாகத் தெரியுமோ, அதேபோல, நமது மனமும் தெளிவாக விளங்கும். அதன் விளைவாக, நன்மைகள் தளிர்களாக முளைவிடும். அதன் விளைவாக, நம்முள் குண மாற்றங்கள் ஏற்பட்டு, நற்குண அரும்புகள் பெருகி, அதன் விளைவால், சிவனைத் தியானிக்கும் தவம் பூக்கிறது. அப்பூவின் மணம், சுற்றிலும் நன்மையாகிய சுகத்தை வீசும். அம்மலரில் பெருகும் தேன் போல, நல்லறிவுச் சுகம் விளையும். அறிவு அனுபவமாவதுதானே முதிர்ச்சி, கனிவு! அதனாலயே, சிவானந்த அனுபூதி எனும் இறையருளனுபவநிலை, கனியாகி ஒளிரும் விளைச்சலுக்கு உவமானமாகக் காட்டப்பட்டது.

‘ஸம்புத்யான’ எனும் முதற்சொல், சிவசக்தியரின்பால் நிலைப்பித்த நினைவு எனப் பொருள் கொள்ளப்பட்டது. (47)

48 - சித்தம் தெளிவிக்கும் சிவஞானச் சுனை போற்றி!

नित्यानन्दरसालयं सुरमुनिस्वान्ताम्बुजाताश्रयं
स्वच्छं सद्द्विजसेवितं कलुषहृत्सद्वासनाविष्कृतम् |
शंभुध्यानसरोवरं व्रज मनो हंसावतंस स्थिरं
किं क्षुद्राश्रयपल्वलभ्रमणसंजातश्रमं प्राप्स्यसि ||४८||

நித்யானந்த$_3$ரஸாலயம் ஸுரமுனிஸ்வாந்தாம்பு$_3$ஜாதாஶ்ரயம்
ஸ்வச்ச$_2$ம் ஸத்$_3$த்$_3$விஜஸேவிதம்
கலுஷஹ்ருத்ஸத்$_3$வாஸனாவிஷ்க்ருதம் |
ஶம்பு$_4$த்$_4$யானஸரோவரம் வ்ரஜ மனோ ஹம்ஸாவதம்ஸ ஸ்தி$_2$ரம்
கிம் க்ஷுத்$_3$ராஶ்ரயபல்வலப்$_4$ரமண
ஸஞ்ஜாதஶ்ரமம் ப்ராப்ஸ்யஸி ||48||

தன்னனன தானனன தன்னனன தானனன
தன்னனன தானனன – தனதான

நித்தசுகப் பேரமுதாய் புத்தரகப் பூமனதாய்
தத்துமிடமே யழகாய் - தகையாக
உத்தமர்க ளாய்ப்பறந்து சுத்தமடை வார்சிறந்து
மொத்தமழுக் கானதுயர் - முடிவாக
புத்தசுக மானகலை சித்தசிவத் தியானநிலை
பக்தியடை வாய்மனது - பதராக
குட்டையுழ லாகநிலை கெட்டுலக மாயவலை
கட்டிடரைக் காணுவதும் – எதனாலே (48)

நிலையான சுகமாகிய நீரால் நிரம்பியதும், தூயவரின் மனமாகிய மலர் பூப்பதற்கான ஆதாரமானதும், சிவனடியார்களாகிய பறவைகளால் விரும்பி அடையப்படுவதும், தவறாகிய வினையழுக்கைக் களைவதும் ஆகிய சிவசக்தியின் தியானமாகிய நந்நீர்நிலையை அன்னமாகிய மனமே, நீ சென்று

அடைவாயாக! (அதை விட்டு), பயனற்ற குட்டையில் உழல்கின்ற துயரத்தை ஏன் அடைந்து இருக்கிறாய்?

குறிப்பு:

ஶிவானந்த₃லஹரீயின் மூலம் எது?

அது சிவசக்தி தியானமெனும் நந்நீர் ஏரியே ஆகும். அதிலேதான், அறவோரின் மனம், நறுமலராகப் பூக்கிறது. அந்த நந்நீரை அடையவே, எல்லா அடியார்களும் விரும்புகின்றார்கள். அதில் நனைவதால், நம்மில் ஒட்டி இறுகும் பாவமாகிய அழுக்குப் பிழைகள் எல்லாம் நம்மை விட்டு அகல்கின்றன.

நம் மனது, அன்னப்பறவைக்கு உவமானம் சொல்லப்பட்டது. அன்னப்பறவை அல்லன அகற்றி நல்லன எடுக்கும் திறன் கொண்டது. அது போலவே, சக்தியும் சேறுமாய் கிடக்கும் உலக ஆசைகள் எனும் குட்டையில் (அதாவது, அதர்மம் அல்லது அறமற்ற வாழ்க்கை எனும் பாவப் பள்ளத்தில்), ஏன் மனம் கிடந்து துயரப்பட வேண்டும், அதை விட்டு, ஶிவானந்த₃லஹரீ எனும் நற்சுக நீர்ப்பரப்பில் நனைந்திருக்கலாமே என்பதைத்தான் இப்பாடல் கேட்கிறது. (48)

49 - முனையன்புக் கொடிகனிந்த முக்தி மழை போற்றி!

आनन्दामृतपूरिता हरपदाम्भोजालवालोद्यता
स्थैर्योपघ्नमुपेत्य भक्तिलतिका शाखोपशाखान्विता |
उच्चैर्मानसकायमानपटलीमाक्रम्य निष्कल्मषा
नित्याभीष्टफलप्रदा भवतु मे सत्कर्मसंवर्धिता ||४९||

ஆனந்தா$_3$ம்ருதபூரிதா ஹரபதா$_3$ம்போ$_4$ஜாலவாலோத்$_3$யதா
ஸ்தை$_2$ர்யோபக்$_4$னமுபேத்ய ப$_4$க்திலதிகா ஶாகோ$_2$பஶாகா$_2$ன்விதா |
உச்சை$_2$ர்மானஸகாயமானபடலீமாக்ரம்ய நிஷ்கல்மஷா
நித்யாபீ$_4$ஷ்டப$_2$லப்ரதா$_3$ ப$_4$வது மே ஸத்கர்மஸம்வர்தி$_4$தா ||49||

தனதனன தானனன தனதனன தானனன
தனதனன தானனன – தனதான

சுகவமுத நீரையிட்டுச் சிவமலரின் பாதமிட்டு
விளையுமதி யானவித்து - வெளியாகி
திடவறிவுக் கோலைநட்டு அதிலுறுதி மாலையிட்டு
கிளைபலவுஞ் சூழபத்திக் - கொடியாகி
மிகவுமுயர் வானமிட்டுப் படுகைமன மேலுமுற்று
தகையுறவுந் தூயசத்துச் - செயலாலே
முகிழமலர்த் தீபமிட்டு முறைநெறிக ளேகியுற்று
நிறையுமுக்தி யானகனி – நிறைவேதா (49)

சுகமான அமிர்த நீரால் நனைந்திருப்பதும், மலராகிய சிவனது திருவடிகளை விளை நிலமாக்கி முளைத்திருப்பதும், அதனருளால் உறுதியான அறிவு எனும் கம்பத்தினை ஆதாரமாகக் கொண்டு வளர்ந்திருப்பதும், (நற்செயலாகிய) பல கிளைகளாக விரிந்திருப்பதும், தெளிவான மனமாகிய படுகையின்மேல் படர்ந்திருப்பதுமாகிய (எனது) பக்தியாகிய கொடி, பிழையற்ற அறச்செயல்களால் நன்கு, ஒளியென

வளர்ந்து, எனக்கு முக்தி எனும் கனியினை அளிக்க, (நினது கருணையாகிய மழை) விளங்கட்டும்.

குறிப்பு:

தெளிவான மனம், திடமான அறிவு இவ்விரண்டும் தர்மத்தின் வழியில் வாழ்வதால் மட்டுமே நாம் அடையும் பயன். பலன் கருதாப் பணியாகக் கடமைகளைச் செய்கின்ற கருமயோகத்தின் பலன் தெளிவான பலன் என்றும், உபாசனை எனும் அன்புடன் ஈடுபடும் தியானத்தின் பலன் திடமான அறிவு என்றும், பகவத்கீதை காட்டுகின்றது,

இவ்விரண்டும் கிடைப்பின், அதுவே பக்தி எனும் உயர்நிலை. அந்நிலையில், மனம் உயர்கிறது. மனதில் இருக்கும் எண்ணங்களும் உயர்கின்றன. அதனால், வீடு பேறு எனும் முக்தியாகிய புருஷார்த்தம் அல்லது நந்நோக்கு விளைகிறது. தர்மத்தின் ஆதாரத்தில் வளர்த்திய வாழ்க்கை, இப்போது ஞானத்தின் திசையில் திரும்புகிறது. இறைவனின் கருணை மழையினால், பக்திக் கொடியில் விளைவது முக்திக் கனியாகின்றது.

கருமம், தருமம், பக்தி, ஞானம் என எல்லா வழிகளையும் சுட்டிக்காட்டி, நல்வாழ்க்கைக்கும், நன்முக்திக்கும் துணை சேர்க்கிறது இவ்வினிய பாடல். (49)

50 - மல்லிகார்ஜுன லிங்க மாவடிவம் தாள் போற்றி!

सन्ध्यारंभविजृम्भितं श्रुतिशिरस्थानान्तराधिष्ठितं
सप्रेमभ्रमराभिराममसकृत् सद्वासनाशोभितम् |
भोगीन्द्राभरणं समस्तसुमनःपूज्यं गुणाविष्कृतं
सेवे श्रीगिरिमल्लिकार्जुनमहालिङ्गं शिवालिङ्गितं ||५०||

ஸந்த்$_4$யாரம்ப$_4$விஜ்ரும்பி$_4$தம் ஶ்ருதிஶிரஸ்தா$_2$னாந்தராதி$_4$ஷ்டி$_2$தம்
ஸப்ரேமப்$_4$ரமராபி$_4$ராமமஸக்ருத் ஸத்$_3$வாஸனாஶோபி$_4$தம் |
போ$_4$கீ$_3$ந்த்$_3$ராப$_4$ரணம் ஸமஸ்தஸுமன:பூஜ்யம் கு$_3$ணாவிஷ்க்ருதம்
ஸேவே ஶ்ரீ கி$_3$ரிமல்லிகார்ஜுனமஹாலிங்க$_3$ம் ஶிவாலிங்கி$_3$தம் ||50||

(சிவனுக்கும் மல்லிகைக்கும் சிலேடை)

தானனன தானனன தானனன தானனன
தானனன தானனன – தனதான

மாலையதி லேநடன கோலமறை யேசெவியிற்
மேவுமுயர் வாகுஞ்சிர - மேலாகி
சூழுமினி தேனிழைய தேனுமினி தாயணைய
சூடுபவ ராகுமணம் - இனிதாக
மேலரவ மாலையெனப் பூவில்முத லாமமரர்
பூஜைபெறு வாருமையின் - பொற்பேரே
ஶ்ரீ கிரியி லாளுமல்லி கார்ஜுனமா லிங்கமுரு
சேருமன மாகவுனைச் – சேர்வேனே (50)

மாலையில் நடனமிடுபவரும் (மாலையில் மலர்வதும்), செவி மறைச் சீராயும், அதன் தலையான உபநிடத மேன்மையாய் இருப்பவரும் (செவியிலும், உச்சித் தலையிலும் சூடப்படுவதும்), தேனினிய தாயாகிய சக்தியினால் சேரப்பட்டவரும் (தேனீக்களால் சூழப்பட்டதும்), எப்போதும் நல்லடியார்களால் சூழப்பட்டவரும் (எப்போதும் நல்மணம்

கமழ்வதாயும்), நல்லரவங்களை மாலையாகக் கொண்டவரும் (நல்லவர்கள் அணியும் மாலையானதும்), தேவர்களின் பூஜையில் முதலானவரும் (மலர்களிலே முதன்மையானதும்), நற்பேரானதும் (நற்குணம் கொண்டதும்), அன்னை உமையினால் அணைக்கப்பட்டதும், (மங்கையர்களால் சூடப்பட்டதும்) ஆகிய திருமலையில் விளங்கும் மல்லிகார்ஜுனரை (மல்லிகார்ஜுனராகிய மல்லிகை மலரை), யான் விழைகின்றேன்.

குறிப்பு:

இப்பாடல் மல்லிகை மலருக்கும், திருமலையில் விளங்கும் மல்லிகார்ஜுன லிங்கத்திற்கும் சிலேடையாக இருப்பதாக விளக்கப்பட்டது.

'பிரதோஷம்' எனும் மாலை நேரம், சிவபிரான் ஆனந்த நடனம் ஆடுவதை, மாலை நேரத்தில் மலரும் மல்லிகையுடன் ஒப்பிடப்படுகின்றது,

செவியால் கேட்கப்படுவது மறை. மறையில் தலையானது உபநிடதங்கள். அவற்றின் உச்சியில் விளங்குவது, பிரம்மமாகிய சிவப்பொருள். அதே போல, செவியிலும் தலையிலும் வைக்கப்படுவது மல்லிகை. நல்ல மணம், தூய வெள்ளை நிறமாகிய குணம், நல்லோரிடும் மாலை, அன்னை பார்வதியின் தலை அணி என்றெல்லாம் மல்லிகையை வர்ணிப்பது போல, மல்லிகார்ஜுன நாதராகிய சிவபிரானை, பகவான் ஆதி சங்கரர் விழைந்து பணிகின்றார். (50)

51 – மனத்தா மரைசுற்றும் சிவத்தேனீ அருள் போற்றி!

भृंगीच्छानटनोत्कटः करमदिग्राही स्फुरन्माधवा
ह्लादो नादयुतो महासितवपुः पञ्चेषुणा चादृतः |
सत्पक्षः सुमनोवनेषु स पुनः साक्षान्मदीये मनो
राजीवे भ्रमराधिपो विहरतां श्रीशैलवासी विभुः ||५१||

ப்$_4$ருங்கீ$_3$ச்சா$_2$னடனோத்கட: கரமதி$_3$க்$_3$ராஹீ ஸ்பு$_2$ரன்மாத$_4$வா
ஹ்லாதோ$_3$ நாத$_3$யுதோ மஹாஸிதவபு: பஞ்சேஷுணா சாத்$_3$ருத: |
ஸத்பக்ஷ: ஸுமனோவனேஷு ஸ புன: ஸாக்ஷான்மதீ$_3$யே மனோ
ராஜீவே ப்$_4$ரமராதி$_4$போ விஹரதாம் ஶ்ரீ ஶைலவாஸீ விபு$_4$: ||51||

(சிவனுக்கும் தேனீக்கும் சிலேடை)

தன்னனன தனனனன தன்னனன தனனனன
தன்னனன தனனனன – தனதான

பிருங்கிமன மினிநடன பொங்குகரி மதமதன
மங்கைமல ரரிவதன மகிழ்ந்தேக
ரீங்குலவு ஒலியிதன நீங்குகரு வெளிர்வதன
தீங்கரும்பு முனைமதன முகிழ்வாக
புங்கவன ரிசையவுற துங்கதிரு மலைவளர
எங்குநிறைத் தேநீயிறை பதியாகி
தங்கமன மினிமலரப் பங்கயமுன் பரவியருட்
தும்பிவிளை யாடுகவே தம்பிரானே **(51)**

பிருங்கி முனிவரின் ஆசைக்காக ஆடுபவரும் (பிருங்கி எனும் பெண் வண்டின் மனம் கவர ஆடுவதும்), யானை முக அசுரனை அடக்குபவரும் (மத யானையின் உமிழ்நீரைப் பருகுவதும்), பெண் வடிவான திருமாலைக் கண்டு மகிழ்ந்தவரும் (மங்கையர் சூடும் மலர் தரும் காலத்தில் களிப்பதும்), ஓம் எனும் ரீங்காரமாகிய நாதப்பிரம்மம் ஆனவரும் (உம் என்று ஓசையுடன்

இருப்பதும்), இருள் நீக்கும் ஒளியான வெள்ளை நிறமானவரும் (இருளான கருமையை வெளி வண்ணமாகக் கொண்டதும்), காமன் கணையினால் குறிக்கப்பட்டவரும் (காமனைச் சூழ்ந்திருப்பதும்), தேவர்கள் நலமுற விழுப்புடையவரும் (பூவனங்களில் இருந்திட விரும்புவதும்), தூய ஶ்ரீசைலம் எனும் திருமலையில் வளர்பவராயும் (உயர்ந்த மலைகளில் பறப்பதாயும்), எங்கும் நிறைந்து தெய்வங்களின் தெய்வமானவராயும் (எங்கும் பறந்து, இறைந்து கிடப்பதும்) ஆக விளங்கும் சிவபெருமான் (தேனீ), எனது மனமாகிய தாமரையைச் சுற்றிப் பறந்து, அருள் விளையாட்டை நடத்தட்டும்.

குறிப்பு:

ஶிவானந்த₃லஹரீ ஆகிய பெருந்தேன் சுரக்க எனது மனமாகிய தாமரை மலர வேண்டும். அதனை சிவநினைவாகிய தேனீ எப்போதும் சூழ்ந்து பறந்து கொண்டிருக்க வேண்டும் என்பதே இப்பாடலின் முக்கியக் கருத்து. சிவனுக்கும், வண்டு அல்லது தேனீக்கும் சிலேடையாக அமைக்கப்பட்ட பாடல் இது.

தமிழ்ப் பதிவில், பிருங்கி எனும் வடமொழிச் சொல்லே பெண் வண்டுக்கும் சூட்டப்பட்டது. மேலும் கஜமுக அசுரன் என்பவனைக் கொன்றதான புராணக் கதைக்கு, ‘பொங்கு கரி மதம் அதம்’ எனக் கொண்டு, இருளாய்ப் பொங்குகின்ற ஆணவமாகிய மதத்தை, அதம் அல்லது அழித்தருள் செய்பவர் எனவும் காட்டப்பட்டது.

தூய வெண்ணிறமுடைய சிவபெருமான் கருநிற வண்டுக்கு ஒப்பு எனக் காட்ட வேண்டிய மொழி பெயர்ப்பு, ‘நீங்குகரு வெளிர்வதனம்’ என்பதன் மூலம், கருமையை அகற்றும் வெள்ளை நிற உடல் சிவனையும், நீங்கக்கூடிய வெளி உடல் கருமையானது என்பது வண்டினையும் காட்ட அமைக்கப்பட்டது. ‘எங்குநிறைத்தே நீ’ என்பது சிவனையும், ‘எங்கு நிறைத் தேனீ’ என்பது வண்டினையும் குறிக்கிறது. (51)

52 - கருணை மழைமேகம் காட்டும் அடி போற்றி!

कारुण्यामृतवर्षिणं घनविपद्ग्रीष्मच्छिदाकर्मठं
विद्यासस्यफलोदयाय सुमनःसंसेव्यमिच्छाकृतिम् |
नृत्यद्भक्तमयूरमद्रिनिलयं चञ्चज्जटामण्डलं
शंभो वाञ्छति नीलकन्धर सदा त्वां मे मनश्चातकः ||५२||

காருண்யாம்ருத வர்ஷிணம் க$_4$னவிபத்$_3$க்$_3$ரீஷ்மச்சி$_2$தா$_3$கர்மட$_2$ம்
வித்$_3$யாஸஸ்யப$_2$லோத$_3$யாய ஸுமன:ஸம்ஸேவ்யமிச்சா$_2$க்ருதிம் |
ந்ருத்யத்$_3$ ப$_4$க்த மயூரமத்$_3$ரினிலயம் சஞ்சஜ்ஜடாமண்ட$_3$லம்
ஶம்போ$_4$ வாஞ்ச$_2$தி நீலகந்த$_4$ர ஸதா$_3$ த்வாம் மே மனஸ்சாதக: ||52||

(சிவனுக்கும் முகிலுக்கும் சிலேடை)

தனனனன னேனனன தனனனன னேனனன
தனனனன னேனனன – தனதான

அருளுமழை யேபொழிய அனலுமிட ரேபடிய
பெருகுவமு தேமகிழப் - பெருமேகம்
கருவுவிதை யேபதிய பெருகுவிளை வேவளர
தரவுழவ ரேதொழுகத் - தருவேளே
அருவுமுரு வேவிரிய அடிமயிலென வேபணிய
அசலமுய ரேசடையி - லலங்காரா
பருகவுய ரேதொழுது பறவுசாதக மேமனது
பணியுமுனை யேபொழுது - கருமேகா **(52)**

அருள் மழை பொழிபவரும் (மழை தருவதும்), தகிக்கின்ற வினைச்சூட்டைக் குறைக்கும் செயலுடையவரும் (கோடையினை நிறுத்தும் குளிரினைத் தருவதும்), நல்லறிவாகிய விதை உயர் நிலையாகிய பயனைத் தர (நட்ட விதைகள் நற்பயிராய் வளர்ந்து பயன்தர) சிந்தனையில் ஆழ உழுபவர்களுக்கு அருள்பவராக (வயலில் ஆழ உழுபவர்களுக்கு

உதவுவதாக), எப்படி வேண்டுமானாலும் உருவெடுப்பவராக (பல உருவங்களாகத் திரிவதாக), அடிமையெனவே பக்தர்கள் எல்லாம் பணிய விளங்குபவராக (மயில்கள் அடி திருத்தி ஆடும்படி செய்வதாக), மலையில் விளங்குபவராக (மலைகளில் புரள்வதாக), அசையும் சடைகளை முடியாகக் கொண்டவராக (ஓடும் முகிற் திரளுடையதாக) விளங்கும் கரிய கழுத்தினை உடைய சிவபிரானே (விளங்கும் கருமேகமே), உயர்வான அறிவினை நாடும் எனது மனம், வானில் விழும் மழை நீரையே உண்ண விழையும் சாதகப் பறவையாய், நின்னையே எப்போதும் பணிந்து இருக்கின்றது.

குறிப்பு:

சிவமாகிய கருணை மேகம் அருள் மழை தரவும், அவ்வருள் மழையால், மனவயலில், மதியாகிய உழவனால் ஆழப் பதியப்பட்ட சிவஞானமாகிய விதை பெரும்பயனாக விளையவும், நற்காலம் காத்துக் கொண்டிருக்கிறது. அப்பயன், உலகத்தில் உள்ள எல்லா நன்மைகளையும் விட உயர்வானது என்பதும், அதனை மட்டுமே வேண்டி உயர்ந்து இருத்தல் திறமானது என்பதும், மழை நீரை வேண்டி இருக்கும் சாதகப் பறவைக்கு உதாரணம் காட்டி விளக்கப்பட்டது. (52)

53 – மறைவனத்துள் ஆடும் மயிலோன் அடி போற்றி!

आकाशेन शिखी समस्तफणिनां नेत्रा कलापी नता
ऽनुग्राहिप्रणवोपदेशनिनदैः केकीति यो गीयते |
श्यामां शैलसमुद्भवां घनरुचिं दृष्ट्वा नटन्तं मुदा
वेदान्तोपवने विहाररसिकं तं नीलकण्ठं भजे ||५३||

ஆகாஶேன ஶிகீ$_2$ ஸமஸ்தப$_2$ணினாம் நேத்ரா கலாபீ நதா
(அ)நுக்$_3$ராஹிப்ரணவோபதே$_3$ஶனினதை$_3$: கேகீதி யோ கீ$_3$யதே |
ஶ்யாமாம் ஶைலஸமுத்$_3$ப$_4$வாம் க$_4$னருசிம் த்$_3$ருஷ்ட்வா நடந்தம் முதா$_3$
வேதா$_3$ந்தோபவனே விஹாரரஸிகம் தம் நீலகண்ட$_2$ம் ப$_4$ஜே ||53||

(சிவனுக்கும் மயிலுக்கும் சிலேடை)

தன்னன்னன தன்னன்தனதன தன்னன்னன தன்னன்தனதன
தன்னன்னன தன்னன்தனதன – தனதான

உச்சஞ்சிர மெச்சுஞ் சடைகொடி
கச்சந்தகு மெச்சப் பெருசிற
கச்சந்தரு பட்சப்பட வுரு - அரவோனே

அர்ச்சிப்பவ ருட்சித்சுகமென
நற்சுப்பிர ணவமென முதுபொருள்
கற்பித்தகு கேகீஎனமொழி - கரவேயான்

முட்டக்கிரி தொட்டுஞ் சதிமுகில்
எட்டக்களி கொட்டத் திருவிழி
நட்டத்தகு நடனேதிருமறை – வனமேவி

நச்சுக்கரி மிச்சத்தகுகழுத்
தச்சுப்பெறு மிச்சைத்திருமயில்
பட்சிக்கடி பற்றிப்பதமலர் – பணிவேனே (53)

உச்சிக் கொண்டையாக வானத்தை உடையவரும் (உயர்ந்து நிற்கும் கொண்டை உடையதும்), அரவங்களின் விழிகளால் நிறைத்த உடலைக் கொண்டவரும் (அரவங்களின் விழிகளைப் போன்ற முத்திரைகளை உடைய தோகையினை உடலில் கொண்டதும்), அடிபணிந்து வணங்குபவருக்குள் விளைந்து (காண்பவர்கள் வியக்கும்படியாக) பிரணவமாகிய ஒரே நாதத்தை அருள்பவரும் (கேகீ எனும் ஒரே ஒலியினை எழுப்புவதும்), உயர்ந்த மலைகளில் ஒளியாய் விளங்கும் உமையினைக் கண்டு களிப்படைந்தவரும் (உயர்ந்த மலைகளில் தவழும் மேகத்தினைக் கண்டு களிப்படைந்ததும்), அதனால் மறையாகிய வேதங்களின் நடுவில் (அதனால், விரிந்த பெருங்காட்டின் நடுவில்), கருநீலமான விடத்தைக் கழுத்தில் கொண்டு நடனமாடும் (கருநீலக் கழுத்தினைக் கொண்டு, நடனமாடும்) சிவபெருமானை (மயிலை) யான் வணங்குகிறேன் (யான் மனத்தில் நிறுத்துகிறேன்).

குறிப்பு:

கருண மழை மேகம் வந்துவிட்டது என முந்தைய பாடலில் காட்டிய பகவான் ஆதி சங்கரர், அக்கருணை மேகங்களைக் கண்டு களித்தாடும் மயில்களையும் பார்க்கிறார். எதையும் சிவமாகப் பார்க்கும் ஞானியல்லவா அவர்! அதனாலே, மயிலும், சிவனும் ஒப்பு எனும்படியாக இப்பாடலை அமைத்துள்ளார்.

'அர்ச்சிப்பவருட் சித்சுகமென' என்பது சிவனைத் துதிப்பவர் மனதில் சிவானந்த வெள்ளமாக எனவும், பார்ப்பவருக்கு மகிழ்ச்சி தருவதெனவும், 'நச்சுக்கரி மிச்ச' என்பது 'விடம் மிஞ்ச' என்றும், 'விடம் போன்ற கருமை மிஞ்ச' என்றும், 'தகு கழுத்தச்சுப்பெறு' என்பது அத்தகைய அச்சினைக் கழுத்தில் கொண்ட என்றும், 'இச்சைத் திருமயில் பட்சி' என்பது விரும்பத்தக்க, வளமுடைய மயிற்பறவை என்றும், திரு மயிலை ஆளும், விரும்பத்தக்க சிவன் என்றும் பொருள்பட தமிழில் தரப்பட்டது. (53)

54 - சந்திப் பொழுதாடும் சடையன் அடி போற்றி!

सन्ध्याघर्मदिनात्ययो हरिकराघातप्रभूतानक
ध्वानो वारिदगर्जितं दिविषदां दृष्टिच्छटा चञ्चला |
भक्तानां परितोषबाष्पविततिर्वृष्टिर्मयूरी शिवा
यस्मिन्नुज्ज्वलताण्डवं विजयते तं नीलकण्ठं भजे ||५४||

ஸந்த்$_4$யாக$_4$ர்மதி$_3$னாத்யயோ ஹரிகராகா$_4$தப்ரபூ$_4$தானக
த்$_4$வானோ வாரித$_3$க$_3$ர்ஜிதம் தி$_3$விஷதா$_3$ம் த்$_3$ருஷ்டிச்ச$_2$டா சஞ்சலா |
ப$_4$க்தானாம் பரிதோஷபா$_3$ஷ்பவிததிர்வ்ருஷ்டிர்மயூரீ ஶிவா
யஸ்மின்னுஜ்ஜ்வல தாண்ட$_3$வம் விஜயதே தம் நீலகண்ட$_2$ம் ப$_4$ஜே ||54||

தன்னனன தன்னனன தன்னனன தன்னனன
தன்னனன தன்னனன – தனதான

கந்தவெயி லந்தமுற சந்தியிதந் தந்துஅர
விந்தகர முந்துமொலி – இடியாளும்
சந்தகவி உந்தமரர் வந்தியிடச் சிந்துவிழிப்
பந்தசர முந்துமொளி – கொடிபோலும்
வந்தடிய ரன்புவிழிச் சிந்துமழைச் சந்தநடம்
சொந்தமயி லாயுமையே - துணையாக
அந்தமுத லானசிவ நுந்தநட நூதனமெய்ச்
சந்ததமு சிந்தைவிட – கரிகண்டா **(54)**

கடும் வெயில் முடிந்து இதம் தருகின்ற பொழுதாகவும், திருமாலின் கரத்தால் அடித்து எழுப்பிய பறை ஒலி போல, இடிகள் இடிக்க, வானத்தில் தேவர்கள் வியந்து காணும் விழிகளின் சுடர்கள், எழும் மின்னல் கொடியாகவும், அடிபணிந்து உருகும் அன்பர்களின் கண்ணீர் மழையாகவும் நடக்கின்ற மாலைப் பொழுதில், அன்னை உமையாகிய பெண்மயிலைக் கண்டு ஆனந்தக் கூத்தாடும், நீலகண்டமுடைய சிவபிரானாகிய மயிலைப் போற்றிப் பணிகிறேன்.

குறிப்பு:

ஆடும் மயிலாக நடமாடும் சிவனைப் பார்க்கின்றது இப்பாடல்.

ஆனந்த நடனம் ஆடும் வேளை, இனிய சுகம் தரும் பொன் மாலைப் பொழுது.

வெயில் என்பது கொடுவினை விளைவுக்கு ஒப்பு. அது முடியும் காலம், இதமான மாலையாகிய சுகவேளை. அதுவே சிவன் நடனமிடும் காலம். ஶிவானந்த₃லஹரீ எனும் ஆனந்தம் பெருகும் நேரம். அதைக் காண, எங்கும் பரந்த திருமால் மத்தளம் கொட்டி வரவேற்கிறார். அதுவே வானத்து இடி. பார்க்கக் கூடி இருக்கும் வானவர்களின் கண்ணொளி, மின்னும் மின்னல். பார்த்து உருகும் பக்தர்களின் கண்ணீர், தண்மழை. அம்மாலை நேரத்தில் ஆடுகின்ற ஒரு ஆண் மயிலைப் பார்க்கும் பகவான் ஆதி சங்கரருக்கு, அம்மயில், அன்னை உமையாகிய பெண்மயிலைக் கண்டு களித்தாடும், பரசிவனாகத் தோன்றுகிறது. (54)

55 – உந்தியெனுள் ஆடும் உள்ளான் அடி போற்றி!

आद्यायामिततेजसे श्रुतिपदैर्वेद्याय साध्याय ते
विद्यानन्दमयात्मने त्रिजगतः संरक्षणोद्योगिने |
ध्येयायाखिलयोगिभिः सुरगणैर्गेयाय मायाविने
सम्यक्ताण्डवसंभ्रमाय जटिने सेयं नतिः शंभवे ||५५||

ஆத்$_3$யாயாமிததேஜஸே ஶ்ருதிபதை$_3$ர்வேத்$_3$யாய ஸாத்$_4$யாய தே
வித்$_3$யானந்த$_3$மயாத்மனே த்ரிஜக$_3$த: ஸம்ரக்ஷணோத்$_3$யோகி$_3$னே |
த்$_4$யேயாயாகி$_2$லயோகி$_3$பி$_4$: ஸுரக$_3$ணைர்கே$_3$யாய மாயாவினே
ஸம்யக்தாண்ட$_3$வஸம்ப்$_4$ரமாய ஜடினே ஸேயம் நதி: ஶம்ப$_4$வே ||55||

தானதன தானனன தானதன தானனன
தானதன தானனன – தனதான

ஆதிமுத லாகியருஞ் ஜோதிமறை யானபொருள்
ஆகியுரு வாகியருட் - கலையாகி
ஆயுமதி தேயுமன மோயுசுக மூநிலையும்
ஆக்கியரு ளூக்கமிறை - நிலையோனே
ஓதியுணர் யோகிமனம் ஓடிசுரர் பாடியடை
ஓயறியா மாயமறிந் - தாள்வோனே
ஒப்பிலனே கூத்தரசே அப்பிசடை யற்புதனே
நற்பலனே நாதனுனை - நயப்பேனே (55)

யாதுக்கும் முந்தியதாய், அளவிட முடியாத ஒளிப்பிழம்பாய் (யாதிலும் விளங்குவதாய்), மறைகளின் உண்மையாய், உருவங்களாகிய கலையாய், நன்மதியால் ஆய்ந்துணரும் பேருண்மையாய், அதனால் மனதில் விளையும் பெரும் சுகமாய், மூன்று நிலைகளும், மூவுலகங்களும் ஆக்கி, அருளும் பரம்பொருளாய், உணரும் யோகிகளின் மனதிலும், பக்தியால் பாடிப் பணியும் தேவர்களின் தவத்திலும் நிறைபவராய், மாயை அறிந்து ஆள்பவராய், சடைமுடி அணிந்து ஒப்பற்ற நடனம்

ஆடும் பெருமானே, நின்னையே, இப்பாடலினால் யான் நயந்து பணிகின்றேன்.

குறிப்பு:

மாலை நடனம் ஆடும் சிவபிரானைப் பாடிய பகவான் ஆதி சங்கரர், இப்பாடலில், ஆண்டவனின் தாண்டவமே நீண்டுலக மாற்றங்கள் எல்லாவற்றின் நியதி எனக் காட்டுகின்றார்.

மாறானாய் இருந்து கொண்டே மாற்றங்கள் ஆற்றுகின்ற பேரான பேரொளியாய், சிவபிரானின் நடனம் என்றும் நடந்து கொண்டே இருக்கிறது.

சிவ தாண்டவமே, எல்லா அசைவுக்கும் விசை. அவ்விசையே சக்தி. அதனாலேயே எல்லா மாற்றங்களும், ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. விழிப்பு, கனவு, துயில் எனும் மூன்று நிலைகளும், நேற்று, இன்று, நாளை எனும் மூன்று கால நிலைகளும், வல்லுடல், மெல்லுடல், காரணவுடல் எனும் மூன்று உடல்நிலைகளும் ஆகிய இவைகள் எல்லாமே, சிவதாண்டவத்தின் விசையால் எழும் மாற்றங்கள்.... அல்ல... மாற்றம் போல் தெரியும் தோற்றங்கள். அத்தோற்றப் பொய்மையே மாயை. அனைத்தையும் ஆட்டிப் படைக்கும் மாயையை, அறிந்து ஆட்டிப் படைப்பவர் சிவபெருமான்.

இப்பாடலின் உட்கரு, வாழ்க்கையில் நாம் சந்திக்கும் எல்லா மாற்றங்களையும், விளைவுகளையும் இறைவன் விதித்த வழியாக எண்ணி, அவற்றை ஏற்றும், இரசித்தும் நாம் உலகில் வாழக் கற்க வேண்டும் என்பதே ஆகும். (55)

56 – நல்லான் நவினுலகை நாட்டுவான் அடி போற்றி!

नित्याय त्रिगुणात्मने पुरजिते कात्यायनीश्रेयसे
सत्यायादिकुटुम्बिने मुनिमनः प्रत्यक्षचिन्मूर्तये |
मायासृष्टजगत्त्रयाय सकलाम्नायान्तसंचारिणे
सायं ताण्डवसंभ्रमाय जटिने सेयं नतिः शंभवे ||५६||

நித்யாய த்ரிகு$_3$ணாத்மனே புரஜிதே காத்யாயனீஶ்ரேயஸே
ஸத்யாயாதி$_3$குடும்பி$_3$னே முனிமன: ப்ரத்யக்ஷசின்மூர்தயே |
மாயா ஸ்ருஷ்ட ஜக$_3$த்த்ரயாய ஸகலாம்னாயாந்த ஸஞ்சாரிணே
ஸாயம் தாண்ட$_3$வஸம்ப்$_4$ரமாய ஜடினே ஸேயம் நதி: ஶம்ப$_4$வே ||56||

தன்னன்னன தன்னன்தனதன
தன்னன்னன தன்னன்தனதன
தன்னன்னன தன்னன்தனதன – தனதான

நிற்கும்கரு முக்குணமூதுடல்
அற்கும்திரு முப்புரமூறிய
நற்கும்அருள் நற்றுமைவூதிய - நலனாகி

கற்கும்திரு மெய்பொருளீதென
முற்றும்முது நற்குடும்பீயென
பொற்புங்கவ ருற்றவரூள்மதி - புலர்வோனே

சிக்கும்பெரு மாயையில்மூவுல
கொக்கும்படி ஆளுமையாமறை
நிற்கும்நடு நாயகனாய்சடை - முடியாகி

அற்கும்பக லாகிய மாலையில்
சொக்கும்படி ஆடுகதாண்டவம்
கற்றுன்னது காலடியேதுணை – சிவசம்போ **(56)**

நிலையானதாய், முக்குணங்களின் வெளிப்பாடுகளுக்கும், மூவுலகங்களுக்குள்ளும் ஆதாரமானதாய், உமையன்னையின் நற்றவப் பயனாய், உண்மையாய் இருப்பதுவாய், பிறப்பற்ற முதற் குடும்பத்தினனாய், நல்லறிவும் தவமும் உடைய முனிவர்களின் மனதில் தூய அறிவாக விளங்குபவனாய், மாயையினைத் தனது கட்டுப்பாட்டில் வைத்து, மூவுலகங்களையும் படைத்தாள்பவனாய், வேத முடிவில் நாயகனாய், மாலைப் பொழுதில், சடை முடிதவழ ஆனந்த நடனம் ஆடுகின்ற சிவசம்போ, உன்னையே பணிந்து வழிபடுகிறேன்.

குறிப்பு:

ஆடுவதால் அசைகிறது அகிலமெல்லாம் என்பதனால், ஆடுவான் ஆட்டத்தை அடிபணிந்து இரசிப்பதுவே நமது பயன். இதுவே இப்பாடலில் காட்டப்படும் பொருள்.

நிர்க்குணமாகிய பரம்பொருளே, தனது சக்தியால், முக்குணங்களையும், அதன் வேறுபாடுகளாக, பல கோடி உலகங்களையும், உயிர்களையும் ஆக்கி, வளர்த்து, அழித்து, அருள் காட்டி வருகின்றது. அதற்கு ‘சிவ சக்தி ஐக்கியம்’ எனும் நிலையே முதற் குடும்பமாகக் கருதப்படுகின்றது.

ஶிவானந்த₃லஹரீ முதற் பாட்டில் காட்டியபடி, அப்படி சிவனும் சக்தியுமாக விளங்கும் பரம்பொருளின் வெளிப்பாடே, உலகங்களை வளர்ப்பது. அதுவே ஶிவானந்த₃லஹரீ எனும் ஆனந்த வெள்ளத்தை, உணர்வோர் மதியில் ஊற்றுவிப்பது. அப்பரம்பொருளின் ஆனந்த நடனம் வேதாந்தங்களில் உண்மையாகவும், வெளிப்படும் உலகங்களின் மாற்றங்களுக்கு எல்லாம் ஆதாரமாகவும் விளங்குகிறது.

இதுவே பாடலின் முக்கியக் கருத்து ஆகும். (56)

57 - எல்லோர் உள்ளிருக்கும் ஏற்றம் அடி போற்றி !

नित्यं स्वोदरपोषणाय सकलानुद्दिश्य वित्ताशया
व्यर्थं पर्यटनं करोमि भवतः सेवां न जाने विभो |
मज्जन्मान्तरपुण्यपाकबलतस्त्वं शर्व सर्वान्तर-
स्तिष्ठस्येव हि तेन वा पशुपते ते रक्षनीयोऽस्म्यहम् ||५७||

நித்யம் ஸ்வோத$_3$ரபோஷணாய ஸகலானுத்$_3$தி$_3$ஶ்ய வித்தாஶயா
வ்யர்த$_2$ம் பர்யடனம் கரோமி ப$_4$வத: ஸேவாம் ந ஜானே விபோ$_4$ |
மஜ்ஜன்மாந்தரபுண்யபாகப$_3$லதஸ்த்வம் ஶர்வ ஸர்வாந்தர
ஸ்திஷ்ட$_2$ஸ்யேவ ஹி தேன வா பஶுபதே தேரக்ஷனீயோ(அ)ஸ்ம்யஹம்
||57||

தன்னன்னன தன்னன்தனதன
தன்னன்னன தன்னன்தனதன
தன்னன்னன தன்னன்தனதன – தனதான

நித்தம்என் பொத்தப்பெருவுத
ரத்துப்பசி யுக்தப்பலரிடை
வித்துப்பொரு ளூற்றுப் பிணியுற - விழைந்தோடி

சித்தம்நினை மெத்தத்துதியற
சுத்தும்புவ னத்துத்திருநிறை
சத்துக்கரு வித்தைப்பணிவுற - மறந்தேனே

முத்தம்வினை சுத்தப்பெருகிநி
மித்தப்படி சித்தப்புலனிடை
அத்தன்உரு மொத்தப்பொருளிடை - அறிவாகி

பத்தப்பரி சுத்தப்பொருளுனைப்
பற்றப்பல னுற்றுத்தகுதியைப்
பெற்றப்பெரு பேறேயானும் - பெறுவேனே (57)

தினமும், என்னுடைய வயிற்றை நிரப்ப (உலக ஆசைகளை நிறைவேற்ற) பலரிடமும் பொருளுக்காய் என் வாழ்வை விற்று, வீணாக அலைகின்றேன். அதனால், உலகங்கள் எங்கும் நிறைந்த, எல்லா உயிர்களின் கருவாக விளங்கும் நினது அருளை நினைத்துத் துதிக்கின்ற கடமையை யான் மறந்துவிட்டேன். ஆனாலும், முன் செய்த அறத்தின் விளைவாக, எல்லோருடைய சித்தத்தினுள்ளும், சிவனே, நீங்களே இருக்கிறீர்கள் என்பதை யான் அறிய முடிந்தது அல்லவா! அதனாலேயே, (என்னுள்ளும் இருக்கும் உம்மால்) நின்னை அடையும் பலனைப் பெற யானும் தகுதி உள்ளவனாக ஆகிவிடுகிறேன்.

குறிப்பு:

இறை பக்தி இருந்தாலும் கூட, வயிற்றுப் பிழைப்புக்காக எல்லாவித வேடங்களும் இட்டு, செயல்களைச் செய்து கொண்டு வாழ்நாளை வீணாக்கிக் கொண்டிருப்பவர்கள், எப்போதேனும் மனதுக்குள் ஏங்குவர். ‘இறைவா, இப்பாவங்களை விட்டு, உன்னையே யான் நினைத்து இருக்கும்படி செய்ய மாட்டாயா’ என வேண்டுவர். அந்த மனநிலையை இப்பாடலில் காட்டும் பகவான் ஆதி சங்கரர், இறைவன் தன்னுள்ளேயே இருக்கிறான் எனும் உண்மையின் ஒரு முனையையாவது நமது மனதினுள் பிடித்துக் கொண்டு விட்டால், அதுவே நல் விளைவுகளுக்கு வழி வகுக்கும் என்று தெளிவுறுத்துகிறார்.

உலக விவகாரங்களில் மட்டுமே அலைந்து காலத்தை அப்படி வீணாக்காமல், இறைப்பணி செய்ய முடியவில்லையே எனச் சோர்வுறும்போது, இறைவன் ‘கடவுள்’ என உள்ளத்துள் இருக்கிறான் எனும் அறிவு நமக்குப் புரிந்து விட்டால், அப்படிப் புரிவதற்கான புண்ணியத்தை நாம் செய்திருக்கும் வேளையில், நமக்குப் பெருத்த ஆறுதல் கிடைக்கிறது. நமக்குள்ளும் இறைவன் இருப்பதால், இறைவனது அருளை நிர்ப்பந்தப் படுத்திக் கேட்கின்ற தகுதியும் உரிமையும், பெரிய ஞானிகளுக்கு இருப்பதைப் போலவே நம்மைப் போன்ற எளியோருக்கும் இருக்கிறது என்று பகவான் இப்பாடலில் உறுதி கொடுக்கின்றார். (57)

58 - கதிர் கிரணக் கோடியெனக் காட்டும் எழில் போற்றி!

एको वारिजबान्धवः क्षितिनभो व्याप्तं तमोमण्डलं
भित्वा लोचनगोचरोऽपि भवति त्वं कोटिसूर्यप्रभः |
वेद्यः किन्न भवस्यहो घनतरं कीदृग्भवेन्मत्तम-
स्तत्सर्वं व्यपनीय मे पशुपते साक्षात् प्रसन्नो भव ||५८||

ஏகோ வாரிஜபா3ந்த4வ: க்ஷிதினபோ4 வ்யாப்தம் தமோமண்ட3லம்
பி4த்வா லோசனகோ3சரோ(அ)பி ப4வதி த்வம் கோடிஸூர்யப்ரப4: |
வேத்3ய: கின்ன ப4வஸ்யஹோ க4னதரம் கீத்3ருக்3ப4வேன்மத்தம-
ஸ்தத்ஸர்வம் வ்யபனீய மே பஶுபதே
ஸாக்ஷாத் ப்ரஸன்னோ ப4வ ||58||

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதன தனதன

ஒருகதி ரவனிருள் வதிகவிழ் புவிமிசை
அருவழித் தினமொளி வருவெளிப் படுதிடம்
பரசிவப் பெரும்பொருள் பலகோ டிக்கதிர்
கரகிர ணஒளியென் கண்படல் அரிதேன்?
ஒருவே ளைகுறை மதியிருள் பெரிதோ
ஓ எனதந்தோ உயர்த்தொளி அரிதோ
அதுஅட வாயினும் அழித்திருள் நீக்கி
முதல்வர விழிமுன் முகிழ்த்துடு ஒளியே (58)

ஒரே கதிரவன், வானத்தையும் பூமியையும் மூடியிருக்கும் இருளைக் கிழித்து கண்முன்னே தெரிகிறது. (அப்படி இருக்க) கோடிக் கதிரவனாய் ஒளிவீசும் தாங்கள் ஏன் என் கண்களால் அறிய முடியாதவராக இருக்கிறீர்கள்? அந்தோ! (அப்படியானால்) என்னுடைய அறியாமைதான் எத்தனை அடர்த்தியாக அடைத்துக் கொண்டிருக்க வேண்டும்! அவற்றை

நீக்கி என் கண்முன்னே தோன்றும் ஒளியாகத் தாங்கள் வர வேண்டும்.

குறிப்பு:

கண்ணுக்குத் தெரியும் பொருள் எல்லாம், கதிரவன் அளித்த ஒளியாலும் அதன் பயனாலுமே அறியப்படுகின்றது. பல கோடிக் கதிரவனைப் போன்ற ஒளியாக விளங்குவது பரமாத்மா அல்லவா! அந்த ஒளியை நம்மால் எப்படிப் பார்த்து அறிய முடியும்! ஆத்மாவாக, அனைத்தையும் அறிய வைக்கும் ஒளியாக, நம்முள்ளேயே பிரகாசித்துக் கொண்டிருக்கும் பேரொளியினை நாம் எப்படிக் காண்பது? அவ்வொளியாகவே நாம் இருப்பதை உணர்வதால் மட்டுமே, நம்மால் அதனை அடைய முடியும். ஆனால் அதற்குத் தடையாக அறியாமையாகிய இருள் நம்முள் இருக்கிறது.

அந்த அறியாமையாகிய இருளை விரட்டும் அக விளக்காக, ஆண்டவன் மனதுள் சுடர் விடவேண்டும் என பகவான் ஆதி சங்கரர் இப்பாடலில் பிரார்த்திக்கிறார்.

ஆன்மனைத் தன்னுள் அறிவாக உணர்வதே அனுபூதி. அவ்வறிவானுபூதிக்கு இறைவனின் கருணை மிகவும் இன்றியமையாதது. அதனாலேயே, ஞானம் பக்தியின் முழுமை என்றும், பக்தி ஞானத்தின் முழுமை என்றும் பெரியோர்களால் விளக்கப்பட்டது. (58)

59 – நோக்கும் மனத்தின் நுணுக்கன் அடி போற்றி!

हंसः पद्मवनं समिच्छति यथा नीलाम्बुदं चातकः
कोकः कोकनदप्रियं प्रतिदिनं चन्द्रं चकोरस्तथा ।
चेतो वाञ्छति मामकं पशुपते चिन्मार्गमृग्यं विभो
गौरीनाथ भवत्पदाब्जयुगलं कैवल्यसौख्यप्रदम् ॥५९॥

ஹம்ஸ: பத்$_3$மவனம் ஸமிச்ச$_2$தி யதா$_2$ நீலாம்பு$_3$த$_3$ம் சாதக:
கோக: கோகனத$_3$ப்ரியம் ப்ரதிதி$_3$னம் சந்த்$_3$ரம் சகோரஸ்ததா$_2$ |
சேதோ வாஞ்ச$_2$தி மாமகம் பஶுபதே சின்மார்க$_3$ம்ருக்$_3$யம் விபோ$_4$
கௌ$_3$ரீனாத$_2$ ப$_4$வத்பதா$_3$ப்$_3$ஜயுக$_3$லம் கைவல்யஸௌக்$_2$யப்ரத$_3$ம் ||59||

தானனன தனனன தானனன தனனன
தானனன தனனன – தனதான

தாமரை நீர்த்திடம் ஆர்த்திட அன்னம்
தருமழை சாதகம் – கதிராகப்
பூமலர்த் தீயொளி கோகனம் தின்னும்
புதுமதி சகோரம் - எனவாக
ஆமதித் தேபலர் அடைவுற ஒருபொருள்
அணுகுத லென்மனம் - அதுபோலே
நாமறைச் சூரண காரண கௌரிநந்
நாயக னடிதினம் - நயந்தேகும் (59)

அன்னப் பறவை தாமரை நிறைத்த ஏரியினையும், சாதகப் பறவை மழை மேகத்தையும், கோகனப் பறவை மலர்களை மலர்த்தும் சூரிய ஒளியையும், சகோரப் பறவை முழு நிலவின் ஒளியையும் நாடுகின்றன. அது போலவே ஒவ்வொருவரும் ஏதோ ஒரு பொருளுக்காக ஏங்குகிறார்கள். என் மனமும், அறிவினால் தேடி, முழு நிறைவான சுகத்தினை அருளும் கௌரி நாதனது மலரடிகளையே தினமும் நாடுகின்றது.

குறிப்பு:

எது தேவையோ அதனை நாடி இருப்பதே, ஒன்றை அடையும் குறிக்கோள் உடையவர்களது குணம். அது அன்னப்பறவை முதலான உயிரினங்களுக்கும் கூட இருக்கிறது.

நமது வாழ்வில் பெரும்பகுதி, தேவையற்றதைத் தேடி அலைவதிலும், தவறான வினாவிற்கு விடை தேடுவதிலுமே வீணாகிக் கொண்டிருக்கிறது. அதனால் எது சரியான தேவை என்பதை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். அத்தேவைகளுக்குச் சரியான அறம் சார்ந்த அறிவு இருப்பின், பிறகு சரியான வழியில் நாம் அதை அடையச் செல்ல முடியும். இதனாலேயே அறத்தை முன்னிலைப்படுத்தி, அறம், பொருள், இன்பம் (தர்மம், அர்த்தம், காமம்) என மனிதர்களுக்கான குறிக்கோள்கள் (புருஷார்த்தம்) காட்டப்பட்டன.

எனினும், ஒரு நிலைக்குப் பின், இக்குறிக்கோள்கள் எல்லாம், இன்பத்தின் பொருட்டே இருப்பதால், எது நிரந்தரமான இன்பத்தைக் கொடுக்கும் என்று ஆயும் அவசியம் ஏற்படுகிறது. அப்படி ஆய்ந்து, அதன் பயனாக நான்காவது குறிக்கோளான வீடு பேறு அல்லது மோக்ஷம் என்று நமக்கு மறைகள் காட்டுகின்றன. அப்பேறினைப் பெறுவதற்குப் பர அறிவும், பரம்பொருளின் அருளும் தேவை. ஆகவேதான் ஞானியரது மனம், வீடு பேறு எனும் அத்தேவையினை மட்டுமே நாடி, அதனைத் தருகின்ற பரசிவனின் திருவடி மலர்களையே, தங்கள் மனதில் எப்போதும் தாங்குகிறது. இதனையே இப்பாடல் உணர்த்துகின்றது. (59)

60 - ஏழையிடர் தீர்க்கும் எம்மான் அடி போற்றி!

रोधस्तोयहृतः श्रमेण पथिकश्छायां तरोर्वृष्टितो
भीतः स्वस्थगृहं गृहस्थमतिथिर्दीनः प्रभुं धार्मिकम् |
दीपं सन्तमसाकुलश्च शिखिनं शीतावृतस्त्वं तथा
चेतः सर्वभयापहं व्रज सुखं शंभोः पदाम्भोरुहम् ||६०||

ரோத$_4$ஸ்தோயஹ்ருத: ஶ்ரமேண பதி$_2$கஶ்சா$_2$யாம் தரோர்வ்ருஷ்டிதோ
பீ$_4$த: ஸ்வஸ்த$_2$க்$_3$ருஹம் க்$_3$ருஹஸ்த$_2$மதிதி$_2$ர்தீ$_3$ன: ப்ரபு$_4$ம் தா$_4$ர்மிகம் |
தீ$_3$பம் ஸந்தமஸாகுலஶ்ச ஶிகி$_2$னம் ஶீதாவ்ருதஸ்த்வம் ததா$_2$
சேத: ஸர்வப$_4$யாபஹம் வ்ரஜ ஸுக$_2$ம் ஶம்போ$_4$: பதா$_3$ம்போ$_4$ருஹம் ||60||

தன்னன்ன தன்னன்தனனன
தன்னன்ன தன்னன்தனனன
தன்னன்ன தன்னன்தனனன – தனதான

வெள்ளம்விழ உள்ளம்கரைஎனத்
தள்ளும்களைப் புள்ளன்நிழலென
அள்ளும்மழை அல்லப்புகுமனை - தனியாகச்

செல்லன்வழி இல்லப்பயனுற
அல்லன்நிதி உள்ளன்தயவுற
கொள்ளும்இருள் தள்ளத்தகுவொளி - குளிராலே

துள்ளல்பெற மெல்லச்சுடுபொறி
கொள்ளத்தன துள்ளப்பெருவிழை
வுள்ளும்நிலை கொள்ளக்குறியென - அதுபோலே

அல்லல்விட தள்ளப்பயமறு
வல்லச்சுகங் கொள்ளப் பதமலர்
அள்ளித்தெளி உள்ளத்தினியே - சிவசம்போ (60)

வெள்ளத்தில் வீழ்ந்தான் கரையையும், நடந்து களைத்தவன் நிழலையும், மழையில் நனைபவன் வீட்டினுள் புகுவதையும், வழிப்போக்கன் விருந்துண்ணலையும், வறியவன் வள்ளலையும், இருளில் இருப்பவன் ஒளி விளக்கையும், குளிரில் நடுங்குபவன் வெப்பத்தையும் எப்படி நாடுவானோ, அப்படியே, ஓ மனமே, அச்சம் தவிர்த்து, சுகத்தை அளிப்பதுமான, சம்புவாகிய சிவசக்தியினரின் பாதமலர்களை நாடுவாயாக.

குறிப்பு:

59-ம் பாடலில், சுகத்திற்காக நாம் தேடுகின்ற பண்பினைக் காட்டி, இறையடிகளே நிலையான சுகம் தரும், அதனால், அதையே, ஓ மனமே, நீ நாடுவாயாக, என்று காட்டிய பகவான் ஆதி சங்கரர் இப்பாடலிலே, அத்தகைய நாட்டம் எத்தனை ஆழமானதாக இருக்க வேண்டும் எனக் காட்ட, துன்பத்தை உதாரணமாகக் காட்டுகின்றார்.

ஒரு துன்பம் வரும்போது நமது மனதின் ஒரே குறிக்கோள் அத்துன்பத்திலிருந்து விடுதலை அடைவது தான். அதற்கு எடுத்துக்காட்டாக, வெள்ளம், களைப்பு, வறுமை, பசி, இருள், குளிர் எனக் காட்டி, இவை எல்லாவற்றையும் விடப் பெரிதான மரண பயம் மனிதர்களுக்கு மட்டுமே உள்ள குறை என்பதால், அக்குறையை நீக்க, பரசிவனின் பாதமலரினை, மிகவும் ஆழமான உறுதியுடன் நாட வேண்டும் என்று காட்டுகின்றார்.

ஒருமன முனைவு என்பது மனதினை ஒருமைப்படுத்தும் முயற்சி. மனதை ஆக்கிரமிக்கும் எந்த ஒரு குணமும், அக்குணத்தினால் நாடப்படும் பொருளின் மேல் குறியாய் இருக்கும். அக்குணம் நல்லதானாலும், தீயதானாலும் இது பொருந்தும்.

உதாரணமாக தன்னை நிந்திப்பதிலேயே ஒவ்வொரு பொழுதையும் செலவிட்ட சிசுபாலனை பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அழித்து, தன்னுள் ஆட்கொண்டதன் காரணம், சிசுபாலனின் குறியான மனம். அதே போல, நட்பால் யுதிஷ்டிரனும், பயத்தால்

கம்சனும், காதலால் கோபியர்களும் எனப் பலரும், மனதை ஒருமுகப்படுத்திப் பலனடைந்தனர்.

மனிதர்களுக்கே உரித்தான மரண பயம் எனும் குணத்தையே காரணம் காட்டி, அம்மரண பயத்தை நீக்க, மலர்ந்த சிவனுடைய திருவடிகளேயே நம்முடைய மனம் நாடட்டும் எனக் காட்டுகின்றது இப்பாடல். (60)

61 – பக்திவழி காட்டிப் பாவிப்பான் அடி போற்றி!

अङ्कोलं निजबीजसन्ततिरयस्कान्तोपलं सूचिका
साध्वी नैजविभुं लता क्षितिरुहं सिन्धुः सरिद्वल्लभम् |
प्राप्नोतीह यथा तथा पशुपतेः पादारविन्दद्वयं
चेतोवृत्तिरुपेत्य तिष्ठति सदा सा भक्तिरित्युच्यते ||६१||

அங்கோலம் நிஜ பீ$_3$ஜ ஸந்ததிரயஸ்காந்தோபலம் ஸூசிகா
ஸாத்$_4$வீ நைஜ விபு$_4$ம் லதா க்ஷிதிருஹம் ஸிந்து-$_4$ஸ்ஸரித்$_3$ வல்லப$_4$ம் |
ப்ராப்னோதீஹ யதா$_2$ ததா$_2$ பஸு$_1$-பதேபாதா :$_3$ரவிந்த$_3$-த்$_3$வயம்
சேதோவ்ரு-$_2$த்திருபேத்ய திஷ்ட$_2$தி ஸதா$_3$ஸா ப$_4$க்திரித்யுச்யதே ||61||

தானனன தானனன தானனன தானனன
தானனன தானனன – தனதான

கோந்துஎன வீழ்ந்தவிதை கோலமரம் சூழ்ந்தகதை
காந்தனுட னூசிமுனை - தனதாக
நேர்ந்தபதி சேர்ந்தசதி சார்ந்தமரம் போர்ந்தகொடி
ஊர்ந்தநதி கூடுங்கடல் - அதுபோலே
நீந்துமன மீண்டருமை நோன்றுசிவ மூன்றமதி
நூர்ந்தகதி சேருந்திரு - வடிசேர்ந்து
பாந்தநிலை தூயதருட் தோய்ந்தகலை நேயதவப்
பக்திநிலை ஆய்ந்தருள்க – பசுநாதா **(61)**

அங்கோல மரத்தின் விதைகள் விழுந்தாலும் அம்மரத்தின் அடியிலே ஒட்டி வளர்வதுபோல, குத்தூசி காந்தத்தை நாடுவதுபோல, பத்தினிப் பெண் தன் கணவனையே நினைத்து இணைதல் போல, மரத்தினைச் சார்ந்து பிணையும் கொடியினைப்போல, ஓடிச் சென்று கடலில் கலக்கும் நதியினைப்போல, மனதின் விழுப்பமும், உயிர்களின் தலைவனான பரசிவனின் பாத மலரிரண்டையும் எப்போதும் எண்ணி, நிலை பெற்றிருந்தால் அதுவே பக்தி எனப்படும்.

குறிப்பு:

பக்தியின் பலவகை நிலைகளை இப்பாடல் விளக்குகிறது.

அங்கோலம் அல்லது வெளித்தாண்டி எனும் மரத்தின் விதைகள் கீழே விழுந்தாலும், மரத்தின் அடியில் ஒட்டிக் கொள்ளுமாம். காந்தம்-ஊசி இவற்றின் ஈர்ப்பும் ஒருவகை. மனமொத்த கணவன், மனைவியின் இணைப்பும் ஒருவகை. மரத்தோடு பிண்ணிப் பிணைந்த கொடியும் ஒருவகை. எல்லாவற்றுக்கும் மேலாக, எங்கு பிறந்தாலும், எந்த வழியில் நடந்தாலும் ஒரே குறிக்கோளாகக் கடலை மட்டுமே நாடி, ஓடி, அதில் இறுதியில் கலந்து தன்னிலையையும் இழக்கின்ற நதியும் ஒருவகை. அது அத்வைதம் எனும் இரண்டற்ற நிலையினை ஈட்டும் பக்தி. இவை எல்லாமே இறைவனின் பால் நமக்கு இருக்கும் ஈடுபாட்டினை, பக்தி எனும் பொருளால் உணர்த்தப்படும் அன்பின் நிலையாக இப்பாடலில் காட்டப் படுகின்றன.

‘சேதோ வ்ருத்தி’ என்ற அறிவின் வளர்ச்சியையும், ‘ஸதா திஷ்டதி’ என எப்போதும் நிலை பெற்றிருத்தல் என்பதையும். தமிழில், அருமையான குணங்களை ஈண்ட மனம், சிவச் சிந்தனையில் ஊன்றி, நோன்று நூர்த்து இருத்தல் எனப் பொருள் தரும்படியாக ‘மீண்டருமை நோன்றுசிவ மூன்றமதி நூர்ந்தகதி’ எனக் காட்டப் பட்டது. (61)

62 – சிவபக்தியாம் அன்னைச் சீலம் அடி போற்றி!

आनन्दाश्रुभिरातनोति पुलकं नैर्मल्यतच्छादनं
वाचा शङ्खमुखे स्थितैश्च जठरापूर्तिं चरित्रामृतैः |
रुद्राक्षैर्भसितेन देव वपुषो रक्षां भवद्भावना-
पर्यङ्के विनिवेश्य भक्तिजननी भक्तार्भकं रक्षति ||६२||

ஆனந்தா$_3$ஸ்$_1$ருபி$_4$ராதனோதி புலகம் நைர்மல்யதஸ்$_1$சா$_2$த$_3$னம்
வாசா ஸ$_1$ங்க$_2$ முகே$_2$ ஸ்தி$_2$தைஸ்$_1$ச ஜட$_2$ராபூர்திம் சரித்ராம்ரு-$_2$தை :|
ருத்$_3$ராக்ஷைர்ப$_4$ஸிதேன தே$_3$வ வபுஷோ ரக்ஷாம் ப$_4$வத்$_3$பா$_4$வனா-
பர்யங்கே விநிவேஸ்$_1$ய ப$_4$க்தி ஜனனீ ப$_4$க்தார்ப$_4$கம் ரக்ஷதி ||62||

தனனனன தனனனன தனனனன தனனனன
தனனனன தனனனன – தனதான

களித்தவிழி யுதித்தருவி குளித்துபழி யுதிர்த்தநல
வழித்துணிய துடுத்தினிய - வளமான
மொழிக்குவரி சங்குசிவ வழிக்குதவு முங்கதைகள்
அமிழ்த்தமுத மூட்டியுடற் - கணியாக
உருத்திரமுந் திருநீரு முடுத்துயர வேதுணையும்
உற்றசுக முற்றுமனச் - சிறுபிள்ளை
பருத்திருவுந் தியானமணிப் பட்டதிலே தொட்டிலிட்டுப்
பக்தியரும் பேரன்னை – பலமேதான் (62)

இறைவா, பக்தியாகிய அன்னை, ஆனந்த விழி நீரால் குளியலிட்டு, மேனியெங்கும் மகிழ்ச்சியையும், குற்றமிலா குணங்களை ஆடையாய் அணிவித்து, நல்வார்த்தையாகிய சங்கினால், சிவபுராணமாகிய நினது கதைகளாகிய அமுதினை, நிறைவான உணவாக ஊட்டிவைத்து, ருத்திராக்ஷம், திருநீறு இவற்றைத் துயரறுக்கும் துணைகளாக அணிவித்து, நின்னையே சிந்திகின்ற தியானமாகிற தூளியிலே ஆழ்ந்தயர வைத்து, பக்தி

கொண்டவனாக விளங்கும் மனமாகிய குழந்தையைக் காப்பாற்றுகிறாள்.

குறிப்பு:

பக்தி அன்பின் பெருநிலை. ஏனெனில், அது இறைவன்பால் காட்டும் அன்பு. பக்திகொண்டுவிட்டால், படிப்படியாக, உள்ளும் புறமும் மகிழ்ச்சி நிலவும். தூய்மையான மனமும், நன்மை கொடுக்கும் உண்மை மொழியும், அம்மொழியில் எப்போதும் அறமும், இறையுணர்வும் விளங்கும். இறைவனின் பக்தி வெளிப்பாட்டைக் காட்டும் அடையாளங்களான உருத்திராட மாலைகள், திருநீறு முதலிய பூச்சுக்கள் முதலிய உடலில் விளங்கும்.

அத்தூயநிலையினால், எவ்வகை அனுபவங்கள் வந்தாலும் அவற்றை ஏற்கும் திடமும் நமக்கு ஏற்பட்டு, சிவ நினைவாகிய ஆனந்தத் தியானத்திலே நாம் ஆழ்ந்துவிடுவோம். அந்நிலையை மனம் அடைவதே பெரும் பேறு. மனமாகிய குழந்தைக்கு, அப்பலனைச் செய்பவள், பக்தியாகிய தாய்.

ஞானகுருவாகிய பகவான் ஆதி சங்கரர், பக்தியின் முக்கியத்துவத்தை இப்பாடலில் காட்டியுள்ளார். (62)

63 - எவ்வழியும் செவ்வழியாய் ஏற்பான் அடி போற்றி!

मार्गावर्तितपादुका पशुपतेरङ्गस्य कूर्चायते
गण्डूषांबुनिषेचनं पुररिपोर्दिव्याभिषेकायते |
किंचिद्भक्षितमांसशेषकबलं नव्योपहारायते
भक्तिः किं न करोत्यहो वनचरो भक्तावतंसायते ||६३||

மார்கா₃வர்திதபாது₃கா பஶுபதேரங்க₃ஸ்ய கூர்சாயதே
க₃ண்டூ₃ஷாம்பு₃னிஷேசனம் புரரிபோர்தி₃வ்யாபி₄ஷேகாயதே |
கிஞ்சித்₃ப₄க்ஷிதமாம்ஸஶேஷகப₃லம் நவ்யோபஹாராயதே
ப₄க்தி: கிம் ந கரோத்யஹோ வனசரோ ப₄க்தாவதம் ஸாயதே || 63||

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன – தனதான

போயுவழித் தேயுமிதி யாகுமடித் தேவமுடிப்
பூவுமுடிப் பேஎனவே – புணைந்தேக
வாயுமுமிழ்த் தேறலபி ஷேகவடி நீரும்புர
ஊருமழித் தானினுடல் – நனைந்தோடும்
வாயுந்தரிந் தேகடித்து ஆயுந்திறைச் சீபடைத்த
தாயுமிக வேவிந்தை - ஆஹாஹோ
வேயுவன வேடனுநல் லாகுவனா யாகவெது
ஆகுமுயர் பக்தியினா – லாகாதோ? (63)

வழி நடந்து தேய்ந்த மிதியடிகள், உயிர்நாதா, உனது சிரத்தில் கூர்ச்சமாக வைக்கப்பட்டதே, வாயினால் உமிழ்ந்த எச்சில், முப்புரங்களை அழித்த உனக்கு அபிடேக நீரானதே, சிறிது கடித்துப் பார்த்து மீந்த இறைச்சியின் எச்சம், உனக்குப் படைக்கப்பட்ட உணவானதே, என்ன விந்தை! காட்டில் உழலும் வேடன் மிகச்சிறந்த அடியாராக ஆகிறானே! பக்தி எதைத்தான் சாதிக்காது!

குறிப்பு:

இப்பாடலில் பக்தியின் அளப்பறிய ஆதாயத்தைக் காட்டுவதற்காக, மறையறிவோ, தர்மம், யோகம் எனும் பெரு நெறிகளோ கற்றறியாதவரான கண்ணப்ப நாயனாரின் உயர்வினை எடுத்துக் காட்டுகின்றார், பகவான் ஆதிசங்கரர்.

வேடுவனான திண்ணன் என்பார், வனம் ஒன்றில் இருக்கும் சிறு ஆலயத்தில் விளங்கிய சிவலிங்கத்தின்பால் மட்டற்ற தூய அன்பு கொண்டவராக இருந்தார். அவ்வுருவத்திற்கு தினசரித் தொழுகை செய்து வந்தார். ஆகம முறைகள் ஏதும் அறியாதவர் அல்லவா! அன்பு ஒன்றே அவரிடம் இருந்ததால், தனது செருப்பினை லிங்கத்தின் தலையில் கூர்ச்சமாக வைத்தும், வாயில் கொணர்ந்த நீரை உமிழ்ந்து அபிடேகம் செய்தும், கடித்துப் பார்த்து வேட்டையாடிய இறைச்சியைப் படைத்தும், மனதால் பெரிதும் உருகி, ஒரு பொழுதும் தவறாமல் வணங்கி வந்தார்.

ஓர் நாள், சோதனையாக, சிவபிரான் தமது லிங்க உருவத்தின் கண்களில் உதிரம் வருவதாய்க் காட்ட, மனம் பதைபதைத்த திண்ணன், தனது விழிகளில் ஒன்றைத் தோண்டி சிவலிங்கத்தில் அப்ப, இறைவன் மற்றொரு விழியிலும் உதிரம் காட்ட, சற்றும் தளராமல், தன் காலினை லிங்கத்தின் முகத்தில் அடையாளத்திற்காகப் பதித்து, மற்றொரு கண்ணையும் தோண்ட முயன்றார் திண்ணன். பக்தியால், கண்ணினை அப்பிய திண்ணனை வியந்து, 'கண்ணப்பா' என அன்பினால் அழைத்து அருள் காட்டியது பரப்பிரம்மம்.

இவ்வரலாற்றினைக் காட்டி, அன்பு ஒன்றே போதும், இறைவன்பால் வைக்கும் அன்பாகிய பக்தி, அளப்பறிய வாழ்வையும் வழியையும் தரும் என்று பகவான் இப்பாடலில் காட்டுகின்றார். (63)

64 - தாளுறையாய்க் கடிமனதைத் தந்தேன் அடி போற்றி!

वक्षस्ताडनमन्तकस्य कठिनापस्मारसंमर्दनं
भूभृत्पर्यटनं नमस्सुरशिरःकोटीरसंघर्षणम् |
कर्मेदं मृदुलस्य तावकपदद्वन्द्वस्य गौरीपते
मच्चेतोमणिपादुकाविहरणं शंभो सदाङ्गीकुरु ||६४||

வக்ஷஸ்தாட$_3$னமந்தகஸ்ய கடி$_2$னாபஸ்மாரஸம்மர்த$_3$னம்
பூ$_4$ப்$_4$ருத்பர்யடனம் நமஸ்ஸுரஶிர:கோடீரஸங்க$_4$ர்ஷணம் |
கர்மேத$_3$ம் ம்ருது$_3$லஸ்ய தாவகபத$_3$த்$_3$வந்த்$_3$வஸ்ய கௌ$_3$ரீபதே
மச்சேதோமணிபாது$_3$காவிஹரணம் ஶம்போ$_4$ ஸதா$_3$ங்கீ$_3$குரு || 64||

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன – தனதான

வல்லிய காலக னுள்ளிய மார்பக
மல்லறி யாதழி – மிதிபாதங்
கல்லடி யாமலை செல்லம ரார்சிர
வுள்ளணி மாகுட – முடிகூடும்
மெல்லிய தாமித முள்ளருந் தேவடி
நல்லிய தாய்திரு - வடியேயென்
உள்ளிய மாமணி யுன்செருப் பாயணிச்
செவ்விய மாயினி – சிவசம்போ (64)

வலிய காலனின் மார்பில் உதைத்தல், அறியாமையாகிய கடின நோயினை மிதித்தல், கரடுமுரடாகிய மலைகளில் நடத்தல், பணிகின்ற தேவர்கள் அணியும் மணி மகுடத்தில் பதித்தல் ஆகிய இச்செயல்கள் எல்லாம் தங்களுடைய மென்மையான இரு திருவடிகளுக்கும் கடமையாக உள்ளது. (அதற்கு உதவ) சம்போ, எப்போதும், எனது மனதை நினது மாணிக்க மிதியடிகளாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

குறிப்பு:

நமது மனம் இறைவனின் கால்களுக்கு மிதியடி ஆவதால் என்ன பயன்?

அதனால், மனம் பயம் அற்று, எல்லாப் பயனும் அடையும். ஏனெனில், இறைவனது கால்கள் எமனை உதைப்பதால், மரண பயம் ஒழிகிறது. ஆணவ மலத்தின் அடையாளமான முயலகனை மிதிப்பதால், 'நான்' எனும் செருக்கு நம்மை விட்டுப் போகிறது. மலைகளில் இறைவனின் திருவடிகளில் நடப்பதாலும், நடமாடுவதாலும், திட உறுதி கிடைக்கிறது. எல்லாச் சுகங்களும் அனுபவிக்கும் தேவர்களின் தலைகளில் பதிக்கப்படும்போது, தேவலோக இன்பங்களும் நிலையற்றது என்பது தெளிகிறது. அதனால் பரசிவ சுக வெள்ளத்திலேயே இருக்கும் பயன் கிடைக்கிறது.

அதனால்தான், இறைவன் கால்களுக்குச் செருப்பாய் மனம் இருப்பதே சிறப்பு என இப்பாடலில் காட்டப்பட்டது. (64)

65 - அடிபணியத் திருவருளும் அய்யன் அடி போற்றி!

वक्षस्ताडनशङ्कया विचलितो वैवस्वतो निर्जराः
कोटीरोज्ज्वलरत्नदीपकलिकानीराजनं कुर्वते |
दृष्ट्वा मुक्तिवधूस्तनोति निभृताश्लेषं भवानीपते
यच्चेतस्तव पादपद्मभजनं तस्येह किं दुर्लभम् ||६५||

வக்ஷஸ்தாட3னஸ2ங்கயா விசலிதோ வைவஸ்வதோ நிர்ஜரா:
கோடீரோஜ்ஜ்வலரத்னதீ3பகலிகானீராஜனம் குர்வதே |
த்3ருஷ்ட்வா முக்திவதூ4ஸ்தனோதி நிப்4ருதாஸ்2லேஷம் ப4வானீபதே
யச்சேதஸ்தவ பாத3பத்3மப4ஜனம் தஸ்யேஹ கிம் து3ர்லப4ம் || 65||

தானனன தானதன தானனன தானதன
தானனன தானதன – தனதான

மாரிலுதைத் தானடியின் பாரமழுத் தாலெமனும்
ஓடியொளித் தானமரர் – முடிசூடும்
கூரிலுறைத் தானமணி ஆரமுயர்த் தாகுமொளிச்
சூடமணித் தீபமுய - ரடிபேண
நேரிலடி காணவுட னூறிபிற வாபதவி
கூடியணைத் தேமகிழும் – மலர்ப்பாதம்
யாருமன மேகுமவ ரேதுமடை வாரடையப்
பேறுமினி யேதுபசு – பதிநாதா (65)

மார்பில் வலிய உதைத்ததால் எமன் ஓடி விடுகிறான். (அப்பாதங்களுக்கு) பணிகின்ற தேவர்களின் மகுடத்து மாணிக்கங்கள் கற்பூர தீப ஆராதனை செய்கின்றன. (அப்பாதங்களைக்) கண்டதும் முக்தியாகிய நங்கை இறுக அணைத்தின்பம் தருகிறாள். பவானியின் பதியே, எவனுடைய மனம் நினது திருவடித் தாமரையினைப் பணிந்து நாடுகிறதோ, அவனால் இங்கே அடைய முடியாத நற்பலன் ஏதும் இருக்கிறதா என்ன! (இல்லை).

குறிப்பு:

திருவடிகளே பெருந்துணை என்பது இப்பாடலின் கருத்து. அது மருள் அகற்றுவது. அதற்கு விளக்கமே, தம்மை அண்டிய மார்க்கண்டேயனுக்காக, அந்தகனாகிய எமனின் மார்பில் உதைத்து, மரண பயத்தை விரட்டிய திருவடிகள் என்று காட்டப்பட்டது. அது அருள் பெருக்குவது. அதனாலேயே எல்லாச் சுகங்களும் இருந்தும், தேவர்கள் சிவபிரான் திருவடிகளில் சிரம் பதித்துப் பணிகின்றனர். அது பேரின்பம் தருவது. நிலையான சுகமாகிய பேரானந்தம் இறைவனது திருவடிகளிலேயே கிடைக்கிறது. அப்படியானால், அத்திருவடிகளை மட்டுமே பணிந்து இருந்தால் போதுமே! எல்லாச் சுகங்களும் அடைந்து, எல்லாப் பயமும் நீங்கி, பெருநிலையை அடையலாமே! இப்படி வியக்கிறது இப்பாடல். (65)

66 - ஆட்டிவிளை யாடுகின்ற அத்தன் அடி போற்றி!

क्रीडार्थं सृजसि प्रपञ्चमखिलं क्रीडामृगास्ते जनाः
यत्कर्माचरितं मया च भवतः प्रीत्यै भवत्येव तत् |
शंभो स्वस्य कुतूहलस्य करणं मच्चेष्टितं निश्चितं
तस्मान्मामकरक्षणं पशुपते कर्तव्यमेव त्वया ||६६||

க்ரீடா$_3$ர்த$_2$ம் ஸ்ருஜஸி ப்ரபஞ்சமகி$_2$லம் க்ரீடா$_3$ம்ருகா$_3$ஸ்தே ஜனா:
யத்கர்மாசரிதம் மயா ச ப$_4$வத: ப்ரீத்யை ப$_4$வத்யேவ தத் |
ஸ$_2$ம்போ$_4$ ஸ்வஸ்ய குதூஹலஸ்ய கரணம் மச்சேஷ்டிதம் நிஸ்$_2$சிதம்
தஸ்மான்மாமகரக்ஷணம் பஸு$_2$பதே கர்தவ்யமேவ த்வயா || 66||

தானனன தானதன தானனன தானதன
தானனன தானதன – தனதான

ஆதிமுத லானவுல காதும்விளை யாடவுயி
ரானபொரு ளாவுமுன - தருளாலே
யாதுமென தானசெய லாதுமுன தாகவுயர்
வானதருங் காதலறி - வதனாலே
ஓதியடி யாரவருட் சேதனமுற் சாகம்விளை
யாடும்முத லாளியது– வெகுதிண்ணம்
நாதமுத லானவுயிர் நாயகனே ஏழையெனை
ஆளுங்கட னாமுடனே –அடைப்பாயே (66)

திருவிளையாடலாய் உலகங்களை எல்லாம் படைப்பதும், படைத்த உயிர்களை விளையாட்டுப் பொருளாய்க் கொள்வதும் உமது இயல்பு. (ஆகையால்) எனது செயல்கள் எவையோ, அவை யாவும் நினது அன்பினாலேயே நடத்தப்படுன்றன. என்னை ஆட்டுவித்தலும், நினது அடியார்களின் ஆனந்தமும், நின் திருவிளையாடல்தான் என்பது மிகத் திண்ணம். ஆதனால், உயிர்களின் தலைவரே, என்னைக்

காத்து அருளல் என்பது, உம்மால் செய்யப்பட வேண்டிய கடமையே ஆகும்.

குறிப்பு:

ஆக்கியும், மாற்றியும், அழித்தும், மறைத்தும், அணைத்தும், அருள்கின்ற இறைவனின் செயலினாலேயே எல்லா உலகங்களும் உயிர்களும் அமைகின்றன. இச்செயல் நடந்து கொண்டே இருப்பதாலும், இதன் மூல காரணம் நம்மால் அறியப்பட முடியாது அமைவதாலும், அனைத்தும் இறைவனின் திருவிளையாடல் என்று ஏற்பதே வழி என அருமறைகள் பறைகின்றன.

அப்படியானால், எனது செயலும், என்னைச் செய்யுமாறு ஆட்டுவிப்பதும், இறைவனின் திருவிளையாடல் என்றுதானே ஆகிறது! அப்படியானால், நான் எதற்கு அஞ்ச வேண்டும்? அல்லன, நல்லன என எது நடப்பினும், அதனை ஏற்று, திருவிளையாட்டில், சிறுபணியாற்றும் பொம்மையாகவே யான் இருந்து விட்டுப் போகிறேனே!

இவ்வாறு எல்லாம் எண்ணிப் பார்ப்பதால், பக்தன் உலகில் விளையும் எல்லாச் செயலுக்கும், விளைவுக்கும் தான் ஒரு சாட்சியாக மட்டுமே இருந்து கொண்டு, மிகவும் மகிழ்ச்சியாக வாழ்வைக் கழிப்பான். அந்த அறிவினால், விளையாட்டுப் பொம்மைகளான நம்மைப் பாதுகாப்பது, திருவிளையாட்டின் தலைவனான இறைவனது கடமையே எனத் தெளிகிறோம். அதனால், காக்கும் கடனை (உடனடியாக) அடைப்பது கடவுளின் பொறுப்பு என உறுதி கொண்டு, வாழ்க்கையை விளையாட்டாய் எடுத்துக் கொள்வதே அறிவார்ந்த செயல். (66)

67 - சிவஞானத் தியானமருள் சீலன் அடி போற்றி!

बहुविधपरितोषबाष्पपूर-
स्फुटपुलकाङ्कितचारुभोगभूमिम् |
चिरपदफलकाङ्क्षिसेव्यमानां
परमसदाशिवभावनां प्रपद्ये ||६७||

ப$_3$ஹுவித$_4$பரிதோஷபா$_3$ஷ்பபூர-
ஸ்பு$_2$டபுலகாங்கிதசாருபோ$_4$க$_3$பூ$_4$மிம் |
சிரபத$_3$ப$_2$லகாங்க்ஷிஸேவ்யமானாம்
பரமஸதா$_3$ஸி$_2$வபா$_4$வனாம் ப்ரபத்$_3$யே || 67||

தனன தனதனன தனன தனதனன
தனன தனதனன – தனதான

சகல வகையுவகை பெருக மிகையமுகை
வருக மிகமகிழ - அதுவாக
புகல அகலவுடற் புரள மிகவுமயிர்ப்
புலரச் சிலிர்த்துயரப் – புலமாகி
பகலத் தகையவிழப் பிறவித் தடையகலப்
பயணப் பயனதனை – மிகவேண்டிப்
பதியப் படையுமிகை அடையப் பரசிவனின்
பதங்கள் புகலெனவே – பணிவேனே (67)

பலவிதமான மகிழ்ச்சி பெருகவும், அம் மகிழ்ச்சியால் கண்ணீர் சிந்தவும், வெளியே தெரியும்படியாக உடலின் மயிர்க்கால்கள் எல்லாம் சிலிர்க்கவும், நற்பயனை விளைக்கும் நிலமானதும், முக்தியைத் தேடுபவர்களால் வணங்கப்படுவதுமான, சக்தியாகிய அன்னையுடன் கூடி விளங்கும் ஸதாசிவமாகிய பேருண்மையைப் பணிகின்றேன்.

குறிப்பு:

எல்லாம் இறைவன் திருவிளையாடலே என உறுதி அடைந்த மனம், யாவும் இறைவனால் நிறைக்கப்பட்ட பொருளே எனப் பார்க்கின்றது. அப்படிப் பார்ப்பதனால், (முன்பு சாதாரணமாகத் தெரிந்த) இயற்கையின் எல்லா மாற்றங்களும், இனிமேல் மனதை வெகுவாக ஈர்க்கின்றன. அதனால் சொல்ல முடியாத வியப்பு, நாம் உலகில் பார்க்கும் எல்லாவற்றிலும் விளைகிறது.

அதற்கெல்லாம் காரணமான திருவடிகளை மனக் கண்ணால் நோக்கும் போது, எல்லா வியப்புக்களும் நம்முள்ளே பணிவையும், வார்த்தைக்குள் அடங்கா வணக்கத்தையும் தோற்றுவிக்கின்றன. எத்தகைய பெரும்பயன் மனிதப்பிறவிக்குக் கிடைத்திருக்கிறது என்ற தெளிவும், நன்றியும் வருகிறது. அதனால் மனமும், உடலும் ஆனந்தத்தால் திக்குமுக்காடி, நற்சுகத்தில் திளைக்கின்றன.

துயரம், கவலை என்று எண்ணியிருந்த நிலைகள்கூட, இனிமேல் அனுபவித்து ரசிக்க வேண்டிய பயன் என்றே ஏற்றுக் கொள்ளும் பக்குவம் கிடைக்கிறது.

அத்தகு அனுபவ இன்பம், வார்த்தைகளால் கோர்க்கப்படக் கூடியதா என்ன! (67)

68 - பக்தியெனும் பால்சுரந்த பசுபதியின் அடி போற்றி!

अमितमुदमृतं मुहुर्दुहन्तीं
विमलभवत्पदगोष्ठमावसन्तीम् ।
सदय पशुपते सुपुण्यपाकां
मम परिपालय भक्तिधेनुमेकाम् ॥६८॥

அமிதமுத₃ம்ருதம் முஹுர்து₃ஹந்தீம்
விமலப₄வத்பத₃கோ₃ஷ்ட₂மாவஸந்தீம் |
ஸத₃ய பஸு₂பதே ஸுபுண்யபாகாம்
மம பரிபாலய ப₄க்திதே₄னுமேகாம் || 68||

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன – தனதான

தத்தறு சுகவமு தத்தமு ததுவக
மித்துற மிகசுக – மிகையாகி
நட்டிரு வுறவடிக் கொட்டிலி லிருவள
நட்டுள மிடப்பெரு – நலமேகாண்
முற்றகு செயலருட் பற்றவு முயரிய
நிற்றவ மனமா - நிரையாகும்
பற்றுறு பரசிவ முற்றருட் பசுவினைப்
பசுபதி யேயருள் – பரிபாலா (68)

அமிழ்திலும் அமிழ்தான அளவற்ற சுகத்தைத் தொடர்ந்து விளைவிப்பதும், தூய்மையான உமது திருவடிகளாகிய கொட்டிலிலே (எப்போதும்) மகிழ்ச்சியுடன் இருப்பதும், முன் செய்த நல்வினையின் பயனாக விளைந்ததுமான என்னுடைய பக்தியாகிய பசுவினை, கருணை மிக்கவரே, உயிர்களின் தலைவரே, காப்பீராக.

குறிப்பு:

பசுவானவன் ஜீவன் என்பது ஒரு ஒப்புமை. பசுக்களின் தலைவன் எனக் காட்டும் பசுபதியே சிவம்.

இப்பாடலிலே பசுவானது, பக்திக்கு ஒப்புமை கூறப்பட்டது. அமைதியும், எப்போதும் ஒன்றையே அசை போட்டுக் கொண்டிருப்பதும், இனிய பாலினைத் தருவதுமான பசுவினைப் போன்றதே பக்தி. அது இறைவனது திருவடிகள் எனும் கொட்டிலே கட்டப்பட வேண்டும். எப்போதும் சிவத்தியானத்தை அசை போட்டுக் கொண்டிருக்க வேண்டும். அதனால், பரசிவ சுகப்பெரு வெள்ளமாகப் பாலமுது சுரக்கும்.

அத்தகு பக்தியாகிய பசு நமக்குள் இருக்கின்றது என்றால், அது நாம் முன் செய்த நல்வினையின் பலன். அப்பசுவாகிய பக்தி இப்பிறவியில் நன்கு வளர்க்கப்பட வேண்டும் என்பதால், அதற்கான வளத்தையும், திடத்தையும் இறைவனிடம் கேட்கிறது இப்பாடல். (68)

69 - பாவக் குறை அழிக்கும் பரசிவனின் அடி போற்றி!

जडता पशुता कलङ्किता
कुटिलचरत्वं च नास्ति मयि देव |
अस्ति यदि राजमौले
भवदाभरणस्य नास्मि किं पात्रम् ||६९||

ஜட₃தா பஸு₂தா கலங்கிதா
குடிலசரத்வம் ச நாஸ்தி மயி தே₃வ |
அஸ்தி யதி₃ ராஜமௌலே
ப₄வதா₃ப₄ரணஸ்ய நாஸ்மி கிம் பாத்ரம் || 69||

தனதனன தத்தனன தனதனன தத்தனன
தனதன்ன தத்தனன – தனதான

அருகறிவு மத்தமென மிருகமென ஒத்தகுணச்
சிறுகதிய சுத்தமெனச் – சிறிதாகிக்
குறுகவடி வுற்றபிறை உருவடிவ முற்றகுறை
பெறுகறைக ளற்றனெனைப் - பெருமானே
ஒருசமயம் மற்றநில வுருவமையப் பெற்றகுறை
இருகவுர முற்றெனினில் - இதுபோழ்து
திருமதியுஞ் சித்தமென சிரமடையும் புத்தணியாய்த்
திறமதிர நித்திலமாத் – திகழ்வேனோ (69)

மடமை கொண்டதும், மிருகத்திற்கு ஒப்பானதும், பல கறைகளுடன் விளங்குவதும், குறுகியும், வளைந்தும் இருக்கும் தன்மையுமான இக்குறைகள் எல்லாம் என்னிடத்தில் இல்லை. ஒருவேளை அப்படிக் குறைகளுடன் இருந்திருந்தால், பிறை சூடிய பெருமானே, உம்முடைய அணிகலனாக, ஏற்றுக் கொள்ளப்பட யானும் தகுதி உடையவனாக ஆகி விடுவேனே!

குறிப்பு:

உயர்வு நவிற்சி அணி போல் பொருள் கொள்ள வேண்டிய பாடல் இது. கவிஞர்களால் நிலவுக்குப் பெண்மையும், அதை யொட்டிய மடமையும் ஒப்பாகக் காட்டப்படும். நிலவு ஒளியற்றது என்பதால் மடமை கொண்டது என்றும் ஆகிறது. நிலவிலே கறைகள் தெரிகின்றன. வளைந்தும் தேய்வதுமானது நிலவு. அத்தகைய குறைகளுடைய நிலவைத்தான் சிவசக்தியினர் தமது தலையிலே அணிந்துள்ளனர். பக்தன் அறிவுடன் மடமை இல்லாமலும், தர்ம வழியில் நடந்து வருவதால் குறைகள் இல்லாமலும், நேர்மையினால் நிமிர்ந்து உலகத்தில் வாழ்ந்து வருவதால், அவனிடம் நிலவைப் போன்ற குறைகள் இல்லை என எண்ணியே, சிவபிரான், பக்தனையும் அணிகலனாகச் சேர்த்துக் கொள்ள வில்லையோ என பகவான் ஆதி சங்கரர் இப்பாடலில் வியக்கிறார்.

அறிவு, அறியாமை (வித்தை, அவித்தை) என்பன எவை? உபநிடதங்கள் காட்டும் பர அறிவினை ஒட்டிப் பார்த்தால், தர்மமும், தர்மப்படி வாழும் நெறி அறிவும் கூட ஒரு பருவத்தில், 'அவித்தை' அல்லது மடமை என்று ஆகிவிடுகிறது. அதை உணர்வதால், அறவோனும் தமக்குள் மடமை இருப்பதை உணர்வான்.

உடல் என்பது இருந்தாலே அது கறைபடிவதாகிறது. வல்லுடல், மெல்லுடல், காரணவுடல் மூன்றும் பெற்றதால், நமக்கும் கறை இருக்கிறது. மேற்கூறிய மடமையாலும், கறைகளாலும், நாமும் வளைந்தும், தேய்ந்தும் தான் இருக்கிறோம். அப்படி நாம் உணர்ந்து விட்டால், நிலவுக்கு நாமும் ஒப்பு அல்லவா? அதன் அடிப்படையில் நாம் முறையிட்டால், இறைவனின் திருவடியே கதி என்று இருந்து விட்டால், குறைகளுடைய நிலவாக நம்மையும் ஏற்று, அணிந்து கொள்ள வேண்டியது இறைவனின் கடன் அல்லவா! இப்படித்தான் இப்பாடலின் உட்கரு இருப்பதாகத் தோன்றுகிறது. மேலும், பகவான் ஆதி சங்கரர் பக்தனுக்கு இருப்பதாகக் காட்டும் நற்குணங்களை எல்லாம் நாம் அடைந்து விட்டோமா என்ன! இக்கேள்வியும் மனதில் தைக்கின்றது. (69)

70 – எளிதாகி இனிதாகி ஏற்பான் அடி போற்றி!

अरहसि रहसि स्वतन्त्रबुद्ध्या
वरिवसितुं सुलभः प्रसन्नमूर्तिः |
अगणितफलदायकः प्रभुर्मे
जगदधिको हृदि राजशेखरोऽस्ति ||७०||

அரஹஸி ரஹஸி ஸ்வதந்த்ரபு$_3$த்$_3$த்$_4$யா
வரிவஸிதும் ஸுலப$_4$: ப்ரஸன்னமூர்தி: |
அக$_3$ணிதப$_2$லதா$_3$யக: ப்ரபு$_4$ர்மே
ஜக$_3$த$_3$தி$_4$கோ ஹ்ருதி$_3$ ராஜஸே$_2$க$_2$ரோ(அ)ஸ்தி || 70||

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன – தனதான

அப்புற மும்மக முட்புற மும்தகு
நுட்புண ரும்மறி - வெளிதாக
அர்ச்சித முந்துதி அத்தனை யுந்தரும்
அற்புத னுந்திரு – வடிவாகி
நற்பய னுந்தர முற்பட னும்வெகு
பற்பல னுந்தரு – பதியாகி
கற்பித மும்புவி யப்புர மும்மதி
யுற்சிர னேமன – முறைவாயே (70)

வெளியிலும், மனதின் உட்புறமாகவும், தெளிவான அறிவால், மிகவும் எளிதாகத் துதித்து வணங்குவதற்கு ஏற்றவராகத் தோற்றம் அளிக்கும் பரசிவனே, தாங்கள் நல்லருள் தருவதற்கு நாட்டம் உடையவராகவும், கணக்கிலடங்காத நற்பயனைத் தருபவராகவும், மாறக்கூடிய உலகங்களை எல்லாம் கடந்து இருந்து ஆள்பவராயும், பிறையினைச்

சிரமணிந்த பெருமானாயும் விளங்குபவர். நீவிர், எனது உள்ளத்துள் உறைய வேண்டும்.

குறிப்பு:

படைப்பு என்றால், படைத்தவன் படைத்த பொருளுக்கு அப்பால் இருப்பதுதானே விதி! அதனால், இறைவன் எல்லா உலகங்களையும் தாண்டி இருப்பவன் என்பதே பொருள். அந்த இறைவனை நாம் எப்படி உலகங்களை எல்லாம் தாண்டி அடைய முடியும்?

இங்கே தான் படைப்பின் தத்துவம் உணரப்படவேண்டும். படைக்கப்பட்ட பொருள், படைத்தலாகிய செயல், படைத்தவன் ஆகிய மூன்றுமே இறைவன் என்பதால், எல்லாப் படைப்புக்களுக்கு வெளியேயும், அதே சமயம், எல்லாப் படைப்புக்களுக்கு உள்ளேயும் இறைவன் இருக்கின்றான்.

பிறையணிந்த பெருமானின் பரவொளியே வெளியிலும், உள்ளேயும் எல்லாமுமாய் இருப்பதாக நாம் உணர்ந்து, அதனால் 'யாதும் சிவமயம்' என வியந்து, எல்லோரிடத்தும், எப்பொருளிடத்தும் அன்பு மட்டுமே காட்டி நாம் வாழ முடியும். வாழ வேண்டும். (70)

71 – பக்திக் கணை குறித்த முக்திப் பயன் போற்றி!

आरूढभक्तिगुणकुञ्चितभावचाप-
युक्तैः शिवस्मरणबाणगणैरमोघैः ।
निर्जित्य किल्बिषरिपून् विजयी सुधीन्द्रः
सानन्दमावहति सुस्थिरराजलक्ष्मीम् ॥७१॥

ஆரூட₄ப₄க்திகு₃ணகுஞ்சிதபா₄வசாப-
யுக்தை: ஸி₂வஸ்மரணபா₃ணக₃ணைரமோகை₄: |
நிர்ஜித்ய கில்பி₃ஷரிபூன் விஜயீ ஸுதீ₄ந்த்₃ர:
ஸானந்த₃மாவஹதி ஸுஸ்தி₂ரராஜலக்ஷ்மீம் || 71||

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன – தனதான

சத்தென முத்திய பத்திக யிற்றறி
வித்தம னத்திடம் - வில்லாகி
வெத்துவ கற்றிய சித்துசி வத்தருள்
உற்றம கத்துவங் – கணையாக
வித்துவி னைப்பட மொத்தம ழித்தரு
புத்தன கத்திடன் – பெருவீரன்
சுத்தநி லைப்பட வெற்றி அகப்பட
நித்திநெ றிப்பட – நிறைவோனே (71)

உயரிய பக்தியாகிய கயிற்றால் கட்டப்பட்ட நற்குணமாகிய வில்லில், ஒரு போதும் பயன் அற்றதாக ஆகாத ‘சிவச் சிந்தனை’ எனும் கூர்த்த அம்புகளை ஏற்றி, குற்றமளிக்கும் தீ வினைகளான எதிரிகளை எல்லாம், முற்றும் அழித்து வெற்றி அடைபவனே அறிவிற் சிறந்தவனாகி, நிலையான செல்வங்களை எல்லாம் ஆளுபவனாக ஆகிறான்.

குறிப்பு:

அப்படித் தன்னுளே, இறைவனை அறியும் திறன் வந்து விட்டால், அதனால் என்ன பயன்? தீ வினைகளைக் களைவது அதன் முக்கிய விளைவு. அதற்கு பக்தியால் கட்டப்பட்ட நற்குணமாகிய வில் தேவை.

குணமாற்றம் என்பது வளர்ச்சியின் அடையாளம். கர்ம யோகமும், பக்தி யோகமும் நற்குண மாற்றங்களை நம்முள் விளைக்கிறது. அதனால் பணிந்து வளையும் வில்லாகிய பண்புகளினால், சிவத்தியானமாகிய குறிக்கோளுடன் கூடிய கணைகளை ஏற்றி, பெருநிலையான இறையடிகளைக் குறித்துச் செலுத்த வேண்டும். அதாவது தியானம் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதால், எந்த வினைகளும் ஒட்டாமல், நந்நிலை மட்டுமே எப்பொழுதும் நம்முடன் இருக்கும். இதுவே இப்பாடலின் உட்கரு. (71)

72 – ஆதார மானதிரு அடியுடையான் அருள் போற்றி!

ध्यानाञ्जनेन समवेक्ष्य तमःप्रदेशं
भित्वा महाबलिभिरीश्वरनाममन्त्रैः ।
दिव्याश्रितं भुजगभूषणमुद्वहन्ति
ये पादपद्ममिह ते शिव ते कृतार्थाः ॥७२॥

த்4யானாஞ்ஜனேன ஸமவேக்ஷ்ய தம:ப்ரதே3ஸ2ம்
பி4த்வா மஹாப3லிபி4ரீஸ்2வரனாமமந்த்ரை: |
தி3வ்யாஸ்2ரிதம் பு4ஜக3பூ4ஷணமுத்3வஹந்தி
யே பாத3பத்3மமிஹ தே ஸி2வ தே க்ருதார்தா2: || 72||

தனத்ததந்தன தனதனதனதன
தனத்ததந்தன தனதனதனதன
தனத்ததந்தன தனதனதனதன - தனதான

சிவச்சிந்தனை ஒருமைமையுற
பவச்சந்நிதி திருமெய்மறைமறை
இடத்தன்வழி இருளைஐயற – இடித்தேகி

நமச்சிவமய நமசிவநமஎனத்
தவச்செம்மொழி பலிசுரவழிபட
பதச்செம்மலர் பதியணியரவுறப் – பெருந்தேயம்

அகழ்த்ததுநிதி அதுவெனப்பதமல
ருயர்த்துந்துதி அரஹரசிவமென
நிகழ்த்துந்தர முந்திறமுந்துவர் – அவரேதான்

பிறப்பிந்தரு மந்தருநந்நியல்
இறப்பற்றரு ளுந்திடவந்திட
சிறப்புற்றுரு சிந்திடவந்தினி – சேர்வாரே! (72)

தியானம் எனும் மந்திர மையினை உற்று நோக்கி, அதன் மூலம் நற்புதையல் இருக்கும் இடத்தைத் தெளிந்துணர்ந்து, பிறகு அந்நந்நிதியை அடையத் தடையாய் இருக்கும் காரிருட் தடங்களை எல்லாம் உடைத்துத் தாண்டி, இறைவனின் திருநாம மந்திரங்களாகிய பலிகளைக் கொண்டு தேவர்களால் தொழப்படுவதும், அரவங்களை அணிகலனாகக் கொண்டவையுமான உமது திருவடித் தாமரையாகிய பெரு நிதியை, எவர் மேலே எடுத்து வருகிறார்களோ அவர்களே, இப்பிறவிப் பயனை அடைந்தவர்கள் ஆவார்கள்.

குறிப்பு:

தியானம், முன்பு மனமாகிய குழந்தை துயிலும் தூளி என்று காட்டப்பட்டது. பிறகு, பக்தி நாணில் தொடுக்கப்பட்ட அம்பாகவும் காட்டப்பட்டது. இப்பாடலிலே தியானம், புதையலைச் சுட்டிக் காட்டும் மந்திர மை வித்தை எனக் காட்டப்படுகிறது. அவ்வாறு புதையலைக் காட்டுவது மட்டுமல்லாமல், அவ்விடத்திற்குக் கூட்டிச் செல்வதுமான திறனையும் தியானமே தருகின்றது.

தமிழில், தியானம் என்பதனை சிவச்சிந்தனை என்றும், புதையல் இருக்கும் இடம் என்பதை, 'திருமெய்மறைமறை இடம்', அதாவது மறைகள் கூறும் உண்மையாகிய பரம்பொருளை மறைத்திருக்கும் இடம் என்றும், ' தம:பிரதேசம்' எனும் சொல் காட்டும் இருள் நிலத்தை, அறியாமையாகிய இருள் மற்றும் அறிவிருந்தும் திடமில்லாமல் ஏற்படும் ஐயம் எனக் காட்ட 'இருளைஐயற' எனவும், 'ஈஸ்வர நாம மந்த்ரை:' எனும் சொற்றொடருக்கு, 'நமச்சிவமய நமசிவநமசிவ' எனவும், 'உத்வஹந்தி' என உயர்த்துகின்ற செயலுக்கு விளக்கமாக, 'உயர்த் துந்துதி அர ஹர சிவம்' எனவும், மொழி பெயர்ப்பிலே, கருப் பொருளுக்குக் களங்கமில்லா வகையிலே, மிகைப் படுத்தப்பட்டது. (72)

73 – மதி விதையப் பதியநில மானசிவன் அடி போற்றி!

भूदारतामुदवहद्यदपेक्षया श्री-
भूदार एव किमतः सुमते लभस्व |
केदारमाकलितमुक्तिमहौषधीनां
पादारविन्दभजनं परमेश्वरस्य | ७३||

பூ4தா3ரதாமுத3வஹத்3யத3பேக்ஷயா ஸ்2ரீ
பூ4தா3ர ஏவ கிமத: ஸுமதே லப4ஸ்வ |
கேதா3ரமாகலிதமுக்திமஹௌஷதீ4னாம்
பாதா3ரவிந்த3ப4ஜனம் பரமேஸ்2வரஸ்ய | 73||

தந்தத்தன தந்தத்தனதன தந்தத்தன தந்தத்தனதன
தந்தத்தன தந்தத்தனதன – தனதான

எந்தப்பய னுந்தப்பூமகள் அந்தப்புர னுந்தஶ்ரீமகள்
சொந்தத்திரு வுந்தப்பூமியுள் – அரியாகும்
எந்தப்பொரு ளெந்தப்பூமியுள் நொந்தப்படு மந்தப்பேரிடர்
அந்தப்பட வந்தச்சூரணம் - சரியாகும்
தந்தப்பயி ருந்தச்சீர்வளஞ் சிந்தப்பய னந்தச்சீரடி
சிந்தைப்பட எந்தைப்பரசிவ – எனத்தேடி
முந்திபெறு நன்மதிசீரிய புந்திக்கரு சின்மயமாகிய
முற்றுப்பெற மற்றுப்பொருளெது – முறைவாயே (73)

ஶ்ரீதேவியையும், பூதேவியையும் தமது துணையாய் உடைய திருமால், எதனை நாடி, பூமியின் ஆழத்தைத் தோண்டும் (வராஹ) அவதாரம் எடுத்தாரோ, மற்றும் உலகின் துன்பங்களிலிருந்து விடுதலை தரும் உயரிய மருந்துக்கு எது விளைநிலமாக இருக்கிறதோ அந்தப் பரசிவனின் திருவடிகளைப் பணியும் கடமையை, ஓ நல்லறிவே, நீ ஏற்றுச் செய். அதைவிட வேறு பேறு ஏது! (இல்லை).

குறிப்பு:

கீழுலக, மேலுலக வாழ்வு எனும் இருநிலைகளே தர்மம் காட்டிய வழியில் நடக்கும் உயிரினங்களுக்குப் பொதுவாக மாறி மாறி அமைகின்ற பயணம். வினைகளுக்கேற்ப தக்க உடலெடுத்து இவ்வாறான உலகங்களில் இருத்தப்பட்ட வாழ்க்கையினைத்தான் நாம் எல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

தமது சக்திகளையே பூதேவி, ஸ்ரீதேவி எனும் துணைவியர்களாக உடனிருத்தி, எல்லா உலகங்களையும் வியாபித்துக் காத்து வரும் திருமால், 'கர்ம பல தாதா' எனும்படியாக, நமது வினைகளை ஒட்டி, அதற்கேற்ற உடலையும் பயனையும் கொடுத்து, இவ்வாறான உலகங்களிலே நம்மைத் தொடர்ந்து ஆழ்த்தி வருகிறார்.

ஞானம் ஒன்றினாலேயே, தர்மத்தால் முதிர்ந்த மனிதர்கள், பிறவிப்பயன் அடைந்தவர்களாக, இவ்வுலகங்களைக் கடந்த பரம்பொருளான பிரம்மத்தை அடைந்து, பிறந்து இறக்கும் பெரும் பிணையை விலக்கி, முக்திப் பேற்றினை அடைய முடியும். அதனைச் சுட்டிக் காட்டவே, திருமால் பூமியை அகழ்ந்து பரம்பொருளின் திருவடிகளைத் தேடுவதாகப் புராணங்கள் சொல்கின்றன. பரம்பொருளின் திருவடிகளே, முக்தியாகிய துன்பத்திலிருந்து விடுவிக்கும் மருந்தினை வளர்க்கும் வளமையான வயல் என்று காட்டப்பட்டது. அத்திருவடிகளிலேயே, நல்லோர் மனமும், மதியும் எப்போதும் பதிய வேண்டும் என்பதே இப்பாடலின் கரு. (73)

74 - மனப்பேழை வனப்பேற மாற்றுவான் அடி போற்றி!

आशापाशक्लेशदुर्वासनादि-
भेदोयुक्तैर्दिव्यगन्धैरमन्दैः |
आशाशाटीकस्य पादारविन्दं
चेतःपेटीं वासितां मे तनोतु ||७४||

ஆஸா2பாஸ2க்லேஸ2து3ர்வாஸனாதி3-
பே4தோ3த்3யுக்தைர்தி3வ்யக3ந்தை4ரமந்தை3: |
ஆஸா2ஸா2டீகஸ்ய பாதா3ரவிந்த3ம்
சேத:பேடீம் வாஸிதாம் மே தனோது || 74||

தானனன தானனன தானனன தானனன
தானனன தானனன – தனதான

ஆசையொடு பாசமதி மோசமெனக் கூசுகுணம்
வீசுகெடு வாசமழித் – திடல்வேண்டி
நீசநினை வேயகல வேஷமற மேசகல
வாசமுசி வாசிவனின் – தடம்வேண்ட
நேசமுற வேதிசைகள் பூசவுடை யேதிகழும்
ஈசனடி யேநிறுவி – மனப்பேழை
வாசமுற வேஇனியுந் தேசமுக வேகனியும்
பூசனையி லேதிகழப் – பொலிவேயாம் (74)

ஆசை, பற்று, குழப்பம் ஆகிய தீய வாசனைகளால் (தீய நினைவுப் பதிவங்களால்) விளங்கும் எனது சிந்தையாகிய பேழையில், அத் தீய வாசனைகளை நீக்குகின்ற நிறைவான தெய்வ வாசனைகளாக (தூய நினைவுப் பதிவங்கள்), திசைகளை உடையாகத் தரித்த பரசிவனின் பாத மலர்களை நிறைத்து, நல்ல மணமுடையதாக மாற்றட்டும்.

குறிப்பு:

தர்மப்படி வாழ்ந்தாலும், ஆசை, பற்று, குழப்பம் ஆகிய குணக் குறைகள் நம்மைத் துயரில் ஆழ்த்தி விடும். சித்த சுத்தி எனும் தெளிய மனமும், திட புத்தி எனும் உறுதியான அறிவும் இருந்தால்தான், இத்தகைய இடையூறுகளைத் தவிர்க்க முடியும். அதற்கான வழிதான் முறையே கர்ம யோகம், மற்றும் பக்தி யோகம் என்பன. இவை இரண்டுக்கும் அடிப்படை, சிந்தனையில் எப்போதும் இறைவனை மட்டுமே இருத்தி, எல்லாச் செயல்களையும் இறைவனுக்காகச் செய்வதாக வாழ்தல் ஆகும். அதனையே இப்பாடல் சுட்டிக் காட்டுகிறது.

இப்பாடலில், ‘ஆசா சாடீகஸ்ய’ – என்பதைத் திசைகளை உடையாகப் பூசிக்கொண்டவன் எனவும், ‘துர்வாஸனாதி பேத உத்யுக்தை:’ என்பதற்கு ‘நீச நினைவே அகல, அறியாமையால் சூடும் வேடங்கள் அகல, எப்பொழுதும் சிவா, சிவா எனும் வாசனையால் இருக்கும்’ முயற்சி எனவும், தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. (74)

75 – புரவிமனம் ஓட்டிப் புகல்தருவான் அடி போற்றி !

कल्याणिनम् सरसचित्रगतिं सवेगं
सर्वेङ्गितज्ञमनघं ध्रुवलक्षणाढ्यम् |
चेतस्तुरङ्गमधिरुह्य चर स्मरारे
नेतः समस्तजगतां वृषभाधिरूढ ||७५||

கல்யாணினம் ஸரஸசித்ரக3திம் ஸவேக3ம்
ஸர்வேங்கி3தஜ்ஞமனக4ம் த்4ருவலக்ஷணாட்4யம் |
சேதஸ்துரங்க3மதி4ருஹ்ய சர ஸ்மராரே
நேத: ஸமஸ்தஜக3தாம் வ்ருஷபா4தி4ரூட4 || 75||

தனதனன தனன தனதனன தனன
தனதனன தனன – தனதான

நலவடிவம் அசையும் நடையடிகள் அமையும்
அகமகிழ விரையும் – அதிவேகம்
களமறியும் குறியும் தடமறியும் நிறையும்
அறிவதிய முகிழும் – அடையாளம்
மனமதியம் புரவி அதிலுலவி அருளி
மதனுடைய உருவும் – மறைத்தாளும்
பவநிதியம் அருளும் பரசிவனே வருக
பசுபதியே இடபம் – அமர்வோனே (75)

நற்சுக வடிவாயும், பலவிதமாக நல்ல நடைகள் காட்டி அமைதி அளிப்பதாகவும், அதி விரைவாகச் செல்வதாகவும், அனைத்து நோக்கங்களையும் அறிந்து அதற்கேற்பச் செயல்படுவதாயும், எவ்விதக் குறைகளற்றதாயும், நல்ல குணத்திற்கான அடையாளங்களை எல்லாம் கொண்டதாயும் விளங்கும் எனது மனமாகிய புரவியில் ஏறி, காமனை வென்ற காலனே, நாதனே, நீவீர், பயணம் செய்வீராக.

குறிப்பு:

நேர்மை அடைந்த மனம், இப்பாடலில், ஒரு குதிரையாகக் காட்டப்படுகிறது. நற்குணங்களும், தன்னை ஆள்பவனுக்குக் கட்டுப்பட்டதாயும், குறிப்பறிந்து நடப்பதாயும், நற்பண்புகளுடைய அடையாளங்களுடன் கூடியதாகவும் அது விளங்குகிறதாம்.

அப்படிப்பட்ட மனம் நமக்கு அமைந்து விட்டால், அதனைச் செலுத்த நாம் பரம்பொருளாகிய ஆன்மாவையே அதில் அமரச் செய்ய வேண்டும். அதாவது, மனம் இறைச் சிந்தனையிலேயே இருக்க வேண்டும்.

ஏன்?

ஆள்வான் வலுவற்றவனாகில், மனப்புரவி மனக்குரங்காக மாறி அங்கும் இங்கும் ஓடி விடும். அதனால், நாம், மனக்குதிரையில் இறைவனை அமரச் செய்து விட்டால், அப்புறம் எப்போதும் நமக்கு நல்ல நிம்மதிதானே!

இதனையே இப்பாடல் வலியுறுத்துகின்றது. (75)

76 – பூமழையாய்த் தேன்மனதில் புலர்வான் அடி போற்றி!

भक्तिर्महेशपदपुष्करमावसन्ती
कादम्बिनीव कुरुते परितोषवर्षम् |
संपूरितो भवति यस्य मनस्तटाक-
स्तज्जन्मसस्यमखिलं सफलं च नाऽन्यत् ||७६||

ப$_4$க்திர்மஹேஸ$_2$பத$_3$புஷ்கரமாவஸந்தீ
காத$_3$ம்பி$_3$னீவ குருதே பரிதோஷவர்ஷம் |
ஸம்பூரிதோ ப$_4$வதி யஸ்ய மனஸ்தடாக
ஸ்தஜ்ஜன்மஸஸ்யமகி$_2$லம் ஸப$_2$லம் ச நா(அ)ந்யத் || 76||

தத்தனன தத்தனன தத்தனன தத்தனன
தத்தனன தத்தனன – தனதான

பத்திபர சக்திசிவ சித்தவடி வொத்தவெளி
வித்தமதி லுத்தமுகில் - அதுவாகி
தத்துவமு மித்துசுக மொத்தமறி வித்துமழை
முத்துபொழி வித்தசெயல் - அதனாலே
எத்தகுள மொத்தமுள முத்தபரி சுத்தமடை
வித்துமதி யத்துவயல் - பயிராக
அத்தபிற வித்துயரு மத்தவுய ரத்தடையும்
மத்தமதி யத்தடைதல் – முடியாதே (76)

சிவசக்தியாகிய மஹேஸ்வரனின் பாதங்களாகிய பரவெளியில் நிலவுகின்ற பக்தியாகிய மேகம், கருணை சுமந்த இன்ப மழையினைப் பொழிகின்றது. அதனால், எவனுடைய உள்ளமாகிய குளம், பரிசுத்தமான (அறிவாகிய) நீரால் நிரப்பப் பட்டிருக்கிறதோ, அவனுடைய பிறவியாகிய பயிர் (துயரின்றி வளர்ந்து உயர்ந்து) பயனை அளிக்கிறது. அவ்வாறு (உள்ளம் நிறைந்தவனாக) இல்லாதவனுக்கு, அப்படி (பயனேதும்) அமைவதில்லை.

குறிப்பு:

மனம் இறைவனது திருவடிகளை நினைத்திருக்கின்ற பக்தியால் நிரப்பப் பட்டிருந்தால், அதன் விளைவாக, செய்யும் செயல்கள் எல்லாம் இறைவனின் பொருட்டாகவே செய்வதாக ஆவதால், கர்ம யோகப் பலனும், இறைத் தியானம் ஆகிய பக்தியோகப் பலனும் நமக்குக் கிட்டும்.

இதன் முக்கியப் பயன், நற்குண மாற்றங்கள் ஆகும். நற்குண மாற்றங்களின் பயன், சித்த சுத்தி எனும் தெளிந்த அறிவு, திட புத்தி எனும் உறுதியான மனம். இவை இரண்டுமே ஞானப் பாதைக்கு நம்மை கூட்டிச் செல்லும் நற்தகுதிகள். அதனால், பிறவிப் பயனாகிய, முக்தி அல்லது வீடு பேறு அடைவது இயல்பாகிவிடும்.

இதுவே இப்பாடலின் உட்கரு. (76)

77 – நாயகியாய் மனமேற்ற நாதன் அடி போற்றி!

बुद्धिःस्थिरा भवितुमीश्वरपादपद्म-
सक्ता वधूर्विरहिणीव सदा स्मरन्ती |
सद्भावनास्मरणदर्शनकीर्तनादि
संमोहितेव शिवमन्त्रजपेन विन्ते ||७७||

புத்$_3$தி$_4$:ஸ்தி$_2$ரா ப$_4$விதுமீஸ்$_2$வரபாத$_3$பத்$_3$ம-
ஸக்தா வதூ$_4$ர்விரஹிணீவ ஸதா$_3$ ஸ்மரந்தீ |
ஸத்$_3$பா$_4$வனாஸ்மரணத$_3$ர்ஸ$_2$னகீர்தனாதி$_3$
ஸம்மோஹிதேவ ஸி$_2$வமந்த்ரஜபேன விந்தே || 77||

தன்னனன தானனன தன்னனன தானனன
தன்னனன தானனன – தனதான

மங்களமு மானசிவ பங்கயமு மானபத
மங்குதிட மானமனம் - அகலாமல்
தங்கணவ ரானசுக மெங்குபிரி வாலுழல
சங்கமுற வாகநிதம் - சலியாதே
தங்கவன மாமருக அங்கமய மாயுருக
எங்குமவ ரானபுகழ் – எனவோதி
சங்கரசி வாமனனம் தங்கமதி யாலறுகும்
நங்கையவ ளாகமனம் – நலிவேனே (77)

பரமேஸ்வரனின் திருவடித் தாமரைகளில் அறிவானது உறுதியுடன் எப்போதும் இணைந்திருக்க வேண்டும் என்று, (தன்னுடைய அன்புக்குரிய கணவனது) பிரிவினால் தவித்து, எப்போதும் (அவருடன் இணைய) நினைத்துக்கொண்டு, அதிலேயே (தனது கவனத்தை எல்லாம் வைத்து) கற்பித்து, (உடல் உருகித் தன்னுள்ளேயே) அவரைக் கண்டு, அவரது புகழையே பாடி, தந்நிலை மயங்கிக் கிடக்கும் மங்கையைப்

போல, பரசிவனது திருநாமங்களை ஓதி, (எனது) மனம் தவித்துக் கொண்டிருக்கிறது.

குறிப்பு:

76-ம் பாடலில் மனதில் இறையடியை இருத்துவதன் பலனைக் கூறிய பகவான் ஆதி சங்கரர், அவ்வாறு நிலையாக இறைவனது திருவடிகளை நிறைக்க விழையும் மனதினை, கணவனது பிரிவாற்றாமையால் உழலும் சுகவேதனைக்கு ஒப்புமையாகக் காட்டி இருக்கிறார்.

எப்பொருளுடன் இணைய வேண்டுமோ, அப்பொருளையே எப்பொழுதும் சிந்திப்பதும், அது கிடைத்து விட்டாற் போல் கனவு காண்பதும், அதனைப் பற்றியே பேசிக் கொண்டும், அதன் புகழ் பாடிக் கொண்டும் இருப்பதும், இறைவனை நன்றியால் துதித்துக் கொண்டு இருப்பதும், எதிர்பார்ப்பவரின் இயல்பு அல்லவா? அதிலும், அன்புக்குரிய கணவனைப் பிரிந்த மனைவியின் எதிர்பார்ப்புக்கள் நிறைந்த கவலையைப் பற்றிச் சொல்ல வேண்டுமா என்ன! அதனையே பக்திக்கு ஒப்பிடுகிறார் பகவான் ஆதி சங்கரர். (77)

78 – புதுமணையாள் என்மனதுப் போகன் அடி போற்றி!

सदुपचारविधिष्वनुबोधितां
सविनयां सुहृदम् सदुपाश्रिताम् |
मम समुद्धर बुद्धिमिमां प्रभो
वरगुणेन नवोढवधूमिव ||७८||

ஸது3பசார விதி4ஷ்வனுபோ3தி4தாம்
ஸவினயாம் ஸுஹ்ரு2த3ம் ஸது3பாஸ்1ரிதாம் |
மம ஸமுத்3த4ர பு3த்3தி4மிமாம் ப்ரபோ4
வரகு-3ணேன நவோட4 வதூ4மிவ ||78||

தனந் தனதனன தனந் தனதனன
தனந் தனதனன - தனதான

தனை விடப்பெரியர் தகை உணர்த்துரிய
தரந் தரப்பணிய – உபசாரம்
தரும் பணித்துயரத் தகும் பவித்திரமும்
தடம் நலமுதலும் – தவறாதே
மணந் திடுமுவதி எனும் எனதுமதி
மகிழ்ந் தவளுவகை – மடியேறி
வரன் வந்தறிவி னிடம் சொந்தமுறு
பயம் அரிந்துதவு - பரமேசா! (78)

பெரியோரிடத்தில் சேவை செய்யும் குணமும், தரமும், பணிவும், சரியான நெறியும், தூய்மையும், நந்நோக்கம் கொண்டதுமான எனது அறிவினை, புதிதாக மணமுடித்த பெண்ணின் கவலையைத் தேற்றி, ஏற்றுக் கொள்ளும் மணமகனைப் போல, ஓ, பரமேசா, ஏற்றுக் கொள்.

குறிப்பு:

77-ம் பாடலில் பக்தனது மனதினை, கணவனை நினைத்து ஏங்கும் மனைவிக்கு ஒப்பாகக் காட்டிய பகவான் ஆதி சங்கரர், இப்பாடலில், புதிதாக மணம் சூடிய மங்கைக்கு ஒப்பிட்டு, மங்கையின் கவலைகளைத் துடைத்து ஆறுதல் அளிக்கும் மணாளனாக, சிவபெருமான் எழுந்தருளி, மனதினில் இணைய வேண்டும் என்று வேண்டுகின்றார்.

புது மணப்பெண்ணுக்கு, பெரும் சுக எதிர்பார்ப்புக்கள், ஒருவித பயத்தினோடேயே இழைத்திருப்பதைப் போல, ஶிவானந்த₃லஹரீ எனும் பரசிவ சுக வெள்ளத்தை எதிர்பார்த்திருக்கும் பக்தனது மனமும், ஒரு பயம் கலந்த பக்தியினால் தூண்டப்பட்டு இருக்கிறது. எப்படி, மணமகனின் கனிவான ஆறுதல் மணமகளின் பயத்தினை நீக்கி உற்சாகத்தை அளிக்குமோ, அதுபோலவே, பரசிவத்தின் திருவருள் பக்தனின் மனமாகிய மணப்பெண்ணை மணந்து மகிழ்த்துகின்ற மணாளன் ஆகட்டும் என்பதே இப்பாடலின் கரு. (78)

79 – நமனார் உதைத்தருளும் நல்லான் அடி போற்றி!

नित्यं योगिमनः सरोजदलसञ्चारक्षमस्त्वत्क्रमः
शंभो तेन कथं कठोरयमराड्वक्षःकवाटक्षतिः |
अत्यन्तं मृदुलं त्वदङ्घ्रियुगलं हा मे मनश्चिन्तय-
त्येतल्लोचनगोचरं कुरु विभो हस्तेन संवाहये ||७९|

நித்யம் யோகி$_3$மன: ஸரோஜத$_3$லஸஞ்சாரக்ஷமஸ்த்வத்க்ரம:
ஶம்போ$_4$ தேன கத$_2$ம் கடோ$_2$ரயமராட்$_3$வக்ஷ:கவாடக்ஷதி: |
அத்யந்தம் ம்ருது$_3$லம் த்வத$_3$ங்க்$_4$ரியுக$_3$லம் ஹா மே மனஶ்சிந்தய-
த்யேதல்லோசனகோ$_3$சரம் குரு விபோ$_4$ ஹஸ்தேன ஸம்வாஹயே || 79|

தந்தத்தன தந்தத்தனதன
தந்தத்தன தந்தத்தனதன
தந்தத்தன தந்தத்தனதன – தனதான

சிந்தைத்திற னுந்தத்தேவடி
யுந்தத்தவ ரந்தப்பூவிதழ்
புந்துத்தித முந்தும்பூவடி - அதனாலே

விந்தைத்திற மந்தர்க்கேவடு
நொந்துப்பட ருந்தும்மாரிடர்
அந்தக்கத வுந்துத்தூளிட – அறியேனே

எந்தைப்பத மோமிதமானது
சிந்திப்பத னாலவையானது
வந்தித்தொழ வேவிழிவாவெனின் - வருவாயோ

அந்தப்பதஞ் சிந்தப்போய்வலி
சந்தப்புது விந்தப்பூமழை
இந்தக்கை பந்தத்தாலிட – இறையோனே (79)

எப்போதும் (தியானம் செய்கின்ற) யோகியரின் மனமாகிய மலரில் இருக்கும் உனது (மென்மையான) கால்கள், எப்படி வலியதும், பெரிய அரண் போன்றதுமான எமனுடைய மார்பிலே வடுவினை ஏற்படுத்தின! ஹா, உமது திருவடிகள் இரண்டும் மிகவும் மென்மையானதே என என் மனம் கவலைப் படுகிறதே! இறைவா, அக்கால்களை என் கண் முன்னே காட்டுக. எனது கைகளினால் பிடித்து விடுகிறேன்.

குறிப்பு:

பக்தர்களின் இதயத் தாமரையில் பதிக்கின்ற மலரினைப் போன்ற மென்மையான நினது கால்கள் எப்படி மார்க்கண்டேயனுக்காக, எமனின் வலுவான மார்பில் உதைத்து, அதனால் அவனுடைய மார்பில் வடுவினை ஏற்படுத்தின?

அப்படிச் செய்ததால், பரம்பொருளின் கால்கள் வலித்திருக்குமே எனும் மிக உயர்ந்த அன்பினால், பகவான் ஆதி சங்கரர், அந்தத் திருவடிகளைத் தன் முன்னால் காட்டினால், மெதுவாகப் பிடித்து விட்டு, வலி நீக்குவதாக வேண்டுகின்றார்.

இறைவனுக்கு வலி என்பது ஏது! மரண பயம் நீக்க, அந்தகனின் கால்களில் உதைத்த கால்களும், பக்தர்களின் இதயத்தில் நடனமாடும் கால்களும் வலிவும், இதமும் ஒரு சேரப் பெற்ற பேரடிகள் அல்லவோ!

ஆனாலும், பக்தனுக்கு எப்படியேனும் சிவபெருமானின் திருவடிகளைக் காண வேண்டும், கண்டால் மட்டும் போதாது, அதனைக் கட்டிப் பிடித்து இறுக்கி அணைக்க வேண்டும் என்ற பேரவா இருக்கிறது. அதனாலேதான், 'வா, யானுனக்கு திருவடிப்பணி புரிகிறேன்' என்று பக்தன் அழைப்பதாக இப்பாடலில் காட்டப்பட்டது. (79)

80 – கூடமாம் கல்மனதுள் கூத்திடுவான் அடி போற்றி!

एष्यत्येष जनिं मनोऽस्य कठिनं तस्मिन्नटानीति म-
द्रक्षायै गिरिसीम्नि कोमलपदन्यासः पुराभ्यासितः |
नोचेद्दिव्यगृहान्तरेषु सुमनस्तल्पेषु वेद्यादिषु
प्रायः सत्सु शिलातलेषु नटनं शंभो किमर्थं तव ||८०||

ஏஷ்யத்யேஷ ஜனிம் மனோ(அ)ஸ்ய கடி$_2$னம் தஸ்மின்னடானீதி ம
த்$_3$ரக்ஷாயை கி$_3$ரிஸீம்னி கோமலபத$_3$ன்யாஸ: புராப்$_4$யாஸித: |
நோசேத்$_3$தி$_3$வ்யக்$_3$ருஹாந்தரேஷு ஸுமனஸ்தல்பேஷு வேத்$_3$யாதி$_3$ஷு
ப்ராய: ஸத்ஸு ஸி$_2$லாதலேஷு நடனம் ஸ$_2$ம்போ$_4$ கிமர்த$_2$ம் தவ || 80||

தன்னனன தானனன தன்னனன தானனன
தன்னனன தானனன – தனதான

பிறவியடை வானிவனின் இறுகியடர் வானமனம்
அருகிநட மாடலருள் – அதனாலே
அடவியடை வானமலை தடவிநட மாடியுன
தடிகளடை யாளமிடும் – அதுநாளே
கரவியொரு காரணமுந் தெரியவிலை வேறுயெனில்
களமுநல மானவகம் – சிவசம்போ
மலருமட மாம்படுகை மறையுதிட லாமிருக்க
மலையில்நட மாடும்நிலை – எதனாலே (80)

சிவ சம்போ, 'இவன் பிறவி அடையப் போகிறான், இவனது மனம் கடினமாக இருக்கப் போகிறது. அக்கடின மனதில் யான் நடனமாமிட வேண்டும்' என்று (இதைப் போல் யோசித்து) எனக்கு அருள் செய்யத்தான், தாங்கள் கடினமான மலைப் பகுதிகளில் தங்கள் பாதங்கள் பட, முன்பு நடனமாடினீர்கள் போலும். (வேறு காரணம் என்று) அப்படி இல்லை என்றால், ஒளி மிகுந்த இல்லம் இருக்க, மலர் அரங்கங்களும் மறை

மேடைகளுமென அதிகமிருக்க, மலைகளில் நடனம் ஆடுவதன் காரணம் எது?

குறிப்பு:

79-ம் பாடலில், எமனை உதைத்த சிவனின் மென்மையான கால்களை வலிக்காமல் பிடித்து விட வேண்டி, அத்திருவடிகளின் தரிசனத்தை வேண்டிய ஆதி சங்கரர், இப்பாடலிலே, ஒருவேளை, தமது கால்களுக்குக் கரடுமுரடான தடத்தில் நடம் புரிய வேண்டிய அனுபவம் வரவேண்டும் என்பதற்காகத்தான், மலைகளில் சிவன் நடனமாடுகிறாரோ என வியக்கிறார்.

அப்படி இருப்பின், அதுவும் நல்லது. ஏனெனின், வினை வயத்தால், பிறவிப் பிணியில் திணிக்கப்படுகின்ற மனிதனின் மனம், வன்மை கொண்டதாக இருக்கும். அம்மனதில் தமது காலடிகளைப் பதித்து, அருள்கூட்ட வேண்டுமென்றால், சிவனுடைய பாதங்கள் கரடுமுரடான இடங்களிலே ஆடிப் பழக வேண்டி இருக்கும் எனும் நயமிகு கற்பனை இப்பாடலில் காட்டப்படுகிறது.

எப்படி இருப்பினும், எப்பொருளாயினும், அப்பொருளினுள்ளே ஆண்டவனின் தாண்டவம் நடந்து கொண்டு தானிருக்கிறது. பக்தியால் மனம் மென்மையடையும் போது, தெளிந்த அறிவின் துணையினால் மனமாகிய மேடையில் ஆன்மாவின் ஒளி தோன்றும். அதுவே ஆடுகின்ற திருவடிகளாக நமது கண் படும். அப்போதே நமது மனம் பண்படும். (80)

81– முற்றுணர்வார் உள்ளத்தின் முக்திப்பயன் போற்றி!

कंचित्कालमुमामहेश भवतः पादारविन्दार्चनैः
कंचिद्ध्यानसमाधिभिश्च नतिभिः कंचित्कथाकर्णनैः |
कंचित् कंचिदवेक्षनैश्च नुतिभिः कंचिद्दशामीदृशीं
यः प्राप्नोति मुदा त्वदर्पितमना जीवन् स मुक्तः खलु ||८१||

கஞ்சித்காலமுமாமஹேஸ$_2$ ப$_4$வத: பாதா$_3$ரவிந்தா$_3$ர்சனை:
கஞ்சித்$_3$த்$_4$யானஸமாதி$_4$பி$_4$ஸ்$_2$ச நதிபி$_4$: கஞ்சித்கதா$_2$கர்ணனை: |
கஞ்சித் கஞ்சித$_3$வேக்ஷனைஸ்$_2$ச நுதிபி$_4$: கஞ்சித்$_3$த$_3$ஸா$_2$மீத்$_3$ருஸீ$_2$ம்
ய: ப்ராப்னோதி முதா$_3$ த்வத$_3$ர்பிதமனா ஜீவன் ஸ முக்த: க$_2$லு || 81||

தன்னன் தானனன தன்னன் தானனன
தன்னன் தானனன – தனதான

கொஞ்சக் காலமுன் தஞ்சத் தாளடி
கொஞ்சிப் பூசனை - உமையீசா
கொஞ்சத் தியானமு மெஞ்சத் தூரியங்
கொஞ்சச் சேவித – சிவகாதை
கொஞ்சக் காதுற கொஞ்சத் தேயுரு
கொஞ்சப் பாமறை – மகிழ்வாலே
நெஞ்சத் தாலெவன் உஞ்சத் தாவுவன்
செஞ்சொற் ஜீவித – சிவமுக்தன் (81)

உமையீசா, கொஞ்ச காலம் உமது திருவடி மலர்களைச் சரணடைந்து தொழுதல், கொஞ்சம் தியானம், கொஞ்சம் சமாதி நிலை அனுபவம், கொஞ்சம் துதி வந்தனம், கொஞ்சம் சிவ புராண மகிமைகளைக் கேட்டல், கொஞ்சம் உருவ தரிசனம் செய்தல், கொஞ்சம் பாடலிசைத்தல், கொஞ்சம் மறைமொழி நினைத்தல், மேலும் மகிழ்ச்சியுடன் தமது உள்ளத்தை முற்றுமாக உமக்கு அர்ப்பணித்தல் ஆகிய நிலைகளை அடைந்தவன்

எவனோ, அவன் ஜீவன் முக்தன் எனும் உடலாலிருக்கும் போதே உயர்முக்தி பெற்றவனாக ஆகிறான்.

குறிப்பு:

ஜீவன் முக்தி என்பது, உலகில் உடலுடன் இருந்து வாழும் போதே, உண்மை உணர்ந்த காரணத்தினால், ஒட்டுதல் அறிந்தும் ஒட்டாதிருக்கும் திட்டம் நடத்தி, வெறும் சாட்சியாகவே இருந்து வரும் ஞானியரின் நிலை என்பது ஆகும். அத்தகு ஜீவன் முக்தர்கள், உடலிருக்கிறது எனும் எண்ணமற்று ஓரிடத்தில் நிலைத்தோ அல்லது எங்கும் திரிந்தோ, பிராரப்த கரும வினையின் விளைவுகளை (அதாவது முன்செய்த கருமத்தின் பயன்) எல்லாம் உடலால் முடித்து விட்டு, அவை முடிந்த கணமே, உடலாகிய கூட்டினை உதறித் தள்ளிவிட்டு, பரவெளியாகிய சிவமயத்துள் ஒன்றிவிடுவர். அதற்கு விதேஹ முக்தி என்பது பெயர்.

இப்பாடலில், பகவான் ஆதி சங்கரர், முற்றிய பக்தனின் நிலையைக் காட்டுகின்றார். அப்பக்தன், ஒரு சமயம் துதி, ஒரு சமயம் பாடலிசை, ஒரு சமயம் பூசை, ஒரு சமயம் தவம் எனப் பல வகையிலும் தனது நேரத்தைச் செலவிட்டாலும், தன் உள்ளத்தை முற்றுமாக, எல்லாச் சமயத்திலும் பரம்பொருளிடம் நிலையாக வைத்து (அதாவது ஆத்ம சிந்தனையிலேயே இருந்து) அந்நிலையினால் ஜீவன் முக்தன் எனும் உயர் பதவியை அடைகிறான். இதுவே இப்பாடலின் உட்கரு. (81)

82 – அரியரனாய் ஆகிநின்ற அய்யன் அடி போற்றி!

बाणत्वं वृषभत्वमर्धवपुषा भार्यात्वमार्यापते
घोणित्वं सखिता मृदङ्गवहता चेत्यादि रूपं दधौ |
त्वत्पादे नयनार्पणं च कृतवान् त्वद्देहभागो हरिः
पूज्यात्पूज्यतरः स एव हि न चेत् को वा तदन्योऽधिकः ||८२||

பா3ணத்வம் வ்ருஷப4த்வமர்த4வபுஷா பா4ர்யாத்வமார்யாபதே
கோ4ணித்வம் ஸகி2தா ம்ருதங்க3வஹதா சேத்யாதி3 ரூபம் த3தௌ4 |
த்வத்பாதே3 நயனார்பணம் ச க்ருதவான் த்வத்3தே3ஹபா4கோ3 ஹரி:
பூஜ்யாத்பூஜ்யதர: ஸ ஏவ ஹி ந சேத் கோ வா தத3ன்யோ(அ)தி4க: || 82||

தத்தனன தத்தனன தத்தனன தத்தனன
தத்தனன தத்தனன – தனதான

முப்புரமு மற்றுவிழ அப்பனர னுற்றகணை
உப்பரிகை உற்றிடபம் - உருபாதி
அப்புமுமை கற்றுவரா ஹப்பயண முற்றதுணை
நட்புடமை நற்றுநடம் – படுதாளம்
ஒப்புமிசை தட்டவிழி அர்ப்பணமு முற்றுவரை
உட்கலவை உற்றிருமால் - அதனாலே
நப்புலமு மிக்கபணி வற்புதமு தக்கமிகை
எப்புரமு மொப்பரெவர் - எழில்நாதா! (82)

(முப்புரங்களை எரித்த சிவபெருமானின் வில்லில் பூட்டிய) கணையாகவும், (அவர் அமரும் வாகனமாகிய) இடபமாகவும், அவரது பாதி உடலான உமையாகவும், (பரம்பொருளின் திருவடிகளைக் கற்றுணர நிலத்தைத் துளைத்த) வராஹம் எனும் பன்றியாகவும், அரனின் நட்பாகவும், (சிவ நடனத்திற்குத்) தாளமிடுபவராகவும், தனது கண்ணையே மலராக அளித்து சிவபிரானைத் துதித்தவராகவும், சிவனின் ஒரு பாதியான சக்தியாக விளங்குபவருமான திருமால், அப்பெருமைகளாலே,

துதித்துப் பணியத் தக்கவரில் முதன்மையானவராக இருக்கிறார். இல்லையெனில் (அத்தகைய பெரும் தகைமை கொண்டவர்) வேறு எவரே இருக்கிறார்கள், ஓ, தூயவள் துணைவா!

குறிப்பு:

'கலாப்யாம்' எனத் தொடங்கும் ஶிவானந்த₃லஹரீ பாடல் திரட்டில், பரம்பொருளை சிவமும் சக்தியுமாக இணைந்த பேரருளாகவே நாம் தொழுகின்றோம். சத், சித், ஆனந்தம் எனும் நிலையான அறிவும் ஆனந்தமுமாக விளங்கும் சிவம், வெறும் சாட்சியாக மட்டுமே இருக்க, ஆக்கி, வளர்த்து, அழித்து, அணைத்து அருள்கின்ற செயல் விளக்கமாக அப்பரம்பொருளின் சக்தியே விளங்குகிறது. சிவத்தின் செயல் விளக்கமான சக்தியே, திருமால் எனவும் போறறப் படுகின்றது. சக்தியாகவும், திருமாலாகவும் வழிபாடு செய்வதெல்லாம், பரம்பொருளான சிவத்தின் பொருட்டே அமைகின்றது. இதனைக் காட்டவே, திருமாலின் உருவங்களாகவும், செயல்களாகவும் விளக்கப்பட்ட புராணக் கருத்துக்களை, பகவான் ஆதி சங்கரர் இப்பாடலில் காட்டி இருக்கின்றார்.

சிவன், விஷ்ணு எனும் வேறுபாடுகளும், சைவம், வைஷ்ணவம் எனும் பலவழிப் பாதைகளும், எப்படி ஆழ்ந்த தூக்கத்தில் எல்லா வேறுபாடுகளும் அற்று இருக்கும் நிலையில் மறைகின்றனவோ, அவ்வாறே, ஆன்மாவாகிய தன்னுள் ஒளிரும் தகைமையை உணரும்போது, ஶிவானந்த₃லஹரீ எனும் பரசிவ சுக வெள்ளத்தில் நனைக்கப்பட்டு, ஒன்றேயான ஒளியில் விளைந்து இருக்கும் நிலையிலே, மறைந்து போகும். எனவே சக்தி வழிபாடு என்பதும், அச்சக்தியின் வெளிப்பாடான எல்லாத் தெய்வங்களின் வழிபாடு என்பதும், இறுதியில் தன்னுள் விளங்கும் பரம்பொருளாகிய ஆன்மனைத் தொழுது ஒடுங்கும் செயலே என்பதுதான் இப்பாடலின் உட்கரு. (82)

83 – அல்லற் பிறவி அறுத்தருள்வான் அடி போற்றி!

जननमृतियुतानां सेवया देवतानां
न भवति सुखलेशः संशयो नास्ति तत्र |
अजनिममृतरूपं साम्बमीशं भजन्ते
य इह परमसौख्यं ते हि धन्या लभन्ते ||८३||

ஜனனம்ரு-$_2$தியுதானாம் ஸேவயா தே-$_3$வதானாம்
ந ப$_4$வதி ஸுக$_2$ லேஸ$_1$ஸ்ஸம்ஸ$_1$யோ நாஸ்தி தத்ர |
அஜனிமம்ரு$_2$த ரூபம் ஸாம்ப$_3$மீஸ$_1$ம் ப$_4$ஜந்தே
ய இஹ பரம ஸௌக்$_2$யம் தே ஹி த$_4$ன்யா லப$_4$ந்தே ||83||

தனந் தனதனன தனந் தனதனன
தனந் தனதனன - தனதான

பிறந் தழிந்துழல வரந் தருமதிப
ரிடம் பணிந்துலகில் - பயனேது
நிரந் தரமிலது சுகம் பிறமுமெனுந்
திடம் முனிந்தறிவு – திரியாது
பிறந் தழிந்துருவ விதங் கழியுசிவ
பரந் தமையுமையின் - பதியோகம்
எவர் அறிவரிவண் தவம் புரிவரெனில்
அவர் பெருநிதியம் - அடைவாரே! (83)

பிறந்தும் அழிந்தும் வாழும் வழிக்கு ஆட்படுத்தும் வினைப் பயன்களை மட்டுமே தருகின்ற தெய்வங்களை வணங்குவதால் சிறிதும் பயனில்லை என்பதில் சற்றும் ஐயம் இல்லை. பிறப்பும் இறப்பும் அற்ற வடிவமுடையவரும், அன்னையுடன் கூடியவருமான பரசிவனை இப்பொழுதே (இப்பிறவியிலேயே) தொழுபவர் எவரோ, அவரே பெரும் பேரான நந்நலத்தை அடைகின்றார்.

குறிப்பு:

இப்பாடலில் பிரம்மமாகிய பரம்பொருள் ஒன்றே பிறத்தல், அழிதல் எனும் ஆளுமைகளுக்கு உட்படாமல், சத், சித், ஆனந்தம் என்று இருக்கிறது என்றும், அப்பரம்பொருளாகிய பரசிவத்தை எவர் தொழுது உணர்கிறார்களோ அவர்களுக்கே நிரந்தரமான சுக நிலை விளையும் என்றும் காட்டப்படுகின்றது.

82-ம் பாடலில் திருமாலாக விளங்கும் பரம்பொருளின் சக்தி விளக்கத்தை விட வணங்கத் தக்கது வேறு ஏதுமில்லை எனக் காட்டிய பகவான் ஆதி சங்கரர், இப்பாடலில் பரம்பொருளை நாடுவதே முக்திக்கு வழி என்று காட்டுகின்றாரே என்றால், இதில் முரண்பாடு ஏதுமில்லை.

தர்மம் காட்டியபடி வாழ்க்கையை நடத்திச் செல்வதே, நற்பிறவிக்கு வழிகாட்டும். அது புவியில் நந்நிலையையும், பிறகு நற்செயலின் விளைவால் ஏற்படும் விழுப்பத்தால், மேலுலக வாழ்வையும் அளிக்கும். பரம்பொருளின் சக்தியின் வெளிப்பாடான பல தெய்வ வடிவங்களும், அப்படியான பிறவிச் சுகங்களுக்கு வழிகாட்டி, வரம் கூட்டி அருள்கின்றன.

அத்தகைய தர்ம வழியில் வாழ்க்கை நடத்தும் சீலன், தர்மச் செயல்களின் விளைவால், நற்குண மாற்றங்கள் அடைந்து, அதன் பயனாக, மனத் தெளிவும், மதித் திடமும் பெருகி, பிறவிச்சுகத்தை விடப் பெருமை தருவது நிலைத்த சுகமான முக்தி என்பதை உணர்ந்து, அதனால் அதனையே நாடுகின்றான். அத்துணிவு அவனுக்கு ஞானமாகிய உயரிய பாதையைத் திறந்து கொடுக்கிறது.

‘தான்’ எனும் அகந்தை அழிந்து, தன்னுள்ளேயே நிறைவான அறிவாயும், எப்போதும் உள்ள சுகமாயும் நிலைத்தலே முக்தி எனும் விடுதலை என அவனுக்குப் புரிகிறது. (83)

84 – அறிவாய் ஆட்கொண்ட அண்ணல் அடி போற்றி!

शिव तव परिचर्यासन्निधानाय गौर्या
भव मम गुणधुर्यां बुद्धिकन्यां प्रदास्ये |
सकलभुवनबन्धो सच्चिदानन्दसिन्धो
सदय हृदयगेहे सर्वदा संवस त्वम् ||८४||

ஶிவ தவ பரிசர்யாஸன்னிதா4னாய கௌ3ர்யா
ப4வ மம கு3ணது4ர்யாம் பு3த்3தி4கன்யாம் ப்ரதா3ஸ்யே |
ஸகலபு4வனப3ந்தோ4 ஸச்சிதா3னந்த3ஸிந்தோ4
ஸத3ய ஹ்ருத3யகே3ஹே ஸர்வதா3 ஸம்வஸ த்வம் || 84||

தனத் தனதனன தனத் தனதனன
தனத் தனதனன - தனதான

சிவப் பரசுகமே பவப் பெருநிலையே
நலத் திடவுறவே – கடலான
நிஜத் தறிவுமய சுகத் தருநிதியே
உகத் துணையுமையி – னுடனாகி
வளத் தடமரிய குணப் படவுயரும்
மனத் தெளிவறிவென் - மகளேநின்
பதப் பணியமரத் தரப் புகுவிதயப்
பதிப் பதன்பதியே - பரமேசா! (84)

சிவமாகிய சுகமே! உலகின் நிலையே! எல்லா உயிர்களின் உறவே! சத், சித், ஆனந்தமாகிய கடலே (நிலைத்த, அறிவுமயமான சுகக் கடலே)! அருள் தருபவரே! கௌரியாகிய உமையுடன் இருக்கும் உமக்குத் தொண்டு புரிய, நெறியால் நற்குணங்கள் கொள்ளுமாறு வளர்க்கப்பட்ட எனது அறிவாகிய நல்ல மகளை, யான் அளிக்கிறேன். ஏற்றுக்கொண்டு, என்னுடைய உள்ளமாகிய வீட்டில் நீங்கள் எப்போதும் நிலைப்பீராக!

குறிப்பு:

முன்பு தமது மதியினைப் பரசிவனுக்கு மணப்பெண்ணாகக் கொடுத்த பகவான் ஆதி சங்கரர், இப்பாடலிலே சிவசக்தியருக்கு அருகில் இருந்து தொண்டு புரியும் வேலையாளாகத் தன்னுடைய மதி இருக்கட்டும் என்பதாக, அறிவாகிய மகளைத் தானம் செய்யும் தந்தை என்று உவமானம் காட்டுகின்றார்.

அய்யன் மோனித்திருந்தாலும், அன்னை வேலைக்காக வந்திருக்கும் ஏவலாளுக்கு ஆணையும், அருளும் செய்வார் என்றுதானோ என்னவோ, பகவான் ஆதி சங்கரர், அன்னையையும், அப்பனையும் விளித்து, தன் அறிவை அடிமையாக ஏற்கத் துதிக்கிறார்!

எப்படிப் பிறந்த வீட்டிலிருந்து அனுப்பும் மகளுக்கு, எல்லா நற்குணங்களும் ஏற்படுத்தி, நல்லிடத்துக்கு அனுப்ப விழைவது பெற்றோரின் கடமையோ, அதைப் போலவே, மனத் தூய்மையும், மதித் தெளிவும் அடைந்த தனது நிலையினையே, சிவஞானமான திருவடிகளை அடைந்து பணிபுரியும் தகுதிக்கு உட்படுத்த விழைகிறார் பகவான் ஆதி சங்கரர்.

ஞானத்தில் நிலைத்து இருக்க வேண்டுமானால், முதலில் நற்குணங்களை நிறைத்துக் கொள்வது அவசியம் என்பதும் இதனால் சுட்டிக் காட்டப்படுகின்றது. எனவே, அறம் வழுவாத வாழ்க்கையை ஏற்று, நமக்கான கடமைகளைப் பழுதற, கர்ம யோகமாகச் செய்து, அதன் பயனாகவே, மனத் தெளிவும், திட அறிவும் கொண்ட நற்குண நங்கையாக நம் மதியினை நாம் மாற்றி, அதனை எப்பொழுதும் பரம்பொருளின் பிடிப்பிலே இருத்தும் பணிக்குத் தயார் செய்ய முடியும். (84)

85 – துதியறியா என் துன்பம் துடைப்பான் அடி போற்றி!

जलधिमथनदक्षो नैव पातालभेदी
न च वनमृगयायां नैव लुब्धः प्रवीणः ।
अशनकुसुमभूषावस्त्रमुख्यां सपर्यां
कथय कथमहं ते कल्पयानीन्दुमौले ॥८५॥

ஜலதி$_4$ மத$_2$ன த$_3$க்ஷோ நைவ பாதால பே$_4$தீ$_3$
ந ச வன ம்ரு$_2$க$_3$யாயாம் நைவ லுப்$_3$த$_4$: ப்ரவீண: |
அஸ$_1$ன குஸும பூ$_4$ஷா வஸ்த்ர முக்$_2$யாம் ஸபர்யாம்
கத$_2$ய கத$_2$மஹம் தே கல்பயாணீந்து$_3$-மௌலே ||85||

தானனன தனனன தானனன தனனன
தானனன தனனன – தனதான

ஆழிகட லுங்கடைய கீழுலக முங்குடைய
பீடுஎது வுந்தெரியேன் – பிறகோடி
சூழுவன மும்மிருக வேடுவன னிந்திறனும்
ஈடுபட வுந்தெளியேன் – அதனாலே
சோறுமல ரும்பதிய ஊறுநகை யுந்துகிலும்
தேருபய முந்தரவும் – தெரியாமல்
சீருடைய நேசிவனே கீறுமதி யேசிரனே
ஏதுநய மேதுதுதி – எனக்கூறு? (85)

யான் கடலைக் கடையவோ, பாதாள உலகத்தைக் குடையவோ திறனற்றவன். வனத்தில் விலங்குகளை வேட்டையாடும் திறனும் அற்றவன். எனவே, உணவு, மலர், நகைகள், ஆடைகள் எனப் படைத்து, நினது தொழுகையை எப்படிச் செய்யக் கூடியவனாவேன், ஓ, பிறை சூடிய பெருமானே, கூறுங்கள்.

குறிப்பு:

பாற்கடலைக் கடைந்தெடுத்த விடம் உணவாகவும், அதில் எழுந்த தண்ணிலவு மலராகவும், கீழுலகைக் குடைந்தெடுத்த அரவங்கள் அணிகலனாகவும், வேட்டையாடிப் பெற்ற யானை, புலி ஆகியவற்றின் தோல்கள் ஆடைகளாகவும் சிவபெருமான் ஏற்றதாகப் புராணங்கள் கூறுகின்றன. அத்தகைய பொருட்களை நாமும் அர்ப்பணமாகப் படைத்தே இறைவனைத் தொழ வேண்டும் என்றால், கடலைக் கடைவதும், உலகைக் குடைவதும், வேட்டையாடுவதுமாகிய பல திறமைகள் வேண்டுமே!

இவை இல்லாத பக்தனுக்கு என்ன வழி?

திறைகளாகிய ஆசை அலைகள் பரவிய மனமாகிய பெருங்கடலைக் கடைந்து, அதிலெழும் தெளிவான அறிவே மதியாகிய மலராகவும், அதனால் அவிழும் 'நான்' எனும் அகங்காரம் அழிக்கும் உணர்வையே ஆலகால விடமான உணவாகவும், தீயாசை, கோபம், மயக்கம் முதலான குணங்களை மிருகங்களாக வேட்டையாடி அதன் அடையாளங்களையே ஆடைகளாகவும் படைத்து, இப்படி எல்லாம், தன்னையே ஒரு தவ நிலமாக, தவப் பயனாக மாற்றி, பரசிவனைப் பணிவதற்கான தகுதியை நாம் பெற முடியுமே!

அதற்கான கருணையினைத்தான் இறைவனிடம் வைத்த கேள்வியின் மூலம் பகவான் ஆதி சங்கரர் சுட்டிக் காட்டுகின்றார் எனத் தோன்றுகிறது. (85)

86 – துதித்துணர அருள்பரவும் தூயன் அடி போற்றி !

पूजाद्रव्यसमृद्धयो विरचिताः पूजां कथं कुर्महे
पक्षित्वं न च वा किटित्वमपि न प्राप्तं मया दुर्लभम् |
जाने मस्तकमङ्घ्रिपल्लवमुमाजाने न तेऽहं विभो
न ज्ञातं हि पितामहेन हरिणा तत्त्वेन तद्रूपिणा ||८६||

பூஜாத்3ரவ்யஸம்ருத்3த4யோ விரசிதா: பூஜாம் கத2ம் குர்மஹே
பக்ஷித்வம் ந ச வா கிடித்வமபி ந ப்ராப்தம் மயா து3ர்லப4ம் |
ஜானே மஸ்தகமங்க்4ரிபல்லவமுமாஜானே ந தே(அ)ஹம் விபோ4
ந ஜ்ஞாதம் ஹி பிதாமஹேன ஹரிணா தத்த்வேன தத்3ரூபிணா || 86||

தந்தத்தன தந்தத்தனதன
தந்தத்தன தந்தத்தனதன
தந்தத்தன தந்தத்தனதன – தனதான

பூசைப்பொரு ளானவைகூடினும்
பூசிப்பது தானறியாமையும்
பூணத்தடை யாயவைமூடிடும் - மடமாக

ஆசைப்பற வாயயனாகியும்
ஆயத்தவ ராஹமுமாமென
ஆகத்திற னானவைசூடிடல் – அறியேனே

கூசப்பெரி தாமொளித்தேசிர
கேசத்தரு காமறியாதென
தாசத்தளி ராம்பதமேமலர் – தகையேனே

வாசப்பதி வாலயன்மாலனும்
வேஷப்பிர காரறியாமையும்
பேசப்பெரி தாமுமைநாயகா – பெருமானே ! (86)

பூசை செய்வதற்கான பொருட்கள் எல்லாம் (எப்படியோ) சேர்க்கப்பட்டு இருக்கின்றன. (எனினும்) பூசையை எப்படிச் செய்வது! பறவையினது திறனும் என்னால் அடையப்படவில்லை. பன்றியின் திறனும் அடையப்படவில்லை. (அதனால்) உம்முடைய (ஒளி பொருந்திய) முடியையோ, மென்மையான திருவடிகளையோ நான் உணர்வதும் மிகவும் அரிது. (பறவை, பன்றி) அப்படியான உருவங்களை எடுத்துக் கொண்ட எந்தையாலும் (பிரமனாலும்), திருமாலாலும் கூட (உமது முடியும், அடியும்) உணரப்படவில்லையே!

குறிப்பு:

85-ம் பாடலில் பூசைக்கான பொருட்களை அடைவது எப்படி எனக் கவலை கொண்ட பக்தன், இப்பாடலில், பூசைக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்து இருப்பினும், உண்மையான பூசையின் பலனான, இறைவனின் திருவுருவை உணரும் தகுதியை எப்படி அடைவது என வியப்பதாக, பகவான் ஆதி சங்கரர் கேட்கிறார். அயனும், அரியும் கண்ணால் பார்க்க இயலாத பரவொளியாக எழுந்த பரசிவத்தினை அளப்போம் எனத் துணிவு கொண்டு, அயன் அன்னமாக வானோக்கிப் பறந்தார் என்றும், அரி பன்றியாகக் கீழ் நோக்கித் துளைத்தார் என்றும், எப்படிச் சென்றும், பரம்பொருளின் முடி, அடி எதுவென இருவராலும் காண முடியாது போயிற்று என்றும் புராணங்கள் கூறுகின்றன. புலனறிவால், மனதால், மதி ஆய்வால் அடைய முடியாதது பரம்பொருளாகிய ஆன்மா. அது அடையப்படுவதில்லை. ஏனெனில் அது ஒன்றுதான் ஏற்கனவே அடைந்ததாக எப்போதும் இருப்பது. அது தானாகவே உணரப்பட வேண்டியது. தாம் வேறு, பரம்பொருள் வேறு என வேறுபடுத்துகின்ற வாசனையாகிய வினைப்பயனின் பதிப்பால் தான், அவ்வுண்மை உணரப்பட முடியாமல் இருக்கிறது. இதைக் காட்டவே. தமிழிலே ‘வாசப் பதிவால் அயனும் மாலனும்’ என்று மிகைப்படுத்திப் பொருள் அழுத்தம் தரப்பட்டது. (86)

87 – திருவடியைக் காட்டித் தீர்விப்பான் அடி போற்றி!

अशलं गरलं फणी कलापो
वसनं चर्म च वाहनं महोक्षः |
मम दास्यसि किं किमस्ति शंभो
तव पादाम्बुजभक्तिमेव देहि ||८७||

அஸ$_1$னம் க$_3$ரலம் ப$_2$ணீ கலாபோ
வஸனம் சர்ம ச வாஹனம் மஹோக்ஷ :|
மம தா$_3$ஸ்யஸி கிம் கிமஸ்தி ஸ$_1$ம்போ$_4$
தவ பாதா$_3$ம்பு$_3$ஜ ப$_4$க்திமேவ தே$_3$ஹி ||87||

தனனனன தானனன தனனனன தானனன
தனனனன தானனன – தனதான

நினதுணவு ஆலவிடம் நினதுஅணி யாயரவம்
நினதுவுடை யாயுரிசம் – நெடுமாடு
நினதுஇட மாயமரும் நினதுதட மாயுலவும்
நினதுபொரு ளாயருள – இனியேது
எனதுறவு ஆகவரம் அருளுமுன தானவளம்
எதுவுனது ஆனதுரை – சிவசம்போ
நினதுபத மானமலர் எனதுமன மாகவளர்
பயனுமது வாகவருள் – பரமேசா (87)

சிவ சம்போ, ஆலகால விடமே உங்களுக்கு உணவு. அரவங்களே அணிகலன். (விலங்குகளின்) தோலே ஆடை. (அமரவும், கூட்டிச் செல்லவும் இருக்கும்) வாஹனம் காளை மாடு. (அப்படிப்பட்ட வறியவனாகத் தோன்றும்) தாங்கள் எனக்கு எதை அளிக்கப் போகிறீர்? என்ன இருக்கிறது உம்மிடம்? (அதனால்) உங்கள் தாமரை மலர்களான திருவடிகளில் என் மனதினை இருத்தும் பக்தியை (அபயமாக) அருள்வீராக!

குறிப்பு:

85, 86-ம் பாடல்களில், பரசிவனைத் துதிப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டு விட்ட பக்தன், இப்பாடலில், பரசிவனிடம் எதைக் கேட்பது என்று யோசித்து, யாசிப்பதாகப் பகவான் ஆதி சங்கரர் காட்டுகின்றார்.

எளியனாய் இருக்கும் பரம்பொருளிடமே எல்லாமும் இருக்கிறது. காமதேனு, கற்பக மரம், சிந்தாமணி என எல்லாச் சுகங்களும் இருக்கின்றன.

இருப்பினும், உள்ளுவதுள்ளல் உயர்வுள்ளல் என்றபடி, அடைய வேண்டிய பொருளை மிகவும் உயர்வானதாகத் தேர்வு செய்து கொள்வதே அறிவுடைமை. எனவேதான், நிலையான பரசுக வெள்ளத்தில் நனைக்கக் கூடிய பரம்பொருளின் திருவடிகளையே பரிசாகக் கேட்கிறது இப்பாடல். (87)

88 – தன்னுள்ளே தனையுணரத் தருவான் அடி போற்றி!

यदा कृतांभोनिधिसेतुबन्धनः
करस्थलाधःकृतपर्वताधिपः ।
भवानि ते लङ्घितपद्मसंभवः
तदा शिवार्चास्तवभावनक्षमः ॥८८॥

யதா$_3$ க்ரு$_2$தாம்போ$_4$-நிதி$_4$ ஸேதுப-$_3$ந்த$_4$ன:
கரஸ்த$_2$ லாத$_4$: க்ரு$_2$த பர்வதாதி$_4$ப :|
ப$_4$வானி தே லங்கி$_4$த பத்$_3$மஸம்ப-$_4$வ:
ததா$_3$ ஶி$_1$வார்சாஸ்தவ பா$_4$வன :க்ஷம-||88||

தத்தனன தத்தனதானன
தத்தனன தத்தனதானன
தத்தனன தத்தனதானன – தனதான

தத்துகடல் யுத்தமுந்தாவிட
கட்டுமணைத் திட்டமுந்தேறிட
வித்தனரு ளுத்தமராமென - அதனாலே

குத்துமலை மெத்தனமாகிட
வித்துகரம் அத்தரையாகிட
அத்தனகச் சித்தியராமென - அதுபோலே

பத்துமமும் நித்திலமாகிய
உத்தமுனுட் கப்பியநாபியில்
அத்தனயன் முத்திறமீறிட – அதுபோது

நத்துவமும் நற்றுதிஓதிடச்
சத்துவமும் சந்நிதிமீதுற
சிற்பரமுஞ் சித்தமிழ்தாகிட – சிவனேசா (88)

எப்போது கடலில் அணை கட்டியவராகவும் (ராமபிரான்), கையினாலேயே மலையினை அழுத்தும் செயலைச் செய்தவராகவும் (அகத்தியர்), தாமரை உதரத்தின் நாபியில் உதித்தவரின் (பிரம்மா) திறமைகளையும் தாண்டியவராகவும் யான் ஆவேனோ, அப்போதுதான், சிவனே, உங்களுக்கு ஏற்ற பூசனை, துதி, தியானம் ஆகியன படைக்கும் திறமை உள்ளவனாக ஆவேன்.

குறிப்பு:

பக்தனுக்கு மீண்டும் தன் பக்தியின் முழுமையில் ஐயம் வருகின்றது. கடலுக்கு அணை கட்டிய ஸ்ரீ ராமன், கடற்கரை மண்ணிலேயே பரசிவப் பொருளை லிங்கமாக அமைத்து, தொழுது அதனால் பெரும் பேறு பெற்றார்.

சித்தராகிய அகத்தியர், தமது தவ வலிமையினால், கைகளாலேயே தடையாக நின்ற விந்திய மலையினைத் தரையில் அழுத்தினார். அவர்களைப் போலவும், பிறகு பரம்பொருளின் முடியைக் காண முயன்ற பிரம்ம தேவனை விடவும் திறமை அதிகமாக இருந்தால்தான், தம்மாலும் சரியான முறையில் பரசிவனை வழிபட முடியும் என்று பக்தன் கவலை கொள்வதாக இப்பாடலில் பகவான் ஆதி சங்கரர் காட்டுகின்றார்.

பிறவிப் பெருங்கடலாகிய பேராழியைக் கடக்கும் அணை, தர்மம் இயக்கிய வாழ்க்கை வழிமுறைகளும், ஞானம் உணர்த்திடும் நிலைப்பாடும் ஆகும். இதனையே ஸ்ரீ ராமபிரான் பின்பற்றி, மனிதரும் புனிதராகலாம் எனும் பெரிய உண்மையைக் காட்டினார். அவ்வாறான அறவழியிலே நடக்கும் போது, ஆசைகளும், அதனை ஒட்டிய குண வேற்றுமைகளும், நம்மைத் தடுக்கும் மலையாக இருக்கின்றன.

அத்தடைகளை உடைத்தெறிய விவேகம், வைராக்யம் (அதாவது நல்லன அறியும் தெளிவு, அல்லன விலக்கும் துணிவு) இவ்விரண்டும் இரண்டு கரங்களாக இருக்க வேண்டும். இதுவே,

மலையினை அகத்தியர் கரங்களினால் அழுத்திக் களைந்த கதையின் கரு.

தர்மமும் ஞானமும் இயைந்த போதிலும், 'தான்' எனும் அகந்தையானது நம்மை விழுங்கிவிடக் காத்திருக்கும் பெருவிடம். அந்த 'நான்' எனும் அகந்தை ஒழியும் வரை, ஆன்மாவாகிய பரம்பொருளின் ஒளியினை உணர முடியாது. இதுவே முடியைத் தேடிச் சென்று, முடிவில் அடையாது தளர்ந்த பிரம்ம தேவனின் கதையில் காட்டப்படும் உண்மை.

எனவேதான், பகவான் ஆதிசங்கரர், ராமன், அகத்தியன், பிரமன் என மூன்று உதாரணங்களைக் காட்டியுள்ளார் எனத் தோன்றுகின்றது. (88)

89 – தக்கார் அன்புக்குள் தழைக்கும் அடி போற்றி!

नतिभिर्नुतिभिस्त्वमीशपूजा-
विधिभिर्ध्यानसमाधिभिर्न तुष्टः |
धनुषा मुसलेन चाश्मभिर्वा
वद ते प्रीतिकरं तथा करोमि ||८९||

நதிபி$_4$ர்நுதிபி$_4$ஸ்த்வமீஸ$_1$ பூஜா
விதி$_4$பி$_4$ர்த்$_4$யானஸமாதி-$_4$பி$_4$ர்ந துஷ்ட :|
த$_4$னுஷா முஸலேன சாஸ்$_1$மபி$_4$ர்வா
வத$_3$ தே ப்ரீதிகரம் ததா-$_2$ கரோமி ||89||

தன்னான் தனதனன தன்னான் தனதனன
தன்னான் தனதனன – தனதான

வில்லால் இடிபடினும் கல்லால் அடிபடினும்
வல்லால் கழிபடினும் – அதுயாதும்
நல்லார் அடிபணியும் அல்லால் எதுஎனினுன்
உள்ளால் வடியருளும் – அதுஏனோ
சொல்லால் துதிபுரினும் கல்லாய் நிலைபெறினும்
எல்லாம் வழிவுருகி - இருந்தாலும்
வல்லாய் அடியருள்வ தில்லாய் எதுபிரியம்
சொல்லாய் சரியுருவேன் – சிவநேசா (89)

வில்லாலும், கழியாலும், கற்களாலும் அடிக்கப்பட்ட போதும் (அவற்றை எல்லாம் அடியார்களின் பணிவாகக் கருதி) மகிழ்ச்சி கொண்ட தாங்கள், எனது வணக்கங்களாலும், துதி மொழிகளாலும், தவ நிலைகளாலும் ஏனோ மகிழ்ச்சி கொள்வதில்லையே! தங்களுக்கு எது விருப்பம் எனச் சொல்லுங்கள், அதன்படியே யான் செய்கிறேன், சிவபெருமானே!

குறிப்பு:

எப்படி நாம் இறையருளாகிய ஆன்ம தரிசனத்தைப் பெறுவது? முறையாக வீட்டிலும், வெளியிலும், பூசை, தியானம் ஆகிய பலவழிகளில் முயன்றும், ஆத்ம தரிசனமாகிய சிவயோக சித்தி கிடைக்கவில்லையே? ஆனால், இதிகாச புராணங்களில், அப்படியான வழிபாடுகள் ஏதும் இல்லாமல், இறைவனைத் தாக்குவது போன்ற செயல்களைச் செய்தவர்களுக்கும் கூட, இறைவன் கருணை விளைத்ததாகக் காட்டுகின்றனவே?

சிவபிரானே, அர்ச்சுனன் தங்களை வேடன் என நினைத்து வில்லால் அடித்தும், அவனுக்கு அருள் தரவில்லையா! பிட்டுக்கு மண் சுமந்து திருவிளையாடல் செய்யும் போது, கழியால் அடி வாங்கிக் கொண்டு, கருணை காட்டினீர்களே! சிவத் தொண்டரான சாக்கிய நாயனார், நாள் தவறாமல் உம்மைக் கல்லால் அடித்தும் அவருக்குக் கருணை பொழிந்தீர்களே! உமக்குப் பிடித்தது தான் என்ன? எனக்குச் சொல்லுங்கள், அப்படியே செய்கிறேன். இப்படி எல்லாம், இறையருளுக்கு ஏங்கும் பக்தனாக, பகவான் ஆதி சங்கரர் இப்பாடலிலே காட்டுகின்றார்.

தான் எனும் அகந்தை இருக்கும் வரை, தன்னுள் இருக்கும் பரம் பொருளாகிய ஆத்மா, தானாகவே இருப்பதை உணருதல் முடியாது. அப்படி உணருதலே பரசிவ சுக வெள்ளத்தில் திளைத்தல். எனவே கர்மம், பக்தி, தியானம், ஞானம் என எப்பாதையில் சென்றாலும், எவ்வளவு விரிவாக அதற்கான முறைகளைப் பின்பற்றினாலும், அதனால் பலவித நன்மைகளும், நற்குணங்களும் ஒருக்கால் விளைந்தாலும், ‘நான்’ எனும் அகந்தை இருக்கும் வரை, ஆன்ம தரிசனமாகிய சிவஞான சித்தி கிடைக்காது. இதனை நேரடியான உபதேசமாகப் பெறவே, இறைவனிடம், உனக்குப் பிடித்தது என்ன என இப்பாடல் கேட்பதாக நாம் எடுத்துக் கொள்ளலாம் எனத் தோன்றுகிறது. (89)

90 – எளியோன் அன்புக்குள் எழுவான் அடி போற்றி!

वचसा चरितं वदामि शंभो-
रहमुद्योगविधासु तेऽप्रसक्तः |
मनसा कृतिमीश्वरस्य सेवे
शिरसा चैव सदाशिवं नमामि ||९०||

வசஸா சரிதம் வதா₃மி ஶம்போ₄-
ரஹமுத்₃யோக₃விதா₄ஸு தே(அ)ப்ரஸக்த: |
மனஸா க்ருதிமீஶ்வரஸ்ய ஸேவே
ஶிரஸா சைவ ஸதா₃ஶிவம் நமாமி || 90||

தான தனதான தான தனதான
தான தனதான – தனதான

யோக முயர்வான பாதை வழியாகப்
போகு முறையாதும் - அறியேனே
லோக நலமான நாத சிவகாதை
ஓதி உரையாடி - மகிழ்வேனே
நாத னுருவான போத மனமாகச்
சீத னமுமான - சிவனேநின்
பாத மதிலாடிச் சேத னமுமாளச்
சாத னமுமாகும் – பெருமானே (90)

யான் உயர்வான யோக நெறிகள் கற்று அவ்வழிகளை உணர்ந்தவன் அல்லன். உலகங்களின் நாதா, நினது கதைகளை யான் வாக்கினால் மொழிகிறேன். மனதில், இறைவனான நினது திருவுருவையே (பெரும் பயனாய்) ஏற்றிப் பணிகிறேன். சதாசிவமாகிய நின்னையே தலை வணங்கி (பாதங்களில் பணிந்து) வணங்குகிறேன்.

குறிப்பு:

89-ம் பாடலில், பல வழிகளிலும் தொழுதும், இறையருள் முழுமையாகக் கிடைப்பதற்கு இன்னும் என்ன வழி என்று கேட்ட பக்தன், இப்பாடலில், தனக்குச் சித்தர்கள் பழகும் சிவ யோக நெறிகள் எதுவும் தெரியாது என்பதால், எப்பொழுதும், சிவ புராணங்களை உரைப்பதும், மனதில் சிவனைத் தியானிப்பதும், தலை வணங்கிப் பணிவதுமான செயல்களை மட்டுமே செய்து கொண்டிருப்பாதாகக் கூறுவதாக, இப்பாடல் அமைந்துள்ளது.

கடினமான யோகங்களும், தவமும் முறையாகப் பழகாவிட்டால் என்ன! அன்பால் உருகும் மனதில் சிவனுருவும், நாவிலும், செவிகளிலும் அமுத மொழிகளிலே விரியும் சிவகதைகளும், அடைக்கலம் எப்பொழுதும் பரசிவமே எனப் பணியும் ஒழுக்கமும் கொண்டு நாம் இருந்தாலே போதுமே!

இப்படிக் காட்டி, எம் போன்ற எளியவர்களுக்கும், இறையருட் துணைக்கு வழி இருக்கிறது என்று பகவான் ஆதி சங்கரர் இப்பாடலில் உணர்த்தி இருக்கிறார். (90)

91 – மனச்சுழி அவிழ்த்தருளும் திருச்சுழி அடி போற்றி!

आद्याऽविद्या हृद्गता निर्गतासी-
द्विद्या हृद्या हृद्गता त्वत्प्रसादात् |
सेवे नित्यं श्रीकरं त्वत्पदाब्जं
भावे मुक्तेर्भाजनं राजमौले ||९१||

ஆத்$_3$யா(அ)வித்$_3$யா ஹ்ருத்$_3$க$_3$தா நிர்க$_3$தாஸீ-
த்$_3$வித்$_3$யா ஹ்ருத்$_3$யா ஹ்ருத்$_3$க$_3$தா த்வத்ப்ரஸாதா$_3$த் |
ஸேவே நித்யம் ஶ்ரீகரம் த்வத்பதா$_3$ப்$_3$ஜம்
பா$_4$வே முக்தேர்பா$_4$ஜனம் ராஜமௌலே || 91||

தனந் தனதனன தனந் தனதனன
தனந் தனதனன - தனதான

முதற் கணந்தொடரு மிடர்த் தடமிதயம்
மடத் தனந்தொலைய - அருளாலே
படத் தறுந்தவிழு முடிச் சதுந்தனது
பகுத் தறிந்துணரும் – அறிவாலே
திருத் தருந்தகையு திடத் தருநிதியும்
நிதப் பெருநிலையு – நிதமேயான்
தரப் படவிரியும் பரப் பதமலரை
பெறப் பணிந்தடையும் – பிறையோனே (91)

தொடக்கத்தில் இருந்தே இதயத்தில் தொடர்ந்து இருக்கும் அறியாமையானது, உமது கருணையினால் முற்றிலும் தொலைந்து போய் விட்டது. இதயத்தில் இருக்கும் (ஐயமாகிய) முடிச்சுக்களை அவிழ்த்து (அதனால் பேருண்மையை) உணர்த்தும் பேரறிவு நிறைந்து விட்டது. (அதனால்) நந்நலம் அளிப்பதும், நிலையான உண்மையான முக்தியை அளிப்பதுமான உமது திருவடி மலர்களை எப்போதும் பணிந்து துதிக்கிறேன், ஓ, பிறை அணிந்த பெருமானே!

குறிப்பு:

பரம்பொருளாகிய சிவமே, பரந்து, எல்லாப் பொருளிலும், உடலிலும், உயிர்த்து இருக்கும் ஆன்மாவாக விளங்குகிறது. இந்தப் பேருண்மையை புரிந்து கொள்ளத் தொடங்கிய உடனேயே, தன் உடலையே தான் என்றும், மற்ற ஒவ்வொன்றும் வேறென்றும் பேதமை கொண்டு வெகு காலம் இருந்து வந்த நமது மனம், ஒரு தெளிவினை அடைகின்றது.

வெளிச்சமாகிய அறிவு விளக்கு, நமது உள்ளத்துள் வரும் போது, அங்கு காலா காலமாக அடைந்து கொண்டிருந்த அறியாமையாகிய இருள் விலகிப் போகிறது. அகல் விளக்காய் உள்ளெழுந்த அந்த ஞானச் சுடரை அணையாமல் நாம் போற்றி வளர்த்தால், அதுவே அகவிளக்கமாய் ஆகி, எங்கும் நிறைத்திருக்கும் பேரொளியாகத் தன்னுள்ளேயே யாவும் இருப்பதை உணர்த்திவிடும். அதுவே ஆத்ம வித்தை எனும் சிவயோகப் பயணம். அந்தப் பயணத்தின் பலன், நிரந்தர சுகமாகிய வீடு பேறு அல்லது முக்தி ஆகும்.

அப்பாதையில் நம்மை ஈடுபடுத்திய பக்தியாகிய சாதனம், நமக்கு முழுப் பயனையும் தரும் வகையில் தொடர்ந்து, திடமாக நடத்திச் செல்ல உதவ வேண்டும் என்ற வேட்கையினாலேயே, நல்லருள் கூட்டுகின்ற பரசிவனின் பாத மலர்களை வழுவாது தொழவேண்டும் என்று காட்டுகின்றது. இதுவே இப்பாடலின் உட்கரு. (91)

92 – மாற்றத்தால் தீதறுத்து மகிழ்விப்பான் அடி போற்றி!

दूरीकृतानि दुरितानि दुरक्षराणि
दौर्भाग्यदुःखदुरहंकृतिदुर्वचांसि ।
सारं त्वदीयचरितं नितरां पिबन्तं
गौरीश मामिह समुद्धर सत्कटाक्षैः ॥९२॥

தூ3ரீக்ருதானி து3ரிதானி து3ரக்ஷராணி
தௌ3ர்பா4க்3யது3:க2து3ரஹங்க்ருதிது3ர்வசாம்ஸி |
ஸாரம் த்வதீ3யசரிதம் நிதராம் பிப3ந்தம்
கௌ3ரீஶ மாமிஹ ஸமுத்3த4ர ஸத்கடாக்ஷை: || 92||

தன்னதன தனனன தன்னதன தனனன
தன்னதன தனனன - தனதான

கெட்டவினை அழுத்தும் கெட்டவிதி எழுத்தும்
கெட்டவிழி விடுக்கும் – கெடுயாவும்
கெட்டசெருக் கவிப்பும் கெட்டமொழித் தவிப்பும்
கெட்டபழி அனைத்தும் – வெகுதூரம்
எட்டயவை மறைக்கும் நட்டசுகம் நிறைக்கும்
கட்டவிழச் சிவத்தின் – கதைபேசி
திட்டமிட தினத்தும் இட்டமிழ்து உணர்த்தும்
உற்றகர முயர்த்து – உமைநாதா (92)

கெட்ட வினைகளின் விளைவுகளும், கெடுதி தருவதான தலைவிதிகளும், கண்ணுக்குத் தெரியாமலே விளையும் கேடுகளும், தீயதான செருக்கும், வன்சொல் பேச்சும் ஆகிய எல்லாத் தீமைகளும், எட்ட முடியாத தொலைவில் போய்த் தொலந்து விட்டன. உமது (சிவ புராணமாகிய) கதைகளின் அமுதத்தைப் பேசியும் (கேட்டும்) எப்போதும் இருந்து வருவதற்காக, என்னை இப்பிறவியிலேயே கை தூக்கி விடுக, உமையின் நாதனே!

குறிப்பு:

மாறாத சிவ யோகத்தினால், தான் உடல் அல்ல, மனம் அல்ல, அறிவல்ல, இவை எல்லாவற்றுக்கும் ஆதாரமான, நிலையான ஆன்மா எனும் தெளிவு பிறக்கிறது. அதனால், கர்மத்தின் பலனால் விளையும் சுக துக்கங்களும் ஒரு பொருட்டல்ல எனும் முதிர்ச்சியும், அவற்றை ஏற்றுக் கொள்ளவும் முடிகிறது.

ஞானத் தீயினால், குவிக்கப்பட்ட முன் வினைகளின் விளைவுகளும், அதை விளைக்கும் தலை எழுத்துக்களும் முற்றிலும் அழிக்கப்படுகின்றன. ஆன்ம அறிவினால், யாவும் தானே என உணர முடிவதால், இனிமேல் எப்பொருளிலும், எவரிடத்திலும், நமக்கு விருப்பும், வெறுப்புமில்லை. அதனால் நமக்குச் செருக்கும் இல்லை. அப்படியானால், தீமை என எதுவுமே இனி இருக்கப் போவதில்லை.

அதுவே பிறவிப் பயன். அந்நிலையிலேயே என்றும் நிலைக்க, இப்பிறவியிலேயே, வீழ்ந்து கிடக்கும் நம்மை, கை கொடுத்துத் தூக்கிவிட இறைவன் வர வேண்டும். அந்த வரவு, ஒரு குரு வழியாகவோ, நல்லோர் மொழி வழியாகவோ, தானாகவோ எப்படியோ நடந்தாக வேண்டும். அதுவும் இப்பிறவியிலேயே நடக்க வேண்டும். இதனையே இப்பாடல் குறிக்கின்றது. (92)

93 – கண்ணில் களித்தாடும் கற்பகத்தின் அடி போற்றி!

सोमकलाधरमौलौ
कोमलघनकन्धरे महामहसि |
स्वामिनि गिरिजानाथे
मामकहृदयं निरन्तरं रमताम् ||९३||

ஸோம கலாத-$_4$ரமௌளௌ-
கோமல க$_4$னகந்த-$_4$ரே மஹா மஹஸி-|
ஸ்வாமினி கி$_3$ரிஜா நாதே$_2$
மாமக ஹ்ரு$_2$த$_3$யம் நிரந்தரம் ரமதாம் ||93||

தனன தான தனன தான
தனன தான – தனதான

கலைக ளாடத் தலையில் சூட
நிலவு லாவும் – நெறியனை
கருமை யான முகில்க ளாடும்
கழுத்த னான – விருத்தனை
உலக நாத மலையின் மாது
உமைய னான – ஒருத்தனை
ஒளிய னான பரனை யானும்
ஒரொரு நாளும் – களிப்பனே! (93)

கலைகளைத் தருகின்ற பிறை அணிந்த பெருமானே, கருமேக நிறத்தில் கழுத்து உடையவனை, ஒளி மயமானவனை, உலக நாதனை, மலை மகளான பார்வதியின் மணாளனை, என் உள்ளம் எப்போதும் நினைத்து மகிழட்டும்.

94 – கவினறிவுப் பொறிபுலனாய்க் காணும் அடி போற்றி!

सा रसना ते नयने
तावेव करौ स एव कृतकृत्यः ।
या ये यौ यो भर्गं
वदतीक्षेते सदार्चतः स्मरति ॥९४॥

ஸா ரஸனா தே நயனே
தாவேவ கரௌ ஸ ஏவ க்ரு₂தக்ரு₂த்ய :|
யா யே யௌ யோ ப₄ர்க₃ம்
வத₃தீக்ஷேதே ஸதா₃ர்சத ஸ்மரதி :||94||

தன்னன தனனன தன்னன தனனன
தன்னன தனனன – தனதான

எப்பொழு துனையே செப்புவ தனையே
நற்பொறி நாவென – அறிவாகி
எப்பொழு துனையே முற்பர விழியே
நற்றறி தாமென – நயமாக
எப்பொழு துனையே அர்ச்சிடு முறையே
நற்கர மாமென – நலமாகி
எப்பொழு துனையே உட்படு பவனே
நற்பய னானவன் – நிறைவாக (94)

எது எப்போதும் இறையருளைப் பேசுகின்றதோ அதுவே நாக்கு. எவை இறையருளை எங்கும் காண்கின்றதோ அவையே கண்கள். எவை இறைவனைத் தொழுதல் ஆகிய செயலைச் செய்கின்றனவோ, அவையே கரங்கள். எவன் எப்போதும், இறைச் சிந்தனையுடன் இருக்கின்றானோ, அவனே பிறவியின் பயனை அடைபவன்.

குறிப்பு:

நமது வாக்கு, காயம், மனம் எனும் எல்லாப் பொறி அறிவும், புலனறிவும், அந்தக்கரணங்களும் இறைச் சிந்தனையிலேயே எப்பொழுதும் ஈடுபட்டிருக்க வேண்டும். அப்படி இருப்பது, முற்றும் துறந்திருக்கும் முனிவர்களுக்கு மட்டுமே உள்ள தகுதி என்பது அல்ல. உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் நாமும் அப்பேறு பெற்றவர்கள்தான்.

எப்படி என்றால், செய்யும் செயல்களை இறைவனின் பொருட்டுச் செய்வதாகிய கர்ம யோகமும், இறைச் சிந்தனை ஊட்டும் பக்தியோகமும், ‘வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்’ எனும் வள்ளலார் வாக்கிற்கேற்ப, எல்லா உயிர்களிடத்தும் வைக்கும் மாசற்ற அன்பும், இனிய வார்த்தைகளினால், எல்லோருக்கும் நன்மை அளிக்கும் குணமும் கொண்டு நாம் விளங்கினால், நாம் இப்பாடலின் கருத்திற்கேற்ப நடப்பவர்கள் ஆகிறோம். அப்படி இருப்பதே, வாழ்வில் அடைய வேண்டிய எல்லாப் பயன்களையும் தருவித்துக் கொடுக்கும் வழியாகும் என்பது இப்பாடலின் இறுதி வரிகளில் உறுதி செய்யப்பட்டது. (94)

95 – உருகாத என்மனத்தை உய்விப்பான் அடி போற்றி!

अतिमृदुलौ मम चरणा-
वतिकठिनं ते मनो भवानीश |
इति विचिकित्सां संत्यज
शिव कथमासीद्गिरौ तथा प्रवेशः ||९५||

அதிம்ருது₃லௌ மம சரணா-
வதிகடி₂னம் தே மனோ ப₄வானீஶ |
இதி விசிகித்ஸாம் ஸந்த்யஜ
ஶிவ கத₂மாஸீத்₃கி₃ரௌ ததா₂ ப்ரவேஶ: || 95||

தன்னன்னன தானனதானன
தன்னன்னன தானனதானன
தன்னன்னன தானனதானன – தனதான

வெய்யக்கொடு வாகியதால்மனம்
கொய்யக்கடி தானதினாலதில்
உய்யத்துள வாகிடில்பூவடி – மெதுவாக

நையப்பட வாகிடும்பூவிதம்
ஐயப்பட லாகிடும்காரணம்
மெய்யப்ப னேயினிமேல்விடு – எனக்கூடி

செய்யப்பெரு சேவையதாற்சிவ
மெய்யப்பனருட் தேவையதாலினி
உய்யத்தவ மாகியதாலிது - ஒருகேள்வி

துய்யப்பெரு தூமலைப்பாறைகள்
செய்யக்கடு சேருயர்மேடுகள்
எய்யச்சிவ மாயருள்கூடுதல் – எதனாலே? (95)

பவானி நாதா, 'உன் உள்ளம் மிகவும் கடினமானது, என்னுடைய திருவடிகள் மிகவும் மென்மையானது' என்று எண்ணுவாயானால் (அந்த ஐயத்தால் என் உள்ளத்துள் வராது போய் விடுவாயானால்), அந்த ஐயத்தை அறவே விடுக. பின் எதற்காக, மலைகளில் நிலவி வருகின்ற நிலை உங்களுக்கு ஏற்பட்டது?

குறிப்பு:

பக்தனுக்கு ஒருவேளை தனது இதயம் அன்பாலும் பக்தியாலும் உருகாத பாறையாக இருப்பதால்தான், இறைவன் தனது மென்மையான பாத மலர்களைத் தனது மனதில் இருத்த இன்னும் வரவில்லை எனும் ஐயம் எழுகின்றது. அந்த ஐயத்தை இறைவனின் மேல் திணித்து, 'இறைவா, அப்படி ஒரு ஐயம் உமக்கு இருந்தால், அது நியாயம் அற்றது. ஏனெனில், தாங்கள் கடினமான பாறைகளிலும், மலைகளிலும் உலவிப் பழக்கப்பட்டவர் தானே!' என்று கேட்கிறான்.

இப்படிக் கேட்க வைத்து, பகவான் ஆதி சங்கரர், நமது மன நிலை எப்படி இருந்தாலும், மதி முதிர்ச்சி எப்படி இருந்தாலும், அன்பு ஒன்றினாலேயே, ஆண்டவனின் அருளடிகளைக் கண்ணாரச் சுமக்கும் நற்கதியினைப் பெற முடியும் என்று இப்பாடலில் காட்டி இருக்கிறார்.

தமிழ் மொழி பெயர்ப்பில், இவன் மனம் கடினம் என்றால், இவன் இன்னும் கொடியன் என்ற அனுமானம் கொள்ளலாம் என்றும், இறைவனிடம் ஐயத்தை விட்டு நம்மை அடைய வரச் சொல்லும் உரிமைக்காக, ஶிவானந்த₃லஹரீ பயில்கின்ற பெரும் சேவைக்கு, இறையருள் தேவை என நினைவு படுத்திக் கொள்ளலாம் என்றும், இரண்டு அடிகள் அதிகமாகவே, பொருளுக்கு விளக்கமாத் தமிழிலே சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதனை பகவான் ஆதி சங்கரரது அருளனுமதியாகத் துதித்துப் பணிகிறேன்.

96 – மன யானை தனையாளும் மாதங்கன் அடி போற்றி!

धैर्याङ्कुशेन निभृतं
रभसादाकृष्य भक्तिशृङ्खलया |
पुरहर चरणालाने
हृदयमदेभं बधान चिद्यन्त्रैः ||९६||

தை$_4$ர்யாங்குஶேன நிப்$_4$ருதம்
ரப$_4$ஸாதா$_3$க்ருஷ்ய ப$_4$க்திஶ்ருங்க$_2$லயா |
புரஹர சரணாலானே
ஹ்ருத$_3$யமதே$_3$ப$_4$ம் ப$_3$தா$_4$ன சித்$_3$யந்த்ரை: || 96||

தனதானன தன்னனதானன
தனதானன தன்னனதானன
தனதானன தன்னனதானன – தனதான

இபமானது என்மனமாகிட
தடமாறிடத் தந்நிலையாடிட
திடமானது அங்குசமாயிடத் – தெளிவாக

தவமானது பொன்னணியாகிடப்
பலமாயது பின்னிடஆடிய
மனமானது தந்நிலைஏகிட – வலுவாக

சிவமானது சின்மயமாந்துறை
இபபாகனுன் இன்னருளாகிய
நலமானது நந்நிலைமேவிட - வரவேண்டி

புரமானது முந்நிலையாற்றிய
பரமானது நந்நெறிகாட்டிட
வரமானது தந்தருள்கூட்டென – வதிந்தேனே
(96)

என்னுடைய மனமாகிய மதம் பிடித்த இபம் (யானை) என இருக்கிறது. அதனை உறுதியாகிய அங்குசத்தால் குத்தி, பக்தியாகிய சங்கிலியில் பிணைத்து, வெகுவாக (ஆசைகளால் ஈர்க்கப்படாமல்) இழுத்து, நினது திருவடியாகிய கட்டுந்துறையில், நல்லறிவாகிய கயிற்றினால் கட்டிக் காத்தருள்க, ஓ, முப்புரங்களையும் அழித்தருளிய பரசிவனே!

குறிப்பு:

இப்பாடலில் மனம், ஒரு மதம் பிடித்த யானையாகக் காட்டப்பட்டது.

காமம், குரோதம், லோபம் முதலான குணங்களால், மனமானது மதம் பிடித்த யானையாக அலைக்கழிக்கப்பட்டது.

மனதை நிலைப்படுத்த, உறுதியான அறிவும், நற்குணங்களின் தாக்கமும் தேவை. இதுவே அங்குசம். இறைவனின் திருவடிகளில் இருத்த, மன யானையைப் பக்தியாகிய சங்கிலியால் கட்ட வேண்டும். அச்சங்கிலி, மன யானையை ஈர்க்கும் ஆசை விசைகளை எல்லாம் தடுக்கும் அளவுக்கு வெகுவாக இருக்க வேண்டும். நல்லறிவாகிய கயிற்றினால் அவ்வாறு மனதைக் கட்டும் போது, ஆசைகளின் ஈர்ப்புக்களும், எதிர்ப்புக்களும் மறைந்து, திருவடியாகிய துறையிலேயே, மனமாகிய யானை நிலை பெறும்.

இவையெல்லாம் நாம் செய்து அடைய வேண்டிய முயற்சிகள் என்றாலும், அதற்கு இறையருள் தேவை என்பதையே இப்பாடல் காட்டுகின்றது. (96)

97 – சித்தம் தெளித்தருளும் சீலன் அடி போற்றி !

प्रचरत्यभितः प्रगल्भवृत्त्या
मदवानेष मनः करी गरीयान् |
परिगृह्य नयेन भक्तिरज्ज्वा
परम स्थाणुपदं दृढं नयामुम् ||९७||

ப்ரசரத்யபி₄த: ப்ரக₃ல்ப₄வ்ருத்த்யா
மத₃வானேஷ மன: கரீ க₃ரீயான் |
பரிக்₃ருஹ்ய நயேன ப₄க்திரஜ்ஜ்வா
பரம ஸ்தா₂ணுபத₃ம் த்₃ருட₄ம் நயாமும் || 97||

தத்தன் தனதன தத்தன் தனதன
தத்தன் தனதன – தனதான

சுத்தும் மனமிது பித்தம் பெருகிட
அத்தும் அலைந்திடும் - மதயானை
தத்தம் நிலையினி நத்தம் கலையுற
பத்திப் பிணைபட - அதனாலே
கட்டும் இதையினி நித்தப் படவென
கெட்டிப் படவருள் - தருவாயே
சத்துப் படவுருவ சித்தச் சுகமருவ
பத்துப் பறவருளும் - பரமேசா (97)

அலைந்து திரியும் பெரிய மதம் பிடித்த யானை போன்ற என் மனதை, பக்தி எனும் கயிற்றால் திறம்படக் கட்டி வயப்படுத்தி, நிலையான பொருளில் நிறுத்தி வைக்க அழைத்துச் செல்லுங்கள், பரமேசா !

98 – கவிதைஇளங் கன்னியெனக் கலந்தோன் அடி போற்றி!

सर्वालंकारयुक्तां सरलपदयुतां साधुवृत्तां सुवर्णां
सद्भिःसंस्तूयमानां सरसगुणयुतां लक्षितां लक्षणाढ्याम् |
उद्यद्भूषाविशेषामुपगतविनयां द्योतमानार्थरेखां
कल्याणीं देव गौरीप्रिय मम कविताकन्यकां त्वं गृहाण ||९८||

ஸர்வாலங்காரயுக்தாம் ஸரலபத3யுதாம் ஸாது4வ்ருத்தாம் ஸுவர்ணாம்
ஸத்3பி4:ஸம்ஸ்தூயமானாம் ஸரஸகு3ணயுதாம்
லக்ஷிதாம் லக்ஷணாட்4யாம் |
உத்3யத்3பூ4ஷாவிஶேஷாமுபக3தவினயாம் த்3யோதமானார்த2ரேகா2ம்
கல்யாணீம் தே3வ கௌ3ரீப்ரிய மம கவிதாகன்யகாம்
த்வம் க்3ருஹாண || 98||

தனன தனனான தனன தனனான
தனன தனனான – தனதான

நகையு மிகவாகி நடையு மழகாகி
தகையு முளவாகிப் - பொன்மேனி
மிகையி லுயர்வாகி முனியர் உடனாகி
இனிய குணமாகி - கனியான
நெறியு முறையாகி மிளிரும் அணியாரம்
ஒளிரப் பொருளோடுங் – கரமாகி
நிறையு சுகமாகி உரையும் கவிமாது
நினது துணையாகி - நிலைவீரே (98)

இறைவா, உமை மணாளா, எல்லா அணிகளும் அணிந்தவளும் (அணி இலக்கணம் அமைந்து), நந்நடை உடையவளும் (அழகிய சந்த நடைகள் கொண்டதும்), பொன்னான உடலுடையவளும் (பொருளால் ஒளி பொருந்தியதும்), நல்லோரால் சூழப்பட்டவளும் (நல்ல மொழித் தகைமை கொண்டதும்),

இனிய குணமுடையவளும் (இனிய பொருளுடையதும்), கனிவும் உயர் ஒழுக்கம் கொண்டவளும் (இனிமையும் ஒழுங்கான இலக்கண அமைப்புக்கள் கொண்டதும்), ஒளிரும் அணிகலனால் அலங்கரிக்கப்பட்டவளும் (எதுகை, மோனை என மனம் கவரும் சொல்லணிகளால் சிறப்புற்றதும்), முறையான அடக்கமுடையவளும் (மிகை இல்லாமல் இருப்பதும்), செல்வ ரேகைகளைக் கரத்தில் கொண்டவளும் (பொருட் கோடினைக் காட்டுவதாகவும்), மங்களமானவளாக இருப்பவளும் (சுகமானதாக உரைக்கப்படுவதும்) ஆகிய உமையாகிய மங்கையை (எனது கவிதையாகிய கன்னியை) மணந்து (ஏற்று) நிலைப்பீராக!

குறிப்பு:

இப்பாடல் நல்ல கவிதை, ஒரு நல்ல நங்கைக்கு ஒப்பு எனக் காட்டி இறைவனிடம், இப்பாடல்களைப் பரிந்து ஏற்க வேண்டுகின்றது. நல்ல கவிதை என்பது குவிந்த மனத்தாலும், குறித்த நோக்காலும், தெளிந்த அறிவாலும், பரந்த நோக்கமுடனும், பொதுப் பயனுக்காகப் படைக்கப்படுவது. அதில் இறைத்தன்மை இருப்பது இயல்பு. (98)

99 – ஓரளவும் கண்டறியா ஒப்பிலான் அடி போற்றி!

इदं ते युक्तं वा परमशिव कारुण्यजलधे
गतौ तिर्यग्रूपं तव पदशिरोदर्शनधिया |
हरिब्रह्माणौ तौ दिवि भुवि चरन्तौ श्रमयुतौ
कथं शंभो स्वामिन् कथय मम वेद्योऽसि पुरतः ||९९||

இத₃ம் தே யுக்தம் வா பரமஶிவ காருண்யஜலதே₄
க₃தௌ திர்யக்₃ரூபம் தவ பத₃ஶிரோத₃ர்ஶனதி₄யா |
ஹரிப்₃ரஹ்மாணௌ தௌ தி₃வி பு₄வி சரந்தௌ ஶ்ரமயுதௌ
கத₂ம் ஶம்போ₄ ஸ்வாமின் கத₂ய மம வேத்₃யோ(அ)ஸி புரத: || 99||

தன்ன தன்னான தன்ன தன்னான
தன்ன தன்னான – தனதான

அடியும் முடியாத முடியும் அளவாக
அரியும் அயனாரும் - வெகுதூரம்
அலையும் உருவாகி நிலமும் நெடுவானம்
உலவி அயர்வாக - வெகுகாலம்
விடியும் ஒளியாக விரையும் பொருளாக
விரியும் அருளாக - சிவனேமுன்
விளையும் பொருளான கருணைக் கடலேயிவ்
விவரம் சரிதானோ – விமலோனே (99)

கருணைக் கடலான பரம்பொருளே, உமது அடியையும், முடியையும் அளக்க, அரியும் அயனும் உருவங்கள் எடுத்து, வானிலும், மண்ணிலும் வெகு தூரமும், காலமும் அலைந்து களைத்தனர். இறைவா, என் முன்னே வெகு எளிதில் எப்படிக் கண்டு களிக்கத் தக்கவராக எழுந்தருளினீர்கள்! இந்த உத்தி சரிதானா? (விந்தைதான்!)

100 – தெய்வத்துள் தெய்வத் திருவே அடி போற்றி!

स्तोत्रेणालमहं प्रवच्मि न मृषा देवा विरिञ्चादयः
स्तुत्यानं गणनाप्रसङ्गसमये त्वामग्रगण्यं विदुः |
माहात्म्याग्रविचारणप्रकरणे धानातुषस्तोमव-
द्धूतास्त्वां विदुरुत्तमोत्तमफलं शंभो भवत्सेवकाः ||१००||

ஸ்தோத்ரேணாலமஹம் ப்ரவச்மி ந ம்ருஷா தே3வா விரிஞ்சாத3ய:
ஸ்துத்யானம் க3ணனாப்ரஸங்க3ஸமயே த்வாமக்3ரக3ண்யம் விது3: |
மாஹாத்ம்யாக்3ரவிசாரணப்ரகரணே தா4னாதுஷஸ்தோமவ-
த்3தூ4தாஸ்த்வாம் விது3ருத்தமோத்தமப2லம் ஶம்போ4 ப4வத்ஸேவகா: || 100||

தன்ன தன்னான தன்ன தன்னான
தன்ன தன்னான – தனதான

துதித்து முடியாத நிதித்துள் நிதியானை
இனித்து இனியாது - இயல்வேனே
வதித்து அயனாதி வளத்து அமரானர்
மதித்துப் பெரிதாக - உனைநாட
முனித்து உயரான தனித்து விதங்காண
விளித்து அடியார்கள் - பதராக
விலக்கி அதிதேவ ரொதுக்கி உனையேகி
விளைத்த வளம்நாட - விரிவோனே (100)

சம்போ, துதித்து அளவிட முடியாதது உமது பெருமை. இல்லாத எதனை யான் நினது புகழாகச் சொல்லுவேன்! அயனும், அமரர்களும், உயர் பொருள் எது என ஆய்ந்து, உம்மையே முதன்மையாகப் பணிந்தனர். அடியார்களும் நற்பயன் அளிப்பவர் யார் என ஆராயும்போது, மற்ற தேவர்களை எல்லாம் பதராகத் தள்ளி, உம்மையே விளைந்த பயிர்ப் பயனில் உயர்ப் பயனாக ஏற்கிறார்கள்.

குறிப்பு:

99-ம் பாடலிலே ‘அளப்போம்’ என ஆராய முயன்ற தெய்வங்களுக்கும் அகப்படாத இறைவன், அன்பால் பணிந்த அடியாரின் மனதிலே எளிதாக அருள்கின்ற கருணையாகக் காட்டப்பட்டது. தன்னுள்ளே விளங்கும் ஆன்மனை உணர்வதே மன்னுயிர்க்கான இலக்கு என்பதை இந்த இறுதிப்பாடல் முடிவாய்த் தருகிறது.

பரம்பொருள் ஒன்றே என்பதும், அதன் வெளிப்பாடே எல்லா உலகங்களும், உயிர்களும், பொருட்களும் என்பதும், அப்பேரறிவை அடைவது ஒன்றே மனிதராய்ப் பிறந்தோரின் கடமை என்பதும், மனிதருக்கு மட்டுமே கிடைத்த அரிய வாய்ப்பு அது என்பதும், நமக்கு மறைகள் காட்டித் தரும் முடிவு. அதை விடுத்து, புற இன்பத்தினை மட்டுமே நாடி வாழ்கின்ற நாம், அத்தகைய புற இன்பங்களுக்காகவே, பலவித உருவங்களிலும், வழிகளிலும் தெய்வங்களை வணங்கி வருகிறோம். அறம் வழுவாத ஆசைகளுக்காக அப்படித் தெய்வங்களைத் துதித்து வருவது நல்லதே எனினும், சம்சாரம் எனும் ஆசைப் பிணை விட்டு, உண்மையான விடுதலையும், பூரணத்துவம் எனும் முழுமையும் நாம் அடைய வேண்டும் என்றால், ஒன்றேயான பரம்பொருளை ஆன்மாவெனத் தன்னுள்ளேயே உணர்ந்து, அதன் பயனால் விளையும் பரசிவ சுகப் பெருவெள்ளத்தில் நனைந்து இருப்பது ஒன்றையே நாம் முடிவாகக் கொள்ள வேண்டும்.

‘ஓம் நமோ அஹம் பதார்த்தாய ஶிவாய’ எனும் வேத வாக்கு, ‘அஹம்’ எனும் சொல்லால் காட்டப்பட்ட ஆன்மாவே பரசிவப் பெருவெளி எனச் சுட்டிக் காட்டுகிறது. இவ்வுண்மையினை உணர்ந்து, அடையப்படுவன எல்லாம் முடிவில் அழிந்து போகும் என்பதால், நம்முள்ளேயே எப்போதுமே அடைந்ததாய் இருக்கும் ஆன்மாவே சத்தியம் எனத் தெளிந்து, கடவுளைத் தன்னுள் உணர்ந்து, அப்படியே நிலைப்பதே முக்தி என்பது இப்பாடலினால் காட்டப்படுகிறது. (100)

சிவானந்த வெள்ளச் சீலம் அடி போற்றி!

||इति श्रीमच्छङ्कराचार्यविरचित शिवानन्दलहरी समाप्ता ||

|| இதி ஶ்ரீமத்ச$_2$ங்கராசார்யவிரசித ஶிவானந்த$_3$லஹரீ ஸமாப்தா ||

இவ்வாறு
ஶ்ரீமத் சங்கராசார்ய பகவத் பாதாள் அருளிய
ஶிவானந்த$_3$லஹரீ நிறைவினை அடைகிறது.

1. கண்ணன் மொழி – கவிதை வழி (ஸ்ரீ பகவத்கீதை – தமிழ்)
2. மணீஷா பஞ்சகம் - ஆதி சங்கரர் (தமிழ், ஆங்கிலம்)
3. காசீ பஞ்சகம் - ஆதி சங்கரர் (தமிழ், ஆங்கிலம்)
4. சாதனா பஞ்சகம் - ஆதி சங்கரர் (தமிழ், ஆங்கிலம்)
5. மாயா பஞ்சகம் - ஆதி சங்கரர் (தமிழ், ஆங்கிலம்)
6. ப்ரசன்னோத்ர ரத்ன மாலிகா - ஆதி சங்கரர் (தமிழ், ஆங்கிலம்)
7. சிவானந்தலஹரீ - ஆதி சங்கரர் (தமிழ்)
8. ஆதி குரு தக்ஷிணாமூர்த்தி வழிபாடு (தமிழ்)
9. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் - ஆதி சங்கரர் (தமிழ்)
10. உபநிடதங்கள் உதவும் தடங்கள்
    a. ஈசாவஸ்ய உபநிடதம் (தமிழ்)
    b. பிரம்ம உபநிடதம் (தமிழ்)
    c. கடோப உபநிடதம் (தமிழ், ஆங்கிலம்)
    d. கேன உபநிடதம் (தமிழ்)
    e. கணபதி உபநிடதம் (தமிழ்)
    f. ஹம்ஸ உபநிடதம் (தமிழ்)
    g. கைவல்ய உபநிடதம் (தமிழ்)
11. மதுரை ஸ்ரீ மீனாக்ஷி துதிப்பாமாலை (தமிழ்)
12. ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி திருவெம்பாவை (தமிழ்)
13. ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி புஷ்பமாலிகா (தமிழ்)
14. ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி நவமணி மாலை (தமிழ்)
15. ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி மந்த்ர புஷ்பமாலிகா – ஆதி சங்கரர் (தமிழ்)
16. ஸ்ரீ கால பைரவர் அஷ்டகம் – ஆதி சங்கரர் (தமிழ்)
17. ஸ்ரீ பவானி அஷ்டகம் – ஆதி சங்கரர் (தமிழ்)
18. மணிகர்ணிகா அஷ்டகம் – ஆதி சங்கரர் (தமிழ்)
19. ஸ்ரீ முருகன் அந்தாதி (தமிழ், ஆங்கிலம்)
20. ஸ்ரீ முருகன் துதிப்பாமாலை - லண்டன் (தமிழ், ஆங்கிலம்)
21. உயர்வாசற் குன்று ஸ்ரீ முருகன் துதிப்பாமாலை (தமிழ், ஆங்கிலம்)
22. ஸ்ரீ கனக துர்க்கை அன்னை துதிப்பாமாலை (தமிழ்)
23. திருமுருகன் பொன்னூசல் (தமிழ்)
24. திரு வேங்கடவன் பொன்னூசல் (தமிழ்)
25. ஸ்ரீ மஹா பெரியவர் காஞ்சி பரமாச்சார்யார் துதி (தமிழ்)

www.meenalaya.org

Shivanandalahari

Bhagavan Adi Sankara

www.meenalaya.org

ISBN 978-1-910528-01-3